
# கரும்புலி காவியம்

## பாகம்-1




நாவண்ணன்

அறிவு அமுதம் வெளியீடு

# கரும்புலி காவியம்

## பாகம் I

**நாவண்ணன்**

அறிவு அமுது
பதிப்பகம்

**Bibliography**

கரும்புலி காவியம் - பாகம் I
Karumpuli Kaaviayam - Part I

| | |
|---|---|
| ஆசிரியர்<br>Author | நாவண்ணன்<br>Navannan |
| முதல் பதிப்பு<br>First Edition | மார்ச் 2003<br>March 2003 |
| முகப்போவியம்<br>Cover | ரமணி |
| உள் ஓவியங்கள் | ஓவியநாதன், பயஸ் |
| Size of Book | 14 x 22 cm |
| வெளியீடு<br>Publisher | **அறிவு அமுது பதிப்பகம்**<br>யாழ்சாலை, கிளிநொச்சி. |
| பக்கம்<br>Page | XI+276 |
| விலை - ரூபா.<br>Price - Rs. | |

# வாழ்த்துச் செய்தி

கரும்புலிகள் எமது போராட்டத்திலே ஒரு வரலாற்றுத் தேவையாகத் தோற்றம் பெற்றவர்கள் தேவையின் நிர்ப்பந்தத்தால் பிறந்தவர்கள். இவர்கள் உண்மையிலேயே சாதாரண மனிதப் பிறவிகள் அல்லர். இவர்கள் மனோதிடத்தையும் இலட்சிய உறுதியையும் குறியீடு செய்கிறார்கள். இதன் அர்த்தபரிமாணம் அளவுகடந்த ஆற்றலையும் சக்தியையும் குறித்து நிற்கிறது.

பொதுவாக மரணத்திற்கு அஞ்சுவதுதான் மனித இயல்பு. இதுதான் இயற்கையின் நியதியும் கூட. இந்த இயற்கையின் நியதியாக, மனிதன் பிறந்த கணத்திலிருந்தே மரணமும் அவனோடு சேர்ந்து பிறப்பெடுக்கின்றது. அவன் இந்த மரணத்தைத் தனது வாழ்நாளின் ஒவ்வொரு கணத்திலும் எதிர்கொண்டு வாழ்கிறான். அவனால் இந்த மரணத்தை பட்டறிந்துகொள்ள முடிவதில்லை. இது மட்டும் அவனது அனுபவத்திற்கு அப்பாலானது. ஆனால், கரும்புலிகள் முற்றிலும் வித்தியாசமானவர்கள் தனித்துவமானவர்கள். இவர்கள் தமது மரணத்தை முன்னரே பட்டறிந்துகொள்கிறார்கள். அத்தோடு தமது இலட்சியம் நிறைவடையப்போகின்ற அந்த நாளுக்காக எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக வாழ்வின் அடிப்படைகள் அனைத்தும் அழிக்கப்பட்ட, மனித வாழ்வே அர்த்தமிழந்து அபத்தமாக மாறி, சாவில் இருள் கவிந்துகொள்ள, மரணத்தின் குகைக்குள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள எம்மக்களுக்கு சுதந்திரத்தின் சுடர்விளக்கை ஏற்றி, சுபீட்சமான கௌரவமான வாழ்வை ஏற்படுத்திக்கொடுக்க தம்மைத்தாமே அழித்துக்கொள்கின்ற இவர்களது உயர் தியாகங்களும் அற்புதமான சாதனைகளும் வரலாற்றுக் காவியங்களாக எழுதப்படவேண்டியவை. இந்தக் கடினமான பெரும் பணியை

முதன்முதலாக கவிஞர் நாவண்ணன் அவர்கள் பெருமுயற்சியெடுத்து தனது அழகுத் தமிழில் கரும்புலி காவியமாக வடித்து, நூலாக வெளியிடுவதையிட்டு நான் பெருமகிழ்வடைகிறேன்.

கவிஞர் நாவண்ணன் அவர்கள் தலைசிறந்த ஒரு இலக்கியப் படைப்பாளி. இவர் தாய் மண்ணிலும் அதன் விடுதலைக்காக நிகழ்த்தப்படுகின்ற போராட்டத்திலும் அளவற்ற பாசம் கொண்டவர். தனது நிறைந்த கலைப் படைப்புக்களால் பெரும் விடுதலைப் பணியாற்றுவருகின்றார். தனது கலைப் படைப்பின் உச்சமாக கரும்புலிகளின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் எழுச்சியையும் கூறும் கரும்புலி காவியத்தைப் படைத்திருக்கிறார். இதில் கரும்புலிகளது உள்ளத்து உணர்வுகளையும் அவர்களது அளவுகடந்த அர்ப்பணிப்புக்களையும் மிகவும் நுட்பமாகவும் சாதுரியமாகவும் சொற்களை நெகிழ்த்திச் சென்று தத்துரூபமாக வெளிப்படுத்தியிருப்பது என்னைப் பெரிதும் கவர்கிறது.

மேலும், கரும்புலி காவியத்தை ஆழமும் வீச்சும் மிக்கதாக வெளியிடும் கவிஞர் நாவண்ணன் அவர்களுக்கு எனது நன்றிகளையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன். அத்தோடு இலக்கியப் படைப்பிலும் இலட்சியப் பாதையிலும் இவரது பணி சிறப்புடன் தொடர எனது நல்லாசிகள்.

*"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"*

**வே. பிரபாகரன்**
***தலைவர்***
***தமிழீழ விடுதலைப்புலிகள்***

# கரும்புலி காவியம் பிறந்த கதை

"நான் மடிந்து போவதற்கு முன்னே - எம்
நற்றமிழாள் அரியணையில் வீற்றிருக்க வேண்டும்
தேன் கலந்த சொல்லெடுத்துப் பாடி - அந்த
தெய்வ மொழிப் பூவடியை நான் புகழ வேண்டும்

காவியங்கள் பல பிறக்க வேண்டும் - போர்க்
களத்திறந்த தமிழ் மறவர் கதை உரைக்க வேண்டும்
ஓவியங்கள் சிற்பங்கள் யாவும் - அந்த
ஒப்புயர்வில் மாவீரர் புகழிசைக்க வேண்டும்

மங்கலங்கள் பலபொங்கும் வேளை - ஒரு
மறைவிடமே கவி புனைய என்றனுக்கு வேண்டும்
அங்கிருந்தென் ஆவியுள மட்டும் - என்
அன்னை மண்ணை மீட்டவரை நான் படிக்க வேண்டும்

காவியமாய் புதிய புறம்பாடி - எம்
காலத்து வரலாற்றை நான் பொறிக்க வேண்டும்
சீவியத்தை மண் மீட்கத் தந்து - செத்த
செங்களத்து மறவருக்குச் சமர்ப்பிக்க வேண்டும்."

இந்தக் கவிதை வரிகள் 1992ம் ஆண்டு வெளியிடப்பட்ட முத்தமிழ்விழா மலரிலும், பின்னர் 1998ம் ஆண்டு ஜுன் மாத ஒளிவீச்சு சஞ்சிகையிலும் வெளிவந்த "வேண்டும்" என்ற தலைப்பிலான என் கவிதையின் சில வரிகள். எனது அந்த இதய தாகத்தை நிறைவு செய்ய எடுக்கும் முயற்சியின் முதற் கனிதான் இந்த 'கரும்புலி காவியம்' பாகம் ஒன்று.

எமது இனத்தின் இந்த விடுதலைப் போராட்ட காலத்தில், அதுவும் போராட்டம் நிகழும் இந்தக் களத்தில் வாழக்கிடைத்ததே பெரும் பேறு. எனவே என் போன்றவர்கள் நாம் வாழும் காலத்தின் வரலாற்றைப் பதிவு செய்து வைக்க வேண்டியவர்கள் என்பதில் அசையாத நம்பிக்கையுடையவன் யான்.

எனது இந்த குறிக்கோளின் முயற்சியே பெரிதாகவும், சிறியதாகவும் எழுதப்பட்டு என்னால் வெளியிடப்பட்ட பதின்னான்கு நூல்களில் எட்டு நூல்கள் தமிழன் வரலாற்றை, அவன் பட்ட அவலங்களை பதிவு செய்த நூல்களாகும்.

அவலங்களைச் சொல்லி அழுது முடிப்பதோடு நில்லாது, புறப் பொருள் இலக்கியங்களில் கூடக் காணக் கிடைக்காத வீரச் செயல்களை, தியாக வரலாறுகளை நேரடியாகக் கண்டும் கேட்டும் அனுபவிக்கின்ற நாம் அவற்றை பதிவு செய்து வைக்கத் தவறுவோமாயின் படைப்பாளிகள் என்று எம்மை கூறிக் கொண்டு பேனா பிடிப்பதில் பொருளே இல்லை என்றே நினைக்கின்றேன்.

எம் இனம் விடுதலை ஒளி பெற வேண்டும் என்பதற்காக தமமைத் திரியாய், எண்ணெய்யாய் எரித்துத் தியாகிக்கும் மாவீரர்கள் வீரவரலாற்றுகளை படைத்து போயினர். அந்த வரலாற்று நாயகர் தம் வரலாறு எம் போன்றவர்களால் பதிந்து வைக்கப்படுதல் வேண்டும். இதை நான் வாழும் காலத்தின் கடமையாக கருதுகின்றேன். அந்தப் பெரும்முயற்சியின் முனைப்புத்தான் இந்த "கரும்புலி காவியம்" பாகம் ஒன்று.

1998ம் ஆண்டு பெப்ரவரி 18ம் நாள் என் வாழ்வில் ஒரு முக்கியமான தொரு நாள். அன்று தேசியத் தலைவர் அவர்களுடன் சில மணித்துளிகள் மனம் திறந்து பேசும் வாய்புக் கிடடியது.

அன்று என்னை அதி வியப்புக்கு உள்ளாக்கிய விடயம் எதுவெனில், தேசியத் தலைவர் அவர்களுடன் அதற்கு முன்னர் நேரடித் தொடர்பு எதுவும் எனக்குக் கிடையாது. ஆனால் ஒரு சாமானியனான என்னை, என்பணியை என் குடும்பப் பின்னணியை முழுமையாக அறிந்து வைத்திருந்து எனது பணியைப் பாராட்டியமையே. தேடல்கள் நிறைந்த என்பணிக்கு தேவை ஒரு உந்துருளி என உணர்ந்தவராக அன்றே, அவ்விடத்தில் வைத்தே அங்கிருந்த அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் அவர்களிடம் எனக்கு ஒரு உந்துருளி வழங்க ஒழுங்குகள் செய்க எனப் பணித்தபோது நான் வியப்பின் உச்சத்துக்கே போய்விட்டேன், அந்தச் செயற்கரிய செயலை என் கவி நெஞ்சம் பதிவு செய்தது.

தன்னைப் புகழ்ந்துரைத்த
தமிழ்க் கவிஞர் தமக்கன்றோ
முன்னைப் புவிராயன்
முகம் மலர்ந்து கை சிவக்க
பொன்னைப் பொருளைப்
புவியைப் பரிசளித்தான் !

அன்னை மண்ணுக்கே
ஆற்றிடுக தொண்டென்று
என்னைப் பணித்திட்ட
ஈழக் கரிகால
மன்னைப் புகழ்ந்தேனே
மனதாற் றுதி பாடி

ஊர் கொடுத்தார் புலவருக்கு
உவந்தளித்தார் மிடி தீர
தேர் கொடுத்தார், திருக் கொடுத்தார்
தெருவெல்லாம் பவனி வர
கார்நிறத்து கரி கொடுத்தார்
காற்று விசைப் பரி கொடுத்தார்

யார் கொடுத்தார் உந்துருளி
யாசித்து நின்றவர்க்கு
சீர் கொடுத்தான் என்றனுக்கு
செந்தமிழர் பெருந்தலைவன்
போர் முகத்தும் புன்னகைக்கும்
பூ முகத்தான் புகழ் வாழ்க!

உந்துருளி ஒன்றதனை
உரியதொரு காலத்தே
தந்தருளி ஊக்குவித்து
தாயகத்தே பணியாற்ற
எந்தனுக்கு இவனிட்ட
இஃதினிய பொன்விலங்கே !

*எந்தவிதம் போற்றுவனோ*
*என்றறியா நிலைக்குற்றேன்*
*செந்தமிழில் கவி இயற்றி*
*செயற்கரிய செய்தானை*
*வந்தனைகள் செய்திதய*
*வாழ்த்துரைத்து நின்றேனே !*

என்று அவரின் வள்ளன்மையை வாழ்த்தியது என் நெஞ்சம். தேவை அறிந்து வழங்கிய தேசியத் தலைவர் அவர்களின் அந்தப்பெருஞ் செயல் என்பணியில் என்னை மேலும் ஊக்குவித்தது. அதன் பயனே "புலிகளின் குரல்" வானொலியில் தொடர்ந்து 85 வாரங்கள் என்னால் தயாரிக்கப்பட்டு ஒலிபரப்புச் செய்யப்பட்ட "தமிழன் சிந்திய இரத்தம்" நிகழ்ச்சியும், பின்னர் தொடராக 23 வாரங்கள் 'ஒலிபரப்பப்பட்ட "கரும்புலி காவியம்" பாகம் ஒன்றின் ஒரு பகுதியும்.

இவ்விரு நிகழ்ச்சிகளையும் எழுதுவதற்காக இரவு பகலாக தரவுகள் தேடி அலைந்த நாட்கள் பல.

இனக்கலவரங்களில் பாதிக்கப்பட்டவர்களையும், அவ்வவலங்களோடு தொடர்புடையவர்களையும் கண்டு பேசிய பொழுதுகளிலும், கரும்புலிகளின் பெற்றோர், உறவினர்கள், நண்பர்களை அவர்கள் பணிபுரிந்த பிரிவின் பொறுப்பாளர்களை ஒன்றுக்குப் பலமுறை சந்தித்து பேசிய பொழுதெல்லாம் இரத்தமும் தசையுமாக அவர்களின் உணர்வுகளோடு ஒன்றித்து அவர்களில் நானும் ஒருவனாக மாறிக் கண்ணீர் விட்டதும், அவற்றை கதை கவிதையாய் புனைந்ததுமான அனுபவங்கள் இருக்கின்றனவே! அப்பப்பா அவை சொல்லில் அடங்காதவை.

இன்னும் சொல்லப் போனால் இனக்கலவரக் கொடுமைகளை எழுதும்போது அந்த அவலத்தில் நானும் ஒருவனாய் சிக்குண்டு நிற்பது போன்றஉணர்வுகளிலும்,

கரும்புலி காவியத்தை எழுதும் போதும், அவர்கள் தீக்குண்டுகளாய் வெடிக்கும் நிகழ்வுகளை சித்தரிக்கும் பொழுதெல்லாம் நானே வெடிப்பதுபோன்று எனக்குள் ஏற்படும் உணர்வுகளிலும் நான் மெய் சிலிர்த்துப்போய் மேற்

கொண்டு தொடர்ந்து எழுத முடியாமல் தவித்து நின்ற சம்பவங்களும் உண்டு.

இவ்விதமாக என் உணர்வுகளைக் கலந்து என்னால் படைக்கப்பட்டதுவே இக் "கரும்புலி காவியம்" இதை படைக்க வேண்டும் என்ற எண்ணத்துக்கு வித்திட்டவர் எமது தேசியத் தலைவர் அவர்களே என்பதில் பெருமைக் கொள்ளுகிறேன்.

15.03.2001 அன்று கரும்புலி காவியம் பாகம் ஒன்றின் தட்டச்சுப் பிரதியை நானும் எனது துணைவியும் தேசியத் தலைவரிடம் நேரடியாகவே கையளித்தோம். அவர் எனது முயற்சியைப் பாராட்டி பரிசு அளித்ததுடன் இதனைத் தான் நூல்வடிவம் ஆக்குவேன் என்று கூறினார். அவரது அந்த வாக்குறுதியின் வடிவமே தற்பொழுது தாங்கள் கைகளில் தாங்கியுள்ள கரும்புலிகாவியம் பாகம் ஒன்று.

அத்தோடு எனது வேண்டுகோளுக்கிணங்க வாழ்த்துச் செய்தியையும் வழங்கி என்னையும் எனது முயற்சியை பெருமைப்படுத்தியுள்ளார். இதற்காவ எனது இதய நன்றிகள் அவருக்குரியனவே.

இன்னும் இந்நூல் வெளிவர உறுதுணையாக நின்றவர்களான தமிழீழ அரசியற்றுறைப் பொறுப்பாளர் திரு. சு.ப. தமிழ்ச் செல்வன் அவர்களுக்கும், அறிவு அமுது பதிப்பகம் பொறுப்பாளர் திரு. ரமேஸ் அவர்களுக்கும் இவ்நூல் வெளிவரக் காரணமாக நின்று உழைத்த அனைத்துத்துறை சார்ந்தவர்களுக்கும் என் நன்றியைக் கூறிக் கொள்கின்றேன்.

இந்தக் காவியத்தை பாடி வருபவன் என்ற மட்டில் எனக்குள்ள மன ஆதங்கங்கள் இரண்டு.

1. தரைக் கரும்புலிகள், கடற் கரும்புலிகள் பற்றியெல்லாம் தகவல் திரட்டிடவும், காவியமாகப் பாடவும் எனக்குக் கிடைத்த பேறு முகமறியாக் கரும்புலிகள் பற்றிப் பாடக் கிடைக்காது என்பது.

2. தொடர்ந்து வரும் கரும்புலித் தாக்குதல்கள், பெருகிவரும் கரும்புலிகள் எண்ணிக்கைகளை பார்க்கும் போது "கரும்புலி காவியம்" என் வாழ் நாளில் என்னால் பாடி முடிக்கக் கூடிய தொன்றல்ல. எனவேதான் களத்தில் விழுகின்ற ஒரு போர் மறவன் தனக்குப் பின்னர் தன் ஆயுதத்தை ஏந்தி போராட இன்னுமொரு வீரன் தோன்ற மாட்டானா என்று கொள்ளும் ஏக்கத்தை போல எனது காலத்தின் பின்னர் என் பேனாவை தூக்கி இன்னும் ஒருவர் இக்காவியத்தை தொடர மாட்டாரா! என்பவையே அவை.

காலம் கடந்த பின்னர் என்றோ ஒரு காலத்தில் ஆய்வுகள் செய்து ஆதாரங்கள் தேடி, அவற்றோடு கற்பனைகளையும் கலந்து வரலாறுகள் எழுதப்படுவதை விடவும், நாம் வாழுகின்ற காலத்திலேயே சம கால நிகழ்வுகளை இலக்கியங்களாகப் படைத்து எமது எதிர்காலச் சந்ததிக்கு ஆவணங்களாகப் பதிவு செய்து வைக்க வேண்டும். இது இன்றைய படைப்பாளிகளுக்கு உள்ள இன்றியமையாக் கடமை என்று கருதுகிறேன்.

கரும்புலி காவியத்தை நான் எழுதுவதற்கு ஊக்குவிப்புச் சக்திகளாகவும்உறுதுணையாகவும் நின்ற எமது தேசியத் தலைவர் அவர்கள், தமிழீழ அரசியற்றுறைப் பொறுப்பாளர், தளபதிகள், போராளிகள், கரும்புலிகளின் பெற்றோர், உறவினர்கள் நண்பர்கள் "கரும்புலி காவியம்" முதலாம்பாகத்தின் முற்பாதிப் பகுதியை தொடர்ந்து 23 வாரங்கள் ஒலிபரப்பிய புலிகளின் குரல் வானொலி நிறுவனத்தினர், மற்றும் இக்காவியத்துக்கான பிரதிகளை தட்டச்சு செய்து கொடுத்துதவிய செல்வன் சி.சதீஸ் அனைவருக்கும் எனது இதய நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இது விடயத்தில் தொடர்ந்தும் நான் முன்னெடுக்கும் முயற்சிகளிலும், என்னை தொடர்ந்து யாரும் இப்பணியை செய்ய முன்வருவாரானால் அவருக்கும் ஊறுதுணையாக நின்று உதவ வேண்டும் என்று உலக தமிழ் மக்களிடம் விண்ணப்பித்து நிற்கின்றேன்.

*"நன்றி"*

*- நாவண்ணன்*

# காணிக்கை

காற்றோடு புனலோடு
  கனலோடு சென்றவரே!
கூற்றமும் அஞ்சிட
  கொடி நாட்டி வென்றவரே
முகமறியோம் உங்களது
  முகவரியும் நாமறியோம்
செகமறிய ஈகத்தின்
  செயல் வடிவ மானவரே
சீவியத்தில் நன்றி சொல்ல
  சிறுபுழுயான் வகையறியேன்
காவியத்தைப் பாடியும்
  காலடியைத் தொழுகின்றேன்.

நாவண்ணன்
15.03.2001

# கரும்புலி காவியம்
## பாயிரம்

பூமியில் உள்ளோர் புரிந்திட வியலா
புதுமைகள் செய்யும் புலிவீரர்
சாவினை கரும்பாய் சுவைத்திடும் மரபு
சரித்திரம் கண்ட கரும்புலிகள்
காவியம் பாடத் துணிந்தவென் செய்கை
கருதிய படியே நிறை வெய்த
நாவினுக் கினியாள் நந்தமிழ் தாயின்
நல்லடி பணிந்தே தொடருகின்றேன்.

பாவினைப் பாடும் பாக்கியம் பெற்ற
பைந்தமிழ் குழவி யானானேன்
காவினில் உதிரும் பூவினைப் போல
கவிதைகள் பொழியும் வகையறியேன்
ஆவியிற் பிறந்த ஆவலே தூண்ட
அருகதை யில்லாச் சிறு பிறவி
மூவினத் தமிழாள் மூத்தவள் இளையாள்
முன்னடி பணிந்தே ஏடெடுத்தேன்.

கரும்புலி காவியம் கற்பவர் நெஞ்சிலே
கதை பல கூறும் இனம் வாழ
அரும்பிடும் வயதினில் ஆகுதி ஆனவர்
அடுத்தவர் வாழத் தமையீந்தோர்
பெருங்கொடை யதனை புவியோர் அறிந்து
புகழதை நிதமும் பாடிடவும்
வருந்தமிழ்ச் சந்ததி வணங்கவும் நெஞ்சில்
வரையவும் என்றே வரையலுற்றேன்.

புறத்தமிழ் சொன்ன மறத்தமிழ்வீரர்
　　புகழதை விஞ்சிய கரும்புலிகள்
விறற்றனம் பாட விரும்பிய ஏழை
　　வெல்வனோ அறியேன் வித்தகர்முன்
திறற்றகை யில்லான் தெரிந்தும் துணிந்தேன்
　　தீந்தமிழ்த் தெய்வம் துணைசெய்வாள்
அறத்தினில் வழுவா அவர்கதை பாட
　　அன்னையே தமிழே அருள் செய்வாய்.

என்னை இந் நாளில் ஈழத்தரையில்
　　எழுதிட வைத்த பரம்பொருளே!
என்னை படைத்ததும் இதனை பணித்ததும்
　　இறையுன் செயலே யானறிவேன்
தன்னை தந்கொடை தந்தவர் காவியம்
　　தந்திடத் தூண்டுவ துன்னருளே
உன்னைப் பணித்தேன் ஊற்றெனத் தமிழ்க்கவி
　　ஊறிட உன்னருள் நீ தருவாய்.

❊ ❊ ❊

# கரும்புலி தோன்றிய காலமும் காரணமும்

*பொங்கிடும் அலைகள் ஆடும்*
*பொன்வளம் மனையில் ஆடும்*
*சங்கொடு மணிகள் பாடும்*
*சந்நிதி அருளே கூடும்*
*நுங்கொடு பனைகள் ஆடும்*
*நுவலரும் பெருமை சேரும்*
*மங்கல வல்லை யூரில்*
*வரலாறு தொடங்கிற்றம்மா!*

*தமிழொடு தமிழ் மண் வாழ*
*தமிழர்கள் தமையே ஆள*
*தமிழரென் றுலகில் வாழ்வோர்*
*தலைநிமிர்ந் திடவும் ஈழத்*
*தமிழர்தம் தலைவன் தன்னை*
*தரணிக்கே தந்த வல்வைத்*
*தமிழர் தம் மண்ணிற் றானே*
*தற்கொடை பிறந்ததம்மா!*

*சிங்கள நாட்டார் தம்மை*
*சிறப்புடன் வாழ விட்டு*
*எங்களின் நாட்டில் நாங்கள்*
*எழுச்சியாய் வாழ்ந்த காலை*
*கங்குலை ஏவி விட்டு*
*கதிரினை ஒழித்தல் போலும்*
*இங்குள இளைஞர் கல்விக்*
*கிடரினை செய்ய நின்றார்.*

*அமைதிப் போர் செய்து பார்த்தோம்*
*அநீதிகள் தவிர்க்க வேண்டி*
*அமைச்சர்க ளோடு பேசி*
*ஒப்பந்தம் செய்து பார்த்தோம்*
*தமை பெரும் தலைவராக்கும்*
*தர்மிஸ்ட வெறியராலே*
*சுமைகளே கூடிப் போச்சு*
*சுதந்திரம் அற்றுப் போச்சு*

விழியிடை விரலை விட்டு
　　வேதனை தருதல் போலும்
குழியிடை உயிரோடு டிட்டு
　　கொட்டிமண் மூடல் போலும்
மொழியிலே கையை வைத்து
　　மோசங்கள் செய்த போது
பழியிதை யெல்லாம் ஏற்கும்
　　பணிந்திடும் இனமா நாங்கள்?

அப்பனைப் போல நானும்
　　அடிமையாய் வாழவாமோ?
தப்பினைத் தொடரில் நானும்
　　தலைமுறை என்னை வையும்
சொப்பன வாழ்வில் காணும்
　　சுதந்திரம் சுவைக்குமோ?
இப்படியாக எண்ணி
　　இளையவர் துடித்தெழுந்தார்

பாண்டவர் தங் கண்முன்னே
　　பாஞ்சாலி துகில் உரிய
"ஆண்டவா கண்ணா" என்று
　　அழைத்தவள் அரற்றி நிற்க
காண்டதை கண்களாலும்
　　கணவர்கள் ஐவர் மௌனம்
பூண்டதைப் போலல்லாமல்
　　புறப்பட்டார் புதிய கூட்டம்.

யாசகம் கேட்போராக
　　யாமினி நில்லோம் என்று
மூசிய இளையோர் மூச்சில்
　　முழக்கொடு தீயைக் கண்டார்
பேசின ஆயுதங்கள்
　　பேச்சினை இழந்தார் பேயர்
யோசனை செய்தார் பௌத்த
　　யோகியர் சதிகள் செய்தார்

வல்வையின் செல்வன் வையம்
வாழ்த்திட வந்த செம்மல்
வெல்வதை யன்றி நெஞ்சில்
வேறெதும் எண்ணல் இல்லான்
வல்லவர் கரிய வேங்கை
வடிவதைத் தெரிந்த நாளை
சொல்வதால் நெற்றிதானே
சுருங்கிடும் வியப்பதாலே

வெலிக்கடைச் சிறையிலிட்டு
விடுதலைப்புலிகள் தம்மை
பலிக்கடா வாக்க வென்று
பகைவர்கள் முனைந்த வேளை
புலிப்படைத் தலைவன் தானே
புறப்படத் துணிந்து போதே
வலிப்படை கரிய வேங்கை
வரலாறு தோன்றிற்றம்மா

தற்கொடைப் பலியாய் தன்னை
தலைவனே ஈய்ந்துதானே
முற்கொடையாகிப் போனால்
முடிவென்ன விடுதலைப்போர்?
பொற்புடை தலைவா நாங்கள்
பொருதுவோம் எம்மை ஈய்ந்து
இப்படை வளர்ப்பீர் வாழ்ந்து
என்றிட்டார் தம்பிமார்கள்

தன்னையே கொடையாய் ஈயும்
தத்துவம் தன்னை அன்று
சொன்னவன் மறத்தானில்லை
சுகம்பெற நினைத்தானில்லை
அன்னவன் சிந்தை என்றும்
அதைநினை வாகக் கொண்டே
பின்வரும் காலம் எல்லாம்
பின்பற்றி நடக்கலானான்

அந்நியர் படைகள் வந்து
அராஜகம் விளைத்த போழ்து
தன்னவரோடு காட்டில்
தஞ்சமே சென்ற வேளை
தன்னொடு இயக்கம் சார்ந்த
தகுதிசேர் தடயம் எல்லாம்
இன்னுமோர் கையை சேரா
திருப்பதில் உறுதி பூண்டான்

நக்கிடு நாயிற் கீழோர்
நரிக்குணர் எளியர் முன்னர்
விக்டரின் குழியைத் தோண்டி
வித்துடல் அதனைத் தீண்டி
உக்கிய தலையை வெட்டி
உருத்தெரியாமல் செய்த
பக்குவமற்ற தான
பண்பறு செயல் தவிர்க்க

காட்டிலே மறைந்து வாழ்ந்து
கடுந்துயர் சுமந்த போது
ஈட்டினால் எதிரி வெற்றி
ஈற்றிலே எரிந்து சாவேன்
மாட்டிடேன், பெற்றோல் ஊற்றி
மரணத்தால் அழிப்பேன் என்று
தீட்டிய திட்டம் கொண்ட
தலைவனோர் கரியவேங்கை

உயிரெனப் போற்றும் தங்கள்
உயரிய தலைவன் றன்னை
பயிரினை வேலிமேய்ந்த
பழமொழிக் கொப்ப அன்று
அயலகச் சிறையில் இட்ட
அரசினர் போக்கைக் காய்ந்து
முயன்றனர் தம்பிமார்கள்
முடித்திடத் தங்கள் ஆவி

உயரிய கட்டிடத்தில்
உச்சியில் ஏறி நின்று
பயமறு நெஞ்சி னோடு
பாய்ந்துயிர் மாய்த்தால் அண்ணன்
நயம்பெற விடுவார் என்று
நம்பியே அவர் துணிந்து
முயன்றதும் உயிராயுத
முயற்சியின் தொடக்கம்தானே.

கரும்புலி அணியின் உத்தி
கருத்திலே செனித்துப் பின்னர்
அரும்பியே முளைகள் விட்டு
ஆழவேர், கிளைகள் விட்டு
தரும்பயன் கால மாக
தர்மிஸ்ட் ஆட்சிநாளில்
பெரும்அடி கொடுக்க வென்று
பெருமகன் பார்த்திருந்தான்

இழப்புகள் சொற்பமாக
எதிரியின் கர்ப்பம்தீய
அளப்பெரும் வெற்றிகாண
அர்ப்பணப் போர்புரிய
தளத்தையே தகர்த்தழிக்கும்
தருக்கரை எரித்தழிக்க
களப்புலி உதித்த தம்மா
கரும்புலி வடிவம் தாங்கி

கனரக ஆயுதங்கள்
கைகளில் இல்லா காலம்
கனகன இழப்பை தாங்கி
களப்புலி வளர்ந்த தாலே
மனத்துணி வுள்ள மைந்தர்
மடிவதால் ஓரிருவர்
நினைத்ததை வெல்வம் என்ற
நினைப்புடன் நிமிர்ந்திட்டாரே

முன்னவர் முசுலிம் என்பர்
மூத்தவர் தமிழர் என்பர்
என்னதான் இனமே என்று
எளிதினில் இயம்ப ஏலான்
தன்னையே பௌத்த நாட்டின்
தனிப்பெருந் தலைவன் என்று
சின்னவன் ஜெயவர்த்தனா
சிறிலங்கா ஆண்டகாலம்

"போரென்றால் போரே" என்றான்
பொருதிடத் துணிவு கொண்டான்
பார்ஏங்கள் வீரம் என்று
பலமது காட்ட நின்றான்
சீர்கொண்ட தமிழீழத்தை
சிதைத்திடச் சூளுரைத்தான்
நீர்கொண்ட தமிழர் நாட்டில்
நிகழ்ந்தது போல் அழித்தான்

அத்துலத்முதலி என்பான்
அவனது அமைச்சனானான்
வித்தகன் சட்டம் கற்றோன்
விடுதலைப்புலிகள் தம்மை
வித்தொடு அழிப்பன் என்று
விடையது பெற்று வந்தான்
கத்தியை கரத்தில் கொண்ட
கசாப்புத் தொழிலான் போலும்

விடுதலைப்புலிகள் வேந்தன்
வெள்ளியாய் உதித்த மண்ணில்
விடுதலை நடவடிக்கை
வெறித்தன மாகச் செய்தான்
கெடுதல்கள் கோடி செய்து
கேட்பவர் யார்தான் என்ற
கொடுமதி கொண்டோனாக
கொக்கரிப் போடுவந்தான்

நரியொடும் நாய்கள் கூடி
நரபலி வேட்டையாட
அரியினப் படைஞர் ஆங்கு
அவர் மனம் போல ஆட
எரிதழல் விழியோன் எங்கள்
ஏந்தலும் துயில் கொள்வானோ
வரியுடை வல்லியங்கள்
வென்றிட விதிகள் செய்தான்

வீடுகள் இடிந்து வீழ
வேலிகள் எரிந்து சாய
கூடுகள் இழந்து போன
குருகினம் போல எம்மார்
நாடுகள் பிடிக்க வந்த
நஞ்சர் செய் நாசத்தாலே
பாடுகள் பட்டார் ஐயோ
பகர்ந்திட வார்த்தையில்லை

மாடுகள் பயிரை மேய்தால்
மனமது தாங்குமாமோ?
நாடது விட்டு வந்து
நம்மவர் வாழும் நாட்டின்
ஊடுவந் தீழ மக்கள்
ஊர்மனை கொழுத்துவோரை
ஆடுக ஆட்டம் என்று
அனுமதித் திருப்பதாமோ?

பெரும்படை யாக வந்து
பேரிடர் தருவோர் தம்மை
அரும்பொடு அழிக்க வேண்டி
அதற்கொரு படையை வேண்டி
இரும்புடை நெஞ்சோரான
இளைவர் தம்மைக் கொண்ட
கரும்படை உதித்திற்றம்மா
களப்புலி நிமிர்ந்திற்றம்மா

கொலைத் தொழில் செய்தல் தங்கள்
குலத்தொழில் என்றே கொண்டோர்
குலைத்தெம தீழ மண்ணை
குரைத்தனர் குருதியாடி
புலைத்தொழில் செய்யும் உம்மை
பொசுக்குவோம் என்றெழுந்து
மலைத்திட வையமெல்லாம்
மோதினர் கரும்புலிகள்.

❋ ❋ ❋



# முதற் கரும்புலிகள் தோற்றம்

படையெடுத்து நிலம்பிடித்து
பலியெடுத்த சிங்களம்
தடையுடைத்துத் தமிழர் மண்ணில்
தடியெடுத்து வந்தது

உடல்கிழித்து உயிர்குடித்து
உதிரமுண்ணும் இராணுவம்
மடை யுடைத்த வெள்ளம் போல
மடமடென்று வந்தது.

சிறுவரென்ன கிழவரென்ன
சிறுமை செய்த இராணுவம்
கறவையென்ன கன்றையென்ன
கண்டிடாமல் கொன்றது

எறிகணைகள் ஏவிமுன்னே
எகிறிவந்த இராணுவம்
வெறிபடைத்து வினைகளாற்ற
வீறுகொண்டு வந்தது.

இராணுவப் பயிற்சிய
இஸ்ரவேல் மொசாட்படை
இராமனம் படைத்ததாக
இடித்தழித்து வந்தது

அராவினங்கள் உயிர்குடிக்க
அரக்கியூர்தல் போலுமே
உராலி அன்ன ஊளையிட்டு
உயிர் குடிசக வந்தது

கராயுதங்கள் கரத்திலேந்தி
கடனியற்ற வந்தது
நிராயுதத்தி னர்களான
நம்மவரைக் கொன்றது

பராவெளிச்சம் போட்டுஎம்மை
பயமுறுத்திப் பார்த்தது
வராதினியும் தோல்வி என்று
வாயடித்துக் கொண்டது

வல்வைதாண்டி வடமராட்சி
வந்தடைந்த இராணுவம்
நெல்லியடிப் பாடசாலை
நிலையெடுத்து நின்றது

கல்விக்கூடம் என்றபோதும்
கவலையற்ற இராணுவம்
கள்வர்கூடம் ஆக்கியதனை
கறைபடுத்தி நின்றது

முள்ளுவேலி யிட்டு அங்கு
முகாம் அமைத்த இராணுவம்
கள்ளையுண்ட மந்திபோல
களித்து ஆடி நின்றது

கிள்ளுக்கீரை என்று எண்ணி
கிளர்ச்சி கொண்ட தமிழரை
கொள்ளியிட்டுக் கொழுத்திடவே
கொக்கரித்து நின்றது

*விடுதலை நடவடிக்கை
வெற்றிகொண்ட தென்றவர்
படுகொலைகள் தொடர்ந்திடவே
பயமுறுத்தி நின்றது

கெடுகுடிகள் என்றைக்குமே
கேட்டிடாது நன்மொழி
கொடுங் குணத்தர் வழிநடத்த
கொலைக்களத்தில் நின்றது

ஆட்டமொடு பாட்டுப்பாடி
ஆர்ப்பரிப்புச் செய்தது
கூட்டம்போட்டு கூச்சல்போட்டு
கூத்தடித்து இருந்தது.

கோட்டைபோன்ற காவலரண்
கூட்டுகருள்ளே நின்றது
சேட்டை நூறு செய்துகொண்டு
செயவிழா வெடுத்தது

வடமராட்சி மண்பிடித்த
வரட்டுவீரம் பேசியே
திடமிழந்தார் புலிகளென்று
திமிர் பிடித்துக் கூறினார்.

அட, தமிழன் என்றைக்குமே
அசையப்போவ தில்லைபார்
தடமழிந்து போகச்செய்வார்
தப்பிடா திருந்துபார்.

உடனிருந்து உறிஞ்சிவாழும்
உண்ணிக்கூட்டம் கூடவே
கடனதென்று கைகள் ஏந்தி
கழுவினார்கள் வயிறுகள்

படமெடுத்து ஆடுகின்ற
பாம்புகள்தம் பற்களும்
விடமழியப் புற்றினோடு
வேகப்போவ தறிந்திலார்

அரிய இந்த வினை முடிக்க
அண்ணன் விடை தேடினான்
கரியவேற்கை புதிய உத்தி
கருவெடுத்தான் நெஞ்சிலே


புரியவேண்டிப் பணியிதனை
புலிகள் பலர் துடித்தனர்
தெரிவினூடு மில்லர் என்னும்
திறனுடையோன் தோன்றினான்

கருகியுடல் சிதற லெண்ணி
கடுகளவும் நெஞ்சிலே
வெருவிடாத வேங்கையான
வீரன் மில்லர் தோன்றினான்


எதற்கும் மிணை கூற வொண்ணா
இரும்பு நெஞ்சன் மில்லரே
முதற்கரிய புலியன் என்ற
முடியைச் சூடிக் கொண்டனன்.

❋ ❋ ❋

* ஒப்பரேசன் லிபரேசன்



# கரும்புலி மில்லர்



வல்லவர்க்கு வல்லவனாய்
வையகத்தில் வந்துதித்த
வெல்லவரும் பெரும்தலைவன்
விறல் வேங்கைப் படையணியில்
எல்லவரும் கண்டஞ்சும்
இடியாக எழுந்திட்ட
மில்லரவன் கொண்ட வீரம்
மேலான மண் பற்றை
சொல்லவரும் முன்னாலே
சொல்லிடுவோம் வரலாறு
செல்லமகன் தோன்றியமண்
கரவெட்டி துன்னாலை
வல்லிபுரம் தம்பதிகள்
வாரிசென வந்த மகன்
கல்வியொடு செல்வமென
பல்வளமும் குறைவில்லா
இல்லமதில் தோன்றியவன்
இன்னலெதும் அறியாது
நல்லவனாய் வளர்ந்தமகன்
நாட்டினுக்காய் பிறந்தமகன்
வசந்தனெனும் பெயரோடும்
வாஞ்சையுள்ள அயலோரும்

வசந்தமெனத் தன்வீட்டில்
வளர்ந்து வரும் காலேத்தே
கல்லூரி ஹாட்லியில்
கற்றுவந்த அந்நாளில்
இல்லவிளையாட்டுகளில்
இலங்கியவன் பரிசுபெற்று
இல்லையெனும் சொல்லறியான்
இன்சொல்லை விட்டறியான்.
ஈன்ற இவன் அன்னைக்கோ
இவன் மீது பெரும் பாசம்
என்மகனை யானறிவேன்
என்னஅவன் செய்தாலும்
நன்மையதே செய்வனென
நம்பிக்கை யோடுரைப்பாள்.
தன்வயிற்றின் நன்முத்தே
தமிழீழ விடிவுனுகாய்
தன்னை அழித் தேபகையை
தகர்த்தழிக்கும் இடியாக
பின்னையவன் வருதினை
பெருந்தாயாள் அறிந்துஇலள்
மண்ணதனின் வளம்தானே
மரஞ்செடியில் வளமாகும்
பெண்ணவளிற் கருவெடுத்த
பேறான காரணத்தால்
தன்மகனின் உணர்வுக்கும்
தானேதான் முதலானாள்
சின்னவனாய் அவன்செய்த
சேட்டைகள் குறும்பெல்லாம்
கண்ணுக்கும் கருத்துக்கும்
கன்னற் சுவையாச்சு
மண்ணளைந்து விளையாடும்
மைந்தனவன் நெஞ்சினிலே
புண்ணதனில் வேல்நுழைந்த
பொல்லாத வேதனையை
கொண்டுணர வைத்ததுவாம்
கொடிதான செய்தியது

"நீ அளையும் மண்ணுக்கு
நீ சொந்தக் காரனில்லை"
தீ எழுந்து சுட்டது போல்
திடுக்குற்றான் கலக்குற்றான்
தாய் பிறந்த தாய்மண்ணில்
தனக்குரிமை இல்லையொரு
பேய்வந்து ஆள்வதெனில்
பிறகெதற்கு வாழ்வெனக்கு?
சேய்தனது கடனுணர்ந்து
செயற்படவும் துணிந்திட்டான்
முன்னவர்கள் விட்டபிழை
என்னையின்று சுட்டதுபோல்
பின்னைவரும் சந்ததிக்கும்
பேரிடரைத் தந்திடவோ
அன்னையவள் விலங்கொடித்து
அதற்கெனவே போராட
என்ன இடர் வந்திடினும்
ஏற்பதென முடிவெடுத்து
அண்ணன்பிர பாகரனின்
அழைப்பதனை அவனேற்று
எண்ணரிய ஆவலுடன்
எண்பத்தி நான்கினிலே
வெல்லவரும் வேங்கையணி
மில்லெரனும் பெயர் பூண்டான்
எண்பத்தி ஏழிற்றான்
எரிமலையின் முதல்வெடிப்பு
கண்பொத்த எதிரி அடி
கொண்டதுவும் அவ்வாண்டே
"ஒப்பறேசன் லிபறேசன்"
ஒப்பரிய நடவடிக்கை
எப்படியும் தமிழ்மண்ணை
ஏப்பமிடும் எண்ணமுடன்
கொப்பபேகடுவ எனும்
கொடியவன்றன் தலைமையிலே
செப்பரிய துயர்தந்து
செல் அடித்து முன்னேறி

உப்பரிகை பிடித்தது போல்
உட்கார்ந்தான் முகாமைத்து
அப்பொழுதே அண்ணனவன்
ஆணை பிறந்ததுவாம்
கொப்புடனே கொடியுடனே
கொழுத்திப் பகைஎரிக்க
தற்கொடையே மருந்தாகும்
தம்பியரே எழுமென்றான்
விரலசையும் முன்னாலே
விடைநூறு வந்ததுபோல
வரிவேங்கைப் படைமறவர்
வளைத்திட்டார் தலைமகனை
தரல்வேண்டும் எனக்காணை
தகர்க்கின்றேன் பகைச்சேனை
வரல்வேண்டும் எனக்கந்த
வரலாற்றுப் புகழ் என்றே
"என்னைவிடும் முதல் அண்ணா
எதிரிபடை அழிக்கின்றேன்
பொன்னை நிகர் வாய்ப்பு இது
பொருந்தும் ஐயா எனக்" கேன்போர்
"என்றோ ஒருநாளில்
எரியத்தான் போகின்றேன்
இன்றே நான் எரிகின்றேன்
இடும் ஆணை எனக்" என்போர்
"நன்றில்லை நன்றில்லை
நானேதான் முதற்போவேன்
வென்றொழிப்பேன் என்றனுக்கு
விடைதாரும்" எனக் கேட்போர்
அப்பழுக்கு இல்லாத
அசல்வீரர் புலிவீரர்
இப்படிதான் போட்டியிட்டு
இயற்றுதற்கு அக்கடனை
ஆளுக்கு ஆள்முந்தி
அண்ணவன் அடி சூழ்ந்து

வேள்விக்குப் பொருளாக
வேண்டுதல்கள் விடுத்தார்கள்
செவ்விழியோன் கரிகாலன்
சிரித்தபடி பதிலிறுத்தான்
"ஔவியமே இல்லாத
அசல் வீரத் தம்பியர் உம்
ஒவ்வொருவர் வீரத்தால்
என்னுள்ளம் மகிழுதப்பா
செவ்வியதாய் எல்லோரும்
செயற்படுவீர் அறிவேன்யான்
நெல்லியடிப் பள்ளியிலே
நிலைகொண்ட பகைவனுக்கு
கொள்ளி யடிகொடுத்து
கொன்று குலைப்பதற்கு
கருவேங்கைக் கடனியற்ற
ஒருவேங்கைக் போதுமடா
தருவேன் யான் சந்தர்ப்பம்
தக்கார்க்கு பின்னாளில்
பெருவீரத் தம்பியரே
பெருங்கடனை இன்றியற்ற
தரமான சாரதியாய்
தம்பிமில்லர் திகழ்கின்றான்
உரமான வீரனவன்
உறுதியுடன் செயற்படுவான்
கரும்புலியாய் அவன் போய்த்தன்
கடனியற்றி முடித்திடுவான்"
கரகரக்கும் குரலோடு
கண்பனிக்க மனம்பதைக்க
கரிகாலன் பதிலிறுத்தான்
கட்டளையை பிறப்பித்தான்
சுயவரத்தில் மணமாலைச்
சுகம்கிட்டா மன்னவர் போல்
வரம்கிட்டா வேங்கையர்கள்
வாடிநிற்க முகமலர்கள்
கரம்கொட்டி ஆர்ப்பரித்தான்
கருவேங்கை மில்லரவன்.

# 1987.07.05 முதல் கரும்புலித் தாக்குதல்

தற்கொடைத் தாக்குதல் பணியினை ஏற்றவன்
தாங்கொணா இன்பத்தி லேகளித்தான் - அதில்
முற்கொடையானது முன்னவர் செய்த
முற்பயன் என்றே தான்கொண்டான்

அங்கம் சிதைப்பதும் ஆவிகொடுப்பதும்
ஆவிகலங்கிடச் செய்யவில்லை - மக்கள்
பங்கம் துடைத்திட பாரில் எனக்கொரு
பாக்கியம் கிட்டிய தென்றுணர்ந்தான்

"மக்கள் விடுதலை வேண்டியே என்னுயிர்
மாய்ப்பதில் ஆனந்தம் கொள்ளுகின்றேன் - அந்த
மக்கள் விடுதலை பெற்றிடும் காட்சியை
மாண்டநான் காணப் போவதில்லை

சாவைமனதிலே கட்டியே கொண்டவன்
சற்றும் மனத்துயர் கொள்ளவில்லை -புதுப்
பூவை உதிர்த்திடல் போல உதட்டினில்
புன்னகை காட்டி மகிழ்ந்திருந்தான்"

கயிற்றிலே தொங்கிடும் காலம்அறிந்தவன்
கண்கள் உறங்குமோ நிம்மதியாய் -இங்கு
வயிற்றிலே தீயினைக் கட்டிய மில்லரோ
வாழ்கையின் பேறென வேசிரித்தான்

அன்னையைக் கண்டனன் ஆயினும்தன்மன
ஆழத்து உண்மையை கூறவில்லை - மண்ணில்
தன்னைப் பெற்ற தாயவள் தாழ்களை
தன்னுள்ளே பூசித்தே விடையிறுத்தான்

"என்னரும் நண்பர்கள் உன்னிடம்வந்திடில்
உண்ணக் கொடுத்திடு உபசரிப்பாய்" - என்றான்
பண்ணிடவிருக்கும் பணிவிடைபற்றியோ
பார்வையாற் கூடச் சொல்லவில்லை

எத்தனை ஆனந்தம் மில்லர் முகத்திலே
எப்படி வந்தது அந்த ஒளி - அட
அத்தனை இன்பமா ஆவி துறப்பதில்
அன்பர்கள் நெஞ்சிலோ ஆச்சரியம்

தாக்குதல் வேலைக்கு ஆயத்தம் செய்கையில்
தானும் கூடவே வேலைசெய்தான் - உயிர்
நீக்கிடும் வேலையில் தப்பேதும் இன்றியே
நிகழ்திட வெண்ணியே நின்றுசெய்தான்

சக்கை அடைக்கிறான் வண்டியிலேற்றுறான்
சரிபிழை பார்க்கிறான் வாகனத்தை - தான்
சுக்குநூ றாவதில் சுகமது உண்டென
சொல்லாமல் சொல்லிற்றான் தோழருக்கு

நாழிகை தாண்டவும் நாட்கள் சுருங்கவும்
நடுக்கமோ பதற்றமோ ஏதுமில்லை - இன்னும்
கேலிகள் செய்கின்றான் கிண்டல்கள் செய்கிறான்
கெக்கட்ட மிட்டுச்சி ரித்திடுவான்

இன்னும் சிலபொழு தேகிடில் தம்தோழன்
இப்புவி வாழ்கையை நீத்திடுவான் - உடல்
சின்னா பின்னமாகும் செயலதை எண்ணியே
சித்தம் கலங்கிடத் தோழர் நின்றார்

இத்தனை தூரம்தான் போகவேண்டுமென
எல்லை வகுத்தவர் கூறுகையில் - நான்
"இத்தனை தூரமா! இன்னுமுள்ளே சென்று
இடித்திடுவேனெ"ன்று சொல்லுகின்றான்

அச்சம் அவனது அடிகளில் நின்றது
அஞ்சாமை நெஞ்சிலே விஞ்சியது - சாவைத்
துச்சமாய்க்கொண்டு எதிரிகள் பாசறை
தூசெனத் துகள் செய்யத் துணிந்தனனே

ஆசைகள்விட்டவன் அன்னைமண் மீட்டிடும்
ஆசையைத் தொட்டவனாகையினால் - பையில்
காசை எடுத்துத்தன் பக்கலிலே நின்ற
பாங்கரின் கைகளி லேகொடுத்தான்

நிச்சயம் மீண்டும்தான் வந்திடான் என்பதை
நம்பியதால் மிகத் திட்டமாக - அன்று
அச்செயல்புரிந்து அன்பர்கள் தம்மிடை
ஆறிட வார்த்தைகள் கூறுகின்றான்

தாக்குதல் முடிந்து தான்மீளுவேன் என்று
தன்னவர் நம்பிட சொல்பவன் போல் - மில்லர்
போக்குகள் காட்டிப் பேசுகின்றான் நண்பர்
பொங்கிடவே நெஞ்சம் விம்முகின்றார்

எப்படி முடியும் இப்படிக்கூறிட
எவருக்குத் தான்மனம் வந்திடுமோ - அவன்
அப்படிகூறியே தான் வருவேனென்ற
ஆசையை ஊட்டினான் தோழருக்கு

காலம்குறுக்கிடக் காலம்குறுக்கிடக்
கண்கள்பனித்திட நண்பருக்கு - மில்லர்
ஞாலம் வியந்திடும் யாகம் முடித்திடும்
நாட்டமதில் மனம் நாட்டி நின்றான்

பாதிவழியிலே வாகனச்சக்கரம்
பாதையிற் புதைய தானும்கூட - தள்ளி
வீதியில் ஏற்றியே வேகத்தைக் கூட்டியே
விடையது கொடுத்துச் செல்லுகின்றான்

கட்டிப்பிடித்தனர் முத்தங்களிட்டனர்
கண்கள் வழிந்திடக் கையசைத்தார் - இனிக்
கிட்டிடாதவனைக் தொட்டிடும் பேறேனும்
காரணத்தால் நண்பர் விம்முகின்றார்

"நேரம்கடக்குது நேரம்கடக்குது
நிற்க ஏலா" தென்று பரபரத்தான் - மன
வீரம் படைத்திடும் வேகம் உதைத்திட
விடையது கொடுத்துச் செல்லுகின்றான்

ஊர்வலம் போகின்ற பாவனையில் மில்லர்
ஊர்தியை செலுத்திச் செல்லுகின்றான் - ஒரு
தேரதில் சென்றிடும் தேவனைப்போலவே
தேடிப்பகை வெல்லச் செல்லுகின்றான்

காலனே மில்லரை கண்டஞ்சி நின்றிட
காவியம் படைக்கச்செல்லுகின்றான் - இங்கு
வேலென நெஞ்சிலே வேதனை குத்திட
வீதியில் தோழர்கள் வெம்புகின்றார்

நள்ளிர வண்மித்த வேளையிலே மில்லர்
நாடிப் பகைவெல்லச் செல்லகின்றான் - விடி
வெள்ளி முளைத்திட ஈழத்தமிழினம்
வெற்றியடைந்திடச் செல்லுகின்றான்

ஓட்டியவாகனம் ஓடிமறைந்தது
ஒப்பிலாமில்லரும் போய்மறைந்தான் - புலி
நாட்டிய சாதனை நானிலம் கண்டது
நயனங்கள் மின்னின நீர் பொழிந்தே.

வஞ்சப்படையினர் வாசலில் வந்திடும்
வாகனத் தூதனைக் காணவில்லை - அவன்
நெஞ்சைப் பிளந்திட நீறது ஆக்கிட
நெருப்பு வருவதை உணரவில்லை

கொஞ்சப் பொழுதினில் கோபுரம் சாய்ந்திடக்
கொல்லப்ப டுவம்மென் றெண்ணியிரார் - தீக்
குஞ்சு நுழைந்தது குண்டு வெடித்தது
கொட்டுண்டு போனது கொட்டமெல்லாம்

வெடிவெடித்தது கிடுகிடுத்தது
பொடி படைத்தது இராணுவம்
துடிதுடித்தது குடிகெடுத்தவர்
முடியுடைத்தனன் மில்லரே

நெறிகெடுத்தவர் வெறிஒடித்திட
பறிகொடுத்தனர் யாவுமே
குறிபிழைத்திடா பொறிஇடித்தால்
முறிவுடைத்தனர் யாருமே

ஆர்ப்பரிப்புகள் அழுகையாகின
ஊர்ப்புறத்தினில் ஓலமே
போர்குணத்தினர் பொடிகளாகிட
தூர்ந்திடிந்தன மனைகளே

நெல்லியடியிலே பள்ளிவளவிலே
துள்ளியாடிய துரோகியர்
கொள்ளி சொருகிய மில்லரடியிலே
சுள்ளியாகியே கருகினார்

தலையுருண்டிட மலைசரிந்திடும்
நிலையடைந்தது இராணுவம்
நிலை அழிந்திட கொலை நிகழ்ந்தது
குலை விழுந்ததாய் உதிர்ந்தனர்

மரங்கள் செடிகளில் கரங்கள்தொங்கின
தரங்கள் உருண்டன தரையிலே
உரங்கொள் சிங்களர் நொருங்கிமாள்கையில்
இரங்க யாருமே இல்லையே

குருதி வெள்ளமே அருவியாகியே
பெருகி ஓடிய தெங்குமே
செருவில் முட்டிட கருதிவந்தவர்
கருகிவிட்டனர் தம்முயிர்

சேனை நடத்திய செருக்கர் சிந்தனை
செத்து மடிந்தது பேரிடியாய் - போர்
ஆனை கொடுத்தவன் அத்துலத்முதலி
ஆறறிவிழந்து அலறலுற்றான்.

கொலைவெறியாளன் கொப்பேகடுவ
கொட்டம் அடங்கி இடிந்துவிட்டான் - அவன்
நிலைபரிதாபம் நெடுமூச்செறிந்து
நிம்மதி இழந்து தவித்திட்டான்

சூளது உரைத்த ஜெயவர்த்தனா
சூடது இறங்கிச் சுருங்கிவிட்டான் - பெரும்
ஆளணி ஆயுதம் அழிந்தது எண்ணி
ஐயோவென்று அழுதிட்டான்

குறுகிய இழப்பில் கூடுதல் வெற்றி
குவித்திட நினைத்த கரிகாலன் - மனம்
பெருகியவெற்றிப் பெருமிதத்தோடு
உருகினன் மில்லர் தியாகத்தால்

"போரெனிற் போரென" பொருதிய சிங்களன்
போச்சுது எல்லாம் என உணர்ந்து - இனி
நீரே எனது இரட்சகன் என்று
நின்றான் ராஜீவ் அடிபணிந்து

குள்ள நரியதன் குணமறியாது .
வெள்ளையாடென அவன் வலையில் - உடன்
துள்ளி விழுந்தனன் துணையது செய்திட
துணிந்தனன் தமிழர்க் கெதிராக

நீலிக்கண்ணீர் வடித்துப் பொய்மை
நாடகம் நிகழ்ந்திடக் கைநீட்டி - எம்
வேலிக்குள்ளே காலதுவைத்து
வெருட்டிட விரட்டிட விதிசெய்தான்

முதலைக்கண்ணீர் முயலின்கொம்பு!
முடியாக்காரியம் அறியானா? - எம்
முதல்வன் அறிவான் முடிவை அன்றே
முறைப்பை மறைத்து முறுவலித்தான்

✲ ✲ ✲



# கடற்புறா முதல் கடற்கரும்புலி வரை

அரும்புகின்ற வயதினிலே
ஆசைகளை விட்டெறிந்து
பெரும்பணிக ளாற்றிடவே
பிறப்பெடுத்த மாவீரக்
கரும்புலிகள் அணிபிறந்த
கதைகேட்டோம்கடலினிலே
கரும்புலிகள் பிறந்ததினை
காண்போமே தொடந்தீங்கு

திரைஎல்லை மூன்றுபுறம்
திகழ்கின்ற தமிழீழம்
தரை எல்லை ஒருபுறமாய்
தனித்தன்மை யுளாழக்
கரைதோறும் எதிரிப்படை
களமிட்டு முகாமமைத்து
உரையதனில் சொல்லவொணா
உபாதைகளோ பல செய்தான்

அலைமீது கலம் ஓட்டி
ஆழ்கடலில் மீன் பிடிக்க
வலையோடு வருவோரை
வளைத்திழுத்து வதைசெய்து
கொலை செய்தார் கொடியவர்கள்
கொடுமைகளே செய்வதினை
கலையாகக் கொண்டவரால்
கண்ணீரில் மிதந்திட்டார்

கட்டியவன் கடல்மீது
கலம் ஓட்டிச் சென்றிடுவான்
கட்டியவள் காத்திருப்பாள்
காதலனை வரவேற்க
நட்டநடுக் கடலினிலே
நரபலிகள் நடத்தேறும்
பொட்டிழப்பாள் பூவிழப்பாள்
பூவையவள் கரையினிலே

முன்னையவர் ஆழ்கடலில்
மூழ்கித் தொழில் செய்து
எண்ணரிய பொருள்சேர்த்த
ஏற்றமிகு காலமெல்லாம்
அந்நியர்தம் கடல் வலய
அக்கிரமச் சட்டமதால்
பண்ணு தொழில் கைவிட்டுப்
பரதேசி ஆனார்கள்

தரையினிலே படை நடாத்த
தம்பிபிர பாகரன் அக்
கரையினிலே பயிற்சிகளை
கடல்கடந்து நடத்தியதால்
அரைவழியிற் கடலினிலே
அரசகடற் படைதடுத்து
இரைகொண்டா ரதைத்தடுக்க
இயலாது இவர் நின்றார்

புலிவீரர் கடல் மீது
போகவரத் தடைசெய்து
பலிகொண்டு பலபேரை
பரவையினுள் மூழ்கடித்து
வலிகொண்ட கடற்கலங்கள்
வலம்வரவும் எம்கடலில்
மலிகின்ற மரணங்கள்
மறையாது தொடராச்சு

கடற்புலிகள் அணி எண்ணம்
கருக்கொள்ளும் முன்னர் அன்று
"கடற்புறா" வெனும் பெயரில்
கடற்கலம் இவரோட்டி
இடர்க்கெலாம் முகம்கொடுத்து
இயலாமை மேலோங்க
கடற்பலி யாவோரால்
கரிகாலன் மனம் நொந்தான்

கட்டளைக் கப்பல்களை
கடல்நடுவே ஆடவிட்டு
எட்டவே நின்றாலும்
எம்மவர்கள் நடமாடில்
துட்டர்கள் துரத்தினர்
தொல்லைகள் கொடுத்தனர்
சுட்டனர் கொன்றனராம்
சுடுகலப் பலம்கொண்டு

நடுக்கடலில் வெகுதூரம்
நங்கூரமிட்டு நின்று
அடுக்காத பழிபுரியும்
அரச கடற் படையினர்கள்
தொடுக்கின்ற எறிகணையால்
தொல்லையுறும் கரைத்தமிழர்
விடுக்கின்ற கண்ணீரின்
விதிமாற்ற முடிவெடுத்தார்

ஆனையிற வில் நடந்த
ஆகாயம் கடல்வெளிப்போர்
ஆனஇலக் கடையாத
ஆய்வுதனைப் பின்னடத்தி
ஊனமதைக் கண்டறிந்தார்
உண்மையது கடற்போர்க்கு
தானையொன்று இல்லாமை
தப்பெனவே பட்டறிந்தார்

போர்க்கருவி மருந்துவகை
புலிகள் கொடுவரவும்
போர்ப்பயிற்சி பெறுவதற்கு
போய்வரவும் ஈழத்தின்
நீர்ப்பரப்பில் எம்மவரின்
நிம்மதியைக் கெடுப்பவரைத்
தீர்ப்பதற்கும் கடற்புலியை
தீர்வாகத் தெரிவு செய்தார்

படைக்கலக் கொள்வனவை
பரவை வழி செய்வதற்கு
இடைக்கிடை இடர்தந்து
ஈழத்துப் புலிகளுக்கு
தடைக்கற்க ளாய்த்திகழ்ந்த
தமிழீழ எதிரி பலம்
உடைத்திடக் கடற்புலிகள்
உபாயத்தை உற்பவித்தார்

திடல்தனில் போர்வலிமை
திறம்பெறல் வேண்டுமெனில்
கடல்தனில் ஆதிக்கம்
கட்டாயம் தேவையென
இடர்களைக் கடந்தெமது
இனத்தவர் கடல் ஆள
விடையெனக் கடல்வீர
வேங்கைகளைத் தோற்றுவித்தான்

தரைவழியைத் தடைசெய்து
தமிழர்தமை வதைசெய்து
கரைப்புறம் நெடுகிலுமே
கடற்படைத் தளமமைத்து
வரையறை செய்தெம்மார்
வாழ்வினைப் பாழடிப்போர்
விரைவதைத் தடைசெய்ய
விடைகண்டான் புலித்தலைவன்

உந்துவிசைப் படகேறி
ஒரு நிமிடப் போதினிலே
வந்தெதிரி தமிழர்களை
வருத்துகின்ற கொடுமைகளால்
நொந்திருக்கும் தமிழ்மாந்தர்
நோவகற்றக் கடற்புலிகள்
பந்தாடப் புறப்பட்டார்
பகைவர்தமைக் கடலினிலே

நீர்பிளந்து கலமோட்டி
நிலமதனைக் காப்பதற்கு
போர்புரிந்து கடற்படையை
புறமுதுகிட்டோட வைத்து
ஆர்கேட்பார் எமையென்று
அகந்தையோடு நின்றவர்கள்
நார்பட்டுக் கிழிந்தழிய
நம்புலிகள் அடி கொடுத்தார்

அன்றுவரை கடற்புறாவாய்
அலையேறிக் கடனியற்றச்
சென்றவர்கள் கடற்புலியாய்
செயற்படவும் புலிகள்தமை
கொன்றுவிடக் கடற்பரப்பில்
கொக்கரித்து குறுக்கோடி
நின்றவர்கள் கடலுக்குள்
நிற்காது புறங்கொண்டார்

துரத்திவந்த கடற்படையை
தூரத்தே கண்டபுலி
விரட்டிச் சென்றடிக்க
விரைந்தோட முயன்றாலும்
உரத்தஅடி வாங்கியதால்
உடைந்து கலம் நொருங்க
இரத்தமொடு சதை சிதறி
இரையானார் மீன்களுக்கு

மிதவேகப் படகுகளும்
மிகக்குறைந்த ஆயுதமும்
புதிதாகப் பிறந்த கடற்
புலிகளிடம் இருந்ததனால்
அதிவேகப் படகுகளும்
ஆயுதமும்கொண்ட பகை
கதிகலங்கிப் போனார்கள்
கடற்புலிகள் தாக்குதலால்

ஈழத்துத் தரையெங்கும்
இராணுவத் தளமமைத்து
ஆளுதற்குத் திட்டமிட்டு
அழித்தொழிக்க ஆயுதமும்
வாழுவதற்கு உணவுகளும்
வழங்கிவரும் தீவினைக்கு
நீலக்கடல் வழியெ
நீசருக்குத் துணையாச்சு

நித்தமும் இது தொடரில்
நிமிரவகை எமக்கில்லை
யுத்தத்தில் வெற்றிபெறும்
யோசனைக்கும் இடமில்லை
கத்தும் கடல் நடுவே
கடற்புலிகள் இடித்தழித்து
தத்தம் செய்குவதே
தக்கவழி எனக்கொண்டார்

பட்டாளம் பயணிக்கும்
பாரிய கப்பல்களை
திட்டமிட்டுத் தீக்கணையை
தீர்க்கின்ற டோறாவை
கட்டவிழ்த்த கொடுமைகட்கு
கலங்களை ஏவிவிடும்
கட்டளைக் கப்பல்களை
கடல்நீருள் மூழ்கடிக்க

இராணுவக் கூலிகட்கு
இரைசுமக்கும் கப்பல்களை
இராட்சதப் போர்கருவி
ஏற்றிவரும் கப்பல்களை
தரையிறங்கு கப்பல்களை
தகர்த்தழித்து மூழ்கடிக்க
விரைந்திடிக்கும் கடற்கரிய
வேங்கையணி பிறப்பித்தார்


சுடலைகளாய் தமிழீழம்
சூனியத்தில் நிலைகொள்ள
விடலினித் தீவினையாம்
வெற்றிக்கும் தடையிதுவாம்
கடலினைப் புலியாள்தல்
கட்டாயத் தேவையென்றே
உடல்ஆவி அர்ப்பணிக்க
உதித்திட்டார் கருவேங்கை

சுட்டவர்கள் சுடுபட்டார்
சூளுரைத்தோர் மதிகெட்டார்
வெட்டியவர் வெட்டுண்டார்
விரைந்தோடி மூழ்குண்டார்
முட்டவரும் கரும்புலிக்கு
முகம் கொடுக்க முடியாது
பட்டாளக் கடற்கும்பல்
பட்டதுயர் கொஞ்சமல்ல

பேரிடியாய் மோதுவதால்
பெயர்த்தழிக்கும் சாதனையும்
நீரடியில் சென்று கலம்
நிர்மூலம் ஆக்குவதும்
போரடியில் புது அடியாய்
புலிவீரர் வைத்த அடி
சீரடியாய் கவிபுனைந்து
செப்புதற்கு அடங்காது

கடற்புறா பரிணமித்து
கடல் வேங்கை ஆகியது
கடல்வேங்கை பரிணமித்து
கருவேங்கை ஆகியது
விடக்கொடுக் குடைந்துபகை
விரக்தியொடு ஓடியது
திடக் கடற் கரும்புலிகள்
திறச் செயல் இனிகாண்போம்.

❊ ❊ ❊



# முதற் கடற் கரும்புலிகள்

நட்ட நடுக்கடலில் நங்கூரமிட்டபடி
நர்த்தனத்தில் நின்றாள் எடித்தாரா - அவள்
திட்டமென்ன என்றறியா தேபுலிகள் போகவர
தீங்கிழைத்தாள் தீயஎடித்தாரா

சரக்குக் கப்பலென்றும் சாதாரண கப்பலென்றும்
சட்டை செய்யவில்லை புலிவீரர் - அவள்
அரக்கக் கப்பலென்றும் ஆட்கொல்லிக கப்பலென்றும்
அறியவில்லை ஆழித்தொழிற்காரர்

எட்டநிற்கும் எடித்தாரா இடரேதும் செய்யாதாள்
எங்களுக்கோர் ஆபத்தும் இல்லை - அவள்
சுட்டழிக்கப் பீரங்கிகள் சுடுகலன்கள் இல்லாத
சுத்த மகள் தரமாட்டாள் தொல்லை

வல்வெட்டித்துறைக் கடலில் வந்து நிற்கும் அன்னவளின்
வஞ்சனையை இவர்எங்கு கண்டார் - சும்மா
கல்நட்டு விட்டது போல் கடல் மீது நிற்கும்வெறும்
கப்லென்றே தம்மனதில் கொண்டார்

கொலைத்தொழிலைச் செய்கின்ற கொடியகடற்படையினரை
கூவியழைக் கும்சேவல் இவள் தான் - நவீன
தொலைத்தொடர்புக் கருவிகளை தாங்கியவள் தமிழர்களை
தொலைத்தழிக்கத் காரணியும் அவள்தான்

பட்டினியிற் கிடக்கின்ற பசுப்போலக்காணும் அவள்
பார்ப்பதற்கு சாது போல நின்றாள் - ஆனால்
கட்டளைகள் பிறப்பித்து கரைந்தழைத்துத் தம்படையை
கடற்கொலைகள் செய்து உயிர் தின்றாள்

வேவுத்தொழில்புரிவள் வேட்டுமிழும் டோறாக்கள்
வேங்கைகளோ நடுக்கடலில் இறப்பர் - புலி
சாவுக்கிலக்காகி சாகரத்தில் சங்கமிக்க
சத்தியினை அக்கணத்தில் துறப்பர்

"எடித்தாரா" வல்வையிலே ஏவிவிடக்கட்டளைகள்
வெற்றிலைக்கேணியிலே "விக்ரம்" - இன்னும்
அடித்தழிக்க ஆணையிட காங்கேயன்கடற்பரப்பில்
ஆடிநின்றாள் அடுத்தவள் "அபித்தா"

"எடித்தாரா" "விக்ரம்" அபித்தாவை ஆழ்கடலில்
உடைத்தழிக்க உறுதிபுலி அணித்தார் - முதல்
இடித்தாழ்த்த வல்வையிலே எடித்தாரா கப்பலினை
எண்ணியவர் செயற்படவும் துணிந்தார்

கடற்கரிய புலியாக கடமையினை நிறைவேற்ற
காந்தரூபன் இளவேங்கை கிளர்ந்தான் - இவன்
கடற்புறாவில் முன்னிருந்து கரிகாலன் அணைப்பிருந்து
கப்பலினை மூழ்கடிக்க எழுந்தான்


மன்னார்மண் ஈன்றமகன் மற்றுமொரு கருவேங்கை
மாமைந்தன் கொலின்ஸ் என்னும்பேரன் - தனை
மின்னாக்கி இடியாக்கி பொன்னுடலை பொடியாக்கி
மரணிக்கத் துணிந்திட்ட வீரன்

கடற்புறாவின் வழிவந்து கடல்வேங்கை உருவெடுத்து
கருவேங்கையான வினோத் நின்றான் - தன்
உடற்கூட்டை உயிரதனை அர்ப்பணித்து எடித்தாரா
உடைத்திடவே உடன்பட்டுச் சென்றான்

காந்தருபன் கொலின்சோடு வினோத் என்னும் முப்புலிகள்
கடற்கரும் புலிகளென இணைந்தார்- உயிர்
மாந்துகின்ற எடித்தாரா நீந்துகின்ற நீரினுள்ளே
முழ்கித்தரை முட்டவைக்க முனைத்தார்

சக்கை வண்டிப் படகினையே சுற்றிவரப்பாதுகாப்பு
சண்டைசெய டேவிற்றின் அணியாம் - உடன்
முக்கரிய புலிகள் கொலின்ஸ் காந்தருபன் வினோத் ஆனோர்
முன்னேறிச் சென்றிடித்தல் பணியாம்.

❋ ❋ ❋



# கடற்கரும்புலி மேஜர் காந்தரூபன்



முழங்கிடு கடலினில் முதன்முதற்கரும்புலி
கலந்தனை தாக்கிய கதையது சொலுமுன்
கப்பலைத் தாக்கிய கரும்புலிமூவரில்
காந்தரூபனின் கதையது சொல்வோம்
வல்லவையில் பிறந்து வறுமையில் உழன்றவன்
செல்வழியின்றிச் சிறுமையில் அலைந்தவன்
ஈன்றவர் பிரிய இருப்பவர் கைவிட
தான்தோன் றிபோல் தன்வழி வாழ்ந்தவன்
புகலிடமற்ற பிள்ளையென்றாகி
இகழுறு நிலையினில் இங்கும் அங்கும்
கடற்கரைத் தாழங் காயது போலும்
கடற்கரை அவனது இருப்பிடமாச்சு
வசித்திட இடமில்லை புசித்திட வழியில்லை
பசித்திட உணவினை கொடுப்பவரில்லை
அலையது மோதும் கரையது போலும்
அபலைகோ ணேஸ்வரன் அகம் அலைமோதும்
அணைப்பவரில்லா அனாதையென்றாகி
அலையென அலைந்த அவன்றன் வாழ்வில்

நிகழ்ந்தது திருப்பம் நிலையாய் தங்கிட
நிழலது கிடைத்தது நிம்மதி கிடைத்தது
வல்வைக்கரையினில் வாழ்ந்தவர் கடலே
வாழ்வெனக் கொண்டவர் யோகராசா
நல்லதை செய்வதில் நாட்டம்மிக்கவர்
நங்கை புஸ்ப வதனாவின் துணைவன்
இல்லறம் இவர்கள் தொடங்கிய புதிது
பிள்ளைச் செல்வம் பிறந்திடாக் காலம்
அடைக்கலமின்றி அலைந்திடும் சிறுவன்
கடற்கரைவாழ்வே கதியெனக் கொண்ட
கோணேஸ் வரனின் கோலம் கண்டு
ஏனோ அவன்பால் ஈர்ப்பு அடைந்தார்
பெற்றவர் விபரம் பேர்ஊர் விபரம்
சுற்றவர் சேர்க்கா சோகம் கேட்டு
தன்மனையதனில் தானே சேர்த்திட
தன்னுள்யோக ராசா துணிந்தனர்
அந்நாள் முதலாய் அவரே அவனது
அப்பாவானார் அவர்தன் மனையாள்
அம்மாவாகி அன்பைச் சுரந்தார்
அனைத்தும் கொடுத்து அணைத்தார் வளர்த்தார்
முன்னம் முதலில் வீட்டில் வந்த
மூத்த புதல்வன் அவனேயானான்
பிள்ளைகள் பின்னர் பிறந்தனர் எனினும்
பிள்ளை இவனே மூத்தவன் என்பதில்
பெருமை கொண்டு பேணி வளர்த்தனர்
அருமைப் பெற்றோர் ஆகினர் அவரே
நாட்டினுக் கரும்பணி ஆற்றிடப் பிறந்த
போற்றுதற்குரிய புதல்வனை வளர்க்கும்
பேற்றினை அன்று பெற்றனர் என்ற
பெருமையை அறிந்திலர் கடமையை செய்தார்

பெற்றிடாப் பெற்றோர் பேணி வளர்த்தனர்
பேரன்பூட்டிக் காத்து வளர்த்தனர்
சற்குணன் கோணேஸ் வரனும் அவர்களை
சார்ந்து வளர்ந்தனன் சகலதும் பெற்றே
அன்பும் அறிவும் ஆடையும் உணவும்
அடைக்கலம் தந்தோர் அளித்தனர் எனினும்
கோணேஸ்வரனின் கொள்கையோ போர்க்குணக்
கோலம் கொள்வதில் குறியாகிற்று
வரலாறீய்ந்த வரிப்புலித் தலைவன்
வழியினைத் தொடரும் வாஞ்சையைக் கொண்டான்
புலியெனப் புதிய வடிவினைக் கொண்டு
புரிந்திடக் கடமை புறப்பட்டானவன்
கோணேஸ்வரனாய் வாழ்ந்தவனதுவரை
காந்தரூபன் எனப் பெயரணிந்தான்
ஆழிப்புறத்தே பிறந்தவன் வளர்ந்தவன்
ஆழிப்புறாவாய் ஆங்கும் திகழ்தான்
கடல்வழி பயிற்சியைக் கற்றனன் தொடர்ந்து
கரந்தடிப் பயிற்சியும் களத்தினில் பெற்று
திடல்வழிப் போரிலும் திறமுடன் திகழ
தேர்ச்சிகளுடைய புலியென வளர்ந்தான்
காவற்கடனும் கரந்தடிப் போரும்
ஆவல்கொண்டு ஆற்றிய நாளில்
தொண்டமானாற்றில் அன்றொரு நாளில்
தொண்டினை ஆற்றி நின்ற அவ்வேளை
புற்றில் இருந்து புறப்படும் பாம்பெனப்
புறப்பட இராணுவம் புலிகள் எதிர்த்தனர்
சிங்களச் சிப்பாய் சேர் அணியோடு
வெங்களமாடினர் வேங்கையர் அணியர்
தாங்கிய சுடுகலன் தணலினை உமிழ்ந்திட
ஆங்குநிகழ்ந்தது அதிரடிப் போர்க்களம்
அடிக்கடி கொடுத்ததில் இடித்தொனி அதிர்ந்தது

வெடிக்குழல் முழங்கிட காந்தருபனும்
வேங்கைரோடு வெகுண்டெழுந் தமரிட
தீங்கது சூழ்ந்ததைத் தெரிந்திடாதிருந்தனன்
சிங்களப் படைதனைச் சுற்றி வளைத்ததே
அங்குள நிலையெனக் கண்ட அக்கணமே
பகைவனின் கைளில் உயிருடன் பிடிப்படும்
தகைமையில் இழிந்து நிலைபெற அஞ்சி
வேங்கையர்க் குரிய இலட்சியம் காத்து
விடத்தினை கடித்தனன் விதியினை முடித்திட
காலன்கையினில் கொடுத்து அவ்வுயிரை
களத்தினில் நின்ற தோழர்கள் மீட்டனர்
ஆலமே யுண்டதம் தோழனை மீட்டு
ஆவிகொடுத்தனர் அளித்தனர் வாழ்வு
ஆயினும் விடத்தின் தாக்கம் முற்றிலும்
போய்விடா தவனைப் பீடித்திருந்தது
உயிரினைக் கொடுத்தும் இலட்சியம் காக்கும்
உறுதியை கண்டார் உடனிருத்தோர்கள்
அண்ணன் தலைவனும் அறித்தான் அதனை
சின்னஞ்சிறுவனே எனினும் செயலில்
தன்வழி தொடர்வதில் தப்பிடா வீரன்
என்னவன் என்றே ஏற்றனன் மனதினில்
அண்ணன் தலைவன் அவனை அழைத்து
இன்னொரு மகனெனத் தன்னுடன் சேர்த்தான்
அண்ணன் துணைவி அன்னையுமாகி
அன்பினை பொழிந்து ஆதரித்திடுங்கால்
தன்னை பெற்றவர் தந்திடா வாழ்வை
தலைவன் குடும்பம் தந்ததை உணர்ந்தான்
என்னைப் போன்றோர் எத்தனை யோபேர்
என்னரும் நாட்டில் அனாதைகளுள்ளார்
அண்ணையை போலும் அண்ணியை போலும்
அன்பினை அவர்க்கும் ஆரோ பொழிவார்?

காந்தருபனின் சிந்தையில் இந்தக்
கருத்துகள் எழுந்து அடிக்கடி வருத்தும்
அன்பினுக்கேங்கும் அபலையர் தமக்கு
ஆறுதல் கொடுத்திட ஒருவழி தேடும்
"என்பும் உரியர் பிறர்க்" கெனும் மொழியை
எழுதிவைத்தவப் பொய்யா மொழிபோல்
அன்பில் உருகிய அவன்றன் நெஞ்சில்
ஆயிரம் ஆசைகள் அனலாய் எரியும்
நாட்டினை மீட்க நம்புலி பதுங்கி
காட்டினில் வாழ்ந்த காலமும் அதுவாம்
கடற்கரும்புலிகள் சேவையின் தேவை
கருக்கொண்டிருந்த காலமும் அதுவாம்
அன்றொரு நாளில் அண்ணன் தனிமையில்
ஆறுதலாக இருந்த அவ்வேளையில்
தன்மனத் தெழுந்த தாகம் தன்னை
தலைவன் செவியில் மொழிந்திட விழைந்தான்
"அண்ணன் எனக்கோர் அடங்கா ஆசை
என்னையும் கரும்புலி அணியில் சேரும்"
தன்னை ஈய்ந்து தமிழ்த்தாய் வாழும்
மண்ணை மீட்க மனம் துணிந்திட்ட
மகனைப் போற்றன் மனத்தினில் வாழும்
மைந்தன் மொழியால் மலைத்தான் தலைவன்
மலைத்த மறுகணம் மனமும் குளிர்ந்தான்
இளைத்தவன் அல்லன் இளையவன் வீரன்
இரும்பன் சாவினைக் கரும்பாய் என்னும்
கரும்புலி காந்தரூபனை கண்டான்
அண்ணன் வாய்மொழி பகர்ந்திடு முன்னர்
பின்னும் காந்த ரூபன் மொழிந்தனன்
"இன்னுமோர் ஆவல் உண்டெனக் கண்ணா
என்னைப் போன்றோர்எத்தனை பேருள்
அன்னை தந்தை அற்றவன் யானெனும்

எண்ணம் எனக்குள் ஏற்படா வகையில்
சின்னவயதினில் தம்முதற் பிள்ளையாய்
என்னை அப்பா அம்மா வளர்த்தனர்
வீட்டைத் துறந்தேன் விடுதலைப் போரிட
நாட்டை மீட்கும் புலியெனவானேன்
பின்னை உங்கள் பிள்ளையாய் ஆனேன்
எண்ணற்கரிய பேறிதைப் பெற்றேன்
அண்ணை உங்கள் அன்பின் நிழலில்
அன்னை போன்ற அண்ணியின் தயவில்
இந்நாள் வரையில் இருந்தேன் அண்ணா
இந்தப்பாக்கியம் வேறெவர் பெற்றனர்?
இன்னும், இன்னும் எண்ணிப் பார்க்கிறேன்
என்னைப் போன்றோர் எத்தனை பேருளர்?
அன்னவர்கெல்லாம் ஆறுதல் கிட்ட
அண்ணை நீங்கள் ஆவனை செய்யுக
ஏக்கங்கள் ஆயிரம் இதயத்திருத்தி
தாக்கத்தோடும் தவிப்புகளோடும்
வறிற்றுப் பசியால் வாடிடும் சிறியோர்
அறிவுப் பசியால் அலைத்திடும் இளையோர்
வாழக் குடிசைகள் வசதிகளற்றோர்
பாசம் வேண்டிப் பரிதவித்திடுவோர்
இத்கையோரின் ஏக்கம் அனைத்தும்
என்னால் புரிந்திட முடியுது அண்ணா
முன்னாள் யானும் அவர்களைப் போன்றே
முளையினில்வாடினேன் நிலையினில் ஆடினேன்
அந்நாள் நினைவுகள் அத்தனை யும்என்
அகத்தே இன்னும் அழியாதுள்ளன
இந்நா ளிதில்என் இதயத் தாசைகள்
இவர்களைப் காத்திட வேண்டும் அண்ணா
அண்ணை அவர்க்கெல்லாம் அடைக்கலம் தந்திட
அநாதை இல்லம் அமைந்திட வேண்டும்

அடியவன் பெற்ற ஆறுதல் போல
அவர்களும் பெற்றிட அவைதுணை செய்யும்
என்னைப் போன்ற இவர்களுக்காக
இல்லம் அமைந்து இருப்பிடம் வழங்கி
கல்விபுகட்டிக் காத்து வளர்த்து
கவலைகள் போக்கி வளர்த்திட வேண்டும்
ஒளிமயமான வாழ்வினில் அவர்கள்
மிளிரவே வழிவகை செய்திடும் அண்ணா"
காந்தரூபனின் கடைசி விருப்பினை
காவலன் கேட்டு களிப்படைந்திட்டான்
ஊனுடல் சிதைத்து உதிர்த்திடவிழையும்
தான் வளர்த்திட்ட தத்துப் புதல்வன்
வேண்டுதல் கேட்டு வேங்கையர் தலைவன்
வியந்தே விருப்புடன் விடையும் தந்தான்
அண்ணன் மனதிலும் அப்படியானதோர்
எண்ணம் முன்னரே இருந்தது ஆகையால்
"நானும் நினைத்ததை நவின்றனை தம்பி
மாணும் உந்தன் மனக்கருத் ததனை
யான் நிறைவேற்றி வைப்பேன் உறுதி
காணும் ஈழம் விரைவினில் அதனை"
நாதியற்றவர் வாழ்வினை உயர்த்தும்
நலன்புரி இல்லம் நடத்திட இசைந்து
கடற்கரும்புலியாம் காந்த ரூபனை
காசினி நினைந்திடக் காப்பகம் அமைந்து
அன்னவன் பெயரினை அம்மனைக் கிட்டிட
அண்ணன் இசைந்துஅளித்தனன் உறுதி
அண்ணன் மொழியால் அமைதியடைந்தனன்
பென்னம் பெரிய சாதனை தன்னை
தற்கொடை யளிக்க தனிப்பலம் கொண்டான்.

❊ ❊ ❊

# தற்கொடைக் தாக்குதல் முன்

## கப்டன் வினோத்



எடித்தராக் கப்பலினைத் தாக்குமுன்னே
இளையவர்கள் மூவரும்தம் இல்லம் சென்றார்
அடித்தாழ்த்தும் கருமத்தை ஆற்றும் முன்னம்
அன்னையரை தந்தையரை காணச் சென்றார்

துடிக்கின்ற இதயத்து உணர்வை எல்லாம்
துளியளவும் காட்டாத நெஞ்சராக
முடிக்கின்ற கருமத்தில் உறுதி பூண்டார்
முதற்கரிய கடற்புலிகள் மூன்றுபேரும்

வரிப்புலிகள் உடையோடு வினோத் தனது
வாஞ்சையுள உறவுகளின் வீடு சென்றான்
சிரிப்புடனும் மகிழ்வுடனும் சிறுவர் தம்மை
சீண்டினான் அரவணைத்தான் முத்தமிட்டான்

அன்னவனின் செயல்கண்டு வீட்டில் உள்ள
அனைவருமே ஆச்சரியம் கொண்டு கேட்டார்
"என்னடா இதுவெல்லாம் புது வழக்கம்
எங்களுடன் சேர்ந்து படம் பிடிக்கின்றாய் நீ"

என்றவனைக் கேட்டவர்க்கு "இயக்கவேலை
ஒன்றியற்ற வெகுதூரம் செல்லவுள்ளேன்
சென்றுவர நாட்செல்லும் ஆகையாலே
செய்கின்றேன் இந்தவிதம்'' என்று சொன்னான்.

தன்னுடைய அண்ணனவன் பிள்ளை தன்னை
தாவி அணைத்தே இறுக்கி முத்தமிட்டு
"உன்னுடைய சித்தப்பா உனக்கு ஈயும்
இறுதிமுத்தம் இது'' வென்று சொல்லிவைத்தான்

அப்பொழுது அவன்சொன்ன சொல்லின் அர்த்தம்
ஆருக்கும் விளங்கவில்லை அதுவே உண்மை
அப்பாவை அம்மாவை அணைத்து கொண்டு
அருகிருத்தி படம்பிடிக்க அன்னை கேட்டாள்


"என்னடா இதுவெல்லாம் புதிய கூத்து
ஏனடா செய்கின்றாய்" என்று கேட்க
முன்னரவன்மூத்தவளுக் குரைத்த வாறே
சொன்னதையே பதிலாக சொன்னான் மீண்டும்

தன்னுடைய பணிசீராய் முடித்துவிட்டால்
தன்னவர்கள் இடம்பெயரும் அவலம் நீக்கும்
என்பதனை தன்னகத்தே எண்ணி வினோத்
இயம்பிடுவன் இறுதிமொழி ஈன்றவர்க்கே

"கடற்படையின் கொடுமைகளுக் கஞ்சி நீங்கள்
கண்டபடி அங்கிங்கு அலைய வேண்டாம்
கடல் மீண்டும் எங்களது வசமேயாகும்
கவலையற எம்மூரில் சென்று வாழ்வீர்''

உறுதியுடை நெஞ்சோடு உறவுக்கெல்லாம்
இறுதிமொழி இயம்பியவன் விடையே பெற்றான்
கருதியுள கடமையினை செய்யும் முன்னர்
கடற்கரிய வேங்கைவினோத் வழியேசென்றான்.

# கப்டன் கொலின்ஸ்



நறுவிலிக்குளம் என்னும்
நன்செய்கை வளக்கிராமம்
மறுவிலாக் தமிழ்க் கிராமம்
மன்னாரில் ஒரு கிராமம்

கொள்கையிலே மாற்றமில்லா
கொலின்ஸ் என்னும் புலிவீரன்
செல்லுகிறான் தான் பிறந்த
செழிப்பான அவ்வூர்க்கு

பெற்றவரை உறவினரை
பள்ளியிலே ஒன்றாகக்
கற்றவரை நண்பர்களை
கண்டு களிப்புற்றான்

எல்லோருக்கும் விடை சொன்னான்
இறுதிவிடை என்றவர்கள்
கொள்ளாத வகையினிலே
சொல்லாமல் சொல்லி வைத்தான்

தனையீன்ற தாயார்க்கு
தனயனவன் சொல்கையிலே
"எனையீன்ற அம்மா கேள்
இயக்கமதின் பணிக்காக

இன்னும் சில நாளில்
இடமொன்றுக்கு கேகவுள்ளேன்
என்னுடைய பணியதுவோ
இயக்கத்தின் பெரும்பணியாம்

ஈட்டும் அதன் லாபம்
என்றைக்கும் என்னுடைய
வீட்டுக்குச் சேராது
நாட்டுக்கே வந்தடையும்"

பெற்றவளுக்கு கிந்த மொழி
பேசியவன் தன்னுடைய
உற்றவராம் நண்பருக்கு
உரைக்கின்ற போதினிலே

"சாவதற்கு ஒருக்காலும்
அஞ்சிடுதல் கூடாது"
போவதற்கு முன்னர் கொாலின்ஸ்
போதித்த மொழியிவையே

தன் பற்றைத் துறந்தவனாய்
தாக்குதலுக்கு செல்லுமுன்
மண்பற்றைத் துறக்காத
மைந்தனெனச் செல்கின்றான்.

✲ ✲ ✲

# 10.07.1990. இல் வல்வைக்கடலில் முதற் கடற்கரும்புலித் தாக்குதல்

வல்வைக கடற்கரையில் வீசும் காற்றலையில்
மெல்லப் பரவியதோர் சேதி - தினம்
தொல்லை கொடுத்தஎடித் தாரா கடலில் ஒரு
கல்லைப் போல் மூழ்கப் போறாள்

ஆழக்கடல் நடுவே அரக்கி எடித்தாரே
கோல நடனமிட்டு நின்றாள் - வட
ஈழக் கடற்பரப்பில் இன்றோ டிவளுடைய
காலம் முடியுதென்று களித்தார்

கரிய மலையதொன்று கடலின் நடுவில் என்று
பெரிய உருவில் எடித்தாரா - தனக்
குரிய திமிருடனே தமிழர்க்கிடர்கள் இன்னும்
புரியும் பணியியற்ற நின்றாள்

பெடியள் அடிகொடுக்கப் பேய்கள் விழித்துபின்னர்
வெடிகள் கக்கிடுவார் கரைக்கு - எனக்
குடிகள் இடம்பெயர்ந்து குடும்பம் குடும்பமென
நெடிய தொலைவில் எட்டிச் சென்றார்

புலிகள் அடிகொடுக்க் போகும் கதை அறிந்தும்
கிலியோடிருந்தபோதும் மக்கள் - தம்மை
பலிகொள் கலம் அழியும் பாங்கை காண்பதற்கு
விழிகள் வீசிநின்றார் கரையில்

தேகப் பலிகொடுத்து தேசம் வாழ்வுபெற
போகப் போகின்றார் பொடியள் -இந்த
ஈகப் போர்புரியும் இளைய வீரர்காண
யோக ராசாவும் சென்றார்

வரிகள் அணிந்தபடி புலிகள் அணியதொன்று
தெரிய அவர்களது நடுவே - மூன்று
கரிய புலிகள் உடை கண்ட தந்தை விழி
விரிய வியந்து நின்ற வேளை

தந்தை யோகராசா அங்கு வந்திதனை
மைந்தன் காந்தரூபன் கண்டான் -தன்
சிந்தை மகிழ்வுறவே சேர்த்து அணைத்து முத்தம்
தந்து மனம் குளிர்ந்து சொன்னான்

"சொந்தம் யாரும் அற்ற அந்த வயதினிலே
இந்தக் கடற்கரையிற்றான் நான் - அன்று
உந்தன் மைந்தனென வந்தனின்று மீண்டும்
இந்தக் கரையினிலே பிரிவேன்

எந்தன் இறுதிக்கணப் பொழுதில் உங்கள்முகம்
மைந்தன் காணும் வரம் பெற்றேன் -எனச்
சிந்தும் நகையுடன் றன் இறுதிவிடையினையே
தந்து கடல்மடிக்குச் சென்றான்

கரியவேங்கையென கப்பல் தனை அடித்து
எரிய வைக்கவுள அணியில் - தன்
பிரிய தம்பி வினோத் போகும் செய்தியது
தெரியா திருந்தாள் அவன் அக்காள்

கந்த கம்சுமந்து கடலிற் செல்லுபவர்
எந்தத் தாயின்வீரப் புதல்வர் - என்று
சிந்தைதனில் நினைத்தாள் அந்தப் படகினிற்றான்
சொந்த உதிரம் செல்வ தறியாள்

கங்குல் கவிந்துவர காற்று ஊதியெழ
அங்கு நெஞ்சுகளில் பீதி - இலக்கு
எங்கு நின்றதுவோ அங்கு கரும்புலிகள்
தங்கள் படகை யோட்டிச் சென்றனர்

பொழுது மடிகையிலே புலிகள் படகிலேற
அழுது விடைகள் தந்தார் மக்கள் - இவர்
தொழுது விழிசுரக்கச் தொலையில் இடிமுழக்க
எழுதி வைத்தார் புதுச் சரிதம்

❋ ❋ ❋

கந்தகம் சுமந்து கடலினில் சென்றிடும்
கடற் கரும்புலிகள் படகினுக்கு - ஒரு
குந்தகம் விளைந்திடக் கூடாதுதென்று
குறியுடன் கூடவே படையணியாம்

கந்தகப் படகினைக் காவல் காத்து
கடலணி யொன்று வியூகமிட - டேவிட்
அந்த அணிக்கு தாங்கிடத் தலைமை
அதிரடி கொடுத்திடச் சென்றதுகாண்

"பட்டுப் படபட" பரவையில் வெடியொலி
பகைப்படை திகைத்து திணறியது - புலி
சுட்டுச் சுடசுட சூழ்ந்து பகையணி
சுடுமொலி எழுப்பிய பக்கமதாய்

எடித்தாராவை காவல் காத்தவர்
எதிரடி கொடுத்திடத் திசைமாற - புலி
முடித்திட எண்ணிய கடமை இயற்றிட
மூசிச் சென்றனர் கரும்புலிகள்

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"
புகையுமுன் கரும்புலி மறவர் சொன்னார் - இடி
ஒலியொன்றெழுந்தது ஒளியொன்றெரிந்தது
ஓதை மோதிய கடல் நடுவே

கரையினில் நின்றவர் கண்டனர் காட்சிகள்
கண்கள் பனித்தன அனைவருக்கும் -அன்று
தரையினை தழுவிய அலைகளும் ஒலிந்தன
தமீழம் புலிகளின் தாகம் என்று

முதற்கடற்கரும்புலி முட்டிய அடியினில்
முழிகள் பிதுங்கின பகைவருக்கு - புலி
எதற்கும் துணிந்தவர் எவ்விதம் வெல்லுவம்
எல்லாம் முடிந்தது எனத் தவித்தார்

அண்ணன் தலைவன் அளித்த மொழிப்படி
அறிவுச்சோலை அமைத்திட்டான் - ஈழ
மண்ணில் அனாதைச் சிறுவருக்காக
மனையொன்றமைத்துக் கொடுத்திட்டான்

காந்தரூபன் பெயரினை சூட்டிக்
கவினுறு இல்லம் சமைத்திட்டான் - அதை
"காந்தரூபன் அறிவுச் சோலை"
காப்பகமாக வளர்த்திட்டான்

❋ ❋ ❋



# கரும்புலி லெப். கேணல் போர்க்



கரும்புலி தோன்றிய காலமும் கண்டோம் -கடற்
கரும்புலி தோன்றிய காலமும் கண்டோம்
திரும்பவும் வன்னியில் திறலுடை கரும்புலி -மனத்
திண்ணியன் போர்க் அவன் தியாகமும் காண்போம்

ஈகப்போரால் இலக்கினை வென்றவன் -அவன்
இலட்சிய வாழ்வினை இயம்பிடு முன்னர்
சாகப் போயவன் சரித்திரம் படைத்த - பெரும்
சமர்க்களம் மாங்குளச் சரித்திரம் காண்போம்.

## மாங்குளம்

மாங்குளமண் வன்னியதின்
மத்தியிலே அமைந்துள்ளமண்
ஆங்குளநீர்ப் பொய்கையெலாம்
அல்லிமலர் அசைந்தாடும்
ஓங்கிவளர் நெற்கதிரால்
உறுபசியை கண்டுஇலர்
ஈங்குளவர் தம்வாழ்வோ
இயற்கையோடு இசைவாழ்வு

வானோடி வயல்நிறைய
வயலூடு வரால் வகையாம்
மீனோடி உணவாகும்
மேன்மரத்துக் கொம்பரிலே
தேன்கூடு துளிசொட்டும்
தேக்குமரக் சோலையூடு
மானோடும் மாண்புடைய
மண்ணாகும் மாங்குளமண்

காவோடு களனிகுளம்
கறவையெனப் பலவளமும்
வீணாக விட்டோடி
விழிகலங்க வன்னிமகர்
தானோடி வந்தெதிரி
தளமிட்டுத் தனதாக்கி
மாணோடு விளங்கியமண்
மாங்குளத்தில் நிலைகொண்டார்.

ஈர்பத்து ஆண்டுகள்முன்
இராணுவத் தளமொன்று
வேர்விட்டு அரும்பிடவும்
விரைவுற்று வளர்ந்திடவும்
சீர்கெட்டுப்போனதுவாம்
செழிப்பான மாங்குளமண்
ஊர்விட்டு மண்மைந்தர்
ஓடிடவும் விதியாச்சு

எழுபத்து ஒன்றினிலே
அக்கராயன் பாடசாலைக்
கிழுத்துவந்து சிங்களத்தின்
இளைஞர்களை சிறைவைத்தார்
எழுச்சிகொண்ட இளையவரை
இட்ட அந்தக் சிறையினுக்கு
பலத்ததொரு காவலுக்காய்
படையிருத்த முடிவெடுத்தார்

அடுத்த சில காலங்களில்
அகற்றியதைச் சென்றாலும்
படுத்திருந்த தமிழுணர்வு
படிப்படியாய் எழுச்சிபெற
கொடுத்ததினால் தமிழிளைஞர்
கொலைகள்விழக் கரந்தடிகள்
விடுத்த முகாம்தனை மீண்டும்
விரைவாக அமைத்திட்டார்

சிங்களத்துக் காவற்றுறைச்
சிப்பாய்கள் சிறுநிலையம்
மாங்குளத்தில் இருந்ததினால்
மனை அதற்கும் துணையாக
தங்களது இராணுவத்தின்
தளத்தையவர் ஈங்கமைத்து
எங்களது தமிழ்நிலத்தின்
இதயத்தில் தடம்பதித்தார்

ஒட்டகத்துக் கிடந்தந்து
உடைந்ததுபோற் கூடாரம்
ஒட்டாத இவர்வரவால்
உடைந்ததுவாம் எம்மகிழ்வு
துட்டர்களின் சகவாசம்
துன்பம்தான் என்றைக்கும்
கெட்ட இவர் செய்கைகள்
கேடுகளாம் எம்நாட்டில்

காவலுக்கு வந்தவர்க்கு
களவுகுலத் தொழிலென்றால்
காவலங்கு நடைபெறுமா
களவு அங்கு இடம்பெறுமா
காவலுக்கு வந்த அவர்
கள்வர்களாம் காடையராம்
ஆவலுக்கு ஏற்ற தொழில்
அவர்களுக்கோ கொண்டாட்டம்

சூழ்ந்திருந்த கிராமத்தை
        சூறையிடல் ஊர்மக்கள்
வாழ்ந்திருந்த மனையிலே
        வலிந்துசென்று வம்பிழைத்தல்
ஆழ்ந்த துயில்கொண்டிருந்த
        அப்பாவி மக்கள்தமைப்
பாழ்படுத்திச் கைது செய்து
        பலவழியில் இடரளித்தார்

நெடுஞ்சாலைக் கருகினிலே
        நிலையெடுத்து நின்றஅவர்
கடுஞ்சோத னைகளிட்டு
        கட்டளைகள் பிறப்பித்து
கொடுஞ்செயல்கள் பலபுரிய
        கொடியவரால் தமிழ்மக்கள்
படுந்துயர்கள் பலவாச்சு
        பகர்ந்திடவோ மொழியில்லை

சிறிதொரு முகாமாக
        சிப்பாய்கள் சிலருக்காய்
உரியதொரு தளமாக
        உருவெடுத்த இந்தமுகாம்
பெரியதோரு தளமாக
        பின்னும்இரு நூறேக்கர்
விரிந்திடவும் பரத்திவுமும்
        வீம்புகளும் பன்மடங்காம்

இந்தியரின் இராணுவமும்
        இவ்விடத்தே குடிகொண்டு
தந்திடவும் தொல்லைகள்
        தக்கதொரு தளமாச்சு
வந்தவர்கள் சென்றபின்னும்
        வாழவிடாச் சிங்களவர்
குந்தியிருந் தேயிங்கு
        குடிகெடுக்கும் பணிசெய்தார்

எந்தப்படை தான்வரினும்
எந்தவித இடர்தரினும்
சொந்தமான இந்தமண்ணை
சுரண்டுதற்கு அனுமதியா
திந்தப்படை என்று சொல்லி
இலட்சியத்தில் புலிவீரர்
கந்தகத்துக் கருவிகளை
கையெடுத்துப் போர் தொடுத்தார்

அன்னியர் எம் எதிரிகட்கு
ஆலயமும் மனையாச்சு
கன்னியரின் மடங்கூட
கள்வர்களின் குகையாச்சு
மின்னொளியின் விளக்கெரிய
மிடுக்கோடும் துடுக்கோடும்
வன்னியிலே மாங்குளத்தில்
வந்தபகை வாழலுற்றார்.

சித்திரவதைகள் செய்வார்
செந்தமிழின் புத்திரரோ
கத்தியழும் அவல ஓலம்
காடுகளில் எதிரொலிக்கும்
எத்தைனையோ இன்னலெங்கள்
இளைஞர்கள் அனுபவிக்க
இத்தைனையும் கண்டுவாளா
இருந்திடவோ புலித்தலைவன்

முற்றுகைப் போரே செய்தார்
மூவிரு திங்களாக
சற்றுமே சளைத்திடாது
சாவுக்குள் சமரே செய்து
பெற்றிடச் சிலதில் வெற்றி
பேய்ப்பலம் எதிரிகொண்டான்
வெற்றியே பெறுவோம் என்று
வீறுடன் புலிகள் நின்றார்

பகைப்படை அரியின் மக்கள்
பாங்குடனே பதுங்கி நின்ற
குகைக்குள்ளே குண்டாய் சென்று
குதறிய கரிய வேங்கை
திகைப்புடை செயலும் அவன்றன்
தீரமும் காணும் முன்னர்
நகைப்புடை முகத்தன் போர்க்கின்
நற்குடி ஊரைக் காண்போம்.

❋ ❋ ❋

வன்னியிலே வளம்மிக்க
வயலொடு நற்கிராமம்
செந்நெல் விளைகின்ற
சேமமடு எனும் ஊரில்
இன்னியல்பும் சுற்றம்
ஏற்றும் குணவியல்பும்
நன்னெறியும் மிக்க
நல்லார்வழிவந்த

மாப்பாணப் பிள்ளையின்
மனையாள் கருவறையில்
பூப்பான மைந்தனவன்
புலியாகி பின்னாளில்
காப்பாளனாகியவன்
கரியபுலி உருவெடுத்து
தீப்பாணமென்றாகி
தீய்த்தழித்தான் எதிரியினை

எல்லைக் கிராமத்தன்
என்கின்ற காரணத்தால்
மெல்லத் தமிழ் மண்ணில்
மீறிவரும் எதிரிதரும்
தொல்லைத்துயர் அறிந்தான்
துடித்தான் அதன் பயனால்
முல்லைப்புலி வீரர்
முகாமில் இணைதிட்டான்

"அன்றைக்கு எம்புலிகள்
ஆயுதங்கள் ஏந்தாது
நின்றிருந்தால் நிச்சயமாய்
நிறைந்திருப்பர் சிங்களவர்
இன்றைக்கு அவன் மட்டும்
இருந்திப்பான் இம்மண்ணில்
நன்று செய்தார் புலிகளென"
நவின்றிடுவன் எப்பொழுதும்

வானுயர்ந்த மரக்காட்டில்
வரிவேங்கை வீரருடன்
தானிணைந்து களப்பயிற்றி
தக்கபடி பெற்ற அவன்
கானகத்து வாழ்கையிலும்
கடின உழைப்பினிலும்
மாணுயர்ந்த இலட்சியத்துக்
காக வெனஉழைத்தான்

காய்த்துக் குலுங்குகின்ற
கனிபொழியும் சோலையிலே
வாய்க்குச் சுவைத்தபடி
வந்தமர்ந்த மந்தியென
தாய்த்தமிழர் வாழுகின்ற
தன்னீழ மண்ணதிலே
நோய்கிருமி யாய்நுழைந்த
சிங்களரால் மனம் நொந்தான்

அன்புகரம் நீட்டி
அமைதிதர வந்தவர்கள்
என்புருக்கி நோய்போலும்
எம்மண்ணில் வாழ்வோரை
துன்புறுத்தல் செய்கையிலும்
துப்பாக்கி கரமேந்தி
வன்முறைக்கு பதிலவர்கள்
வழியிலே கொடுத்திட்டான்

இடுப்பொடிய அடிபட்டான்
இலட்சியத்தில் தளரவில்லை
நடுக்காட்டில் மலைக்கல்லில்
நண்பருக்கு முகாமமைத்து
இடர்பாட்டின் நடுவிலும்
இளைப்பாறும் நினைவின்றி
துடுக்கோடு செயற்பட்டு
துணைநின்றான் போர்க்களத்தில்

காட்டுச் சண்டைக்குள்
களை தாகம் பசியுடனே
நாட்டு விடுதலைக்காய்
நாளிரவாய் பாடுபட்டு
வேட்டுக் கிலக்காகி
விழுப்புண்கள் பலபட்டும்
வாட்டம் சிறிது மின்றி
வலிமையோடு செயற்பட்டான்

உறுப்பாள னாயிருந்து
உழைத்த இவன் தொண்டு
சிறப்பான தாகையாயினால்
முல்லை இராணுவப்
பொறுப்பாளன் என்றாகி
முல்லைமாவட்டப்
பொறுப்பாள னாயுயர்ந்து
புரிந்தான் பல பணிகள்

வன்னிமண் நடுநெஞ்சில்
வந்தெதிரி குந்துவதோ?
இன்னும் இழப்போமேல்
இனி எதுவும் எஞ்சாது
பின்னுமிவன் வேர்விட்டு
பெருமரமாய் கிளைவிடுமுன்
அன்னவனை அழித்தொழிக்க
அண்ணன் முடிவெடுத்தான்

அக்கருமம் செய்வதற்கு
ஆனவைகள் செய்பொழுதில்
மிக்கமன வுறுதியுடன்
முன் வந்து போர்க் நின்றான்
“இக்கருமம் இயற்றுதற்கு
என்பணியாய் தந்திடுக
சக்கைவண்டி கொண்டு செல்லும்
சந்தர்ப்பம் எனக் கீய்க

மற்றவர்கள் தமைவிடவும்
மாங்குளத்தே உள்ள முகாம்
பற்றியுள்ள முழுவிபரப்
பக்கமெல்லாம் யான் அறிவேன்
பற்றியதை எரியவைக்கும்
பணியெனக்கு தருக”வென
சுற்றியுள்ளோர் தமைக் கேட்டு
சூளுரைத்து நின்றான் போர்க்


களம்பலது கண்டவன் போர்க்
கண்ணான தமிழீழ
நிலம்மீள வேண்டு மெனும்
நீங்காத ஆசையுள்ளோன்
உளம் கொண்டான் கரும்புலியாய்
உருமாறிப் பகையொழிக்க
தளம்பாத உறுதியுடன்
தனை ஈய முன்வந்தான்

சாவதற்குப் போட்டியிட்டுச்
சந்தர்ப்பம் கேட்டவன் போர்க்
சாவதற்கு நாள் குறித்துச்
சந்தோசம் கொண்டவன் போர்க்
ஆவலுற்றான் இறுதியிற்றன்
அன்னை முகம் காண்பதற்கு
போவதற்கு முன்னாலே
போகின்றான் சேமமடு

துஞ்சுதற்கு மனத்தினிலே
துளியளவும் பின்நிற்கா
நெஞ்சு உரம் கொண்டவர்கள்
நேர்கொண்டு காலனையும்
அஞ்சவைக்கும் ஆற்றல் மிகு
அணியான கரும்புலிகள்
விஞ்சுபுகள் கொண்டவரே
வியந்திடுது வையகமே

கெஞ்சிக் கூத்தடித்துக்
கேட்டுச் சாவிரப்பர்
நஞ்சைத் தேனாக்கி
நக்கிச் சுவைத்திடுவர்
வெஞ்சமரில் வெடியாகி
விதைப்பர் தம்முடலை
கொஞ்சமல்ல இவர்வீரம்
கூறிடத்தான் வார்த்தையில்லை

❋ ❋ ❋



## பிறந்த மண்ணில் இறுதியாக

மாய்வதற்கு முடிவெடுத்த மைந்தன் - தன்
    மண்ணதனைப் பார்ப்பதற்கு
    மணமுவந்து சென்றான்
ஓய்வெடுக்கப் போகின்றவன் போலும் - தன்
    ஊனுடலை விதைத்திடுமுன்
    ஊரதற்குப் போனான்

தாய் முகத்தைத் தன்னவரைத் பார்த்தான் -அங்கு
    தான்தவழ்ந்து அளைந்த மண்
    தாகமதைத் தீர்த்தான்
பேய்புகுந்து ஆளவோஇம் மண்ணை - அதை
    பேசாது பார்த்திருக்கப்
    பெற்றனளோ என்னை

போயுடைப்பேன் எதிரிகள்பா சறையை -அவர்
    புறமுதுகிட் டோடவைத்துப்
    போக்கிடுவேன் கறையை
நாயினிலும் கீழாமோ நாங்கள் - பார்
    நான் கொடுக்கும் அடியோடு
    நம் பகைவர் சாம்பல்

என்றுபல எண்ணங்களை ஏந்தி - தனை
    ஈன்ற புலக் குளத்தினிலே
    மனக் குளிர நீந்தி
சென்றலைந்து காடுவயல் வீதி -யாவும்
    செப்பிவைத்தான் தான் தொடர்ந்து
    செய்யவுள்ள சேதி

ஊர்ச் சிறுவர் ஒன்றாகக் கூடி - அயல்
    உள்ள ஒரு வீட்டினிலே
    நின்றார் விளையாடி
போர்க் சேன்று அவ்விடத்தே உள்ள -மரக்
    குற்றி ஒன்றில் தானமர்ந்தே
    கூப்பிட்டான் மெள்ள

“வாருங்கோ தம்பியவை கேளும் - கிட்ட
வருகுதல்லோ தமிழீழ
மாவீரர் நாளும்
கூறுங்கோ எனக்குமது பதிலை” - எனக்
கூறியவன் இவர்களிடம்
முன்வைத்தான் புதிரை

“தம்பியவை நான் செத்துப் போனால் - எங்கள்
தமிழீழம் மீட்பதற்கு
மாவீரன் ஆனால்
தம்பியவை அந்நாளில் நீங்கள் - உங்கள்
தமையன் என்றனுக்காய்
என்னடா செய்வீங்கள்”

“ஏன் சாகப் போறீங்கள் நீங்கள்” - சிறுவர்
இப்படித்தான் கேட்டார்கள்
அறிந்திடவே தாங்கள்
“நான் செத்தால் தற்செயலாய் நீங்கள் - வளவில்
நாட்டிடுவீர் மறவாது
ஆளுக்கொரு மரங்கள்”

இந்தவிதம் சொல்லியவன் சிரித்தான் -அந்த
இளையவரும் சேர்ந்து அவ
னோடாங்கு சிரித்தார்
பந்தமுடை போர்க் அண்ணன் விரைவில் -தான்
பகர்ந்தபடி இறப்பானென
உணராத வகையில்

சின்னவர்கள் சிரித்தபடி நின்றார்-இவர்
சிரித்தபடி வாழ்ந்திடவும்
சிறப்புறவும் என்றே
அண்ணனவன் தனை அழிக்கப் போறான் -அந்த
அதிசயத்தை அறியவில்லை
அவன் பிறந்த ஊரார்.

❋ ❋ ❋


## பிரியாவிடை

ஊர்பார்த்து தன்னுடைய உறவுகளைப் பார்த்து
உற்றவர்கள் அயலவர்கள் நண்பர்களைப் பார்த்து
நீர் பார்த்து அவைபாயும் நிலபுலங்கள் பார்த்து
நின்று உரையாடி அதன் நிலவரங்கள் பார்த்து
ஏர்பார்த்து ஏருழுத வயல் நிலங்கள் பார்த்து
எல்லவரின் சுகநலமும் ஏகிடுமுன் பார்த்து
போர்க் தனது மண்விட்டு போவதற்கு முன்னே
பார்வையினால் பழம் நினைவுப் பரவசத்தில் ஆழ்ந்தான்
ஈரைந்து மாதங்கள் இடைநோகத் தாங்கி
ஈன்றவளின் முகம் மலர இனியவைகள் சொன்னான்
மாரீந்து மடியீந்து வளர்த்தவத் தெய்வம்
மனமுவந்து பரிமாற மகிழ்வோடு உண்டான்
பதமறிநது உணவாக்கிப் பாசமதும் சேர்தது
பசியறிந்து சுவையறிந்து பரிவோடு நாளும்
இதமறிந்து பரிமாறும் ஈன்றவளின் கையால்
இறுதி உணவுண்கின்றான் ஈழத்தாய் மைந்தன்
உண்டகளை தீர்ந்திடப்போர்க் பாயொன்றைப் போட்டு
உடல்நீட்டி வராந்தாவில் படுத்திருந்த வேளை
தொண்டியற்ற லேதொழிலாய் கொண்ட அவனன்னை
தள்ளியொரு பக்கத்தே தன் பாயைப் போட
கண்டனன் போர்க் கண்களிலே பாசமது பொங்க
கருத்தினிலே உதித்ததினை கனிவுடனே கேட்டான்
" அம்மாநீ வந்தெனது அருகினிலே படணை"
அன்புமகன் கேட்க அன்னை அப்படியே செய்தாள்
பின்புமவள் தலைவருடி பிள்ளை முகம் பார்த்தாள்
பிரியமுள்ள தன்மகனே பிரியவுள்ள தறியாள்

தாய் அன்பில் பிறந்ததன்றோ தாய் நாட்டின் அன்பு
ஆயிரந்தான் இருந்தாலும் அவளுக்கு நிகர் அவளே
நோயென்றால் தன்மகர்க்கு நோன்பிருந்து தன்னை
தேய்க்கின்ற தெய்வமவளுக் கிணையேது புவியில்
நெஞ்சினிலே விடுதலைத்தீ நின்று மூண்டரிய
நேசமுடை தாய்வருடல் நீரெனவே குளிர
ஆசைமகன் போர்க் அன்னை அருகினிலே கிடந்தான்
அன்பு எனும் பெருஞ்சுழியுள் அப்பொழுது சுழன்றான்
எப்பிறப்பில் கிட்டிடுமோ இப்படியோர் இன்பம்
எப்பிறவி எடுத்தாலும் இவளே என்னன்னை
அப்படியோர் வரமிருந்தால் அதுவே பேரின்பம்
இப்படியாய் அவன் எண்ணம் கற்பனையில் ஓடும்
அன்றையநாள் பொழுதேகி அந்தியெனச்சாய
சென்றிடவே விடை பெற்றான் சேர்ந்தெல்லோரிடமும்
அப்பாவும் அண்ணன்மார் அவனிளையோரான
அன்புடைய தம்பியர்கள் தங்கையர்கள் சூழ
வென்றிடவே விடை கேட்டான் வீரமகன் அதுவே
இறுதிவிடை என்றெவர்க்கும் இயம்பாத வகையில்
பெற்றவளின் அருகுசென்று பேராவல் பொங்க
பற்றுடனே கைப்பற்றிப் பரிவுடனே "அம்மா
போகவிடை தருமுன்னே பொட்டிடுநின் கையால்"
"ஆகட்டும்" என்றவளோ அன்புமகன் நுதலில்
தன்னுதிரத்தேயுதித்த தங்கமகன் தன்னைத்
தேய்த்து மணம் கமழவுள சந்தன மென்றறியாள்
சந்தணத்தால் பொட்டிட்டு சாகவிடை தந்தாள்
சரித்திரத்தின் நாயகனைப் பெற்றெடுத்த தாயாள்
"சின்னவனே இன்னுமிவன்" என்னும் படியாக
புன்னகைத்த முகத்துடனே போகவிடை பெற்றான்

அன்னவர்கள் கையசைக்க ஆசி பெற்றுச் சென்றான்
பின்னுமவன் படலையிலே நின்று பார்த்துச் சென்றான்
தன்னையவர் பின்னாளில் நினைவதற்காய்ப் போலும்
தானணிந்து வந்த உடை தாய் வீட்டில் விட்டான்
கண்டெடுத்த அதை மூத்தோன் காட்டி நின்றபோது
கருத்துணராத்தாய் சொன்னாள் "பழசாக்கும்" என்று
தான் மீண்டும் வருவதற்குத் தருணமது இல்லை
தனை நினைக்கத் தந்து சென்ற சங்கதியார் அறிவார்
சின்னாளில் பேரிடியாய் போய் வெடித்த பின்பே
அந்நாளில் அவன் செயலின் பொருளுணர்ந்து வெந்தார்.

❊ ❊ ❊




# மாங்குளம் முகாம் அழிப்பின் முன் நவம்பர் 21 – 23 வரை

மாவீரர் வாரத்தின் முதலாம் நாள் அன்று
மாங்குளத்தே பகையிருந்த முகாமதனைத் தாக்க
வரைபடத்தை வைத்து அதன் வடிவமைப்பு விளக்கம்
தரைஅமைப்பு தளஅமைப்பு தாக்குதலின் திட்டம்
விரைவினிலே சென்றடித்து வீழ்த்துகின்ற உத்தி
நிரைப்படுத்திக் கூறுகின்றார் நேர்த்தியாக பால்ராஜ்
அடுத்ததினம் மாலை ஏழு ஆனபோது நேரம்
கொடுத்தனராம் முதலடியை குலுங்கினவே யாவும்
எடுத்தனர்கள் எதிரிகளும் ஆயுதங்கள் கையில்
தொடுத்தனர்கள் எறிகணைகள் தொடர்ந்ததுபோர் ஆங்கு
பகைவர் முகாம் குலுங்கிடவே பசீலன் கணை செல்ல
புகை எழுந்து படர்ந்திடவும் புழுதிமயம் கண்டார்
உலங்குவான் ஊர்திகளும் உமிழ்ந்தனவாம் வேட்டு
கலங்கிடாது களத்திலாடி வேங்கைகளும் நின்றார்
குண்டுவீச்சு வான்பறவை கொட்டியது குண்டு
கண்டுமதைக் கவலையற்று புலிகள் மோதுகின்றார்
ஆண்களோடு அணிவகுத்து ஆயுதங்களேந்தி
பெண்களணி பொருதி நின்ற பெருமையை என்னென்பேன்
மாங்குளத்துப் போர்களத்தில் மங்கையர்கள் வீரம்
காண்கில் எங்கள் பாவலர்கள் நாணுவார்கள் உண்மை
மெல்லியலார் மான்கள் இவர் மயில்கள் இவர் என்று
சொல்லியது தப்பு என்று சுருதி மாறிச் சொல்வார்
செம்பிளம்பாய் தீக்கணைகள் சென்று வீழ்ந்தெரிக்கத்
தெம்பிழந்து செறுநர் கூட்டம் செயலிழந்து தவிக்க
நடுஇரவு தாண்டிமற்றை நாளும் சண்டை தொடர
சுடுபரிதி தானும் புலிகள் சூடுகண்டு பதற

தரைவழியும் வான்வழியும் தாக்கி நின்ற எதிரி
இரைஇனித்தான் புலிக்கென்று ஏங்கித்திடன் சரிய
காப்பரண்கள் சிறுமுகாம்கள் கைநழுவிப் போக
சாப்பறை போல் வெடிமுழங்க சலிப்படைந்து வேக
ஓய்வு இன்றிஒரு கணமும் ஓசைகளோ தொடர
தேய்வு கொண்ட எதிரிகளோ தேடினார்கள் மறைவு
செக்கராகிமேற்குவானம் செம்மை கருமை கொள்ள
தக்கதருணம் பர்த்துப் புலிகள் தாக்குதலும் ஓங்க
நள்ளிரவு ஆகி நேரம் நடுநிசியைத் தாண்ட
மில்லர் வழியில் போர்க் எழுந்தான் மீதிக்கடன் முடிக்க
போர்க்களத்தின் நிகழ்வுகளை பின்னர் இங்கு பார்ப்போம்
போர்க்கவனின் இறுதிக்கணப் பொழுதை இங்கு காண்போம

❋ ❋ ❋



# 23.11.1990 இல் மாங்குளம் மீதான போர்க்கின் கரும்புலித் தாக்குதல்

தன்னை அழித்துத் தன்மண்காக்கும்
 தர்மப் போர் நிகழ்த்தும்
முன்னர் இருந்த நாள்கள் முற்றிலும்
 முறுவல் முகத்தினனாய்
தன்னவர் மீது அன்பைச் சொரிந்து
 தன்மையிலே இருந்தான்
மென்மையாய்பேசும் இன்முகத்தோனாய்
 மிகவும் பணிந்திருந்தான்.

என்றும் அவன் குணம் இதுதான் என்பதால்
 இவன்றன் மனம் அறியார்
அன்றும் தோழர்கள் வழமை போலவே
 அவனை நினைத் திருந்தார்
குன்றவன் நெஞ்சிற் குமுறிடும் எரிமலை
 கொள்கையை அறிந்து இலர்
ஒன்றுமே அறியான் போலவே மிகவும்
 ஒடுக்கத் தோடிருந்தான்

வன்னியின் வீரப் புதல்வன் போர்க்கின்
 வாழ்வின் இறுதிகளில்
"மின்னிடி வீழும் மீளும் மாங்குளம்
 மீண்டும் எம் மண்ணில்
என்னரு மக்களென் இலட்சியச் சாவின்
 இலாபம் தனைச் சுவைப்பர்''
தன்னையுருக்கி ஒளிதரும் திரியென
 தன்னுள் தான் மகிழ்ந்தான்

திட்டமிட்ட தினமும் வந்தது
தெரிந்தது தோழருக்கும்
கிட்டவிருந்தவர் முகம் தெரியாத
கருமிருள் நேரமது
வட்டமிட்டிருந்த அன்பர் முகத்தின்
வாட்டம் தெரியவில்லை
முட்டவிருந்த வண்டியிலேறிடு
முன்னர் விடை கொடுத்தான்

பொடிபடப் பகைவன் போயிடித்திடுமுன்
போர்க்கின் எச்சரிக்கை
"இடியென விழுமடி இது நிகழ்கையிலே
இருப்பவர் மிகக் கவனம்
அடிவிழும் போதினில் அதிர்வுண்டாகும்
ஆகையினாலெங்கள்
பெடியள் கவனம் எதற்கும்தள்ளிப்
பின்னே நிற்கவையும்"

மாண்புடை தளபதி மனதிற்கினியன்
பால்ராஜ்தனை அணைத்து
"நான் போகின்றேன் இத்துடன் மாங்குளம்
முகாமைச் சிதைக்கின்றேன்''
தான்செய் பணியின் தாக்கமுணர்ந்ததால்
தளபதிக் கிதைச் சொன்னான்
வீண்பேச்சறியான் வினையது முடிப்பேன்
விளம்பினன் மேலும் அங்கு

"நிச்சயமாக வென்றே எடுப்போம்
நாம் தமிழ் ஈழத்தை''
இச்சொல்லதையே இறுதிச்சேதியாய்
இயம்பினன் தோழருக்கு
அச்சமே அறியா அகமுடை கரும்புலி
அம்மொழி சொன்ன பின்னர்
கச்சிதமாய்த்தன் கடமை முடித்திடக்
கடைசிவிடை கொடுத்தான்

மீறியதுயரொடு மீண்டனர் தோழர்
மிகத்தொலை விடம்நோக்கி
ஏறியிருந்தவன் எல்லாம் சரியாய்
இருக்குதா என வினவிக்
கூறிய பின்னர் தொடர்புக் கருவியின்
கூவல் தொடர்பு அற
சீறிய வாகனம் சென்றது இலக்கை
சிதைத்திடக் குறிவைத்தே

இலக்கையும் தாண்டி இயங்கிய வாகனம்
இன்னும் உள் நுழைய
விலக்கவும் அறியார் தடுக்கவும் அறியார்
விறைத்தார் பகைக்கூட்டம்
கலக்கியபடியே கரும்புலி வாகனம்
களத்தினில் மோதியது
தலத்தினில் தமிழர் குலப்புகழ்பாடி
தகர்த்தான் அரிக்குகையை

பேரிடி கேட்டது பிழம்புகள் எழுந்தன
பிளந்தன கட்டிடங்கள்
ஓரடி ஓட எடுத்தடி வைக்குமுன்
உருண்டன பல தலைகள்
போரிடி போர்க்கிடி பொல்லாத்தலையடி
பொலபொலவென உதிர்ந்தார்
பாரடி பிரபா கரனவன் தம்பி
போர்க்கவன் பெருஞ்செயலை

ஏங்கிய மனங்களில் இவனது ஈகம்
ஏற்றிட மகிழ்வொளியை
தூங்கிய விழிகளை துடைத்தார் போர்க்கை
துதித்தே மலர் சொரிந்தார்
நீங்கின பேய்கள் நிம்மதி இனியென
நினைத்தே அஞ்சலித்தார்
மாங்குளம் மீண்டது, கரும்புலிபோர்க்கின்
மறக்கொணா தியாகமதால்

மாங்குளம் சந்தியில் மனையமைந்திருந்தவர்
மறைந்தார் மணித்துளியில்
வாங்கியே கூலி வதைத்திட வந்தவர்
வாய்பிளந் தேகிடந்தார்
ஆங்குள குழிகளில் பதுங்கியே இருந்தவர்
"அம்மே" என்றலறி
தீங்குளதிங்கு திரும்பிடோம் என்று
திசை மறந்தே பறந்தார்


அள்ளினர் புலிகள் ஆயுதவகைகள்
அளவிலா வெடிப்பொருட்கள்
துள்ளினர் வேங்கைகள் எல்லையில் மகிழ்வாய்
துன்பம் மறந்தவராய்
தள்ளியே தயங்கி இருந்தவர் ஊரவர்
தாமும் இணைந்து கொண்டே
பிள்ளைகள் வென்று பெற்றவை தூக்கிட
பெரிதும் துணை செய்தார்.

சிதைக்கவும் சிதையவும் சென்றவன் போர்க்குடல்
சிதைந்திட வில்லையென்றும்
விதையென வீழந்தவன் வித்துடல் கண்டவர்
வியந்தனர் தோழரெல்லாம்
அதையவர் எடுத்தனர் அஞ்சலி செய்தனர்
அன்றைய முறைப்படியே
சிதையினிலிட்டனர் போர்க் கரும்புலியினை
செந்தழல் தழுவியதே

வெங்களமாடிய இறுதிப்போரில்
வித்தென வீழ்ந்தவர்கள்
எங்களின் வீரக்கரும்புலி போர்க்குடன்
அறுபத்திரு பேராம்
திங்கள்களாறாய் தொடர்ந்து முடிந்த
மாங்குளப் போரதனில்
தங்களினுயிரை நூற்றொடு எண்மர்
தந்ததிவ் வரலாறாம்.

❋ ❋ ❋

# மேஜர் டாம்போ



மாங்குளமண் மீண்டவர லாறுகேட்டோம் - இனி
மன்னாரில் நடந்தவர லாறுகேட்போம்
ஓங்குபுகழ் டாம்போவின் ஈகம் தன்னை - இந்த
உலகுணர வேண்டி இவண் இயம்புவோமே

❊ ❊ ❊

வீம்போடு வந்தெதரி எமது மண்ணில்
வீடமைத்துக் காணிகளில் ஆட்சி செய்து
தாம்போடும் தாளமதற் கெல்லாம் ஆட
தமிழ்மாந்தர் வாய்பொத்தி தலைகளாட்டி
"ஆம்போட முடியாது நாம் யாரென்று
அவருணரக் காட்டிடவே அர்ப்பணித்த
டாம்போவின் வரலாற்றைக் கரும்புலிகள்
காவியத்தில் தொடர்ந்திங்கு காணுவோமே

அலைக்கரங்கள் உறவாடும் மன்னார்த்தீவு
அங்கு உப்புக் குளமென்னும் சிறிய ஊரில்
கலையாக தொழிலாக வைத்தியத்தை
காசிப்பிள் ளையெனும் இளைஞர் பேணி
சிலையன்ன பெண்ணாளாம் நாகேஸ்வரியை
சென்றேற்றார் கொக்குவிலில் துணையாளாக
விலையில்லா வீரமகன் டாம்போ தன்னை
விளைவித்த தளமிவரே மன்னார் மண்ணில்

இருமக்கள் தமை இங்கு ஈன்ற பின்னர்
இடம்பெயர்ந்து கொக்குவிலில் குடியமர்ந்து
இருமக்கள் தமை ஈன்றார் ஆங்கும் பின்னர்
இடருற்றார் அவ்வேளை காசிப்பிள்ளை
திருமக்கள் மனையாளைக் காப்பதற்கு
திடமற்ற நோயாளி ஆகிப்போனார்
அருமந்த குடும்பத்தை அழைத்துக் கொண்டு
அவர்பாதம் முழங்காவில் நடந்திற்றம்மா

கடலோடு கதிர்வேசயும் மன்னார் மண்ணில்
முழங்காலில் குமுளமுனை என்னும் ஊரில்
உடலூனம் உற்றநிலை என்ற போதும்
உற்றதுணை மனையாளின் உதவியோடும்
இடருடும் இல்லறத்தில் இனிமை கண்டார்
ஈன்ற தம் பிள்ளைகளில் தயாபரனே
சுடரான டாம்போவாய் உருவெடுத்து
சோதியென வெடியோடு கலந்த வேங்கை

நான்கான பிள்ளைகளோ நண்டும்குஞ்சும்
நலன் குன்றிநோய்கான காசிப்பிள்ளை
தான் ஈன்ற பிள்ளைகளில் வாழ்வுக்காக
தாய்தானே மெய்நொந்து காத்து வந்தாள்
சாண்பிள்ளை என்றாலும்தனது வீட்டில்
தான்றானே மூத்தமகன் குடும்பம் நம்பும்
ஆண்பிள்ளை என்பதனால் அன்னையற்ற
அல்லலுக்கு கைகொடுக்க கல்விவிட்டான்

பத்தாண்டுப் படிப்போடு பள்ளிவிட்டு
பல தொழிலும் செய்துதன் குடும்பம் காத்தான்
கொத்தான மலர்போன்ற குடும்பம் தன்னில்
குலவிளக்காய் 'அமைந்தவளாம் இளையதங்கை
முத்தான அவள் நகைக்கு முன்னால் இந்த
மூத்தண்ணன் தயாபரனோ மறப்பான்தன்னை
நத்தெனவே முத்திவரை சுமந்த அன்னை
நாகேஸ்வரித் தாய்கொண்ட பெருமை நூறாம்

அன்னத்துக் கில்லையெனும் ஏழ்மை ஆனால்
அன்புக்கு அவன்வீட்டில் ஏது பஞ்சம்
என்னத்தைச் செய்தேனும் ஈன்றவர்க்கும்
இளையோர்கள் மூவருக்கும் வாழ்வ தந்தான்
தன்னைத்தன் குடும்பத்திற்காகத் தந்த
தயாபரனின் எண்ணத்தில் ஐம்பத்தாறில்
தன்னைத்தான் மண்மீட்பில் அர்ப்பணிக்க
தாயகத்துத் தாகமதால் முடிவெடுத்தான்

பதினெட்டு வயதேதான் ஆனதப்போ
பாசறைக்குள் குடிபுகுந்து டாம்போவானான்
மதிநுட்பத்தோடுபோர் முறைகள் யாவும்
மற்றவர்கள் போற்றும் வகையாகக் கற்றான்
கதியற்றுப் போனதுதன் குடும்பம் என்ற
கவலைசில வேளைகளில் தோன்றினாலும்
வதிகின்ற மண்தாயை மீட்டலதானதன
வாழ்க்கையிலே முதற்கடனாய் கொண்டன் டாம்போ

பெற்றவளை பெற்றவனை சென்று பார்ப்பான்
பிரியமொடு சோதரர்க்குப் புத்தி சொல்வான்
கற்றவராய் அவர்மண்ணில் உயர வேண்டும்
காண்பவர்கள் வாழ்த்திடவே வாழவேண்டும்
மற்றவர்க்கு நன்மைகளே செய்ய வேண்டும்
மண்மாதா விலங்கு முதல் உடையவேண்டும்
பற்றிநிற்க மண்பற்றும் மனையின் பற்றும்
பற்றறுக்காப்போராளியாக வாழ்ந்தான்

என்னபணி யென்றாலும் அவன்கை பட்டால்
எழிலுறவே நிகழும்வகை சிறப்பாய் செய்வான்
அன்னவனின் அழகுணர்வு இரசனை எல்லாம்
அவன்வாழும் இடமெல்லாம் ஆட்சி செய்யும்
மின்னலென வாகனங்கள் காட்டினூடே
மிகவேக மாயோட்டி வளைந்து செல்வான்
தன்செயலில் நம்பிக்கை கொண்டான் டாம்போ
தளராத தாயகத்துத் தாகம் கொண்டான்

"பிரபாகரன் நினைத்தது நடக்கும்" என்ற
பெருங்கவிஞன் பாடலதைப் பாடிப்பாடி
வரமாகத் தமிழருக்குக் கிடைத்த அந்த
வரலாற்று நாயகனின் பெருமை சொல்வான்
உரமாகும் அவன் நாமம் உயர்வுக்கென்று
உச்சரிக்கும் அவன் பெயரில் நிறைவு கொள்வான்
கரமெல்லாம் அவனோடு இணைந்து கொண்டால்
கடுகதியில் தமிழீழம் காண்போம் என்பான்

காப்பரணில் நின்ற அந்தக் கடமைவீரன்
காதுகளில் கற்கண்டாய் இனியசேதி
பூப்படைந்தாள் தங்கையென்ற சேதிகேட்டுப்
பூரித்துப்போய் தனது வீடு சென்றான்
மூப்புடைய அண்ணன்றன் கடமை யாவும்
முன்னின்று மகிழ்வோடு செய்து மீண்டாள்
தீப்பிளம்பாய் பத்தாம்நாள் தங்கை மாண்ட
தீச்செய்தி தீண்டிடவே துடித்தே போனான்

பாசத்தை சொரிந்தூட்டி வளர்த்த தங்கை
பருவமுற்ற பத்தாம்நாள் இறந்தே போனாள்
மோசத்தை ஏன் செய்தான் இறைவனென்று
மோதித்தன் தலையினையே புலம்பி நொந்தான்
தேசத்தை நேசித்த திறலில் வல்லான்
தேறும்வழி அறியாது தேம்பித் தேம்பி
ஆசைக்கோர் தங்கையென இருந்தாள் தன்னை
ஆண்டவனே ஏன்பறித்தாய் என்றுவைதான்

தங்கையை இழந்த அவன் துயரம் தன்னை
தாயகம் மீட்பிலே மறந்து போனான்
அங்குலமாயினும் எங்கள் மண்ணில்
அந்நியன் ஆண்டிட விடுதற்கில்லை
எங்குள்ளான் எதிரியோ அங்கே சென்று
எரித்திடல் என்கடன் என்று எண்ணி
வெங்களமாடிட விழைந்த வேளை
வேதனை இன்னொன்று விளைந்ததம்மா

அலைகடல் மீதினில் பயணம் செய்த
அவனது தம்பியை சிறீலங்காவின்
கொலைஞராம் கடற்படை கைதுசெய்து
கொண்டுசென் றார்எனும் சேதிகேட்டான்
அலைந்தனர் தேடினர் இங்குமங்கும்
அவனது சேதியோ எட்டவில்லை
தொலைந்தவர் தொகையிலே ஒருவனானான்
துவண்டது உறவெல்லாம் துயரில் மீண்டும்.

அடியதன்மேல் அடி விழுதல் போலும்
அடுத்தடுத் தின்னலே சூழ்ந்த போதும்
கொடியவர் கொடுமையால் தவித்த போதும்
கொடுந்துயர் இடைவிடா திடித்த போதும்
மிடியது தொடரென வதைத்த போதும்
மீண்டிடா நிலையது உடைத்த போதும்
முடிவது ஒன்றினை ஈன்ற தாயாள்
முழுமன தாகவே தெரிவு செய்தாள்

ஒருமகன் தாயகம் மீட்கப் போனான்
உள்ளவர் மூவரென்றமைதி கொண்டாள்
ஒரேமகள் பூவென மலர்ந்தகாலை
உதிர்ந்தனள் உலர்ந்தனள் கருகிப் போனாள்
இருமகர் இருக்கின்றார் என்று எண்ணி
இரும்பென இதயத்தை ஆக்கிநிற்க
இருவரின் ஒருமகன் கடலில் போயின்
இனியுமப் பெற்றவள் என்ன செய்வாள்

நாலுகாற் பந்தராய் இருந்த வீட்டில்
நாட்டுக்காய் போனவன் ஒருவன்போக
பாழுற்றுப் போயின ஈருயிர்கள்
பயனற்றுப் போயின அவர்கள் வாழ்வு
நாலிலே ஒன்றுதான் மீதம் வீட்டில்
நாளைக்கு அவன்நிலை என்னவாகும்
எழையே யாயினும் அந்த அன்னை
இறுதியில் துணிந்தொரு முடிவு கொண்டாள்

இல்லத்தில் ஒருவனாய் எஞ்சி நின்ற
இளையவன் றன்னையும் அழைத்துச் சொன்னாள்
செல்லடா அண்ணனின் வழியே நீயும்
செயற்படு வீரனாய் என்று கூறி
வல்லவர் புலிகளின் சேனை தன்னில்
வலியவே அழைத்து வந்திணைத்து விட்டாள்
கல்லவள் ஆகினாள் இதயத்தாலே
காலத்தின் தேவையை உணர்ந்து செய்தாள்

எள்ளெனும் முன்னரே எண்ணெயாகும்
இயல்பினன் ஆகினன் இளையதம்பி
உள்ளதில் முன்னரே இந்த எண்ணம்
உள்ளதால் அவனதைஏற்று மகிழ்ந்து
துள்ளினான் மனதிலே துதித்தான் தாயை
துணிந்தவன் தாயிவள் துணையோடு
பள்ளியில் பயின்றிடும் பருவம் தன்னில்
பாசறை சென்றனன் பயிற்சி கொள்ள

அன்னவன் இல்லத்து ஏழ்மை வாழ்வும்
அப்பனின் நோய்கண்ட நிலைமையாவும்
முன்னமே அறிந்தவன் அன்றவர்க்கு
முதல்வனாய் விளங்கிய சுபன் வியந்து
"உன்னுடை வீட்டிலே ஒருவர் தானும்
உழைப்பவர் இல்லையே சென்று வீட்டில்
இன்னலைத் தீர்த்திட இயங்கு தம்பி
இயக்கத்தில் இருக்கின்றான் அண்ணன்" என்றான்

சொன்னவன் பொறுப்பாளன் என்ற போதும்
சொல்லதை இசைந்தவன் ஏற்கவில்லை
முன்னிலும் உறுதியாய் நின்றான் தம்பி
முடிவது இயக்கதில் இணைவதென்றான்
அன்னையின் ஆசியும் அவனை உந்த
அசைந்திடா உறுதியில் தளர்ந்தானில்லை
பின்னுமென் சொல்லுவது சுபனும் வேறு
பேச்சது இன்றியே ஏற்றுக் கொண்டான்

தம்பியின் வரவினைக் கேள்வியுற்ற
தமையனாம் டாம்போவும் தவித்துப் போனான்
அம்பினாற் குடைவது போன்று நெஞ்சை
அறுத்திடும் துயருடன் அங்கு சென்று
வெம்பினான் வெறுத்திலன் "தம்பி எங்கள்
வீட்டினில் யார்துணை செல்வாய்" எனவும்
இம்மியும் இளகிடா உறுதியோடு
இளையவன் நின்றனன் அணியில்சேர

பின்னுமென் செய்வது என்று தோன்றான்
பிரியமாய் தம்பியை அழைத்துக் கொண்டு
தன்னுடை வாகனம் தன்னில் ஏற்றி
தன்முகாம் ஏகினான் தலை நிமிர்ந்தே
அன்னையை அவனது துணிவு தன்னை
எண்ணியே பெருமிதம் கொண்டு தன்றன்
முன்வினைப் பயனதே அந்தத் தாயின்
முத்தெனப் பிறந்ததென்றியம்பிக் கொண்டான்

ஒருகொடி மலர்களாம் இரண்டு பேரும்
ஓரணி சேர்ந்தனர் நாடு காக்க
கருவினில் திருவதாய் வீரம் கொண்டார்
களத்தினில் மோதிடப் பயிற்சி பெறறார்
செருவினில் பொருதிடும் வேட்கையோடும்
செறுநரை அழித்திடும் வேகத்தோடும்
உருகிய திரிகளாம் மாவீரர்கள்
ஒளியினில் உறுதியாய் நடந்தே சென்றார்

ஊர்தியில் பறந்து வந்துணவு போட்டு
உதவிட வந்தவர் உருவம் மாறி
தாரது சூடியே வாழ்த்தி ஏற்ற
தமிழரைத் தணலிலே இட்ட நாளில்
போரினிற் காலிலே காயம் பட்டு
போயினன் தமிழகம் சிகிச்சை செய்ய
பார்த்தவர் டாம்போவைக் கைது செய்து
பயங்கரவாதியென் றடைத்து வைத்தார்

இந்தியச் சிறையிலே இருந்த டாம்போ
ஈழத்துக் கைதியாம் என்பதாலே
வந்தனர் வவுனியா அவனைக் கொண்டு
வைத்தனர் அவர்களின் சிறையதொன்றில்
இந்தமண் எங்களின் சொந்த மண்ணில்
இன்னொரு நாட்டவர் சிறை நடாத்தும்
விந்தையும் நிகழ்ந்தது விதியென்செய்வோம்
விலங்கொடு நின்றவன் விதியை நொந்தான்

களத்திலே சமரிடும் காலம் தன்னில்
கைதியாய் வாழ்கின்றேன் யான் பிறந்த
நிலத்திலே அந்நியச் சிறையா என்று
நிம்மதி யற்றவ னாக டாம்போ
உளத்திலே வேதனை யுற்றுநின்று
உத்தம வீரனாய் கொதித்த போது
பலத்தினைக் காட்டினார் புலிகள் ஆங்கும்
பகைச்சிறை யுடைத்தவர் மீட்டு வந்தார்.

காட்டிலே முடங்கினர் புலிகள் என்று
கற்பனை வெற்றியைக் கண்ட கூட்டம்
பூட்டிய சிறையினைப் புலிகள் தாக்கிப்
புகுந்து தம்தோழரை மீட்டு வந்து
காட்டிய வீரமே சான்று ஆச்சு
களப்புலி பதுங்கிடல் பாய்தற்கென்று
ஈட்டிய வெற்றியால் வெளியே வந்து
இணைந்தனன் கடமையில் மீண்டும் டாம்போ


கரும்புலி மறவர்கள் களத்தில் மோதிக்
காட்டிய நாட்டிய வீரம் கேட்டான்
துரும்புகள் ஆகியே பகைவர் மாய்ந்த
துணிகரத் தாக்குதல் கண்டான் டாம்போ
விரும்பினன் அவர்வழி தானும் சென்று
வீழ்த்திட பகைவரை தொகையதாக
தரும்படி தனக்கந்த வாய்ப்பு என்று
தன் பொறுப்பாளனை வேண்டி நின்றான்

❋ ❋ ❋

நெல்லியடியினில் மில்லரின் தாக்குதல்
நிகழ்த்தியே கண்டபேர் வெற்றி போலும்
வல்லையின் ஆழியில் மூவர் நிகழ்த்திய
வரலாற்றுக் கரும்புலி மோதல் போலும்
மில்லரைப் போலப்போர்க் மாங்குளக் கோட்டையை
சொல்லியே நொருக்கிய மோதல் போலும்
வல்லதோர் தாக்குதல் செய்குவம் மன்னாரில்
வழங்குக எனக்கந்த வாய்ப்பு என்றான்

மன்னாரில் மேற்கொளும் கரும்புலி மோதலை
மற்றவர்க் களித்திட வேண்டாமென்றான்
என்னூரில் இடம்பெறும் கரும்புலி இடியது
என்னாலே நிகழ்த்திடல் வேண்டுமென்றான்
அந்தநாள் வரும்வரை அமைதியாய் இரு என
அன்பொடு உரியவர் சொல்லி வைத்தார்
எந்நாளோ அந்நாளென் றெதிர்பார்த்து நின்றனன்
எதிர்பார்த்த நாளதும் நெருங்கியதே.

❋ ❋ ❋



# சிலாபத்துறை முகாம்

குடிகொண்டு மன்னாரில்
கொடிகொண்டு மண்ணாள
அடிவைத்த எதிரிகளைச் சாய்க்க - அவர்
அகந்தையினை அடியோடு தீய்க்க
வெடிகொண்ட டாம்போவும்
வெந்தணல் தனைக் கொட்டி
பொடியான கதைபின்பு காண்போம் -மண்
பிடிபோன கதைமுன்னர் காண்போம்

❊ ❊ ❊

நீலக்கடல் மகளாள்
நித்தமும் பாட்டிசைக்க
கோலக்கலை வாழும் நாடு - மன்னார்
குன்றாவளமுடைய நாடு
மூலைக்கொரு புலவன்
முழங்கும் கவி செவியில்
பாலைப் பருக்குகின்ற நாடு - பல
பண்டைப் பெருமை கொண்ட நாடு

காற்றும் கவிதை சொல்லும்
காதல் மொழி இசைத்து
கீற்றைத் தழுவுகின்ற நாடு - தமிழ்
கீதம் இசைக்கும் தமிழ் நாடு
சேற்றில் உழவு செய்து
செந்நெல் விளைவு செய்து
சோற்றைப் பொழிந்து நிற்கும் நாடு - அது
சோம்பர் அறிந்து இலாநாடு

கத்தும் கடல் எழுந்து
கரையைத் தழுவுகையில்
முத்து எறிந்து செல்லும் நாடு - மன்னார்
மூன்று தமிழ் முழங்கும் நாடு
கொத்துக் கதிர் அறுத்து
குன்று என அடுக்கிச்
சொத்துச் சேர்த்து வைத்த நாடு - இது
சுரண்டல் யாதுமற்ற நாடு

வருவோர் யார் எனினும்
வருகவென அழைத்து
உருக உபசரிக்கும் நாடு - இது
உறவு நாடி நிற்கும் நாடு
ஒருவர் வாழ்வதற்கு
உதவிக் கரம் கொடுத்து
பெருக வரம் கொடுக்கும் நாடு - முன்னைப்
பெருமை சாற்றி நிற்கும் நாடு

வாழக் கரம் கொடுக்கும்
வண்ணத் திருநகரை
ஆளக் கருத்துடனே வந்து - ஏதோ
ஆக்கம் கொடுப்பது போல் நின்று
சிலாவத்துறைக் கரையில்
சிங்களக் குடியமர்த்தி
உலாவத் துணிவெடுத்தான் பகைவன் - இதை
உணர்ந்தான் ஈழத்தமிழ்த் தலைவன்

தேட்டம் பெருக்கவெனத்
தேர்ந்து இந்நிலத்தில்
நாட்டம் கொண்டு அவன் வந்தான் - கஜு'த்
தோட்டம் போடவென வந்தான்
கோட்டை அமைப்பதென
கொக்குப் படையானிலும்
வீட்டை அமைத்துக் கொண்டு நின்றான் - இன்னும்
வீரம் பேசிக் கொண்டு நின்றான்.

ஊறு செய்ய வந்து
உள்ளே புகுந்து கொள்ளும்
வாறு முந்திரிகைத் தோட்டம் - செய்ய
வாய்த்த கொண்டச்சியில் நாட்டம்
ஆறு ஆயிரங்கள்
ஏக்கர் நிலம் பிடித்து
கூறு செய்து வைத்தான் மண்ணை - அத்து
மீறல் செய்து நின்றான் மண்ணில்

காற்றின் மாற்றமொடு
கரையை மாற்றித் தொழில்
ஆற்றும் சிங்களவர் தாமும் - மனை
அமைத்து முள்ளிக் குளக்கரையில்
ஈற்றில் இந்த நிலம்
இவர்க்கே உரியதெனும்
கூற்றை நிலைநிறுத்திக் கொண்டார் - பல
நூற்றுக் கணக்கில் வீடு கொண்டார்

கிழக்கை துண்டு செய்து
கிழித்த வடகிழக்கு
நிலத்தின் மணலாற்றைப் போல - தாம்
நிலையாய் குடியமர்ந்து வாழ
விலக்கிப் புத்தளத்தை
பிரிக்கத் தமிழ்நிலத்தை
இலக்கு வைத்து குடியமர்ந்தார் - எம்
இயற்கை வளத்தை சூறை கொண்டார்

நிலமும் போனதெங்கள்
தொழிலும் போன தெங்கள்
வளமும் போன தென்பதோடு - தம்
வாழ்வும் குறுக்கப்பட்டார் பாடு
பலமே கூட்டப் பகைப்
படைகள் முகாமமைத்து
தலமே தமதாயிட்டார் ஆட்டம் - இதை
தாங்கிக் கொள்ளுமா தமிழ்க் கூட்டம்

தரையும் அவன் வசமாய்
கடலும் அவன் வசமாய்
கரையும் கடலும் அவன் கொள்ள -நிலம்
கவரும் திட்டமதில் வெல்ல
நிரையில் வேலியிட்டு
நெடிய காவலிட்டு
வரையில்லாத பெரும் துன்பம் - தர
வாழ்ந்த தமிழர்க்கேது இன்பம்?

பற்றைக் காடுகளும்
　　பொட்டல் வெளி நிலமும்
சுற்றி முப்புறமும் இருக்கும் - மேற்கில்
　　எற்றிக் கடல் முழக்கி நிற்கும்
மற்றை எவரும் வந்து
　　மறந்து மோதல் செய்ய
சற்றும் நினையார் எனத் துணிந்தார் - முகாம்
　　சாயா தெனத் துணிவு அணிந்தார்.

சிங்கப் படையமர்ந்த
　　சிலாவத்துறை முகாமை
எங்கள் புலிகள் எதிர்த்தழிக்க - சற்றும்
　　ஏற்ற சூழலில்லை எனினும்
தங்கி அவரிருக்க
　　தயங்கி நாமிருந்து
சங்கை இழந்து கெடுவோமா - அவன்
　　சாந்தி கொள்ள விடுவோமா

என்று புலித்தலைவன்
　　எழுந்து பகை யழிக்க
சென்று வருகவெனப் பணித்தான் - இவர்
　　சிலாபத்துறை அடிக்கத் துணிந்தார்
வென்று வருதல் ஒன்றே
　　வீரப் புலிகள் குறி
கொன்று குவிப்பமென நின்றார் - டாம்போ
　　குண்டு அணிந்தபடி சென்றான்

❊ ❊ ❊

# உறவுகளிடம் இறுதிவிடை

தணலாகும் முன்னாலே தாய் தந்தை உறவுகளை
தான்காண வேண்டி தன்னவரோடேக
தன்வீட்டில் புதிய தளிரொன்று உதித்துள்ள
தண் என்ற செய்தியினை தாய் சொல்லக் கேட்டான்
அண்ணனிவன் தம்பியின் அகத்தாள் வேருவிலில்
பெண்ணொன்றைப் பெற்றெடுத்த புதுச் சேதி கேட்டு
மண்ணின்று தாம் போம்முன் மற்றுமொரு வாரிசு
மண்ணுதித்த அச்சேதி மனதுக்கு மகிழ்வாச்சு
தம்பியிவன் பெண்மகவு தனக்கும் மகளென்று
அன்புந்த ஆவலுடன் அதனைப் பார்வையிட்டான்
அடுத்த அவர் பரம்பரையில் அவள்தானே முதற் பிள்ளை
கொடுத்து இனிப்புவகை குதூகலித்தான் தோழருடன்
கரும்புலியாய் போகின்ற கருமவீரனவன்
கருத்தினிலே ஓராசை கடுகளவில் தோன்றிற்று
தம்பியின் மகளுக்கு தன்பெயரைவை எனவும்
தாயோ "தயாபரன் ஆண்கள் பெயர்" என மறுக்க
"தங்கையின் பெயரையிடு தகும்" எனவும் அதற்கும்
"தங்கையிவள் பெயர் வேண்டாம் தாயென்னைவிட்டு
தங்காது பறந்த கிளி தாங்காது மனதெ"னவும்
தாயோடு இயைந்து தம்பியிவன் பெண்ணுக்கு
குமுதினி என்னும் பெயரை கூறியிட்டழைத்தான்

முற்றத்தே சாய்த்திருந்த பூசணியின் காய்கள் பல
முற்றியதால் பிடுங்கி குவித்திருந்தார் உள்வீட்டில்
சற்றே அதைப் பார்த்த டாம்போ சாற்றிடுவான்
உற்ற உட்பொருளை உணராத பான்மையிலே
"மூன்றாம் நாள் அந்தியேட்டி விருந்துக்கு இவை உதவும்"
தோன்றாப் பொருளதனை அங்கெவரும் உணரவில்லை

பூடகமாய் இவன்சொன்ன பொருளுணராத் தாய்சிரித்தாள்
கூட வந்த தோழர்களோ பொருளுணர்ந்து புன்னகைத்தார்
மூன்று நாள் கொண்டாட்டம் முகம்மலர்ந்த சலசலப்பு
ஈன்றவர்கள் இரத்த உறவுகளோ டுறவாடி
இருந்த அவ்வேளையிலே டாம்போ தன் உள்மனத்தே
அரித்துக் கொண்டிருக்கின்ற அந்த இரகசியத்தை
சிரிப்போடு கூறிடுவான் சிறிதும் பதட்டமின்றி
"அம்மா நான் வெகுவிரைவில் யூ.கே. போகின்றேன்
சும்மாதான் சொல்கின்றான் என நினைத்த தாயவளோ
"ஏனடா போகின்றாய்?" என்று அவள் கேட்டதற்கு
கூடவந்த தோழர்களோ கூறினார் கேலியுடன்
"சண்டையில இவனுக்கு மண்டையில பீஸ் அம்மா
தோண்டியதை எடுக்கத்தான் தொலைநாடு போகின்றான்"
நெருப்பாகத் தான் வெடிக்கும் நிகழ்ச்சியினைக் கூறாமல்
குறிப்பாகச் சொன்னான் குவலயத்தால் நீங்குவதை
மார்ச்மாதம் பதினேழில் மைந்தன் விடைபெற்றான்
மாதவைப் பிதாவை உறவுகளை முத்தமிட்டான்
இறுதி முத்தம் இதுவென்று உணராத சொந்தங்கள்
தொலைதூரம் போகுமுன்னர் தரும்முத்தம் என நினைத்தார்
உலைவைத்து உயிருக்கு உருக்குலையப் போகுமவன்
முலைதந்த தாய்க்கீய்ந்த முடிவான முத்தமது
விடைபெற்றான் வெளிக்கிட்டான் நடைநிறுத்தி தாயிடத்தே
"நான்போறன் அம்மா நாள் சிலதால் என்தம்பி
காணாமற்போன தம்பி கடற்படையால் பிடிபட்டோன்
கட்டாயம் வந்திடுவான் கவலைவிடு" எனச் சொன்னான்
கடைசிமொழியுரைத்து கடவையினைத் தாண்டியவன்
உந்துருளி மீதமர உறுமி அது சென்றது வாம்
தந்தையை தாயை தனது உடன்பிறப்புகளின்
சிந்தையை சிதற வைக்கும் செயலாற்றும்போகுமவன்
எந்தையர் பூமிக்கு எனது உயிர் காணிக்கை
என்றமன வுறுதியுடன் ஏகினான் களம்நோக்கி

❋ ❋ ❋

# இறுதி இரவு

பெற்றவரை கண்டான் பிரியாவிடைசொன்னான்
உற்றவரை கண்டான் உறுதியுடன் வந்தான்
நான்கு பிள்ளைகள் பெற்றும் நாதியற்றோராக
தான்முளைத்த தளங்கள் தவிப்பதனைக் கண்டும்
கன்றுகளோ பிரிந்த கவலைகள் மேலோங்க
கற்பனைகள் யாவும் கரைந்தழிந்து போக
நின்ற அவர் நிலைமை நெஞ்சை இடித்தாலும்
சென்று விடை பெற்றான் செருக்களமே ஏகி
துஞ்சுவதால் பகையை தூளடிக்க நினைத்த
அஞ்சலற்ற டாம்போ அணுவளவும் அசையான்
முப்புறமும் கடலும் மேற்கினிலே தரையும்
எப்புறமும் சிறந்த இராணுவத்தின் அரணும்
காவலுக்கு கடலில் கப்பலிலே படையும்
கால் பதித்தால் சிதறும் கண்ணிவெடி தரையில்
தூவிவைத்துக் கொண்டே துங்கிடாத நிலையில்
காவி நின்றார் கருவி கண்ணிமைத்தல் இன்றி
சிங்களப்படைகள் சிலாபத்துறை முகாமில்
தங்களுக்கு நிகரே தாங்கள் என்று நின்றார்
உங்களுக்கு பாடம் உள்ளபடி புகட்ட
ஊர்தியிலே வந்து உதை கொடுப்பேனென்று
சக்கை வண்டியோடு சாவெடியாய் செல்ல
மிக்கத் துணிவோடு டாம்பா போகுமுன்னே
நடக்கவுள நிகழ்வை நண்பருக்கு சொன்னான்
வெடிக்கவுள்ள கொடையை வேடிக்கையாய் சொன்னான்
அணுவளவும் சாவுக் கச்சமில்லான் டாம்போ
தனதுயிரைப் போக்கல் தவப்பயனே என்றான்
இப்படியோர் சாவு எவர்க்கும் வருமாமோ
எனக்கு வந்ததென்று இன்முகமாய் சொன்னான்
சேதியது கேட்டு தோழர்மனம் இடிந்தார்
சோதியற முகத்தில் சோகமது கொண்டார்

பேச்சிழந்து நின்றார் பணிமறந்து நின்றார்
மூச்சுவிட்டு நின்றார் முகமிருள நின்றார்
தீச்சுவாலை நெஞ்சில் திமுதிமு வென்றெரி
ஆச்சரியமாக அவன் முகத்தைப் பார்த்தார்
அந்தியரா வதனில் அன்பர்தமை அழைத்து
பந்திவைத்த இயேசு பரமனவன்போல
நண்பர் தமைக்கூட்டி நட்புரிமை போற்றி
தன்கரத்தால் உணவை தான் கொடுப்பேனென்று
அள்ளிவைத்து உணவை அவர் புசிக்க கண்டு
உள்ளக்கத்தே நிறைவு உள்ளவனாய் நின்று
தள்ளி நின்று ரசித்தான் தாயினைப்போல் களித்தான்
கொள்ளியொன்றை நெஞ்சில் கொளுத்திவிட்டு நண்பன்
துள்ளிமகிழ் செயலால் துவண்டழுதார் தோழர்
இன்னும் சில பொழுதில் இறந்து விடப்போகும்
இன்னவனின் செயல்களில் இமை பனிக்கச் செய்ய
உண்ணமுடியாது உட்குமைந்த தோழர்
"என்னே இவன் துணிவு"! என்று வியந்திட்டார்

இரவுணவு முடிந்து இறுதியான வேளை
நிறைவுடனே டாம்போ நின்றிருந்த வேளை
உருகு மனததோடு உறற ஒரு நணபன
அருகு வந்து மிகவும் ஆதரவாய் அன்பாய்
"வெடிமருந்து ரதத்தை விட்டவுடன் இறங்கி
வந்துவிடு" என்று வாஞ்சையோடு சொல்ல
உறுதியோடு வதனம் உறைந்திடவே டாம்போ
உற்ற நண்பனுக்கு உரைத்த பதில் மொழியோ
"முடிவிதுதான் கேளும் மீள வரமாட்டேன்
முடிந்தவரை சென்று முகாமில் மதிலோடு
மோதுவதென் நோக்கம்" முகமிருண்டான் தோழன்
வேதனையின் தாக்கம் வேறு சொல்லற்று
ஈதே முடிவென்று எடுத்தவனின் முன்னால்
ஏது செய்வமென்று ஏக்கமுடன் நின்றான்.

# இரவில் இடி

அந்த இரவுமே வந்தது டாம்போ
அதிர வைத்தது நிகழ்ந்தது
முந்த அங்குபோர் நடந்தது - ஒரு
முகாம் அதனிலே விழுந்தது

உதவி அரச அதிபரின் - விடுதி
உள்ளிருந்தவர் ஓடினார்
உதவி அற்றவராகிய - தம்
உயிரை மீட்கவே ஓடினார்

குண்டு தாங்கிய வண்டியை - டாம்போ
கொண்டு ஏகிட ஏற்றதாய்
கொண்டச்சியின் வீதியை - திருத்த
கூடி வேலைகள் செய்தனர்

அந்த வேலைகள் ஒருபுறம் - தோழர்
ஆற்றி நின்ற அவ்வேளையில்
சொந்தத் தோழரைக் காத்திட - டாம்போ
சுழன்று வேலைகள் செய்கின்றான்

காயப்பட்டவர் தோழரை- சென்று
காவிவருகின்றான் அவருக்கோ
ஆய சிகிச்சைகள் செய்கின்றான் -மிக
அன்போ டவற்றினைப் புரிகின்றான்

நேயமுற்ற அந்நெஞ்சனை - கண்டு
நின்ற தோழர்கள் வியக்கின்றார்
மாயமென்னவோ இவனது - துணிந்த
மனது என்னவோ திகைக்கின்றான்

வண்டி சென்றிடும் நேரமும் - கடுகி
வந்து சேர்த்தது கரும்புலி
தொண்டு செய்திடும் நாழிகை - அவனை
துரத்தி வந்துமுன் னின்றது

*மரண வண்டியை கண்டதும் - தன்*
*மனதுள் மகிழ்ந்தனன் கரும்புலி*
*தருணம் வந்ததை உணர்ந்தவன் - உயிர்த்*
*தற்கொடைக்கென விரைக்கின்றான்*

*சுற்றி நின்றதன் தோழரை -டாம்போ*
*சுழன்று ஒருமுறை பார்க்கின்றான்*
*பற்றி அணைக்கின்றான் அவர்களை - முகத்தில்*
*ஒற்றிப் பதிக்கின்றான் உதடுகள்*

*அந்தக் கணமதில் தோழர்கள் - தம்*
*ஆவி துடித்திடக் கலங்கினார்*
*சொந்த உதிரமே போவதாய் -முழுக்*
*சோகமுடைத் தவராகினர்*

*கந்தகத்தினை சுமந்திடும் - அக்*
*கடைசி வேளையில் உள்மன*
*உந்தலுற்ற வனாகிய - தோழன்*
*உதடு துடித்திட வினவினான்*

*"கொஞ்சத் தூரம்தான் நானுமே -உன்*
*கூட வருட்டுமா?" என்கவும்*
*வஞ்சமற்ற அத்தோழனை - டாம்போ*
*வாஞ்சை பொங்கிடப் பார்த்தனன்*

*"நீயும் என்னுடன் வருவதா - தவறு*
*நிகழில் இடையினில் வீணடா*
*தீயில் நீயுமே கருகிடல் - அந்த*
*தீங்கு ஏற்பதற் கில்லையே"*

*"வேண்டாம்" என்றவன் மறுத்தனன் -தன்*
*வேள்வித் தேரினில் ஏறினான்*
*மீண்டும் நண்பனோ கூறுவான் - "இடையில்*
*முடிந்தால் ஓடிநீ வந்திடு"*

வார்த்தை வெளிவர மறுத்தது - நண்பன்
வாயின் உதடுகள் துடித்தன
பார்த்த பார்வைகள் கூறின - அதில்
பாச உணர்வுகள் சீறின

தடை உரைத்தவன் கேள்விக்கு -டாம்போ
தரவுமில்லையோர் பதிலுரை
விடை கொடுத்தனன் விழிகளால் -டாம்போ
விரைந்து ஓட்டினான் வண்டியை

இலக்கு நோக்கியே ஓடினான் - டாம்போ
இடித்து நொருக்கிட ஓடினான்
கலக்கமுற்றிட அனைவரும் - டாம்போ
கரு மருந்துடன் ஓடினான்

வெட்டை ஊடுசெல் வீதியால் - மிக
விரைந்து வந்திடும் வண்டியை
எட்டநின்றவர் எதிரிகள் - தமக்கு
எமனே வருவதைக் கண்டனர்

முட்ட வருகிறான் கரும்புலி - இனி
முடிந்து தெங்களின் வாழ்வென
இட்ட தேவதை யாவையும் -பயந்து
இரந்து அழைப்பவராகினர்

கொட்டு முன்னரே கரும்புலி - பெரும்
குண்டுமாரியை தங்கள் மேல்
சுட்டு அழிப்பதே மதியென - உடன்
சுடவும் தொடங்கினர் குறியொடு

ஏகும்வேளையில் வண்டிமேல் - பகை
ஏவி விட்டது கணைகளை
சாகடித்திட டாம்போவை -தம்
சக்தி யாவையும் கொடுத்தது

டுட் டுடும் டுடும் டுட் டுடும் - வெடி
பட்டதிர்ந்தது வாகனம்
திட்டமிட்டது நடக்குமுன் - எட்டு
திக்கதிர்ந்தது இடியினால்

நடுவழியில் வெடித்தது - டாம்போ
நடத்திய ஏகிய வாகனம்
சுடுகலன்களின் துளையினால் - அது
சிதறி எரிந்தது தீயினால்

"இந்தமாதிரிச் சாவது -இலேசில்
எல்லோருக்குமே கிட்டிடா"
தந்த மொழியது போலவே - டாம்போ
தந்து செற்றனன் தன்னுயிர்

தனது மண்ணிலே இடம்பெறும் - முதற்
தற்கொடைப்போர் அதனையே
தான் நிகழ்திட விழைந்தவன் - தனை
தந்து சொற்படி போயினான்

மண்ணைக் காதலே செய்தவன் - தன்
மனதில் அதனையே ஆசித்து
தன்னை ஆகுதியாக்கிய - டாம்போ
தன்னை மறக்குமோ வையகம்

❋❋❋



# 04.05.1991 கப்டன் ஜெயந்தன், கப்டன் சிதம்பரம் அபித்தா தாக்குதல்

கடல்மிசை ஏகியே கரும்புலியாகிய
கப்டன் சிதம்பரம் ஜெயந்தன் ஆகியோர்
உடல்களைச் சிதைத்து உயிரதைக் கொடுத்த
உன்னத வேள்வியை இவண் நோக்கிடுவோம்

தென்தமிழ் ஈழத் திருமகன் ஜெயந்தன்
தேன்தமிழ் வடக்கில் வரிப்புலி சிதம்பரம்
எந்தமிழ் ஈழக் கரும்புலியாகியே
இன்னுயிர் ஈய்ந்ததை இயம்புவன் இங்கே

பருத்திதுறையின் பரவையில் நின்று
பகன்றிடவியலா பலதுயர் தந்த
இரும்புக் கப்பல் அபித்தா அதனை
இடித்துத் துளைத்த ஈகம் சொல்வோம்

அலைகடல் மீதினில் ஆர்ப்பரித்திருந்த
அபித்தா எனும்பெயர் அரசக் கப்பல்
கொலைத் தொழிற் கலைஞர் கடற்படையோர்க்கு
கோள்சொல்லும் கடமைக் குரியதுவாகும்

முன்னர் முட்டிய எடித்தா ராவுடன்
மூன்றில் ஒன்றாய் மிதந்து கடலிடை
இன்னும் விக்ரம் எனும் படகோடு
இணைந்து இன்னல் இயற்றிய தொழிலாள்

அன்னை கடல் தரும் அளப்பரும் நிதியை
அள்ளி எடுத்திடத் தடைகள் விதித்து
அன்றைய அரசின் ஆணவ அமைச்சன்
அத்துலத் முதலி ஆணைகள் விதித்தான்

ஆழ்கடல் சென்று மீனது பிடிப்பதும்
அதிகநேரம் கடற்றொழில் செய்வதும்
நீள் கடல் பரப்பில் நீந்தி களிப்பதும்
நிறுத்திட ஆணை பிறப்பித்தானே

எட்டிடாத் தொலைக்கும் ஏகிக் கடலிடை
எறிந்தநூல் வலையினை எடுத்தனர் செல்வம்
தொட்டிலாய் ஆடிக் கடலின்மடியில்
தோணிகள் ஓட்டித் தொழிலினைச் செய்தனர்

திரைகடல் ஓடித் திரவியம் சேர்க்கும்
திறமையதிருந்தும் கடற்தடைச் சட்டம்
அரைகுறைத் தொழிலும் ஆற்றிடும் வழியை
அடைத்திட மக்கள் அவதியடைந்தார்

கடல்வழி ஏகிக் கடுகியே மீளும்
காளையர் எங்கள் காவற்புலிகள்
கடமைகள் முடித்துக் கரைவரு முன்னர்
உடமைகளோடு உயிரதும் விடுவர்

வல்வைக் கடலிடை வட்டமதிட்டு
வாழ்வினைக் கெடுத்த எடித்தாராவை
வல்லான் கொலின்சும், காந்தரூபனும்
வினோத்தும் இடித்த பேரிடியாலே

வாழ்வு முடங்கியே வருடம தொன்றென
வந்து நெருக்கிய வேளையந் நாள்களில்
மீளவும் கடலிடை மிதந்திடத் தொடங்கினள்
மிடுக்கொடு துடுக்கொடு கெடுதொழில் இயற்றிட

அந்தவேளையில் அண்ணன் நினைத்தான்
அல்லல் இழைக்க ஆழியில் மீண்டும்
இந்தக் கப்பல் இனியும் வரவோ?
இதனை விடுத்தல் இழிவெமக்கென்று

அடியதுபட்ட எந்தக்கலனும்
அலையிடை மீண்டும் அலைந்திடுமாயின்
பொடிபட வுடைந்து போயடிக்கடலில்
புதைந்திடச் செயலை புரிந்திடல் வேண்டும்

கொடியுடை புலியன் கொள்கையிற் பிறழான்
கொற்றவன் ஈழக் கோகரிகாலன்
அடிமனத்திருந்த ஆசையாம் இதனை
ஆணையிட்டான் அது செயற்படவே

ஆயுதமேந்தியே ஆழியூடேகித்தம்
அரச படையினர்க் களித்து வந்திடும்
தீயுமிழ் செயலினச் திரும்பவும் இயற்றிடா
திருந்திடக் தலைவன் திட்டமதிட்டான்

எடித்தராக் கலம் இல்லையென்றாலும்
எம்கடல் மீதினில் எம்மவர் உலவிடில்
அடித்து நொருக்கிட ஆணைகளிடும் பணி
அபித்தா தொடர்வதை அறிவான் அண்ணல்

கட்டளைக் கப்பல் மூன்றையும் தனது
கட்டுப்பாட்டில் நடாத்திய அன்றைய
கட்டளைத் தலைவன் ராசிக் என்பான்
கட்டளையிடவும் கடற்கொலை தொடர்ந்து

அபித்தா கப்பல் ஆங்கிருந் துலவி
அல்லல் கொடுக்கவும் அழிக்கவும் செய்ய
சபித்தார் மக்கள் சதிக்கலம் அபித்தா
சமுத்திரமுள்ளே மூழ்காதோவென

பின்னடை வெண்ணிப் பிறழா மனத்தினன்
பிரபாகரன் எம் பெருமைத் தலைவன்
தன்னுடல் கொடுத்துத் தாக்குதல் நடத்தும்
தற்கொடை இடிதர முடிவதுவெடுத்தான்

இப்பணி இயற்ற இளையவர் இருவர்
இன்முகத்தோடு முன்வந்தார்கள்
உப்புக் கடலிடை உயிர்க் கொடை ஈய
உவப்பொடு சிதம்பரம் ஜெயந்தன் என்பார்

வடக்கு கிழக்கும் இணைந்திடும் போரே
வரிப்புலி செய்திடும் விடுதலைப் போராம்
நடக்கும் தற்கொடை இடியில் இரண்டு
நண்பரும் வடக்கை கிழக்கை சேர்ந்தவர்

கரும்புலி சிதம்பரம் காற்றைலைத் தொடர்புக்
கருவியை யாள்வதில் கையது தேர்ந்தோன்
கரும்புலி ஜெயந்தன் கடற்கலன் ஓட்டும்
கலையிற் தேர்ந்த வல்லுநனாவான்

வல்வையின் புதல்வன் வானலைத் தொடர்பில்
வள்ளம் ஏகும் வழியினை கூற
வல்லவன் கிழக்கு வழங்கிய ஜெயந்தன்
வள்ளம் ஓட்டியே வெடி இடிகொடுப்பான்

உள்ளமே பொங்கும் உவப்புடன் இவர்கள்
உயிர்கொடை புரிய உறுதியாய் நின்றார்
வில்லினில் தொடுத்த அம்புகள் போல
விடையது கேட்டு வெளிக்கிட நின்றார்


எட்டியதெமக்கு இப்பெரும் பணியை
இயற்றிடும் பாக்கியம் என மிகத்துள்ளி
மட்டிலா மகிழ்ச்சி கொண்டனர் அந்த
மட்டு வல்வையின் மறத்தமிழ் வீரர்

திட்டமதிட்டு தீவிர பயிற்சியை
தினமும் பெற்றனர் திடமும்பெற்றனர்
முட்டும் நாளும் முடுகி நெருங்கிட
முன்னிலும் மகிழ்வாய் முகமது மலர்ந்தார்


சக்கைவண்டியால் சாதனை நிகழ்த்திட
சகுனம் நெருங்கி வந்திட வந்திட
மிக்க மகிழ்வுடன் மேலும் துணிவுடன்
மின்னாலாய் வெடித்திட வெளிகிட்டாரே

புன்னகை உதட்டுப் புலிகள் இருவரும்
புறப்படும் முன்னே செயற்படுதற்கு
அன்னவர் யார்? எவர்? அவர் பின்களத்தை
அறிந்திடச் சொல்லி அடுத்தது தொடர்வோம்.

✲ ✲ ✲



# கரும்புலி கப்டன் சிதம்பரம்



வாரி எறிந்தலை வல்வைக் கரைதனில்
வளைத்து களிநடம் புரியும்
ஊரிகள் சங்குகள் நண்டுகள் ஊர்ந்து
ஓடிச் கடலிடை மீளும்
நேரில் தலைவன் நிலமிடை ஈன்ற
நேர்த்தியும் கீர்த்தியுமுடையாள்
சீரிற் சிறந்தது செப்பிடற்கரியது
சிதம்பரம் பிறந்த இம்மண்ணாம்

பெரிய தம்பியும் சற்குண தேவியும்
பொருத்திய இல்லற வாழ்வில்
அரியதாம் பிள்ளை ஏழினை ஈன்றார்
ஆறாம் பிள்ளை சந்திரனாம்
கரும்புலியாக பின்னை நாளில்
கடனது முடித்தவன் இவனே
பிரியவன் பெற்றவர் சோதர் மீதில்
பிறர்க்கென வாழும் நல்லான்

இத்தனை பேர்கள் இருந்தும் எதுவும்
இல்லா ஏழ்மை வீட்டில்
அத்தனை பேர்க்கும் அன்னம் ஆடை
அளித்திட முடியா அப்பன்
எத்தனை நாட்கள் பட்டினி வீட்டில்
எப்படிச் கற்றிட முடியும்
வித்தகனாகிடக் கற்றிடும் எண்ணம்
விட்டவன் உழைத்திடப் போனான்

வல்வைச் சிவகுரு பள்ளியில் கற்றவன்
வகுப்பு ஆறுடன் பெற்ற
கல்வியை விட்டான் வீட்டுக்குழைக்கும்
கடமையை இளமையில் தொட்டான்
இல்லாக் கொடுமையை இல்லையென்றாக்க
இவனால் எப்படி முடியும்
செல்வான் ஏதும் சிறுசிறு தொழில்கள்
செய்வான் ஊதியம் பெறுவான்

குருவிக்கூடு போன்ற குடிசையில்
குடும்பம் வாழ்ந்தது அன்று
கருவிற்சுமந்த தாயும் மற்றும்
கூடப்பிறந்த பெண்கள்
வரவிற்காக செய்தின் பண்டம்
எள்ளுப் பாகோ எதுவோ
தெருவிற் கொண்டு சென்றுவிற்று
தேறும் பணத்தைக் கொடுப்பான்

விற்றுப் பெற்ற பணமே அன்று
வீட்டில் அடுப்பை யேற்றும்
பெற்றார் கூடப்பிறந்தார்பசியை
பெரிதும் இதுவே ஆற்றும்
சற்றே அவர்க்குச் சாந்திபிள்ளை
சந்திரன் செய்யும் துணையால்
கற்றே உயர்தல் தனிலும் வீட்டுக்
கஞ்சிக் குழைத்தல் பெரிதாம்

ஆளும்வளர அறிவும் வளர
அவனது பொறுப்பை உணர்ந்து
அழக்கடலில் இழுவைக் கப்பலில்
ஏறித்தொழிற்குச் செல்வான்
மீளவருகையில் கூலிக்காசும்
மீனும்கொணர்ந்து தருவான்
வேளைசிலதில் வெறுங்கையோடு
வீட்டை நோக்கிவருவான்

அற்றை நாளில் அடுப்பெரியாது
அதனை உணர்ந்து தனயன்
முற்றத் துயர்ந்து வளர்ந்து வேம்பில்
முறுவல் காட்டும் பூக்கள்
பற்றிப் பறித்துக் பக்குவமாக
பெற்றாள் கையில் கொடுப்பான்
"இற்றை நாளில் இதில் ஏதேனும்
செய்யனை தின்பம்"என்பான்

மருட்டிக் கதைப்பான் கலகலப்பாக
மற்றவர் மகிழ்திடத் தானே
இருட்டில் தனித்து இறங்கிடப் பயந்தவன்
இத்தனை வளர்ந்தும் இவனே
இருட்டில் இலங்கிடும்சந்திரன் போல
இன்னல் வருகையில் சிரிப்பான்
விரட்டி அடித்திட வீட்டின் வறுமையை
வேண்டி பாடுகள் பட்டான்

படகில் ஏறிப் பரவையில் போமுன்
பயந்தவன் தாய்முகம் பார்ப்பான்
கடலதின் கரைவரை கன்றவனுடனே
கட்டாயம் தாயவள் போவாள்
உடலதைப் பின்னர் உருக்கிய வேங்கை
உழைத்திட கடல் செல்லும் நாளில்
விடலை சந்திரன் விரும்பிய படியே
விடையது தருவள் கரையில்

வறுமை ஒழித்திட வாரிதி செல்பவன்
வள்ளத் தேறிய நாளில்
உறுமியே வந்து உலவிடும் கடற்படை
உதைக்கவும் அடிக்கவும் பெறுவான்
முறுக்கிய கயிற்றால் முதுகினில் அடிப்பார்
முடியுமா அவனால் தடுக்க
பொறுக்கிகள் அவர்செயல் புடமிடவைத்து
புலிக்குகை சென்றிட வைத்தார்

உறுபசி போக்கிட கடலினில் செல்வோர்
உடல்வதைபட அவரடிப்பார்
வெறுவலையோடும் வலைகளை இழந்தும்
விரத்தியில் கரையது வருவார்
சிறுமைகள் அவர்கள் செய்திடும்காலை
செப்புவன் அத்துலத் முதலி
"திறமுடை எமது கடற்படை வீரர்
துரத்தினார் புலிகளை" என்று

குத்தியும் சுட்டும்கொலையவர் செய்ய
கொன்றனர் புலிகளை யென்று
அத்துலத்முதலி அவிழ்ந்திடும் கதைக்கு
ஆமெனச் சுருதியை கூட்டி
ஒத்துப் பாடினன் "லங்காபுவத்" எனும்
உண்மையை விளம்பா உலுத்தன்
செத்துத் தமிழர் கடலினில்கரைய
சந்திரன் மனவிழி திறந்தான்

சத்தியாமாய் இச்சமுத்திரக் கொலைஞரை
சாக அடித் தல்என்கடனே
நித்தியம் தமிழர் நிம்மதி இழந்தெம்
நிலமிசை வாழ்தல் முறையோ
புத்தியும் சுத்தியும் உள்ளவன் தமிழன்
பூனையோ நாய்களின் முன்னே?
கத்தியும் வாளும் கருங்குழல் துவக்கும்
கதை சொல்லும் வகை எழல்வேண்டும்

பத்துத் தடவைகள் சாவது இல்லை
பாரினில் சாவொரு முறையே
செத்துப் செத்துப் பிழைப்பதில் இவனை
சிதைத்து ஒருமுறை இறந்தால்
இத்தரை மீதினில் இனிவரும் தமிழன்
இளைய தலைமுறையேனும்
எத்தும் கடலிடை சுதந்திரமாக
ஏறிப்படகினில் செல்வான்

இப்படி எண்ணிய இளையவன் சந்திரன்
இறுதியில் ஒருமுடி வெடுத்தான்
இப்படி எடுத்த முடிவின்படியே
அண்ணன் படையில் இணைந்து
தப்படி வைக்காத் தலைவன் தடத்தில்
தானும் நடந்திட நினைத்தான்
எப்படி இருந்தவன் எப்படி மாறினான்
என்பதை எவரும் அறியார்

இந்தச் சித்தனை இதயத்தெழுத்து
இலட்சிய வடிவது எடுக்க
இந்தியச் சேனை ஈழம் வந்தது
இங்கே அமைதியை ஈய
வந்த அச்சேனை வல்வை மண்ணில்
வைத்தடி செய்தவையெல்லாம்
நிந்தைகளன்றோ சொந்தத்தரையில்
நெருப்பை கொழுத்தினரையோ

அமைதிக் கொடியை அணிந்து வந்தவர்
அமர்க்கள மாடியதும்
சுமையைக் கூட்டி தமிழர் நிலத்தை
சுடுகாடாக்கியதும்
எமைத்தமக்கேதோ எடுபிடிபோல
எண்ணி நடாத்தியதும்
எம்குலப் பெண்டிரை எச்சிற்படுத்தி
இழிவு படுத்தியதும்

வீட்டினை இடித்தும் வீதியைக் தடுத்தும்
வீம்புகள் காட்டியதும்
காட்டிக் கொடுத்திடும் கயவர்களோடு
கைகோத் தாடியதும்
ஈட்டிய கொடுமைகள் எல்லாம் காண
இதயம் வெம்பியது
வாட்டிய துயரால் ஓட்டிடவேண்டும்
வந்தவர் தமை என்பான்

தாயென வந்தவள் தாடகையானால்
தாங்குமா இளமனது
பேயென மாறி பெருங்கூத்தாடினால்
பொறுக்குமா போர்மனது
காயொடு கனிகளை பூக்களை வேர்களை
கடித்துக் குதறுகையில்
வாயது பொத்தி வளைந்துடல் கூனி
வாழ்வதில் பயனெதுவோ?

நேற்றய பகைவன் நெருக்குதலாலே
நெஞ்சம் நொருங்கியவர்
தேற்றிட வந்தவன் தரும் இடராதனாலே
தணலிடை புழுவானர்
ஆற்றிடமுடியா கொடுமைகளாலே
அமைதி இழந்தவனாய்
தோற்றிட விரும்பா தலைவன் நிழலை
தேடிச் சரணடைந்தான்

தன்னை நம்பி இருந்தவர் தம்மிலும்
தாய்மண் பெரிதென்றோ
அன்னை தந்தை அன்பர்கள் யாரும்
அதற்கு பிறகன்றோ
முன்னை இருந்த குணங்களை மாற்றி
முறையாய் பயிற்சி பெற்று
அண்ணை வழியில் அவனது அணியில்
அடி தொடர்ந் தேநடந்தான்

எண்பத்தொன்பது ஓகஸ்ட் திங்களில்
இயக்கத் தோடிணைந்து
மண்பற்றோடு மற்றவர் வியக்க
மறப்போர் பயிற்சி பெற்றான்
தன்பற்றறியா தனயன் சந்திரன்
தாய்மண் பற்றினுக்காய்
தன்னியற்பேரை சிதம்பரமாக்கி
தனைப் புலியெனப் பகர்ந்தான்

கடற்தொழில் செய்தவன் கலமது ஓட்டிடும்
கலையும் அறிந்திருந்தான்
கடற்சமர் புரியவும் கருங்குழல் ஏந்தவும்
கற்றனன் தேர்ச்சி பெற்றான்
திடக்சமர் புரியும் தேர்ச்சிகள் பெற்று
திறத்தினை வெளிக் கொணர்ந்தான்
குடத்தினுள் விளக்கென இருந்தவன் இதனால்
குன்றிடை விளக்கானான்

தந்து உதவிட வந்தவர்போலும்
தந்திர மாய்வந்து
தந்தனர் தொல்லைகள் இந்தியப்படைகள்
தமிழ்புலி தயங்கவில்லை
தந்தது புலியடி தாங்கொணா நிலையில்
தாண்டித் தவழ்ந்து தப்பி
வந்தது போலவே வழியது நடந்த
வரலாற றிந்திடுவோம்

அந்த நிலைமை அகன்றதன் பின்னே
அடுத்து தொடங்கியது
முந்திய நிலைமை சிறீலங்காவின்
மூர்க்க நடவடிக்கை
குந்தியே இருந்து பலாலித்தளத்திலே
குரங்குச் சேட்டை செய்த
மந்திகள் சிங்கள லங்காப்படையை
மறியலிட்டார் புலிகள்

தளத்தை விட்டுச் கடந்து வந்திடில்
தலையடி கொடுப்பதிலும்
களத்தை விட்டு கடந்து வந்திடில்
கணைவெடி தொடுப்பதிலும்
வளத்தைக் கொண்டவர் வான்படை கடற்படை
வல்லமை கொண்டபடை
உளத்தை உடைத்து உள்ளே இருத்தி
உதை கொடுத் தார்புலிகள்

படைகள் ஒதுங்கிப் பலாலித்தளத்துள்
பதுங்கி கிடந்தாலும்
இடைகிடைக் எழுந்து ஏதோ விதத்தில்
இராணுவம் முயலுகையில்
தடைகள் போட்டுத் தலைவன் படைகள்
தக்க பதில்கொடுக்க
நடைகள் தளர்ந்து நடுக்கம் அடைந்து
நகர்வார் பின்வாங்கி

முன்னே வெளிவர முயலும் படைக்கு
மூஞ்சையில் அடிகொடுத்து
பின்னே கலைக்கும் போரைச் சிதம்பரம்
பிசகா துடன்செய்தான்
கண்ணே துஞ்சான் காவலரணில்
கருத்தாய் கடன் முடிப்பான்
என்னே இடர்கள் எதிர் வத்தாலும்
என்றும் சோர்வடையான்

திடமாய் காவற் பணியை பலாலிக்
தடையரண்களில் செய்த
கடமை மாற்றிக் களத்தைமாற்றி
கட்டளை வந்தது காண்
இடமாற்றம் அதை இவனுக்களித்து
இனிமேல் நின் கடமை
வடம ராட்சி மண்ணில் எனவும்
வந்தான் தாய் நிலத்தே

மீண்டும் தனது மண்ணில் நிற்க
மீளும் பழம் நினைவு
நீண்டும் வளைந்தும் குதிக்கும் அலையில்
நீந்தும் முன் நிகழ்வு
தீண்டும் தீயெனத் திடுமென உடலில்
தீவிர வேகம் வரும்
தாண்டும் கடற்படைக் கலன்களைக் காணில்
தாக்கிட வெறி பிறக்கும்

எங்கள் கடலில் எவனோ வந்து
எம்மைத் தடைசெய்தெம்
அங்கம் சிதைத்து அடித்து உதைத்து
ஆவியும் குடிக்கின்றான்
பங்கம் உறவெம் பரம்பரைக் குடிகள்
பார்த்து இருந்திடவோ
சிங்கப்படைகள் சிரிக்கவும் எரிக்கவும்
"சீ" இது தொடர்ந்திடவோ

எங்கே எனக்கொரு வாய்ப்பு வந்திடில்
இவரை நானழிப்பேன்
அங்கே எனது ஆவி இழப்பினும்
அதுவே பேறென்பேன்
தங்கத் தமிழ் மண் ஈழம் ஒன்றே
தமிழன் சுதந்திரமாய்
இங்கே வாழ ஏற்ற நல் லகமாம்
இதுவெம் உயிரன்றோ

என்றவன் சும்மாய் இருந்திட வில்லை
ஏகுவன் படகேறி
அன்றவன் எதிர்வரும் எதிரிகள் கலங்களை
எதிர்த்துக் கலைத் தடிப்பான்
கொன்றவன் எங்குலக் கொடிகளை அறுத்தவக்
கொலைஞரை அழிப்பன் என்பான்
வென்றவன் வருவான் ஆயினும் நெஞ்சில்
வெறியது தணிவதில்லை

தாக்குதல் நடத்தியே சுதந்திரமாகவே
தன்வழி மீள்கையிலே
தீக்குணர் கடற்படை திடுமென வந்திடில்
திருதிருவென விழித்து
போக்குகள் காட்டி போலியாய் ஏதும்
புரியாவெகுளியைப் போல்
நாக்கது குழற நான் தொழில் செய்பவன்
நம்பிடும் என இரப்பான்

அச்சப்படுபவன் இவனெனக் கண்டு
அவர்களுக் கோதிருப்தி
கொச்சைத் தமிழில் "கொல்லுவோம்" என்று
கோபமாய் ஏசியபின்
பிச்சை தந்தோம் பிழைபோய் என்று
பெருமையுடன் துரத்த
பச்சைக் குழந்தைபோல் பாவனை செய்து
படகினில் கரை சேர்வான்

ஒன்றா இரண்டா சிதம்பரம் கடலில்
நடத்திய நாடகங்கள்
குன்றா வீரம் கொண்டவன் நெஞ்சில்
குறியோ பழிவாங்கல்
என்றோ ஒரு நாள் எனக்குவராதா
என் பசி தீர்ப்பதற்கு
அன்றே இவரை அடித்து ஒழித்து
அழிவது தானும் என்பான்

தரைப்புலி யெனினும் கடற்புலியாகவும்
தம்பணி புரிந்து அண்ணன்
உரைப்பது படியே ஓய்வது இன்றி
உழைந்தனர் தமிழ்புலிகள்
கரைப்புலி, கடற்புலி, களப்புலி, இதற்கு
கட்டளைக் தளபதியாய்
வரைப்புயன் சூசை வடம ராட்சியில்
வழிநடத் தியேவந்தான்

புலிப்படை வீரர் புதுப்புது விதத்தில்
புயல்அடி கொடுத்திடவும்
சலிப்படைந்திட்ட சமுந்திரக் கொலைஞர்
சத்தியைப் பெருக்கிடவும்
ஒலித்திடு கடலில் உலவிய படியே
உலவிடு நாள்களிலே
பலிப்பட கொன்றால் பகைப் படகிடிக்க
பகுந்தனர் புதுத்திட்டம்

எடித்தாராவை இனியும் கடலில்
ஏகிட அனுமதியோம்
இடித்தாழ்த்திடுவோம் இன்னுமொருமுறை
இதனைக் குறிவைத்து
வெடிப்படகோடு கரும்புலிவீரர்
விரைந்திடத் திட்டமிட்டு
அடித்தாழ்த் தும்பணி அதற்காய் கரும்புலி
இருவரைத் தெரிவு செய்தார்


படகினால் இடித்திடப் பயிற்சிகள் முடிந்தன
பார்த்திருந்தார் காலம்
கடைசிவேளையில் தவிர்த்திட முடியா
காரணம் ஒன்றதனால்
இடித்திடப் போகும் இருவரில் ஒருவரால்
இயலா நிலை வரவே
அடுத்து யாருளர் அப்பணி தொடர்ந்திட
அனைவரும் சிந்தித்தார்

எடுத்தஇக் கருமம் முடித்திட வல்லன்
எவரென எண்ணுகையில்
விடுத்தனர் செய்தி சூசையின் அணிக்கு
விருப்புளர் யார் என்று
மடுத்தனன் செவியில் மறப்புலி சிதம்பரம்
மறுகணம் முன் வந்தான்
"கொடுத்திடும் அப்பணி குறைவற நிகழ்த்தவதுன்
கொழுத்துவன் பகை" என்றான்

தேடித்திரிந்த வாய்ப்பு அவனிடம்
தேடி வந்திடவும்
ஓடிச்சென்று அணைத்தவன் போலும்
ஒப்புதல் அளித்திட்டான்
முடிக்கிடந்த முகிலகன்றதுபோல்
முகம் மலர்ந்திட்டார் திட்டம்
சோடித்ததுபோல நடைபெறும் என்று
சோர்வகன்றே நிமிர்ந்தார்

மூன்றே நாள்கள் பயிற்சிகளோடு
முழுவதும் அறிந்து கொண்டான்
தோன்றிய ஐயம் துலங்கிட வினாக்கள்
தொடுத்தவன் தெரிந்து கொண்டான்
ஈன்றாள் உறவு சுற்றம் மறந்து
இலட்சியக் கரும்புலியாய்
சான்றுபகர சரித்திரம் படைக்க
சிதம்பரம் புறப்பட்டான்.

❊ ❊ ❊



# கப்டன் ஜெயந்தன்



இருவேங்கைப் புலிமைந்தர் ஈகம் செய்தார்
இதுவரையில் சிதம்பரத்தின் சேதிகேட்டோம்
கருவேங்கை மறுவேங்கை ஜெயந்தன் என்பான்
கதை சொல்வேன் இதை நீவிர் கேண்மின் ஐய!

கடல்வேங்கை ஜெயந்தன்எனப் பின்னை நாளில்
கருவேங்கையாய் தனது கடன் முடித்தோன்
அடலேறு அவன் பிறந்த மண்மகிமை
அறைகின்ற வரம்பெற்றேன் கேண்மின் ஐய!

அறக்கொடையால் உலகறியும் ஈழமண்ணில்
அழியாத வீரத்தின் பெருமை சாற்ற
முறக்கொட்டாஞ் சேனையிலே கீழ்த்திசையில்
முதற்கரியபுலி ஜெயந்தன் முகிழ்ந்திட்டானே

வித்தகனார் விபுலாந் தடிகள், தோன்றி
விலையில்லா தொண்டியற்றி பெருமை சேர்த்தார்
முத்தமிழின் முரசொப்ப முழு உலகும்
முழக்கிடும் முத்தகவி வேந்தனான

காசியா னந்தனெனும் கவிதை மேகம்
காற்றாக கனலாக கவிபொழிந்து
காசினியில் வாழ்கின்ற தமிழின் மாந்தர்
கண்திறக்க மண்சிறக்க கடமை செய்தான்

முட்டிகளில் சட்டிகளில் தயிர் நிறைத்து
முழுவூரும் கமகமக்க மூச்சு முட்டும்
கட்டியென உறைந்த தயிர் தேனையிட்டு
கலந்துண்ணில் அமுதமது தோற்றுப் போகும்

நெல்மணிகள் கூத்தாடும் பெரும் வயல்கள்
நேர்நிற்க முடியாது குனிந்து ஆடும்
கள்ளருந்தி வண்டினங்கள் கவிகள்பாடும்
காண்பவர்க்கோ நெஞ்சமெலாம் குளிர்ந்துபோகும்

இலக்கியங்கள் புகழ் பாடும் ஈழமண்ணில்
இயலோடு இசைத்தமிழும் நாடகமும்
இலங்குகின்ற கிழக்கிழங்கை பெருமைசாற்ற
இங்கொருவன் மாவீரன் பிறந்திட்டானே

அறக்கொடையும் அறிஞர்களும் திகழும் மண்ணில்
அழியாத வீரத்தின் பெருமை சாற்ற
முறக்கொட்டாஞ் சேனையிலே உதித்தவன்தான்
முதற்கரிய புலியாக கிழக்கு மண்ணில்

முத்தமிழாள் புனைந்த மணி முடியிலங்கு
முத்தாக முழு உலகும் வியக்கத்தானே
வித்தாக விளைந்தவனே கரியவேங்கை
வீரனெப் புகழ்பெற்ற ஜெயந்தன் என்பான்

அறக்கடலாம் ஆண்டவனின் தொண்டியற்றி
அனுதினமும் ஆலயத்தில் பூசை செய்யும்
சிறப்புடையார் பூசாரி சம்புக்குட்டி
சேர்ந்தமனை யாள்தெய் வானை என்பாள்

எண்மக்கள் தமை ஈன்று இல்லறத்தில்
ஏழ்மையிலும் பெருமையுடனும் வாழ்ந்த வீட்டில்
கண்மக்கள் அவரென்று பெற்றோர் போற்ற
கருவுற்ற ஒருமகனே பத்ம நாதன்

பெண்மக்கள் மூவரொடு ஐவர் ஆண்கள்
பெருங்குடும்பம் அதனாலே வறுமையூடு
நன்மக்கள் இவரென்று நாடுகாண
நாளிரவாய் பூசாரி பாடுபட்டார்

தன்மக்கள் எண்மரிலும் பத்மநாதன்
தனித்தன்மை பெற்றவனாய் சிறந்து நின்றான்
இன்மக்கள் இவராலே தமது வாழ்வு
ஏற்றமுறும் எனப் பெற்றோர் கனவு கண்டார்

களணியொடு கால்நடைகள் செல்வமங்கு
கடலருவி மீன்துள்ளும் திருவின்நாடாம்
இளநீரோ டெழில்காட்டும் எழிலார் பூமி
இதுதானே அவர்வாழ்ந்த இனியநாடு

சாதிமத பேதமிங் கேது மில்லை
சமத்துவமே தொழில்முறையில் தோற்றும் எங்கும்
வேதியனும் மீன்பிடிப்பான் வள்ளமேறி
வேற்றுமைகள் விளம்புதற்கோ ஏதுமில்லை

தந்தையவன் கோவிலிலே பூசை செய்வான்
தேவாரம் மந்திரங்கள் ஓதல் செய்வான்
மைந்தர்களோ மரக்கலத்தில் மீன்பிடிப்பார்
மதிப்பில்லா தொழிலென்று எவரும் கொள்ளார்

வயற்றொழிலும் வலைத்தொழிலும் வயிற்றுக்காக
வர்ணகுலப் பேதங்கள் எதனுக்காகத்
இயற்கையொடும் இறைவனொடும் இணைந்து வாழ்தல்
இயல்பென்றே கொள்பவர்கள் இந்த மக்கள்

பூசாரிக் தொண்டியற்றம் தந்தையொடு
பூ சாத்திப் புகழிசைப்பான் பத்மநாதன்
கூசாது கடற்தொழிலும் செய்யப் போவான்
குற்றமென இதையாரும் சொல்வாரில்லை

ஆலயத்துப் பூசாரி சம்புக்குட்டி
அவர் துணையாய் தொண்டியற்றும் பத்மநாதன்
வேலையதைச் செய்வதினை விழைந்தாரில்லை
விடு தொழிலை என விளம்ப விட்டானில்லை

கண்டிபான தந்தையவர் பத்மநாதன்
கடல்மீது செய்தொழிலோ வேண்டாமென்றால்
நண்டைப்போல் பாளியிலே பதுங்கமாட்டான்
நாளாந்தம் கடல் செல்லத் தயக்கமாட்டான்

உடலுழைப்பை முதலாகக் கொண்டதாலே
உயர் செல்வம் கல்வியிலே நாட்டம் விட்டான்
கடலுழைப்பை கருத்தாகக் கொண்டுமைந்தன்
கல்விக்கு ஆறொடு முற்று வைத்தான்

அடுத்துவரும் காலத்தில் கடலின்மீது
அபித்தாவை அடிப்பதற்கு படகு ஓட்ட
எடுத்த முதற்பயிற்சியதாய் அமைந்ததன்றே
அவன் கற்ற படகோட்டும் வித்தை ஆங்கு

அமைதியோடு அவன் வாழந்த காலம் தன்னில்
அக்கிரமச் சிங்களத்து ஆட்சியாளர்
சுமை ஏற்றி வைத்தார்கள் இளைய நெஞ்சில்
சுட்டதது விழித்து எழ விடுதலைக்காய்

அப்பாவித் தமிழர்களைக் கைது செய்வார்
அம்மணமாய் நிற்கவைத்து அடித்துதைப்பார்
சிப்பாய்கள் செய்கின்ற கொடுமை கட்கு
சேர்ந்துதவி செய்தார்கள் துரோகக் கும்பல்

இளையவராம் பெண்டிர்தமை இழுத்துச் செல்வார்
ஒருவரல்ல பலர்சேர்ந்து குதறித் தின்பார்
விலையில்லா நிறையழித்து எச்சில் செய்து
வீதியிலோ கிணற்றிலோ வீசிச் செல்வார்

ஊர்சுற்றி வளைப்பினிலே ஊரில் உள்ள
உடல்வாகாய் உள்ளவர்கள் இளைஞரென்றால்
யார் பெற்ற பிள்ளைகளோ என்ற போதும்
யமனுலுகுக் கனுப்புவதை தொழிலாய்க் கொண்டார்

கேட்பவர்கள் யாருமிலை கயவர் செய்யும்
கேடுகளை கீழ்மைகளை யார் தடுப்பார்
ஆட்பலமும் ஆயுதமும் அடக்கியாள
அரியோடு நரிகூடி ஆடும் ஆட்டம்

நள்ளிரவு என்றாலும் மனை புகுவார்
நடுவீதி தனில் வைத்தும் சுட்டுச் கொல்வார்
கொள்ளிவைத் தெரிமூட்டிக் கொக்கரிப்பார்
கூக்குரலும் சாக்குரலும் ஊரில் கேட்கும்

உண்டவர்க்கே உலைவைக்கும் ஏவற்கூட்டம்
ஊர்காவற்படை யென்னும் இழிஞர் . கூட்டம்
கொண்டகொலை வெறிச்செயல்கள் பிஞ்சு நெஞ்சை
துளைத் தறுக்கத் துடித்திட்டான் பத்மநாதன்

பட்டதுயர் ஒற்றல்ல இரண்டுஅல்ல
பாதகரால் கிழக்கிலுள்ள ஈழமக்கள்
தொட்டதுயர் தாங்காது துடுப்பை விட்டு
துப்பாக்கி கையெடுக்கத் துண்டிவிட்டார்

அதிரடியில் சிறப்பான பயிற்சி பெற்று
அரசபடை சிப்பாய்கள் என்பத்தேழில்
உதிரஉற வானசெல்வ ராசாவென்னும்
உடன்பிறப்பை இவன் வீட்டில் கைது செய்தார்

விடுதலைப் புலிகளுடன் தொடர்பு என்று
விலங்கிட்டுப் பூசாவுக் கழைத்துச் சென்று
கேடுதலைச் செய்தார்கள் வதைகள் செய்து
குற்றமிலான் எனப்பின்னர் அனுப்பி வைத்தார்

ஒருமுறைக்கு இருமுறையாய் அழைத்துச் சென்றார்
இருமுறையும் அவன்பட்ட துயர்கள் நூறாம்
மிருகவதைக் காளாகி மீண்டும் வந்தும்
மிலேச்சர்களின் இரத்தவெறி தீரவில்லை

மூன்றாம் முறையும் அவர் அழைத்துச் சென்றார்
மூத்த அவன் பின்வீடு திரும்பவில்லை
ஈன்றாரும் இனசனமும் தேடிப் பார்த்தார்
இறந்தானோ இருந்தானோ தெரியவில்லை

நாலைந்து முகாம்களுக்கு நடந்தலைந்தார்
நடத்ததுவோ எதுவொன்று அறியமாட்டார்
ஆளில்லை என்பதுவே பதிலாய் ஆச்சு
அத்தோடு அவன் வாழ்வும் முடிஞ்சு போச்சு

ஒருவீட்டில் இருவீட்டில் மட்டுமன்று
ஊரெல்லாம் இதுவேதான் கதையென்றாகச்
திருநாடாம் தென்தமிழ் ஈழமக்கள்
தேய்ந்தழிந்து தாம் போக சகிப்பாரோ?

ஊரெல்லாம் அழுகையொலி எழுந்து நெஞ்சை
உருக்கிடவும் உலுப்பிடவும் தூக்கமின்றி
வேரெல்லாம் விறகாகி எரியும்போது
விதியென்று ஏற்பதிலே ஏது நீதி

சின்னவனாம் பத்மனுக்கு சிந்தைநோகும்
சினம்மூண்டு பெருநெருப்பாய் சுழன்று வீசும்
என்னவரைக் காப்பதற்கு என்ன செய்வேன்
என்றவினா எழுந்திடவும் விடை தோன்றாது

சொப்பனம்போல் நடந்தவைகள் தோன்றும் கண்முன்
சோகமொடு கோபம்எழ வேகம் தோன்றும்
எப்பொழுதும் மனஅமைதி தோன்றக் காணான்
ஏழையெனப் பத்மநாதன் ஏங்கி நிற்பான்

ஆறுதலை ஆர்கொடுப்பார் என்று ஏங்கி
அச்சிறுவன் ஆவலுடன் நின்ற நாளில்
மாறுதலை உண்டாக்க ஈழமண்ணில்
மறவர்படை புலிகளிலே மனது கொண்டான்

கருவியுடன் களவேங்கை செல்லக் காண்கில்
கருகியஉள் நெஞ்சமதில் பசுமை தோன்றும்
தெருவிலர் போகின்றார் என்றால் காவல்
தெய்வங்கள் போகுதென மனது என்னும்

கருமுகிலை கண்டமயில் களித்துஆடும்
கதிரெழவும் தாமரைகள் நிமிர்ந் தலரும்
பரிதியெழும் பறவையினம் பாட்டிசைக்கும்
பத்மனுக்கோ புலிவரவால் மனம்குதிக்கும்

புலிகளிலே நானொருவன் ஆகவேண்டும்
புல்லர்களைப் கொன்றொழிப் போதல் வேண்டும்
வலியதொரு வரிப்புலியாய் மாறவேண்டும்
வாஞ்சையிது வெகுவிரைவில் தீரவேண்டும்

இந்தவிதமாக அவன் இதயம் தன்னில்
எரிதழலாய் விடுதலைத் தீ விரைத்தெழுந்து
சொந்த நிலம் காப்பதற்கு நிமிர்த்த போது
வந்ததுவாம் இந்தியரின் அமைதிக்கூட்டம்

ஆறுதலை வேண்டியொரு பிள்ளை விம்ம
அழுக்குரலை கேட்டுவரும் அன்னைபோலும்
தேறுதலைத் தருவதற்கு திரண்டுவந்தார்
தேவர்களோ இவரென்று திகைத்து நின்றான்

ஒப்பந்தம் அதன்பின்னர் ஒய்வு கொஞ்சம்
ஒருவாறு அமைதியது வந்ததென்றும்
அப்ப இனிப் பிரச்சினைகள் தீந்த தென்றும்
அனைவரது மனங்களிலும் ஆர்ப்பரிப்பு

நாளாக நாளாக நடைகள் மாறி
நரியோடு கூட்டான புன்மையாலே
வாளொடு நிற்கின்ற அரியின் பின்னால்
வாலாகி நின்றார்கள் வந்த கூட்டம்

புரியாத சிறுவர்கள் புலிகள் என்று
பிழையான கணக்கிட்டார் அமைதி காப்போர்
சரியான நேரத்தை காத்திருந்து
சமர்வேங்கை கரம்ஓங்க தளர்ந்தே போனார்

கரியான நாள்களவை ஈழமண்ணில்
கரிகாலன் சுயரூபம் தோன்றக் கண்டார்
புரியாத புதிர் இந்தப் புலிகள் என்று
புரிந்தார்கள் புறம் காட்ட முடிவெடுத்தார்

அரிதாரம் பூசி அவர் போட்ட ஆட்டம்
அடிமாறி நடைமாறி மீளும் வேளை
பெரிதான பணியாற்ற பத்மநாதன்
புலிவேங்கை அணியுள்ளே பிறப்பெடுத்தான்

அப்பொழுது ஆண்டெண்பதொன்பதாகும்
அம்பாறை பயிற்சி முகாம் ஏழில் சேர்ந்தான்
அப்பா அம்மா இட்டபெயர் பத்மநாதன்
அன்றுமுதல் ஜெயந்தனென்று மாறிப் போச்சு

அம்பாறைப் பயிற்சி முகாம் எழில் அன்று
அவன் பயிற்சி பெற்றுவந்த நாளில் ஊரில்
சம்புக்குட்டி பூசாரி வீட்டில் மேலும்
சம்பவங்கள் சாவுகள் நிகழலாச்சு

எண்மரிலே எல்லோருக்கும் மூத்த அக்காள்
என்றான பூமணியின் வீட்டில் இரண்டு
கண்மணிகள் போலிருந்த இளைய ஆண்கள்
காதகரால் பாதகரால் கொல்லப் பட்டார்

பத்மநாதன் பாசறைக்குப் போன சேதி
பாவிகளின் செவிகளுக்கு எட்டிப் போக
உத்தமராம் மருமக்கள் இருவருக்கும்
உடன்பாடு இருக்குமென முடிவு கொண்டு

தூண்டிலிலே இரை குத்தி நீரில் போட்டால்
துள்ளிவந்து மீன் கெளவி மாட்டிச் கொள்ளும்
வேண்டியுள்ள வெற்றியும் கையில் சேரும்
விடை கிடைக்கும் சாதகமாய் புலிகள் வீழும்

என்றவிதம் எண்ணியது பகைவர் கூட்டம்
எண்ணியதை நிறைவேற்ற நன்மை தீமை
ஒன்றேனும் அறியாத உறவோர் தம்மை
உயிருறிஞ்சி வதை செய்ய உறுதி பூண்டார்

இனம் விற்றுப் பிழைக்கின்ற ஈனர் கூட்டம்
அருள் என்னும் மூத்தவனை இழுத்துச் சென்று
பிணம் தின்று பிழைக்கின்ற பேய்கள் போலும்
பிடித்துதா புலியை என பிய்த்து கொன்றார்

"காட்டுபுலி காட்டுபுலி" என்று கூறி
கட்டிய கைக்கட்டுடனே எங்கோவெல்லாம்
கூட்டியவர் சென்றார்கள் பயன்தான் இல்லை
கொன்றார்கள் இறுதியிலே எங்கோ வைத்து

அருளுக்கு நடந்ததென்ன அறியார் யாரும்
இருளுக்குள் நடப்பது போல் நடந்ததெல்லாம்
ஒருசிலதாம் வாரங்கள் சென்ற பின்னர்
உருவிழந்த ஒரு சடலம் காட்டில் கண்டார்

பிரப்பங்கா டென்றழைப்பர் அந்தப் பக்கம்
பிணம் ஒன்று கிடப்பதுவாய் சேதி கேட்டு
மரக்கின்ற மனத்தோடு சென்று பார்க்க
மணக்கின்ற அழகியதோர் சடலம் கண்டார்

அவனாய்தான் இருக்குமென முடிவெடுத்தார்
அடுத்தவர்கள் துணையோடு அவ்விடத்தே
சவமான அவ்வுடலில் எண்ணெய் ஊற்றி
சாம்பரென ஆக்கிய பின் வீடு வந்தார்

பூமணியில் புத்திரரின் ஒருவன் வாழ்வு
பொசுங்கிவிட இவ்வாறு அவர்கள் வீட்டில்
சாமணியின் ஒசையது அடங்கவில்லை
சதிகாரர் தீமைகளும் ஒடுங்கவில்லை

அடுத்தாண்டு தொண்ணூறில் அந்தோ மீண்டும்
அதிசிறப்புச் பயிற்சி பெற்ற சிப்பாய்ச்சேனை
அடுத்தவனாம் மாதவனைப் பிடித்துச் சென்றார்
அவன்மீண்டும் உயிரோடு மீள வில்லை

துப்பாக்கி முனைக்கத்தி துளைகள் போட்டு
துடித்த அவன் கைகளுக்கு விலங்கு மாட்டி
தப்பாக மானிடராய் பிறந்த மாக்கள்
தமதெண்ணப்படி யெல்லாம் தவிக்கவைத்தார்

எப்பாகத் தேஉடலில் காயமில்லை?
என்றுரைக்க முடியாத இரத்தமேனி
கைப்பாவை போலவனை வாட்டி ஆட்டி
கால் இழுக்க கால் இழுக்க அழைத்துச் செல்வார்

"புலியோடு உன்றனுக்கு தொடர்பு உண்டு
பொய்யுரைக்க வேண்டாம்நீ காட்டித்தாடா
பலியாடு ஆகிடுமுன் உண்மை சொல்லு
பயனில்லை மறைப்பதிலே" என்று வைதார்

தெரியாது என்பதுபதிலாய் சொன்னான்
தெருநீளம் வதைக்கையிலும் அதையே சொன்னான்
சரியாது செய்வதினி என்று கூறி
சரித்தார்கள் அவனுடலை மண்ணிற்றானே

மாமனவன் புலியாகப் போனதற்காய்
மருமக்கள் இருவர்பலி கொள்ளப்பட்டார்
ஆம்” இவர்கள் அநியாய மாகச் செத்தார்
அயுதத்தை தூக்காதே ஆவி விட்டார்

அம்பாறைக் காட்டினிலே பயிற்சி கொண்ட
அவர் மாமன் ஜெயந்தன் தன் செவிகள் மீது
அம்பாக இச்சேதி வந்து குத்தும்
ஆனாலும் அவனிதயம் இறுகிப்போகும்

வெஞ்சினமே கொளும் அந்த வேங்கை நெஞ்சு
வஞ்சகரைப் பழி வாங்கும் வெறிமேலேறும்
நஞ்சுடைய கழுத்தோடு வேளியே செல்லும்
நாளதனைஎதிர்பார்த்துக் காத்து நிற்கும்

அம்பாறை பயிற்சி முகாம் ஏழில் ஜெயந்தன்
அடுத்த கடன் முடித்திடவே துடித்து நிற்க
சம்புக்குட்டி பூசாரி ஜெயந்தன் றன்னை
சரியாக எடைபோடத் தவறிவிட்டார்

“இவனால இதுவெல்லாம் ஏலாதப்பா
எலும்பன் இவன் உடம்பினிலே ஏது சக்தி
அவனாக இயலாது என்று சொல்லி
ஆள்வருவான்” என்று வழிபார்த்து நின்றார்

தந்தையவர் எண்ணியதற் கெதிராய் அங்கே
தனையனவன் பயிற்சியிலே ஈடுபட்டான்
சிந்தையெல்லாம் நடந்தவைகள் தம்மை எண்ண
சினம்பொங்க கடும்பயிற்சிபெற்று வென்றான்

காட்டினிலே களப்பயிற்சி பெற்றுத் தேர்ந்து
களமடாப் புறப்படுமுன் சொந்த ஊரில்
வீட்டினிலே விழுந்தனவே இடிகள் மேலும்
விடியாத பொழுகள் போல் தொடர்துயர்கள்

கண்ஈறு பட்டதுபோல ஜெயந்தன் வாழ்வில்
கவலைகளே தொடர்கதையாம் அவைகள் மீண்டும்
தொண்ணூறில் நடந்திட்ட தொகைக் கொலைகள்
துன்பியலில் பங்கிவர்க்கும் கிடைத்தம்மா

அப்பனுக்கு அடுத்தவனாய் அவர்கள் வீட்டில்
ஆண் என்று அழைப்பதற்கு தகுதிபெற்ற
அப்பாவி சண்முகத்தை இழந்ததோடு
அவன் தங்கை புத்திரனும் தொலைந்துபோனான்

முறக்கொட்டாஞ்சேனையிலே முற்றுகையை
முன்னறிந்து சித்தாண்டி சென்றார் மக்கள்
அறங்கெட்ட அரசபடை அங்கும் வந்து
ஆலயத்து முன்றலுக்கு இட்டு வந்தார்

முகமூடித் தலையாட்டி முன்னர்விட்டு
முதியவரோ இளையவரோ பேதமின்றி
அகமறிய தொடர்பெதுவும் இலரைக்கூட
ஆட்டுகின்ற தலைஅசைவில் பிடித்துக் கொண்டார்

அஞ்சி யஞ்சி அவன்முன்னே இவர் நடக்க
ஆட்டுகிறான் தலையாட்டி விருப்பம்போல
நஞ்சனவன் செய்வினையால் நாசம் அந்தோ
நரபலிக்கு ஆள்சேர்த்தார் நாளதனில்

சம்புக்குட்டி மூத்தமகன் சண்முகத்தை
சதிகாரன் தலையாட்ட கைது செய்தார்
சம்புக்குட்டி மகள் செல்லம் ஈன்ற மைந்தன்
சுபேத்திரனும் ஆங்கவரால் கைது ஆனான்

சுபேந்தனும் விடுதலைப்போர் புலியேயாவான்
சூட்டியுள்ள அவன் பெயரோ மறவனாகும்
அவனன்று வீட்டினுக்கு வந்தவேளை
அரக்கரிவர் கைகளிலே சிக்கிப் போனான்

கைக்குண்டு அவனோடு இருக்கக் கண்டார்
கைது செய்ய வேறவர்க்கு என்ன வேண்டும்
வைக்கோலில் விழுந்துண்ணும் மாடு போலும்
வாய்த்ததொரு வேட்டையெனப் பற்றிக் கொண்டார்

மொத்தம் அன்று பதினான்கு பேரை அந்த
முகமூடி தலையாட்ட மூர்க்கர் பாய்ந்து
பித்தர்கள் போல் பிடித்திட்டார் பிடித்து கைகள்
பிணைத்திழுத்து வந்தாறு மூலை சென்றார்

❋ ❋ ❋

வந்தாறு மூலையிலே பல்கலை
வளாகத்தில் இவர்களினைப் போலும்
வந்திருந்தார் சிப்பாய்கள் சுற்றி
வளைப்பதனால் கைதிகளாய் பலபேர்

சித்தாண்டி முறக்கொட்டாஞ்சேனை
சிலபேரோ மாவடி வேம்பு
இத்தோடு வந்தாறு மூலை
என்றான நான்கூரைச் சேர்ந்தோர்

தெருவோரம் தம்வழியே போவோர்
தெரியாது வந்து அகப்பட்டோர்
ஒருபோதும் ஒரு தீங்கும் அறியார்
ஓரிருவர் வேறேதோ ஊரார்

எதிர்பாரா திவர்கையில் சிக்கி
என்னவிதி என்று மனம்விக்கி
எதிர்த்துரைக்க ஏதும் மொழியின்றி
ஏக்கமொடு நின்று விழித்தார்கள்

எல்லாமாய் நூற்றைம்பத் தேழு
ஏதிலிகள் நின்றார்கள் அங்கு
பொல்லாத இராணுவத்தின் முன்னே
புலம்பியழ முடியாது நின்றார்

அப்பொழுது எங்கிருந்தோ குண்டு
எறிகின்ற சத்தமது கேட்டு
சிப்பாய்கள் தமக்குள்ளே வெகுண்டு
சினந்தபடி அடுத்தமுடி வெடுத்தார்

கரத்தோடு கர மிணைத்துப் பிணைத்து
கைதிகளாய் நின்றவரைக் கட்டி
மரத்தோடு நிகர்த்த மனமதியர்
மந்தைகள் போல் சாய்க்கின்றார் வெளியே

நூற்றைம்பத் தேழு தமிழ் மக்கள்
நுவல வரும் வேதனைகள் தாங்கி
கூற்றுவனின் கயிறதனில் சிக்கி
கொலைக்களமே செல்லுகிறார்கள் பாவம்

மரித்தவரை புதைகின்ற மயானம்
மாவடி வேம்பிளுள்ள தாங்கே
சரித்தவரை அழிக்கும்முடி வோடு
சாக்களத்துக் கேசாய்த்துப் போனார்

கட்டிப்பிணைத்த கைகளொடு
கதிகலங்கிச் சென்றார்கள் உள்ளே
விட்டுத் தப்பி ஓடாத வகையில்
வியூகத்தை அமைந்தார்கள் சுற்றி

கூட்டமாகத் குவித்தவரை நிறுத்தி
குறிவைத்தார் துப்பாக்கி நீட்ட
வேட்டுவர்கள் கருத்துணர்ந்த மக்கள்
வேண்டாமே என்ற குரல் எடுத்தார்

கட்டிவைதத கைகளினைத் தூக்கி
கும்பிடவும் முடியாத நிலைமை
சுட்டார்கள் சுட்டார்கள் ஐயோ
சுருண்டார்கள் விழுந்தார்கள் பாவம்

வேட்டொலிகள் விடுவிடென எழவும்
வேண்டியழு வோரிட்ட கூச்சல்
கேட்டிடமோ காதகர்க்கு காதில்
கீழ் மக்கள் குலத்தொழிலைச் செய்தார்

சிலநிமிடத் துளிகளிலே ஆங்கு
செத்தவர்கள் குவியலெனக் கிடந்தார்
தலமதனில் தமிழிரத்தப் பெருக்கு
தருக்கருக்கோ தம் வினையால் செருக்கு

ஊர்முழுதும் ஒப்பாரி ஓலம்
உறவுகளைப் பிரிந்து அழும்கோலம்
சீருடையார் சிறீலங்காப் பேய்கள்
செய்கொடுமை யார் சகித்தல் கூடும்?

குவித்த பிணக் குவியலதில் கொடியோர்
கொள்ளிவைத்து எரித்தார்கள் அந்தோ
அவிந்த உடல் அங்கமெல்லாம் கருக
அடையாளம் தெரியாது போனார்

கருக்கியவர் சென்ற உடல் கண்டு
கதறியஅழு தார்மக்கள் நின்று
உருக்குலைந்த உடல்களிலே தமது
உறவுகளை அடையாளம் காணார்

நெருப்பினும் கொடியவர் அந்நீசர்
நிகழ்தியதை எண்ணில் மனம் வேகும்
தருக்கர் இவர் போலுளரோ இந்த
தரணியிலே இரத்தவெறி யோர்கள்

சண்முகமும் மருமகனும் அன்று
சங்கமித்தார் தீயினொடு வெந்து
கண்ணுடையர் கண்டு சகிப்பாரோ
கடவுளுக்கும் ஏற்ற செயலாமோ

பாசறையில் பயிற்சியிலே நின்ற
பத்மனுக்கும் சேதியிது எட்ட
பாசமுறு உறவுகளை யெண்ணி
பனித்த விழித்துளிகள் பொழிந்தனவே

அழுவதற்கும் மனம் விரும்பவில்லை
ஆறுதலோ அடைந்திடவுமில்லை
தொழுது நிற்கும் தமிழர் நிலைமாற்ற
துடித்தனவே துப்பாக்கிக் கைகள்

அம்பாறை பயிற்சி முகாம் ஏழு
அளித்து வரும் பயிற்சிகளோ நூறு
வெம்பாறையாய் உடலும் மனமும்
வீரமும் பக்குவங்கள் சேரும்

கடும்பயிற்சி பகலினிலே நடக்கும்
கற்பித்தல் இரவினிலே நடக்கும்
புடமிட்டார் பகலிரவாய் புதிய
புலிவீரர் புறப்படவே குகையால்

அன்றவர்க்குப் பொறுப்பாளர் மேஜர்
அன்ரனியின் அரசியல் வகுப்பில்
சென்றமர்ந்து செவிமடுத்த நாளில்
சிந்தனையில் விழுந்த தந்தவித்து


போராட்ட வரலாறு கற்றான்
போர்க்கருவி கையாளல் கற்றான்
போர்மறவர் தியாகங்கள் கற்றான்
போர்களத்து வியூகங்கள் கற்றான்

கற்ற பல பாடங்களில் நெஞ்சை
கௌவியது கரும்புலிகள் ஈகம்
தற்கொடையில் மூத்தபுலி மில்லர்
தனித்துவத்தை கேட்டுமனம் வியந்தான்

குறைந்த இழப்போடு பகை அழிக்கும்
குண்டணிந்த கரும்புலிகள் தியாகம்
நிறைந்த அவர் நெஞ்சுறுதி வீரம்
நிகரில்லா வீரம் எனக் கொண்டான்

கடற்புலிகள் கரும்புலிகள் பற்றிக்
கருத்துரைத்தல் கருத்தினையே ஈர்க்க
உடற்குண்டாய் தான்மாற வேண்டி
உள்ளத்தே உறுதியவன் பூண்டான்

❋ ❋ ❋



# இன்ப அதிர்ச்சிகள்

பயிற்சி முடிந்து ஜெயந்தன் - ஒரு
பண்பட்ட வீரனாய் எழுந்தான்
முயற்சி திருவினையாக்க - போரில்
முதல் தர வீரனாய் திகழ்ந்தான்

அப்பன் நினைத்தது போல - அவன்
அஞ்சி மிரண்டிடவில்லை
தப்ப நினைத்திட வில்லை - பின்னர்
தன் வழி மாற்றிடவில்லை

சுட்டபொன் ஒளிர்தல் போல - நெஞ்சில்
சுதந்திர தாகமே துலங்க
துட்டவை யாவையும் விடுத்தான் - மனத்
தூய்மையொடு பங்கெடுத்தான்

கற்றவை யாவையும் உணர்ந்து - தன்
கடமையில் முழுமையாய் கொணர்ந்து
மற்றவர் மெச்சிட நடந்தான் - புலி
மானத் தலைவனைத் தொடர்ந்தான்

வடக்கினில் போர்பணிக் கழைப்பு - அங்கு
வந்தது இவனுக்கும் களிப்பு
அடக்கமாய் ஆமெனச் சென்றான் - சென்ற
அணியிலே ஒருவனாய் நின்றான்

கடற்கலம் ஓட்டிடும் திறமை - முன்னர்
கொண்டவனாகையால் இவனும்
கடற்புறா அணியுடன் இணைந்து - டேவிட்
கட்டளையிற் பணி புரிந்தான்

இந்தியா செல்லுவான் வருவான் - புலி
இயக்கத்துக்கு பொருள் கொணர்வான்
தந்திரமாய் கலம் ஓட்டி - மீளத்
தரைவரும் இவன் நல்ல ஓட்டி

பயந்தவன் என்கின்ற பேச்சு - இவன்
பங்கிலே இல்லை யென்றாச்சு
ஜெயந்தனை இனங்கண்டு கொண்டார் - என்றும்
ஜெயம் இவன் பக்கமே என்றார்

அரும்பணி புரிந்திடும் நாளில் - முன்னர்
அம்பாறைப் பட்டறை ஏழில்
அரும்பிய ஆசையே மீண்டும் - நெஞ்சில்
அடிக்கடி தோன்றியே தூண்டும்

கரும்புலியாகிட வேண்டும் - அந்தக்
கடமையை நிறைவேற்ற வேண்டும்
விரும்பியே கரும்புலிப் பணியில் - கரு
வேங்கையாய் சேர்ந்தான் அவ்வணியில்

ஆழிக் கரும்புலி ஆனான் - தன்
ஆசையை நிறைவேற்றப் போனான்
ஊழிப் பிறவியின் பயனாய் - நாவாய்
உடைதிட மனம் துணிந்தவனாய்

எடித்தாரா கப்பலை மோதி - மீண்டும்
உடைத்திடும் திட்டத்தின் போது
துடித்தவன் தானேமுன் வந்தான் - ஜெயந்தன்
துணிவுடன் உறுதியும் தந்தான்

இரண்டாம் முறை இந்த முயற்சி - இதை
இயற்றிட வெற்றியாய் பயிற்சி
இரண்டு பேர்க் களித்தனர் பின்னர் - திட்டம்
இடம் பெறும் நாட்சில முன்னர்

கூட்டாகச் செயற்பட்ட விருந்த - இவன்
கூட்டாளி இயலாது வருந்த
தீட்டிய திட்டத்தை முடிக்க - ஆங்கு
தெரிவானான் சிதம்பரம் அடிக்க

கரையினில் தொடர்பினைக் கொண்டு - வழி
காட்டுதல் சிதம்பரம் தொண்டு
விரைவினில் வண்டியைக் கொண்டு - குண்டாய்
வெடிப்பது ஜெயந்தனின் தொண்டு

திட்டங்கள் திறமாக முடிந்தார் - மேலும்
தினமதை எதிர்பார்த்து இருந்தார்
கட்டளை யைப்பார்த்து நின்றார் - இரு
கரும்புலி மைந்தரும் ஒன்றாய்

துன்ப அதிர்ச்சியால் துவளா - மிகத்
துணிகரம் கொண்டவர் இவர்கள்
இன்ப அதிர்ச்சியைப் பெற்று - கண்கள்
இமைக்க மறந்தன சற்று

அண்ணன் முகம் தன்னைக் கண்டார் - நெஞ்சில்
அளவிலா ஆனந்தம் கொண்டார்
எண்ணில் நிறைந்தவத் தலைவன் - தம்
எதிர்வரக் கண்டே மலைத்தார்

கிழக்கின் கரும்புலி ஜெயந்தன் - மனம்
கிளர்ந்திட இன்னுமோர் அதிர்ச்சி
கிழக்கின் தளபதி கருணா - வரத்
கண்டது இரட்டிப்பு மகிழ்ச்சி

❊ ❊ ❊

தென் தமிழர் ஈழத்துக் களத்தின் - சேனை
 தளபதியாம் கருணாவும் அன்று
தன்பணிக்கு என்று வந்த இடத்தில் - ஈழ
 தலைமகனார் தந்த தொரு சேதி

உன்னகத்தப் பிள்ளைகளில் ஒருவன் - கப்பல்
 உடைத்தழிக்கத் கரும்புலியாய் போறான்
தன்னை உருவாக்கிட்ட உன்னை - உன்
 தம்பி காணில் மகிழ்ச்சி மிகக் கொள்வான்

என்றழைத்துத் தன்னுடனே சென்றான் - அந்த
 இளையவன் யார் எனக்கருணா அறியான்
வென்றழிக்கப் போகின்ற வீரன் - கரு
 வேங்கையவன் யார் என்று பார்த்தான்

அம்பாறையின் பயிற்சி முகாம்ஏழில் -இருந்த
 அப்பாவி ஜெயந்தன் இவனென்று
நம்பிடவும் முடியவில்லை ஆனால் -முன்னர்
 நடப்பதொன்றும் கனவில்லைத்தானே

தளபதியை தலைவனுடன் கண்டு -மனம்
 தாங்காத மகிழ்ச்சி கொண்டான் ஜெயந்தன்
உளமதிலே பேருவகை பொங்க - விரைந்
 தோடி வந்து அவனெதிரே நின்றான்

வியந்தவனாய் தளபதியும் நிற்க - இள
 வீரமகன் உணர்வுகளை அளக்க
ஜெயந்தனிவன் விளம்பிய அம்மொழிகள் - கருணா
 ஜென்மத்தில் மறக்க வொணாமொழிவாம்

"தென் தமிழர் ஈழ மண்ணில் நானே - முதல்
        தெரிவான கரும்புலியாய் ஆனேன்
என் கடமை சீரியதாய் முடிப்பேன் - அந்த
        எடித்தாராவை அடித்து முடிப்பேன்

பெறற்கரிய பேற்றினையான் பெற்றேன் -எனைப்
        பெற்றறெடுத்த மண்பெருமை காப்பேன்"
முறக்கொட்டாஞ்சேனை யீன்ற முத்து -தன்
        மூத்ததள பதி வியக்க மொழிந்தான்

அடுத்து நின்ற ஈழ மண்ணின் தலைவன் - இந்த
        அற்புதத்தை கண்டு உடல் சிலிர்ந்தான்
கொடுத்து வைத்தான் ஈழமகன் இவன்போல் - உயர்
        கொள்கையனைப் பிள்ளையெனப் பெறவே

என்றவன் தன் சிந்தையிலே எண்ணி - தன்
        இளநகையால் தம்பியரை வருடி
நன்று நன்று என்று மெச்சிக் கொண்டான் - அந்த
        நாயகரையே வியந்து நின்றான்

தட்டிக் கொடுத் திட்டான் அண்ணன் - அவர்
        தற்கொடையில் மேன்மையினைச் சொன்னான்
இட்டதெய்வம் முன்னிருந்து பேசில் - அதற்
        கிணையான இன்பம் வேறுண்டா


இருந்திட்டான் இவனோடு ஒன்றாய் - தன்
        இதயத்தால் இணைந்திட்டான் அன்பால்
விருந்திட்டான் சேர்ந்து உடன் புசித்தான் - இரு
        வேங்கைகளும் அண்ணனையே இரசித்தார்

அண்ணனவன் சிரித்திட்ட போதும் - அவன்
அகத்துள்ளே அவர்களுக்காய் அழுதான்
புண்ணியர்கள் இவர் ஈகத்தாலே - இந்தப்
புவி அறியும் தமிழர்களின் வீரம்

கொடையாகும் தம்பி இவராலே - புலிக்
கொடியாடும் உலகத்தின் முகட்டில்
விடை கொடுக்க வந்தாலும் தலைவன் - தன்
விழிகலங்க தடைபோடத் தவிக்க

அண்ணன் முகம் கண்ட தொன்றே போதும் - எம்
ஆவி உடல் அற்பம் எமக்காகும்
திண்ணமுடன் செயல் முடித்து வெல்வோம் - எனக்
திடமொழிகள் உரைத்தார் கரும்புலிகள்

❊❊❊



# அபித்தாவை நோக்கிய பயணம்

எதிர் பார்த்த அந்நாளும்
இறுதியிலே வரவே
எதிர்த்தலைகள் மீதந்த
எடித்தாரா வந்தாள்
எதிர்பாரா நிலையொன்று
ஏற்பட்ட தாங்கே
ஏது செய்வ தென்றிவர்கள்
ஏங்கியே நிற்க
குதித்தாடிப் போகின்றாள்
எடித்தாரா துறைக்குள்
கொதித்தபடி நிற்கிறார்
குறிதவறி போக
தொழிற் நுட்பக் கோளாறு
தோன்றிய தாலுடனே
தொழிற்படுத்த முடியாது
திணறினார் வினைஞர்
எடித்தாரா குறி தவறில்
இணையாக அதற்கு
இடித்தாழ்த்தல் வேண்டும்
இன்னுமொரு கப்பல்
அரக்கியாங்கு வருகின்றாள்
அபித்தா கடலரக்கி
சரக்கு நிறைத்து உப்பி
சாகரத்துள் ஆடி
எரிபொருளும் ஆயுதமும்
ஏந்திவரும் அவளை
எரித்திடும் முடிவெடுத்து
எல்லவரும் நிமிர்ந்தார்
விடிந்த மறு நாளினிலே
வீம்புடனே அபித்தா
தடித்த தன் உடல் மிதக்க
தாவியது கடல் மேல்

வல்வைக் கடல் தாண்டி
சக்கோட்டைப் பரப்பில்
வெல்லவர் யார்எனை என்ற
வீம்போடு நின்றாள்
தூண்டிலிட்ட கண்களுக்கு
மிதப்பினிலே கண்போல
தாண்டி நிற்கும் அபித்தாவில்
தற்கொடையோர் கண்ணாம்
உதைப் பொன்றைக் கொடுத்து
உடைத்துக் கடலடியில்
புதைத்து விடக் காத்திருந்த
புலிகள் முடிவெடுத்தார்
பகலினிலே சரக்கிறக்கும்
பணி முடித்து இரவில்
பயத்துடன் நடுக்கடலில்
படுத்திடுமாம் கப்பல்
தகவலினைக் கொடுப்பதற்கு
தமிழர்களைக் அழிப்பதற்கு
அகவலிமை கெடுப்பதற்கு
அநியாயம் புரிவதற்கு
கட்டளைகள் கொடுப்பதற்கு
கடற்காவல் செய்வதற்கு
நட்ட நடுக் கடனிலிலே
நாவாய்கள் நிற்பதுண்டு
எட்டப் போய் நின்ற தன்று
எடித்தாரா கப்பலது
முட்டப் போய் இடிக்கின்ற
முயற்சி பிழைத்திடலாம்.
நெடுத்தூர இலக்கதனில்
நிகழ்த்தாது தாக்குதலை
கிட்டவுள இலக்கான
கிடைத்தள்ள மறுகப்பல்
சக்கோட்டைக் கரையிருந்து
ஒன்பதாழிக்கல் தொலைவில்

மிக்கத் திமிருடனே
மிதந்து நின்ற அபித்தாவை
சக்கை வண்டி இடி கொடுத்து
சாகரத்துள் மூழ்கடித்தல்
தக்க செயல் என்றீழத்
தளபதிகள் முடிவெடுத்தார்
அத்தருனம் இயற்றிடவே
அவகாசம்பார்த்திருக்க
அத்தருணம் கிட்டிடவும்
அடுத்த செய லவர் தொடர்ந்தார்
பாதுகாப்புத் தந்து நின்ற
பக்கத் துணை டோறா
ஏது காரணமோா
எட்டப் போய் நின்றிடவும்
ஈதே தருணம் என்று
இறுதி முடிவெடுத்து
மோதிக் கலமுடைக்க
முன்னேறிச் செல்கின்றார்
இதிலொன்றைக் குறிப்பிடுதல்
இங்கே மிகப் பொருந்தும்
அதி வேகப் படகொன்றை
ஆயத்தம் செய்திருந்தார்
வெடிப்படகு என்பதனால்
வெறுமனே பழம் படகை
அடிப்பதற்கு எந்தலைவன்
அனுமதியோ கிடையாது
"தன்னுயிரை மதியாது
நற்கொடைக்குப் போகுமவன்
தன்னிலக்கை அடையும் முன்
தடையேதும் நிகழ்ந்து விடில்
என்னபயன் அதிலுண்டு
எனவேதான் எதுவரினும்
என்னவிலை என்றாலும்
இயற்றும் இப் பணிகளுக்கு

உச்ச வலுக் கொண்ட
உபகரணம் பாவிப்பீர்
மிச்சம் பிடிப்பதிலே
மிஞ்சாது பயனேதும்
துச்சமெனத் தன்னுடலை
தூளாக்கும் தற்கொடையை
கொச்சைப் படுத்துவாய்
குறை நிகழக் கூடாது
உபகரணம் பெரிதது போல்
உயிரும் பெரிதன்றோ?"
உத்தரவு இதனை முன்
உயர் தலைவன் இட்டுள்ளான்
தலைவனவன் மொழியதற்கே
தலைவணங்கும் தம்பியர்கள்
விலையில் உயர்ந்ததொரு
விசைப்படகை தெரிந்தெடுத்தார்
புலிவீரர் வசமுள்ள
புயல் வேகப் படகு அது
பலி கொள்ள அபித்தாவை
பாவிக்க தெரிவு செய்யதார்
கடல்வேங்கை வீரரிடம்
கைவசத்தே இருத்தவற்றில்
கறுப்புப் படகென்றால்
காற்றினுக்கு நிகர் வேகம்
கடல்மீது அது செல்லும்
காட்சி கண்கொள்ளாது
கடல்மீது செல்கிறதா
காற்றினிலே பறக்கிறதா
எத்துகடல் மேலால்
எகிறிப் பாய்ந்து செயும்
வித்தை போல் தோன்றும்
விரைந்து அது செல்கில்
அத்தனை விரைவான
அற்புதப் படகதனை

அபித்தாவை நொருக்கிட
ஆயத்தம் செய்திருந்தார்
நள்ளிரவு தாண்டிற்று
நடவடிக்கை தொடங்கிற்று
வெள்ளிகள் விண்ணிருந்து
விழி சிமிட்டிப் பார்த்திருக்க
தள்ளினார் விசைப் படகை
தாக்கிட இலக்கினையே
கள்ளிருக்கும் மலரதனை
கண்ட இரு வண்டுகள் போல்
துள்ளிக் குதித்தார்கள்
ஜெயந்தனும் சிதம்பரமும்
பக்கத்தே நிற்பவரைப்
பார்த்துச் சிரித்தார்கள்
படைத்தலைவர் நால்வர்
பயிற்சி கொடுத்தவர்கள்
பாசறைத் தோழர்களை
பாசமொடு பார்த்தார்கள்
படகு உறுமியது
பறந்தது கடலூடே
கைதூக்கி அசைக்கும் முன்
கண்ணின்று விலகியது
விடை கொடுத்து விளம்பிடுமுன்
விசைப்படகு மறைந்தது
கருமிருட்டில் புள்ளிகளாய்
கரும்புலிகள் கரைந்து
கருமம் இயற்றிடவே
கடுகதியில் விரைகின்றார்
கடாபியின் தலைமையிலே
காவலுக்கு முப்பிரிவாய்
விடாது தொடர்ந்து
வியூகமாய் சென்றார்கள்
வெடிகுண்டுப் படகு அது
இலக்கடைய முன்னர்
தடை வருகில் எதிரியினால்
தடுப்பதற்கு வகையாய்

ஒரு படகில் கடாபி செல்ல
மறுபடகில் நரேஸ் இன்னும்
ஒருபடகில் திலீப் செல்லல்
திட்டமது போல
அபித்தாவை அழித்திட
அணியொன்று சென்றது
கரையினிலே தளபதிகள்
கருணாவும் சொர்ணமும்
திரையிட நீர் விழியில்
தளபதி சூசையும்
விரைந்தேகும் கலங்களிலே
விழி வைத்து நின்றார்கள்
குரைகடலில் நின்றெழுந்து
குளிர் காற்று குத்தியது
சிரித்தபடி செல்லுகின்றார்
சிதம்பரமும் ஜெயந்தனும்
மரித்திடப் போகின்ற
மரணபயம் அறியாராய்
எரிந்திடப் போவதென்னே
இளநகையே முகங்களிலே
ஆழித்தாய் அவர்களினை
அரவணைக்கக் காத்தபடி
ஊழித் தாண்டவமாடி
ஓசை எறிந் தார்ப்பரித்தாள்
அபித்தா கப்பலிலே
அமைந்துள்ள ரேடாரில்
ஆபத்து வருவது போல்
அறிகுறிகள் தோன்றிடவும்
அடுத்த கப்பலுக்கு
அவசரமாய் தொடர்பெடுத்து
கொடுத்தான் இலக்கேதோ
கடிது வருகுதென்று
கேடு வரும் பின்னே மதி
கெட்டு வரும் முன்னென்று
கூறி வைத்த மொழி போல
கூறியவன் குரல் மீண்டும்

கூறியதைப் பின் மறுத்து
கூறினான் இலாவகமாய்
"இலக்கெதுவும் எமை நோக்கி
இடிக்க வரவில்லை
கலக்கமுறத் தேவையில்லை
கடற்பறவைக் கூட்டமது
அவசரமாய் வரவேண்டாம்
ஆறுதலாய் வா அன்றேல்
அவ்விடத்தே நில்" என்று
ஆணை பிறப்பித்தான்
இத்தனை வேகமுடன்
எமை இடிக்க வருவதற்கு
அத்தனை விசைப் படகு
ஏது புலிகளிடம்
என இளப்ப மாயெண்ணி
இந்த முடிவெடுத்தான்
எட்டு கடல் மைல்கள்
எட்டி விட்ட பின்னாலே
"எட்டிவிட்டோம் இலக்கை"யென்று
இயம்புகிறான் சிதம்பரம்
"முட்டுங்கோ போயெ"ன்று
முடுக்கிவிடக் கரையிருந்தோர்
உச்சவலு வேகத்தில்
ஓடம் உடன் ஓடியது
தமை இடிக்க வருகிறது
தாவிக் கடல் மீது
எமப்படகு அதுவென்று
இனங்காணும் முன்னாலே
இமைப் பொழுதில் இடியொன்று
இறக்கிடவும் அபித்தாவில்
சமுத்திரமே கலங்கியது
சாவொலிகள் கிளப்பினவே.

❋ ❋ ❋

நிலை தெரிந்ததும் நிழல் தெரிந்ததும்
அலை கிழித்ததும் படகினால்
உலை கொதித்திடும் உணர் வெழுந்தது
சிலை விடுத்திடும் கணையென

புலிப்படகதும் புகுந்திடிக்கவும்
புதை குழிக்கதும் புகத் தொடங்கிட
பலிப் படகென அபித்தா மூழ்கவும்
பதைபதைத்தனர் பகைப்படையினர்

இலக்கடைந்ததும் இடி இடித்ததும்
முழக்கெழுந்தது முழுக் கடலிலும்
நிலக்கரையிலே நின்று கண்டவர்
நிகழ்திருப்பது வெற்றியென்றனர்

ஆழி நடுவிலே அனல் எழுந்தது
ஊழி நடனமே ஒன்று நிகழவும்
வாழி என்றனர் வாழ்த்துரைத்தனர்
தோழர் ஊனுடல்தொலைந்து கரையவே

ஒளி தெரிந்தது உதயம் போலவே
பலி நிகழ்ந்தது பரவை நடுவிலே
விழி சொரிந்தது வீரவேங்கையர்
விதையதாகியே விழுந்த வினையினால்

நடுக்கடலிலே பருதி உதயமோ
நடுக்கடைந்தது உதையின் அதிர்விலே
திடுக்கடைந்தனர் திமிரில் நின்றவர்
திரைகடலிலே திரிந்து அலறினர்

அபித்தா ஆழியில் ஆழக் தொடங்கவே
தவித்தார் இருந்தவர் இறந்தோர் போகவே
குவித்தார் கைகளை கும்பிட்டழுதனர்
செபித்தார் அபயமே அபயம் என்றனர்

ஒட்டை விழுந்திட உரிய இடத்திலே
கோட்டை உடைந்ததாய் குரல்கள் எழுந்தன
சேட்டை விட்டவர் செத்து மிதந்திட
சேடமிழுத்தது மீதம் பேருக்கு

மின்னல் அடித்தாய் மிக விரைவிலே
எண்ண நினைக்குமுன் எல்லாம் முடிந்தது
அன்னை கடலவள் கரிய புலிகளை
தன்னுள் அணைத்தனள் தன்னோடிணைத்தனள்

❋ ❋ ❋

எட்ட நின்ற எடித்தாரா
எட்டி ஓடிற்று - தனையும்
முட்ட வரு வாரோ என்று
மூச்சு முட்டிற்று

பட்ட அடி மறக்கவில்லை
பழைய அனுபவம் - அதனால்
கிட்ட நின்றால் கேடு என்று
கிலி கொண்டோடிற்று

அண்டைக் கடற்பரப்பிலே
ஆயு தத்துடன் - நின்ற
சண்டைக் கப்பல் யாவும்
சன்னங் கள்பொழிந்தன

தாக்கவந்த இலக்கதனை
தாக்கி விட்டதால் - புலிகள்
தீக்கணைகள் உமிழ்ந்தபடி
திரும்பினார் கரைக்கு

கரும்புலிகள் படகினுக்கு
காவல் சென்றவர் - கடாபி
திரும்பிடுவோம் என்றதுமே
திரும்பினார் கரைக்கு

❋ ❋ ❋

மூழ்குது கப்பலென்றும்
முடிவு நெருங்குதென்றும்
ஆழ்கடல் அடியை நோக்கி
அபித்தா தாழுதென்றும்

உதவி உதவி என்றும்
ஓலமிட்டழ அவர்க்கு
உதவிக்கரம் கொடுக்க
ஓடின துணைக்கலன்கள்

செத்தவர்கள் பலபேராம்
சிதைந்தவுடல் பல பத்தாம்
வைத்திருந்த பொருள்யாவும்
வாரிதியுள் மூழ்கிடவும்

அத்தனையும் போச்சு தென்று
அலறிக் குரல் கொடுத்தார்
கத்திப்பதைத் தேஅழுதார்
காத்திட வாரும் என்று

ஓடி வந்தார் மற்றவர்கள்
ஓட்டை விழுந்தே கடலில்
ஆடி இறங்குகின்ற
அபித்தாவைக் கண்டார்கள்

அகற்றினர் அனைவரையும்
அபித்தாவின் சுமை நீக்கி
மிகத் துரித பணியாற்றி
மிதக்கவும் வைத்தார்கள்

அடிபட்ட பொழுது முதல்
அடுத்த நாள் மாலை வரை
நொடி சொட்டும் ஓய்வின்றி
நோவுநித் திரை யின்றி

ஆட்பலமும் அதி நவீன
ஆயுதங்கள் தொழில் நுட்பம்
மீட்புப் பணி செய்து
மிதந்திட வைத்தார்கள்

முட்டிய அபித்தாவை
மூழ்காது காப்பாற்றி
கட்டியிழுத்தார்கள்
கரை சேர்த்தார் ஒருவாறு

அத்தோடு முடிந்திற்று
அபித்தாவின் வரலாறு
சத்திழந்த வெறும் கூடாய்
சமுத்திரத்தில் கழித்தார்கள்

இத்தோடு போதுமென்று
இருப்பாரோ கரும்புலிகள்
செத்தழிக்கும் செயல் மறவர்
சீற்றமது தனியாது

கலங்கள் எமதீழக்
கடற்பரப்பில் வருவதற்கு
கலங்கிப் பின் நிற்கும்
கதை இன்னும் தொடர்கின்றது

வென்று வினை முடிந்து
விதையாய் போன இளங்
கன்றுகளாம் கரும்புலிகள்
சிதம்பரம், ஜெயந்தன்

அடிப்போம் இலக்கதனை
அழிப்போம் என ஆர்த்து
முடிப்போம் என்றபடி
முடித்தார் தம் கடனை

என்றும் மறந்திடுமா
இவரை இவ்வுலகம்
நின்று நிலைத்திடுவர்
நெஞ்சுகளில் எஞ்ஞான்றும்

அன்று ஜெயந்தன் தன்
அன்புத் தளபதிக்கு
குன்றா வீரமுடன்
கூறிய வார்த்தைகளை

கருணா மறக்கவில்லை
கருத்தால் இழக்கவில்லை
தருணம் பார்த்திருந்து
தக்க விதம் செய்தான்

தென் தமிழ் ஈழத்தில்
"முதற் கரும்புலி நானே
என் கடன் சீராக
இயற்றுவன் என்னுடைய

மண்ணதின் பெருமைக்கு
மாசு விளையா"தென்று
சொன்னதின் படி செய்த
ஜெயந்தனை மறக்கிலன்

கன்றென நின்றவன் பின்
கரும்புலி வடிவாகி
சென்று வெடித்திட்ட
செய்கையைக் கண்டதின் பின்

நன்றிக் கடனதுவாய்
நானென்ன செய்திடுவேன்
என்றவன் சிந்தித்து
ஏற்ற பதில் கண்டான்

மட்டு அம்பாறை
மறவர் புலி அணிக்கு
இட்டு அவன் பெயரை
இயங்க முடிவெடுத்தான்

எண்ணமிதைச் செயற்படுத்த
ஏற்றதொரு நன்னாளில்
அண்ணணிடம் சமர்ப்பித்தான்
அனுமதியும் கிட்டியது

ஜெயந்தன் படையணியில்
ஜெயந்தன் வாழ்கின்றான்
ஜெயம் தான் அது சேர்க்கும்
ஜெயமின்றி வேறில்லை

வல்லைச் சிதம்பரமாம்
வடக்கின் கரும்புலியும்
நெல்லைச் சொரிகின்ற
நிகரில் கிழக்கிலங்கை

செல்வன் ஜெயந்தனும்
சேர்ந்து கொடுத்த அடி
வெல்வர் புலிகளென்ற
வரலாற்றை விளம்பிடுது

படற்கரிய துயர் தமிழன்
பட்ட அக்காலத்தில்
கடற்கரிய புலிச்சேனை
கட்டமைப்புச் தோன்றிற்று

கடற்புறா உருவாகி
கடற்புலியாய் பரிணமித்து
கடற்கரிய புலியாகி
கதையிங்கு தொடர்கிறது

கலமுடைத்தார் முதன் முதலில்
காந்தரூபன், வினோத், கொலின்ஸ்
பலமுடைத்த படையாக
பரிணமித்தார் பின்னாளில்

இரண்டாம் அடி கடலில்
இவரிடித்தார் அபித்தாவில்
மிரண்ட கடற்படைக்கு
மிக வச்சம் இந்நாளில்

திரண்ட தமிழ் மறவர்
தியாகம் தனை வியந்து
உருண்டை உலகெங்கும்
உச்சரிக்கு திவர் பெயரே

❋ ❋ ❋

# மேஜர் வரதன் கரும்புலித்தாக்குதல்

கொந்தளிக்கும் ஆழ்கடலில்
கொக்கரிந்த அபித்தாவை
கந்தகத்தால் வெடித்தழித்து
கரும்புலிகளானவர்கள்
சிதம்பரத்தின் ஜெயந்தனின்
செயற்கரிய ஈகத்தை
நிரத்தரமாய் நினைவிருத்தி
நெஞ்சத்தால் பூஜிப்போம்

கிழக்கிலே இருந்து வந்து
கிளாலிக் கடற்பரப்பில்
முழக்கியே வெடிக்குண்டை
மூழ்கடித்துப் படகுகளை
வரலாற்றுச் சாதனையை
வழங்கிய மட்டுநகர்
வரதனை மதனை அவர்
வரலாற்றை இனிக் காண்போம்

❋ ❋ ❋

இந்த நாடு எல்லவர்க்கும்
சொந்த நாடு என்பவர்
இந்த நாட்டில் தமிழனுக்கு
ஏது உரிமை என்கின்றார்
வந்த சாதி தமிழரென்று
வரலாற்றை மாற்றினார்
தந்து நூறு தொல்லைகளை
தமிழர் தம்மை வருத்தினார்

தடைகளாலே தமிழர் தம்மை
தவித்து நிற்கச் செய்குவார்
உடைத்தெறிந்து உடமைகளை
உயிர்க் கொலையும் செய்குவார்
படை திரட்டி வந்து ஐயோ
பாதகங்கள் செய்குவார்
கடை நிலைக்கு தள்ளித்தமிழர்
கவலையுறச் செய்குவார்

உண்ணும் உணவைத் தானும் பெற
உடன் படாது தடுப்பவர்
மன்னுயிரைக் காக்கும் மருந்தும்
மறுத்திடுவர் கொடுத்திட
எண்ணெய்எரி பொருளைக் கூட
எடுத்துச் செல்ல மறுத்தனர்
கண்ணுக்கிணையான கல்வி
கற்றிடாது கெடுத்தனர்

இருட்டில் ஈழத் தமிழர் வாழ
இன்னல் பல கொடுத்தனர்
விரட்டிடவும் வீட்டை விட்டு
விமானக்குண்டு சொரிந்தனர்
மிரட்டி ஆண்டு தமிழர் தம்மை
மிதியடியாய் கணித்தனர்
குருட்டுத்தனமானஆட்சிக்
கொள்கையாலே வதைத்தனர்

ஊர் இருந்து ஊர்கள் செல்ல
உள்ள வழியை மறித்தனர்
வேரிருக்கும் ஊரைக் நாடி
விரையும் பேரைக் தடுத்தனர்
காரிருளில் கண்ணை மூடிக்
கட்டி விட்ட நிலையிலே
யாரிருந்தும் என்ன பயன்
யாது செய்வதறிகிலார்

கண்டி வீதி தனை மறித்துக்
காப்பரண்கள் போட்டனர்
பண்டு ஆனையிறவு தாண்டும்
பாதை யினையும் மூடினர்
குண்டு விசிக் கொன்ற போதும்
கொடியர் நிறைவு கொண்டிலர்
குண்டும் குழியுமான வழியில்
குறுக்கே நின்று தடுத்தனர்

ஆனையிறவு போகில் என்ன
அடுத்து மார்க்கம் இல்லையோ
ஏனை புதிய வழிகள் தேடி
எப்படியும் செல்லுவோம்
வானை முட்டுந் துயர் வரினும்
வதங்கிடா தோர் சிங்கள
சேனையில்லா வழிகள் தேடி
செய்தனர்தம் பயணங்கள்

கொம்படியால் ஊரியானால்
குழிகள் சகதி வழிகளால்
தம்முடைய தேவை கருதி
தவழ்ந்தும் நடத்தும் சென்றனர்
பொம்பரடியும் செல்லடியும்
பொழிந்தபோதும் தங்களின்
நம்பிக்கை இழந்திடாராய்
நடந்து கடந்து ஏகினர்

மாரி வெள்ளம் போடும் போதும்
மாரளவு நீரிலும்
ஊரியானில் உள்ள குழிகள்
உள்விழுந்தும் எழும்புவர்
பாரிய தம் சுமைகளோடும்
பயத்தினோடும் பயணித்து
காரியங்களாற்றத் தமிழன்
கண்ட இன்னல் கொஞ்சமோ

சங்குப்பிட்டி கேரதீவு
சகல வழியும் மூடினார்
எங்கும் போகப் பாதையின்றி
எலிப் பொறியுள் மாட்டினார்
இங்கு தமிழன் இருக்கும் மண்ணில்
இன்னோரன்ன தடைகளால்
தங்கள் காலில் சரணடையத்
தக்கதாக நடத்தினார்

காட்டுத் தீயும் கடற்பெருக்கும்
கண்டே தமிழன் வளர்ந்தவன்
சூட்டுச் குழலுக் கஞ்சி இனியும்
சொறணை கெட்டுப் போவானோ?
நாட்டை மீட்கும் பணியதற்காய்
நஞ்சை அமுதாய் உண்பவன்
கேட்டை விதைக்கும் இவர்க்கு அஞ்சி
கீழ்மையுற்றுப் போவானோ?

ஆழியூடே பயணம் செய்ய
ஆரம்பித்தான் மீண்டுமே
வேலியில்லா பாதையதுவே
வீங்கும் அலைகள் மீதிலே
நாழிகைகள் பல தொடர்ந்தும்
நள்ளிரவு வேளையில்
கிளாலியிருந்து அல்லிப்பளை
கரையடைந்து ஏகினான்

கடல் கடந்து பயணம் செய்தல்
கடுமையான குற்றமாம்
தடையிதனை மீறில் கடும்
தண்டனைகள் தருவாராம்
மடல் விடுத்தார் பல வழியில்
மக்களிதனை ஏற்பாரோ
உடல்நடுங்கும் ஊதல் காற்றில்
உதறலோடு பயணித்தார்

நள்ளிரவு நடுக்கடலில்
நாவாய்க் கூட்ட அணி செலும்
வெள்ளி திசைகள் காட்டிநிற்க
விரையும் அவை கடலிலே
தள்ளித் தெரியும் நாகதேவன்
துறையும் ஆனையிறவுமே
கொள்ளிவாய்கள் கொண்ட பேய்கள்
கோலம் முகாம் விளக்குகள்

துள்ளிப்பாய்ந்து வந்து செல்லும்
தோணிகளில் மீன் விழும்
உள்ளிருக்கும் பயணிகளின்
உளம் மகிழும் இவைகளால்
தள்ளிச் செல்லும் நீரின் ஓட்டம்
தனிச்சுகமே ஊட்டிடும்
சொல்லிச் சொல்லி வியக்க ஏற்ற
சூழல் கொண்ட பயணமாம்

காற்று வீசும் கடும் மழையும்
கல்லெறி போல் பொழிந்திடும்
கீற்றாய் மின்னல் வெட்டுகையில்
கிளாலி கடலில் கிலியெழும்
கூற்றுவனின் குகையினுக்கோ
கொண்டு போறார் எமையென
சாற்றுவார்கள் ஓடங்களில்
சேர்ந்திருக்கும் பயணிகள்


ஆடி அசையும் போது வள்ளம்
ஆடும் யாவர் உள்ளமும்
கூடிக் கூச்சல் போட்டு மக்கள்
கூப்பிடுவார் கடவுளை
மூடி அலைகள் மேலெழவும்
மூழ்கும் நிலையில் கலங்குவார்
கோடித்துயர்கள் வந்த போதும்
குமுறு கடலில் ஏகினார்

தடைகள் ஏதும் தமிழர் வாழ்வை
தடுக்கப் போவதில்லையே
விடைகள் கண்டு எதையும் வெல்லும்
விறல் படைத்த தமிழர்கள்
படைகள் வந்து பயங் கொடுத்தும்
பணியப் போவதில்லையாம்
குடை பிடித்த கொடியர் ஆட்சிக்
கொலைஞர் கண்டு குமுறினார்

நூறு தடைகள் போட்ட போதும்
நுடங்கிடாத தமிழரை
வேறு வழியிற் வெருட்டி அவரின்
வேகம் தணிக்க நினைத்தனர்
ஊறு செய்து நடுக்கடலில்
உயிர் குடித்து நெருக்கிடில்
நாறுமுடலாய் அலை சுமக்கில்
நமக்கு அச்சம் கொள்ளுவார்

ஆவி குடிக்கும் சாதனையில்
அகிலப் புகழைப் பெற்றவர்
காவியுடைகள் ஆசி பெற்ற
காக்கிச் சட்டை வெறியர்கள்
தாவி அலைகள் மீதில் வந்து
தமிழர் தலைகள் கொய்திட
சாவின் தூதராக எழுந்து
சமுத்திரத்தில் இறங்கினார்

❋ ❋ ❋



அலைகடல் தாண்டிச் சென்றார் - இன்னல்
ஆயிரம் தாங்கிச் சென்றார்

நோய்க்கு மருந்து செய்ய - உழைக்கும்
நோக்குடன் வேறூர் செல்ல
தாயினைப் பார்த்து மீள - குடும்பத்
தலைவனைச் சென்று காண
ஓய்வினைப் பெற்ற பின்னும் - தமக்கு
உரியவை இன்னும் கிட்டா
ஆய்வினைச் செய்து சிக்கல் - அதற்கு
ஆகிய வேலை பார்க்க
அலைகடல் தாண்டிச் சென்றார் - இன்னல்
ஆயிரம் தாங்கிச் சென்றார்

பட்டம் பெறப் படிக்க - தனது
படிப்புக்கு வேலை தேட
கட்டிய மனைவி மக்கள் - தம்மை
கண்டுள மகிழ்ச்சி கொள்ள
தேர்வுக்கு பரீட்சை செய்ய - பெற்ற
தெரிவினில் பதவி ஏற்க
நேர்த்தியின் கடன் முடிக்க - தங்கள்
நேசரைப் பார்த்துப் பேச
அலைகடல் தாண்டிச் சென்றார் - இன்னல்
ஆயிரம் தாங்கிச் சென்றார்.

ஊரினைப் பார்ப்பதற்கும் - தங்கள்
உறவினைக் காண்பதற்கும்
ஆரினைப் பிடித் தென்றாலும் - வெளியூர்
அலுவல்கள் செய்வதற்கும்
ஏஜென்சிக் காரன் இன்னும் - தம்மை
ஏய்ப்பதை அறிவதற்கும்
ஏஜென்சிக் காரனோடு - மகனை
ஏற்றியே அனுப்புதற்கும்
அலைகடல் தாண்டிச் சென்றார் - இன்னல்
ஆயிரம் தாங்கிச் சென்றார்.

குத்தகைக் காசு வாங்க - கடனாய்
கொடுத்ததை மீள வாங்க
சொத்தினை அளந்து பார்க்க - இன்னும்
சோகத்தில் கலந்து கொள்ள
உத்தம நண்பன் வீட்டு - விழாவில்
உரிமையைய் இணைந்து கொள்ள
பத்தாம் நாள் திருவிழாவில் - தமக்கும்
பங்கென்ற உரிமை நாட்ட
அலைகடல் தாண்டிச் சென்றார் - இன்னல்
ஆயிரம் தாங்கிச் சென்றார்.

நிலைமையை எடுத்துச் சொல்லி - இவண்
நிகழ்வுகள் விளக்கிச் சொல்ல
தொலைபேசி ஊடே பேசி - காசு
தொகையாக கேட்டு வாங்க
சீதனக் காசு வேண்டும் - தங்கைக்கு
சீர்களும் செய்ய வேண்டும்
தா பணம் என்று தங்கள் -சொந்த
தம்பியைக் கேட்பதற்கும்
அலைகடல் தாண்டிச் சென்றார் - இன்னல்
ஆயிரம் தாங்கிச் சென்றார்.

பெற்றவள் குமரிருக்க - அவர்க்கு
பொருத்தமாய் துணை எடுக்க
உற்றவர் தம்மைக் கண்டு - உரிய
ஒழுங்குகள் ஏதும் செய்ய
தொலைநாட்டில் இருப்போரோடு - தாங்கள்
தொலைபேசி தொடர்பு கொள்ள
விலைபேசி உள்ள மகன் - பெண்ணை
விசா வெடுத்தனுப்பி வைக்க
அலைகடல் தாண்டிச் சென்றார் - இன்னல்
ஆயிரம் தாங்கிச் சென்றார்.

பெண்ணொன்று பார்த்துப் போட்டோம் - உரிய
பேரங்கள் பேசிப் போட்டோம்
கண்ணுக்கும் குளிர்ச்சியான - நகை
காசோடு காணியுள்ளாள்
மண்ணுக்கோ வர வேண்டா நீ -மண
மகளங்கு "பிளைற்றில்" வருவாள்
என்பதை அறியத் தந்து - அவளை
"எயார்போட்" டில் ஏற்கச் செய்ய
அலைகடல் தாண்டிச் சென்றார் - இன்னல்
ஆயிரம் தாங்கிச் சென்றார்.

கனகாலம் கனடா வாழ்ந்த -பிள்ளை
கப்பலால் கொழும்பு வந்தான்
இனத்தாரைக் காண ஆசை - ஆனால்
இவன் வந்தால் மீளல் கஷ்டம்
எனவே தான் பிள்ளை ஆங்கு - லொட்ஜில்
இருக்கிறான் அவனைக் காண
மனதார ஆவல் பொங்க - அந்த
மைந்தனைக் கண்டு மீள
அலைகடல் தாண்டிச் சென்றார் - இன்னல்
ஆயிரம் தாங்கிச் சென்றார்.

இப்படி நூறு நூறாய் - தேவை
இருப்பதால் யாழின் மக்கள்
எப்படி இடர்வந்தாலும் - துணிந்து
ஏற்றவர் பயணம் செய்தார்
அப்படி அவர்கள் செய்த - அந்த
அலைகடற் பயணம் தன்னில்
செப்பிட முடியாத் துன்பம் - செய்ய
சிறுமதியாளர் வந்தார்
அலைகடல் தாண்டிச் சென்றார் - இன்னல்
ஆயிரம் தாங்கிச் சென்றார்.

❊ ❊ ❊

நாகதேவன் துறையிருந்து
நாய்கள் போலும் வந்தனர்
வேகமாக வந்து கொலை
வெறிகளாடத் துணிந்தனர்
பாவமேதும் அறிந்திடாத
பயணிகளை வெட்டியே
சாகடித்து சமுத்திரத்தில்
தூக்கி எறிந்து சென்றனர்
நடுக்கடலில் வழிமறித்து
நரபலிகள் கொண்டனர்
படகுகளைக் கட்டியிழுத்து
பாசறைக்குச் சென்றனர்
திடுக்கிடும்வன்செயல்களோடு
திமிர் பிடித்து ஆடினர்
வெடித் துவக்கு வேட்டினாலே
வேதனைகுள்ளாக்கினர்
பெண்களாண்கள் பெரியர் சிறியர்
பேதமின்றி மக்களை
தங்கள் எண்ணம் போல வெட்டி
தறித்துக் கடலில் வீசினர்
நட்ட நடு ஆழக்கடலில்
நடக்கும் இந்தக் கொடுமையை
தட்டிக் கேட்போர் எவரோ என்ற
துணிவு கொண்டு புரிந்தனர்
மின்னல் வேகப் படகு வந்து
மோதும் மக்கள் படகினை
மின்னும் வாள்கள் வீசும் மக்கள்
மேனி விழம் துண்டென
சுடுகலன்கள் சன்னம் ஏந்தி
சுருண்டு வீழ்வர் பயணிகள்


ஒட்டியற்ற ஓடம் மிதந்தது
ஓடும் பிணங்கள் சுமையுடன்
நாட்டை மீட்க பிறந்த தலைவன்
நடக்கும் இவைகள் கண்டனன்
வேட்டை நரிகள் தம்மை அழிக்க
விரைக என்று பணித்தனன்
கேட்டை நிறுத்த நடவடிக்கை
கெதியில் எடுங்கள் என்றனன்
ஆட்டம் போடும் அரக்கர்தம்மை
அடித்து நொருக்கும் என்றனன்
மீட்புக் கடமை ஆற்றல் எங்கள்
மிகப்பெரிய கடமையாம்
சேட்டை செய்யும் செறுநர் கடலில்
செத்து மடியச் செய்குவீர்
கடற்புலிகள் தமக்குரிய
கடமை இதனை ஏற்றனர்
அடரிருட்டில் அரண்கள் போலும்
அணிகளாக அலைந்தனர்
பயணிப்படகு செல்லும் வேளை
பாதுகாப்புப் பணிக்கென
பரவை மீது கடற்புலிகள்
பக்கம் இரண்டும் காவலாம்
இரவு இருட்டில் வரும்பகையை
இடை மறித்துக் தடுப்பதும்
இடித்துடைத்து அவர்களணியை
இல்லையெற்று செய்வதும்
கடமை என்று அண்ணன் சொன்ன
கடனையை ஏற்றனர்
கரிய கடற்புலிகள் தமது
கருமாற்றத் தொடங்கினர்

வரும்பகைவன் தனை இடித்து
வள்ளத்தோடும் ஆழ்த்திட
ஆழிப்புலிகள் ஆர்ப்பரித்து
அவர்பணியைச் தொடர்ந்தனர்
தன்னையீந்து தற்கொடையால்
தமிழினத்தைக் காத்திடு
தானை கூட ஆணை ஏற்று
தன்கடனைக் தொடங்கிற்று
அன்னவரில் வரதன் மதன்
ஆனகரிய புலிகளும்
ஆர்வமோடு கடனியற்ற
ஆணையேற்றுச் சென்றனர்
மட்டு நகர் தந்த இரு
மைந்தரான கரும்புலி
மறவர் மதன், வரதன் கதையை
மக்களறியக் கூறுவோம்

❋ ❋ ❋



# கடற் கரும்புலி மேஜர் வரதன் / நிலவன்



வரதன் எனுமோர் வரிப்புலி வீரன்
வந்து பிறந்ததுவும் - அவன்
வரலாற்றதிலே கரும்புலியாகி
வாழ்வை துறந்ததுவும்
வளமார் கள்ளிச்சை வடமுனையில்
வளர்த்த கதையதுவும் - நாம்
விளக்கச் சொல்லி விளம்புவம் வரதன்
வீழாப் புகழதனை
வந்தோரெவரையும் வரவேற் றின்நகை
வழங்கி உபசரிப்பார் - உணவு
தந்தே தம்மிடம் உள்ளதெதுவோ
தயவோடனுசரிப்பார்
அந்தத் திருவூர் அதனிற்றானே
அன்புக் குரியவராய் - ஆன
கந்தசாமி வைத்தியர் பேரை
கேளா தெவருமில்லை
எந்தப் பிள்ளையும் இவரையறியோம்
என்று பகராது - தனக்கு
சொந்தமில்லார் எவரையும் தனது
சோதரர் எனக் கொள்வார்

வேட்டைத் தொழிலில் விருப்பது உடையார்
விரைவார் கானகத்தே - போய்
காட்டு விலங்குகள் பறவைகள் கொணர்ந்து
காசுக் கவைவிற்பார்
விஷ கடி முறிவு , தெறிவு வைத்தியர்
விற்பனர் கந்தசாமி - மண்
விடுதலை வேட்கை கொண்டவர் பற்பல
விதத்தில் பங்களித்தார்
புலிப்படை வீரர் புண்பட நேரில்
போயுடன் சிகிச்சை செய்வார் - அதுவும்
வெளிப்டையின்றி விருப்பொடு சென்று
வனத்திடை பணிபுரிவர்
காட்டினுள் சென்று வேட்டையாடிடும்
காரணத் தாலேயிவர் - புலிகளை
கூட்டிச் சென்று வழியது காட்டும்
கடமையுமாற்றி வந்தார்

❊ ❊ ❊

# ஊரும் மக்களும

மது நிறை மலரும் மரம்நிறை கனியும்
மண்ணின் வளம் பலதும் - கொண்ட
புதுவெளி சொறிவில் தமிழர் வாழ்ந்தார்
புகழுறச் சுகமுறவே
மன்னம்பிட்டி என்னும் நகரை
மருவிய ஊர்களிவை - அதனால்
என்ன தேவைகள் எனினும் அவர்கள்
ஏகுவர் அவ்வூர்க்கே
விளைந்ததை ஆங்கு விற்பனை செய்யவும்
வேண்டின வாங்குவதற்கும் - அரச
அலுவல்களாற்றிடல் ஆகிய கருமம்
அதற்காய் சென்று வந்தார்
சென்றவரைச் செல்லும் வழியில்
சிறுமதிச் சிங்களவர் - மறித்து
கொன்றனர் கொள்ளை யடித்தனர் இதனை
கேட்போர் எவருமில்லை
தொலைந்தார் பல பேர் துவேசிகள் தம்மால்
தொல்லைகள் அதிகரிக்க -மக்கள்
விழைத்தார் அந்த ஊர்களைவிட்டு
வெளிக்கிட வேறூர்க்கு
இடமது பெயர்ந்து இவர்களை சேர்ந்த
இடமே வளம் கொழிக்கும் - கள்ளிச்சை
வடமுனை என்னும் வற்றாச் செல்வம்
வழங்கிய திரு வூராம்
குளத்து மீனும் குதித்து வீழும்
குடலைப் பயிர் குலுங்கும் - நெற்
களத்து மேட்டில் காளைகள் மிதிக்க
கதிர்மணி கள்உதிர்க்கும்
பாடும் குயிலின் பாட்டினிற்கியைய
ஆடும் மயிற் கூட்டம் - அடர்ந்த
காடும், கனியும், குளமும், மீனும்
குன்றாதருள் ஈயும் .

மானும், மரையும், தேனும், தினையும்
மங்காத்திருவாகும் - ஆங்கு
காணும் யாவும் களிப்பே ஊட்டும்
கவலை மறக்க வைக்கும்
வளத்தில் உயர்ந்த வான் புகழ்ஊரார்
வடமுனைக் சிற்றூரார் - பன்பு
உளத்தில் உயர்ந்தார் உள்ளும் புறமும்
ஒன்றென வாழுபவர்
பட்டிப்பசுவும் பாலும் மோரும்
பசி தோன்றா தடக்கும் - உறைந்த
கட்டித் தயிர் தரு காராம் பசுவும்
களனியில் புரண்டுருளும்
மாணிக்கப் பிள்ளை யார்குடிகொண்ட
மறைத்தள மணிஇசைக்கும் - தம்மை
பேணிக் காக்கும் பேரருளாளன்
பெயரினை உச்சரிக்கும்
மறையும் மண்ணும் மொழியும் உயிராய்
மனதிற் பேணுமிவர் - எந்தக்
குறையுமின்றி ஒன்றாய் வாழும்
குடிகள் என வாழ்ந்தார்
தமிழர்தம் ஈழ மண்ணைத் தமது
தாயாய் பேணுபவர் - அந்த
தமிழுக்கிடரெனில் தம்மை தந்துத்
தடுத்திடர் போக்குபவர்
ஆளும் வர்க்கம் எண்பத்திரண்டில்
அவரைக் குடியெழுப்பி - தமிழர்
வாழும் வடமுனை மண்ணில் சிங்களர்
வாழத்திட்டமிட்டர்
சொத்தாய் தமிழர் சொந்தம் கொண்டு
சுகமாய் வாழ்ந்த மண்ணை - ஒரு
பத்தாயிரவர் சிங்களர் தமக்கு
பகிர்த்திடத் திட்டமிட்டார்
விட்டாவிடுவர் கள்ளிச்சை வடமுனை
வித்தாய் இருந்தவர்கள் - மண்ணை

தொட்டால் தொடுப்போம் போரென்றெழுந்ததும்
　　　　தோற்றது அரசு திட்டம்
இந்த விதமாய் இயல்புகள் கொண்ட
　　　　இனியவர் நடுவினிலன்றோ - வைத்தியர்
கச்தசாமியும் கிருபையும் இல்லறம்
　　　　கண்டு வாழ்ந்து வந்தார்
அந்த நல்லவர் அன்பின் விளைந்த
　　　　அழகிய முத்துகளாய் - மக்கள்
வந்து உதித்தனர் ஒன்பது பேர்கள்
　　　　வம்சம் வளர்ந்திடவே
ஒன்பது பேரில் ஒப்பில் மகவாய்
　　　　ஒளிரப் பிறந்தவனே -இராமச்
சந்திரன் என்பவன் பின்னை நாளில்
　　　　கரும்புலி வரதனானான்
விளையும் பயிரை முளையிலே தெரியும்
　　　　வீண்சொல் அதுவல்ல -பிள்ளை
அளையும் மண்ணில் அவன் குணம் புரியும்
　　　　அதுவும் பொய்யல்ல
முளையாய் இராமச்சந்திரன் இருந்த
　　　　முன்னை நாள்களிலே -அந்த
இளையான் இயல்பும் இன்சொல் நயமும்
　　　　இயம்பின அவன் போக்கை
அடுத்தவர் வியக்கும் அருந்தவப் புதல்வன்
　　　　அமைதிப் போக்குடையான் - சினந்து
கடுத்தவர் முகமும் காணின் அவன் முகம்
　　　　களிப்புடன் மலர் வடையும்
எடுத்த எக் கருமமும் எதனையும் சிறப்பாய்
　　　　இயற்றிடும் தகையுடையான் - அவனை
தடுத்திட வேண்டிய தேவையே இல்லை
　　　　தக்கதே உணர்ந்து செய்வான்
தந்தையின் வேட்டைக் கலையில் சிறப்பை
　　　　தனயன் இவன் அறிவான் -இராமச்
சந்திரன் அவரின் துமுக்கியை எடுத்து
　　　　சுடுவான் குறிப்பார்த்து

சிந்தையில் மகிழ்வு சிலிர்த்திடும் தனது
செய்கையயினைக் கண்டு - அது
வந்திடும்நாளில் கந்தகம் சுமக்கும்
வாழ்வின் முதல் அடியாம்

ஈழப் போரின் இரண்டாம் கட்டம்
இடம் பெறும் நாளதனில் - மீண்டும்
பாழும் விதியால் பாதகர் வினையால்
பயப்படும் நிலையெழவும்
ஊற்றுச்சேனை கள்ளிச்சை வடமுனை
ஊர்வாழ் தமிழ் மாந்தர் - இடத்தை
மாற்றிச் சென்றிட மறுபடி நேரில்
மனம்வருமா அவர்க்கு
அண்மித்திருந்த வெலிகந்தையினில்
ஆளும் இனத்தவரும் - சில
வன்செயல் முஸ்லீம் தமிழரும் இவர்களை
வதைத்திட மனம் கொண்டார்
தொன்மைத் தமிழர் மண்ணை விட்டு
துரத்திட மனம் கொளவும் - தம்
நன்மை கருதி நரப்பலிக் கஞ்சி
நம்மவர் புறப்பட்டார்
புதுவெளியிருத்து வடமுனையதற்கு
புகலிடம் தேடியவர் - தமக்கு
புது வாழ்விங்கே பூத்தது என்று
புளுகோடிருந்தவர்கள்
எட்டு ஆண்டுகள் இருந்த அம்மண்ணில்
இருந்திட வகையிழத்து - அதை
விட்டு வெளிக்கிட வேண்டிய நிலையில்
விரக்தி யோடகன்றார்
வருகிறார் பகைவர் வெட்டவும் கொத்தவும்
வதைக்கவும் என அஞ்சி
தரிக்கவும் அஞ்சி தப்பிட எண்ணி
தமிழர் புறப்பட்டார்

எரிக்கவும் கருக்கவும் எடுக்கவும் களவுகள்
எடுக்கிறார்கள் படை யென்று - தமிழர்
தெருக்களால் குறுக்கு வழிகளால் ஓடி
தேடினர் புகலிடங்கள்
களைத்தவராகக் கால்கள் கடுக்க
கடைசியில் வந்தடைந்தார் - உடல்
உழைத்து வாழ்வதில் உள நிறைவடையும்
ஊரினுக்கேயவர்கள்

பெண்டுகள் சேனை யெனும் சிற்றூரில்
பின்னும் கால் பதித்தார் - அவரை
கண்டவவ் வூரார் கனிவுடன் அழைத்து
கருணையோ டரவணைத்தார்
வண்டுகள் போலும் வந்து சூழ்ந்தனர்
வந்தவர் மனம்குளிர - கருணை
கொண்டவர் குடித்திட உண்டிடவென்று
கொடுத்தனர் உவப்புடனே
புதுவெளியிருந்து வடமுனை வந்ததும்
புது வாழ்வடைந்ததுவும் -பின்னர்
அதுவும் இழந்து அகதியென்றாகி
அல்லல் அடைந்ததுவும்
இது ஏனென்ற வினாவது எழவும்
இராமச் சந்திரனின் - இளம்
இதயம் துடித்தது இந்நிலை மாற்றிட
எண்ணிக் குழம்பியது
தமிழன் என்றால் தரிப்பிடம் இழந்து
தனிப்பவன் எனும் பொருளோ - அவன்
தலைவிதி இதுவோ தண்டமிழ்
கூட்டம் தாங்குவ தெப்படியோ
சிங்களரோடு முஸ்லிம் தமிழர்
சிறுதொகை என்றாலும் - இவர்
எங்களை அழிக்க எண்ணுதல் சரியோ
எப்படி இது நிகழும்

மங்கல மிழந்தெம் மங்கையர் கூந்தல்
மாலை இழப்பதுவோ - கிழக்கு
எங்கணும் இதுதான் நிலையெனில் வாழா
திருப்பது எப்படியோ
இவ்வகைக் கேள்விகள் இரமச் சந்திரன்
இதயத் தெழுந்திடவும் இனி
தெவ்வரை ஓட்டித் தேன் தமிழீழம்
தோன்றிடச் செய்திடுவோம்
இதற்கெது வழியென எண்ணிய இளைஞன்
இறுதியில் முடிவெடுத்தான் - நெருக்
குதல் பட்டு அழிவதில் நின்றெதிர் ஆடிடக்
குதிப்பதே சரியென்றான்
விடுதலைப் புலிகள் அணியுடன் சேர்ந்து
விடைபெற முடிவெடுத்தான் - தான்
எடுத்திடும் நல்ல முடிவினை மறுபடி
எண்ணிடும் இயல்பறியான்
முழுமையாய் தன்னை இணைத்திடும் முன்னரே
முற்றிடும் தகமை பெற்றான் - வீரர்
வழமையாய் கற்றிடும் பயிற்சிகள் யாவும்
வாஞ்சையாய் பெற்றுயர்ந்தான்
வெடிப்பொருள் துறையில் விருப்பம் கொண்டு
வித்தை அதைக் கற்க - மிகத்
துடிப்புடன் இயங்கித் துணிவுடன் இறங்கி
துல்லியமாய் அறிந்தான்
வடமுனையூரில் வந்தடி வைத்த
வானரப் படைக் கும்பல் - ஆங்கு
திடமுடன் நிற்கும் திறனது அற்று
திரும்பினர் சின்னாளில்
உடனங்கு சென்று தத்தம துடமைகள்
எடுத்தனர் ஊர் மக்கள் - இவர்க்கு
உறுதுணையாக விடுதலைப் புலிகள்
உழைத்தனர் முன்வந்து
புலிகளோடிணைந்து விநியோகப் பணியில்
புரிந்தனன் தன் பங்கை - கிழக்கின்

புத்திரனான இராமச்சந்திரன்
புலிகளின் வரதனாகி
வந்து திரும்பிய வன்முறைக் கும்பல்
வைத்துச் சென்றிருந்த - நிலக்
கண்ணிவெடிகளும் காத்தே இருந்தன
கடமை புரிவதற்கு
கண்ணிவெடித்துறை கற்றவன் வரதன்
கடமை உணர்வுடனே - பணி
பண்ணிய வேளையில் எண்ணிடா விதத்தில்
பயங்கரம் நிகழ்ந்ததுவே.

நெருப்பினில் குளித்திட நெஞ்சுரம் கொண்டவன்
நிகழ்விதற் கஞ்சுவானோ? - சுய
விருப்புகள் மறுத்த சுதந்திர வீரன்
சுகத்தினுக் கேங்குவனோ?
காலினையிழந்த நிலவன் நிலையை
கண்டனர் சக தோழர் - ஐயோ
பாழதுவாச்சே பலமது போச்செ(ன)
பதைத்தனர் சூழ்ந்தவனை
காலப் பிழையென கண்டவூர் மக்கள்
கண்ணீர் விட்டழுதார் - மொழிக்காய்
ஆலமதுண்ணவும் அஞ்சிடா நிலவன்
அது கண்டே நகைத்தான்
குருதிப் பெருக்கை குறைத்திட நண்பர்
கொடுத்தனர் முதலுதவி - எனினும்
அருவிப் பெருக்கென அது ஓடிடவும்
அடுத்தது செயவறியார்
கருவி கொண்டு கால்முனை நறுக்கி
கருமம் புரிவதற்கும் - உரிய
கருவிகளின்றி உதவிகளின்றி
கவலையில் மனம் நொந்தார்
உடைவே என்றால் உரியவை இயற்ற
உள்ளார் அவன் தந்தை - ஆனால்
உடைந்து சிதறிய நிலையில் இதற்கு
உரியது அறுவை முறை

தக்க சிகிச்சை தந்திட வல்லது
வைத்திய சாலையொன்றே - வலிந்து
சிக்க வைத்திடும் செயலதுவாகும்
சென்றிடில் கொண்டங்கு
அரசினர் வைத்திய சாலைக் கவனை
அழைத்துச் சென்றிடினோ - வரதன்
சிரசினைக் கொய்திடக் கொடுத்தது போன்ற
செயலதுவாய் முடியும்
பொருந்திய வைத்தியம் புரிந்திட வல்லவர்
புலிகளுள் இருந்தாலும் - இன்னும்
திருந்திய நவீன சிகிச்சைகள் செய்ய
தெரிந்தவர் இருந்தாலும்
வருந்தியே கிடக்கும் வரதனைக் காக்க
வழியது ஒன்றாக - முதலில்
மருந்தினைக் கட்டி குருதியைத் தடுத்து
மரணம் வரத் தடுத்தார்
அடிக்கடி சுற்றி வளைப்புகள் நடக்கும்
அதுவே பெருந் தொல்லை - இராணுவம்
பிடித்திட வருகில் பிடிபடாதோடிட
பிறர்துணை தேவை வரும்
காலது இழந்தவோர் போராளியினை
காத்திட நால்வர் தேவை - தம்மால்
ஏலாதெனவும் இயம்பிடவியலா
இன்னல் எழுந்து விடும்
ஏலான் தன்னைக் காத்திட முயன்று
இருப்பவர் தமையிழப்பின் - அதிலும்
மேலாம் அவனை வடக்கினுக் கனுப்பல்
மிகவும் பயனுடைத்தாம்
ஊனம் உறினும் ஒரு போராளியின்
உயிரது பெரிதன்றோ - யாழ்ப்
பாணம் உடனே அனுப்பி வைப்பதே
பயன்தரும் எனக்கண்டார்
கருணா அம்மான் கட்டளை தந்தார்
காத்திடக் தேவையில்லை - இனி

ஒரு மணித்துளியும் தாமதமின்றி
உடனே சுமந்து செல்க
கட்டளை கேட்டதும் கடுகதியாக
காவிச் செல்வதற்கு ஒரு
தொட்டிலை நிகர்த்த படுக்கையை இணக்கி
தூக்கிட வகை செய்தார்
சாக்கினுள் இரண்டு தடிகளைப் போக்கி
சமைத்தவத் தூக்கினிலே - வரதனை
தூக்கிய வைத்து தோளினில் தாங்கி
தொடங்கினர் நெடும் பயணம்
பெண்டுகள் சேனை மண்ணதில் இருந்து
பிரிந்தான் வரதன் அன்று - தோழர்
கொண்டு நடத்திட இறுதிவிடையை
கூறியே விடை பெற்றான்.

❋ ❋ ❋

நாட்டின் ஊடு சென்றால் - பகைவர்
நரபலி கொள்வரன்று
காட்டின் ஊடாக - வரதனை
காவியே செல்லுகின்றார்

தோளிற் சுமையாக்கி - தோழர்
தொடர்ந்து நடக்கின்றார்
நாளிரவாய்த் தமது - உற்ற
நண்பனின் நலன் நாடி

பசி விடாய் மறந்தவராய் - தமது
பாங்கனைக் காப்பதற்கு
நிசி பகல் பார்த்திடாது - தமது
நெடும் பயணம் தொடர்ந்தார்

பற்றைக் காடுகளின் - ஊடே
பதுங்கிச் செல்லுகின்றார்
ஒற்றையடிப் பாதை - வழியே
ஓடியும் செல்லுகின்றார்

கட்டை கொடி கம்பு - இடறக்
கால் நடையாய்ச் சென்றார்
வெட்டைக்கு ஏறாது - காட்டில்
வேகமாய் செல்கின்றார்

உறக்கம் ஓய்வின்றி - நண்பர்
உறுதியினோடு சென்றார்
இறக்கி வைக்காது - விரைந்து
இடர்களோடு சென்றார்

அடர்ந்த காட்டுவழி - அவர்கள்
அல்லலுடன் சென்றார்
தொடர்ந்தும் அவனோடு - முட்கள்
துளைத்திடச் செல்கின்றார்

கீறும் முட்கள் உடல் - பிய்த்து
கிழித்திடச் செல்லுகின்றார்
பீறும் குருதி கண்டும் - மனது
பிறழா தவர் சென்றார்

அரவம் ஊர்ந்து வரும் - அவர்கள்
அடிகள் சுற்றி வரும்
வரவும் வனவிலங்கு - எதிர்த்து
வாகரை விரைகின்றார்

தூக்கில் கிடந்திட்ட - நண்பன்
துன்பமே உணர்ந்தவராய்
காக்கும் கருத்துடனே - காட்டில்
கடுகி விரைகின்றார்

வரதன் உடல் மீதும் - முட்கள்
வரைந்த கோடுகளால்
தரவும் வேதனைகள் - அதையும்
தாங்கிக் கிடந்திட்டான்

தன்னைக் காப்பதற்குத் - தோழர்
தாங்கும் துயர் கண்டு
என்ன செய்வதென்று - நிலவன்
ஏங்கிக் கிடக்கின்றான்

முப்பது மைல் தொலைவு - காட்டு
முள்வழியால் நடந்து
தப்பிடா வழி தொடர்ந்து - நடந்தார்
தப்பிட்ட வைத்திடவே

ஒப்பிட்ட முடியாத - அளவு
உபாதைகள் வழி நெடுக
எப்படி வந்தாலும் - தோழனை
ஏந்தியே நடந்திட்டார்

அத்தனை மைல் தூரம் - அவர்கள்
அடவியின் ஊடு வந்து
வைத்தனர் காலடியை - மாங்கேனி
வாகரைக் கடற்கரையில்

வாகரைத் கடற் கரையில் - வரதனை
வண்டியில் ஏற்றி விட்டார்
சாகரம் தனில் வண்டி -விரைந்து
சென்றிடக் கையசைத்தார்

சமுத்திரச் சண்டையிலே - பின்னாள்
சாதனை செய்யவுள்ள
தனித்துவ மகன்றன்னை - கடலாள்
தாங்கிச் செல்லுகின்றான்

அப்பொழுதே கடலாள் - இவனில்
ஆசைப் பட்டிருப்பாள்
இப்பெரு மகன்றன்னை - தன்னுள்
இழுத்திட வேண்டுமென்று

கப்பல் தனை இடிக்கும் - வலிய
கரும்புலி இவனான்
எப்படியும் பின்னர் - என்னுடன்
இணைவான் என்றிருப்பாள்

தன்னுடை வயிற்றொரு நாள் - வந்து
தங்கிடப்போம் அவனை
பண்ணுடன் அலை எழுப்பி - காற்றால்
பாட்டிசைத்தும் இருப்பாள்

வடக்கினில் கால் வைத்தான் - வரதன்
வைத்த ஒரு காலே
இடக்கால் என்றாலும் - அதுவும்
இரும்பாய் பதிந்ததுவெ

சத்திரச் சிகிச்சை மூலம் - காலும்
சௌக்கிய மாகியது
சித்தரமாய் நினைவில் - ஊரின்
சிந்தனை ஓடியது

எத்தனை இடரடைந்தோம் - வாழ்ந்த
இடமும் இழந்திட்டோம்.
பித்தர்கள் வெறி நாய்போல் - துரத்த
பீதியால் ஓடி வந்தோம்

சொறிவில் முதற்றொட்டு - எம்
சொந்தம் இடம்பெயர்ந்து
குறியில்லாதவொரு - அலையும்
குடும்பம் ஆகுவதோ?

கள்ளிச்சை வடமுனையில் - மிகவும்
களிப்பொடு வாழ்கையிலே
தள்ளிச்செல் என வுதைக்க - அங்கும்
தங்காது இடம் பெயர்ந்தோம்

பெண்டுகள் சேனையிலும் - வாழும்
பேற்றினை இழந்திட்டோம்
கண்டது இனி என்ன - உயிரைத்
காப்பதில் பயன் என்ன

பண்டையப் பெருமையென்ன - போடிப்
பரம்பரை நிலைமையென்ன
பண்ணைகள் பட்டியெல்லாம் - பகைவன்
பறித்திட வாழ்வதுவோ

இன்றிதை இனியும் விடில் - மேலும்
இழப்பதற்கெதுவுமில்லை
வென்றிடல் வேண்டும் பகை - அதுவும்
விரைவில் என நினைத்தான்

சிந்தனை சிறகடிக்க - இனித்தான்
செய்கடன் எதுவென்று
வந்தனன் முடிவதற்கு - அதையும்
வைத்தனன் நெஞ்சினுக்குள்

இதன்படி செய்வமென - வரதன்
எண்ணி இருந்திடுங்கால்
மதன் என்னும் ஒரு தோழன் - அவன்றன்
மனதிற் கினியவனாய்

அறிமுகமாகியதில் - நிலவன்
அளப்பெரும் மகிழ்வடைந்தான்
நெறி பிறழா தியாகப் - போரில்
நிழல் உடல் என விணைந்தான்.

❊ ❊ ❊

# கடற்கரும்புலி கப்டன் மதன் / பற்றிக்



மதனும் வரதனும் ஒன்றானார் - ஒரு தாய்
மக்கள் போன்றும் உறவானார்
எதனைச் செய்யினும் இருவருமே - சேர்ந்தே
எண்ணிச் செய்யும் நட்பானார்

ஈழத் தாயாள் இணைந்திட்ட - பிரியா
இரட்டையர் என்னும் நிலையானார்
ஆழப் புரிந்துணர் வுடையவராய் - பார்த்து
அடுத்தோர் வியக்கும் இணையானார்

இவர்கள் நட்பின் இறுக்கத்தை - பின்
இவர்க்குள் இருந்த நெருக்கத்தை
இவர்கள் நிகழ்திய சாதனைகள் - நாம்
இயம்பக் கேளும் பிற்றொடரில்

முதலில் அறிவோம் மட்டு நகர் - ஈய்ந்த
மகனாம் களத்தில் மாவீரன்
மதனின் குடும்ப வரலாற்றை - அவன்
மண்ணை மனையை மாண்புகளை

புதுப்புனலோடு புனானையிலே - எழில்
பூத்தவோர் குடும்பப் பூஞ்செடியில்
உதித்த நான்குபுதல்வர்களில் - மதனும்
ஒருவன் சிவகுமார் இயற்பெயரான்

ஊரார் அறிந்த உத்தமராய் - மண
உறுதி கொண்ட தமிழ் மகனாய்
பேரான் சீனிவாசன் என்பார் - அப்
பெரியான் துணைவி பேபி என்பார்

மண்ணும் மக்களும் விரும்புகின்ற - நம்
மதிப்புடைய பணியே இவர் பணியும்
பண்ணும் இவரின் தொழில் யாது ? - நீர்ப்
பாசனவிலாகா ஓவசியர்

அடிக்கடி கிட்டும் இடம்மாற்றம் - இது
அரசு சேவையில் ஒரு சிரமம்
அடிவேர் புனானையில் இருந்திடவும் - பணி
ஆற்றிய இடங்கள் பலவாகும்

கிழக்கினில் மட்டா பணி செய்தார் - வடக்கு
கிளிநொச்சியிலும் பணி செய்தார்
இளக்கமாய் என்றும் தனை எண்ணா - ஒரு
இரும்பண்சீனி வாசனாவார்

விசாலமான வீடு வாசல் - மனமும்
விசாலமாக விரிந்தது தான்
உசாவி மற்றார் இடர் வேளை - உவந்து
உதவும் பண்பில் உயர்ந்தவராம்

எழுபத்தொன்பதில் கிழக்கினிலே - பேயாய்
எழுந்தசூறா வளி வீச்சால்
விழுந்தன மனைகள் மரம் யாவும் - அவ்
வியாகுலம் அறிவும் உலகெல்லாம்

பெரிய வீட்டின் வாழ்ந்தவராம் - மனதால்
பெரியவரான சீனிவாசன்
அரிய குணத்தான் அன்புடையார் - அன்று
அளித்த உதவி அளப்பெரிதாம்

பெரிய அவரது வீட்டினுக்கோ - ஏதும்
பெரிதாய் சேதமில்லை எனவே
உரிய தேவை எதுவென்று - அவர்
உணர்ந்து அன்று செயற்பட்டார்

சிறிய குடிலை தமக்கமைத்து - அதில்
சீனவாசன் குடி போனார்
பெரிய தனது இல்லத்தை - அனாதை
பாடசாலைக் கெனக் கொடுத்தார்

இருப்போர் ஈயார் மனமுவந்து - ஈய
இருப்போர்க்கீய இருப்பதில்லை
இருப்பதை ஈயும் பண்போடு - அவர்க்கு
இருந்தது பொருளும் ஈய்ந்திடவே

பெருமகன் இவர் தன் மனையாட்டி -பேபி
பெயருக்கேற்ற இயல்புடையாள்
அருமைக் குணங்கள் அமைந்தவளாய் - வலிந்து
அடுத்தவருக்தகுவும் மனதுடையாள்

கல்விக் செல்வம் தனை நாடா - புனானை
கடும் உழைப்பாளர் நடுவினிலே
நல்வினை செய்யும் நாட்டமுடன் - பிறரை
நாடிச் சென்று உதவிடுவார்

வருந்துவோர்க்காறுதல் மொழி சொல்வார் - அங்கு
வாழ்பவர் சிறு புண் காயம்படில்
மருந்துக்கள் கட்டி சுகமாக்கும் - சிறு
மருத்துவப் பணியும் புரிந்திடார்

நற்குண வியல்புடை தம்பதியர் - தம்
நாமம் பகன்றிடும் வாரிசுகள்
சற்குணப் புதல்வர் நால்வர் தமை - தம் சந்ததி
தழைக்க பெற்றெடுத்தார்

மூன்றாம் பிள்ளை குடும்பத்தில் - சிவகுமார்
முதல்வனான் துடிப்பினிலே
தோன்றியதெல்லாம் செய்திடுவான் - மனக்
துணிவுடையோனாய் வளர்ந்திட்டான்

மற்றவர் உயிர்க்கு மதிப்பளியார் - உருவில்
மனிதர் போலும் உருவுடையார்
புற்றொன்றெடுத்த பாம்புகளாய் - அழகிய
புனானையில் புகுந்தார் இராணுவத்தார்

இராணுவம் என்றால் பொருந்தாது - பண்பில்
இழிந்தவர் கொடியவர் என்பதால்
இராட்சதர் என்றால் மிகப் பொருந்தும் - இவர்
இருக்கின்ற ஊரே பாழடையும்

ஆட்டை மாட்டை களவெடுப்பர் - எது
அகப்படினும் அதைச் சுருட்டிடுவர்
கூட்டுக் குளவி களாயிருந்து - தமிழரை
கொட்டிக் கொட்டிக் துரத்துபவர்

சுற்றி வளைத்தல் தேடுதலால் -தம்
சுதந்திரமிழந்தார் தமிழ் மக்கள்
சற்றும் சகிக்கார் சீனிவாசன் - துணிந்து
சத்தமிடுவார் அவர் முன்னே

கட்டுப்பா டேதும் இல்லாத - இழி
கயவர் இவர்கள் என்பதனால்
விட்டு செல்ல விழைந்திட்டார் - புனானை
வீட்டை வளவை யாவினையும்

பிள்ளைகள் நலனை விரும்பியவர் - ஊர்
பிரிந்து மட்டு நகர் வந்து
எல்லை வீதியில் இல்லெடுத்து - அங்கு
இருந்தார் குடும்பத் துடனேயே

இந்துகல்லூரி யதிற்றானே - தம்
இனிய மக்கள தமையிணைத்து
தந்தார் கல்விச் செல்வமதை - ஒரு
தந்தைக்குரிய பொறுப்புடனே

சிங்களச் சிப்பாய் கூட்டங்கள் - அடிக்கடி
செய்திடும் குரங்குச் சேட்டைகளால்
பொங்கிக் குதிப்பார் சீனிவாசன் -தன்
பொறுமை இழந்து ஏசிடுவார்

"வாய்க்சொல் இவர்க்குப் புரியாது - தமிழர்
வலிமை இப்போ தெரியாது
பாய்சல் புலிகள் செயும் நாளில் - நல்ல
பாடம் படிப்பார் அப்போது

காலம் இவர்க்குப் பதில் சொல்லும் - அந்தக்
காலம் இன்னும் தொலைவில்லை
சீலம் கெட்டவர் சிப்பாய்கள் - அன்று
செத்து மடிவார்" எனச் சொல்வார்கள்

துணிந்து இவரின் மொழி கேட்டு - இவர்
துணைவி தவிப்பார் தயக்கமுடன்
பணிந்து சொல்வார் பதியிடத்தே - அக்கம்
பக்கம் பார்த்து பேசும் என்று

இப்படி நீங்கள் பேசுகின்ற - சொல்
எங்கள் மனைக்குக் கேடாகும்
அப்படியென்றால் எம் புதல்வர் - தாம்
ஆயுதம் எடுப்பார் முதன் முதலில்

ஊரார் மக்கள் போம் முன்னே - போவார்
உங்கள் மக்கள் போராட
யாரும் இயக்கத் தோடிணைகில் - பின்
யாதும் செய்திட வியலாது

சீராய் வளரும் தம் மக்கள் - தம்
சிந்தை பிறழக் கூடாது
போரில் இறங்கக் கூடாது - எனப்
பெற்றவள் நினைந்து பேதலித்தாள்

சின்னஞ் சிறுவன் என்றாலும் - எதையும்
சிக்கெனப் பிடிக்கும் சிவகுமாரன்
அன்னை தந்தை பேசுவதை - பற்றி
ஆழமாகச் சிந்தித்தான்

சீனிவாசன் குடும்பத்தில் - வழிச்
சிசுவாய் பிறந்த சிவகுமாரன்
ஊனில் சுவறி உதிரத்தில் - உணர்ச்சி
ஒன்றாய் கலந்து போனதுவே

பாடசாலை போகவர - தம்
பாதையில் காணும் இராணுவத்தை
ஓட விரட்ட வேண்டுமென - இளம்
உள்ளம் தன்னில் சூளுரைப்பான்

தேடல் செய்யும் நாள்களிலே - தம்
தெருவில் செல்லும் மாணவரை
கூட வழைத்துக் கொண்டேகி - தீ
கொழுத்தும் மதிய வெயிலிலே

பாடசாலை மைதானம் - தனில்
பதைக்க பசிக்க நிறுத்தி வைத்து
வாட வைக்கும் சிப்பாய்கள் - தமை
வதைக்கும் செயலால் சினம் கொள்வான்

சொந்த ஊராம் புனானையிலே - தாம்
சொகுசாய் வாழ்ந்த நாள்களிலே
இந்தச் சிப்பாய் கூட்டங்கள் - தமக்கு
இழைந்த இன்னல் நினைத்திடுவான்

தந்தை தணலாய் தகிப்பதையும் - தன்
தாயார் தடுத்து மொழிவதையும்
சிந்தையினிலே பதிவு செய்து - ஏது
செய்வதென்று முடிவு கண்டான்

ஒன்பதான வகுப்பினிலே - கல்வி
ஊன்றிக் கற்று சிவகுமாரன்
தன்கடனெதுவென உணர்ந்திட்டான் -பெற்ற
தந்தை சொன்ன மொழிகளிலே

அகவை நிறைவு கொண்டவனாய் - அந்த
ஆண்டு எண்பதொன்பதிலே
மகவின் மனதில் நிகழ்திட்ட - பெரும்
மாற்றம் அறியார் பெற்றவர்கள்

நகர நகர நாட்கள் சில - நெஞ்சில்
நன்கு வேர்விட் டோங்கி எழும்
பகர முடியா உணர்வுகளால் - தினம்
பாதிப்புற்றான் சிவகுமாரன்

உள்ளத்தெழுந்த உந்துதலால் - இனியும்
உட்கார்ந்திருத்தல் தவறென்று
பள்ளிப் பையை புறம் வைத்தான் - தன்
படிப்பைத் தானும் மறந்தவனாய்

சொல்லிச் கொள்ளா தொருநாளில் - தன்
சொந்தம் உறவு தனை விட்டு
தள்ளிச் செல்ல முடிவெடுத்து - விடு
தலைப் பயணத்தை தொடர்கின்றான்

கற்கச் சென்றதன்மகனை - திரும்பக்
காணா திர்ந்தார் பின் அறிந்தார்
கற்சிலையானர் சீனிவாசன் - மகன்
கடமை உணர்வை வியந்திட்டார்

பெற்றவள் மனமோ கலங்கியது - பிள்ளை
போனது எண்ணிப் புழுங்கியது
பற்றினை அறுக்க முடியாமல் - பிள்ளைப்
பாசத்தாலே வதங்கியது

தீ வழி சென்றிட வில்லை மகன் - நாட்டின்
தேவை கருதிச் சென்றஅவன்
நீ வழி தொடரு எனத் தந்தை - தன்
நெஞ்சுள் வாழ்த்தி விடை கொடுத்தார்

ஈற்றவன் சொல்லும் செயல்களுமே- தம்
இளையவன் ஏகச் செய்ததென
ஈன்றவள் தவித்தாள் என்றாலும் - அவளால்
என் செய்ய முடியும் அந்நிலையில்

அழுது புரண்டு ஆர்ப்பரித்தால் - அது
ஆபத்தாகும் ஏனென்றால்
விழுகில் கொடியர் செவிகளிலே - வந்து
வீட்டோடழைத்துச் சென்றிடுவர்

இன்னம் வீட்டில் இருக்கின்ற - தம்
இளவள் மூவர்க் கிடராகும்
என்ன செய்வோம் இனியென்று - தேடும்
எண்ணம்தன்னை தவிர்த்திட்டார்

வீட்டை விட்டு ஏகியவன் - தனை
விடுதலைப் புலியாய் புடம் போட
காட்டை நோக்கிச் செல்லுகின்றான் - பயிற்சி
களத்தை நோக்கி நடக்கிறான்

திருமலைக்காடு என்பார்கள் -அதை
தெரிந்தவர் மட்டே உட் செல்வார்
பெருமடர் வனத்தின் நடுவினிலே - புலிகள்
பயிற்சிக் களமாய் கொண்டிருந்தார்

திருமலை மட்டு எல்லையது - ஆங்கு
தெரியார் செல்ல முடியாது
இருபெரும் பிரதே சத்திடையே - அது
அமைந்தது எல்லைக் காடெனவே

புலிகளைப் வேட்டையாடுவதற்கு - உள்ளே
போகத் துணியார் இராணுவத்தார்
வலிய அரணாய் அடர்வனமே - சுற்றி
வளைத்த பயிற்சிக் களம் அதுவாம்

காலது வைத்தான் காட்டினிலே - தன்
களத்திறன் பெற்றான் கடுமுழைப்பில்
நாளதில் சிவகுமார் எனும் பெயரை - நமக்கு
நவிலக் கொடுத்தான் மதனெற்று

❋ ❋ ❋

திருமலைக் காட்டினிலே
தேடிச் சென்றடைந்தான்
பெருமகன் மதன் என்று
பெருமையோடு முன் சொன்னோம்
அருமந்த மைந்தவன்
அடவியிலே புகும்போது
ஒருமைந்தனாய் போனான்
எனவுரைத்தல் பொருத்தாது

பாடசாலை சீருடையும்
படிக்கின்ற கோலமுமாய்
கூட மூவர் ஒன்றிணைந்து
குன்றாப் போரார்வமுடன்
தேடுமுன்னர் வீட்டவர்கள்
திருகோண மலை வந்து
காடுடே செல்லுகின்றார்
கள மறவர் ஆகுதற்கு

புறப்படும் இவர் திட்டம்
புரிந்தவர் சில நண்பர்
சிறப்புடைய இவர் நட்பால்
சிணுங்கியே தடுத்திடவும்
மறப்புலி அணிசேர
மனந் துணிந் தேகியவர்
மறுத்தனர் கோிக்கை
மட்டு நகர் விட்டகன்றார்

மட்டு அம் பாறை யுள்ள
முகாம்களிலே தாமிணைகில்
எட்டி விடும் சேதியது
எப்படியும் தம்மவர்க்கு
திட்டமிட்டு மூவருமே
திடமான முடிவெடுத்து
விட்டகன்று மட்டு நகர்
விரைந்தார்கள் திருமலைக்கு

காட்டுக்குள் வந்து சேர்ந்த
காற்சட்டை மாணவர்கள்
காட்டி நின்ற தீவரத்தை
கண்டு மகிழ்ந்தார் புலிகள்
நாட்டிற்கு உழைக்கவென
நடத்தோடி வந்தவரை
நீட்டிக்கரம் ஏற்று
நாமங்கள் கொடுத்திட்டார்

பெற்றவர்கள் தனக்கிட்ட
பெயரான சிவகுமாரை
பற்றிகெனும் பெயராய்
பதிந்திட்டான் தன் பெயரைத்
உற்ற அவன் நண்பர்களில்
ஒருவர் நிர்மல் என்றும்
மற்றவன் தன் பெயரை
மாற்றினான் சுதர்சனென்றும்

தென் தமிழர் ஈழத்தின்
தேன் நாட்டை விட்டகன்று
தன்பணியை வடக்கினிலே
தொடர்ந்திட்ட நாளிற்றான்
பின்னாளில் உலகறித்து
பெயர் பெற்றான் மதனென்று
அந்நாமத் தவனிருத்து
அளித்த கொடை பின்னறிவோம்

வடக்கினுக்கு அவன் வந்த
வரலாறு வரும்வரைக்கும்
நட்புகளை நிகழ்வுகளை
நாமுரைக்கும் போதிங்கு
திடக்குணத்தன் தனையழைக்க
தேர்ந்த பெயர் "பற்றிக்" என
அடக்கமுடன் அழைத்திடுவம்
அப்பெயரே பொருத்தம் இவண்

படு சுட்டிப் பயலாக
பார்ப்பவரின் மனம் கவர்ந்து
குடுகுடெனக் குதித்தாடி
குறித்திட்ட காலத்துள்
விடுவிடெனச் செயல் முடித்து
வியப்பளிப்பான் பற்றிக்தன்
கடுமுழைப்பால் மேலாளர்
கண்களுக்கே மதிப்பானான்

மணிப்பூர் பயிற்சி முகாம்
மாணவரில் இவனொருவன்
அணிப்போர் ஏதுவெனினும்
ஆர்வமுடன் முன்னிற்பான்
கணிப்போ தப்பாது
கருமிருட்டு வேளையிலும்
பணிப்பை உடனேற்று
பகலிரவாய் உழைத்திடுவான்

பாசறைக்குள் இவன் நுழைந்த
பருவத்தில் ஏற்கனவே
தேசத் தொண்டியற்றத்
தேடி வந்த பலரிருத்தார்
வாசத் தல மதனில்
வசதிகளும் பற்றாது
பாசறையை இரண்டாக்கி
பயிற்சிகள் அளித்தார்கள்

முற்குழுவில் இவனில்லை
முடியும் வரை அவர் பயிற்சி
பிற்குழுவார் தாமிருக்க
பெரிதோர் மனையமைக்க
பற்றிக்கும் அக்குழுவில்
பணியாற்றி பங்களித்து
நற்பெயரைத் பெற்றானாம்
நடப்பிப்போர் வாயிருந்து

வெதுப்பக்கம் ஒன்றமைக்க
வேண்டியிருத்ததனால்
அதுக்குரிய கல்தேடி
ஆறு கடந்தேக வேண்டும்
பொதுப்பணிக்கு பின்னிற்கா
புலிக்குட்டி யாம்பற்றிக்
சதுப்பு நிலத்தூடு சென்றும்
சுமந்து வரு வான் கற்கள்

கல்லைத் தலைசுமக்க
கழுத்தளவு நீரினிலும்
மெல்லநடை போட்டு
மேடு குழி தாண்டிவந்து
சொல்லும் இடத்தினிலே
சேர்ந்த பினனே் விரைவான்
கல்லோ இவனுடம்பும்
களைப்பு என்றறியான்

எந்தப் பணி எனினும்
இவனஞ்சி நின்றதில்லை
சொந்தப் பணியென்றே
சோராதுசெய்திடுவான்
அந்தப் பாசறையில்
அவனுக்கோர் செல்வாக்கு
விந்தை சிறுவென
விரும்பிடுவர் எல்லோரும்

பாரிய பணிகளையும்
பதட்டமெதும் இல்லாது
சீரிய முறையினிலே
செய்து முடித்திடுவான்
காரிய மெதுவெனினும்
களைப்பே தோன்றாதான்
நேரியனாய் நின்று
நிகழ்த்திக் கொடுத்திடுவான்

பம்பல் எனும் சொல்லுக்கு
பற்றிக்கே உதாரணமாம்
கும்பலுக்குள் குழந்தை போல்
குறும்பினுக்கு குறைவில்லை
வம்பளப்பன் மற்றவரைத்
வலிந்திழுத்து வதைசெய்து
தெம்பளித்தும் சிரிக்க வைக்கும்
திறவைனுக் குரியதுவே

எடுத்த பயிற்சிகளின்
எல்லாம் சிறப்பானான்
விடுத்த துறையில்லை
வினையிற் குறைவில்லை
படித்தனன் மருத்துவமும்
பார்த்தான் அத்துறையும்
முடித்தான் பயிற்சிகளைப்
முழுமை அடைந்திட்டான்

மச்சம் தான் உண்ணான்
மற்றார்க் குதவிடவே
கூச்சம் கொள்ளாது
கூடிச் சமைத்திடுவன்
அச்சம் என்பதுவோ
அணுவும் கிடையாது
உச்சக் குணம் பலதை
ஒன்றாய் கொண்டிருந்தான்

தொண்ணூறில் முத்திங்கள்
தொடர்பயிற்சி முடித்ததின்பின்
கண்ணியா வில்லமைந்த
களமான சிவந்த மண்ணில்
தங்கியவன் பணி செய்ய
தனக்கிட்ட ஆணையினை
எண்ணிலா மகிழ்வோடு
ஏற்றங்கு ஏகினனே

மட்டு நகர் என்றாலும்
மறக்களப் பயிற்சிகள் பின்
விட்டகன்று செல்லாது
விருப்போடு திருமலையுள்
தொட்டு நின்று தொடர்ந்தே தன்
தொண்டியற்றி நின்ற பற்றிக்
சுட்டொளிரும் பொன் போன்ற
சுகுணத்தை என்னென்போம்

சிவந்த மண் முகாமினிலே
　　செய்கின்ற அவன்பணியை
உவந்தனர் உடனிருந்தோர்
　　உரிய இவன் ஆற்றல்களால்
கவர்ந்தனன் நண்பர்களை
　　கனிந்த தன் செய்கைகளால்
தவந்தனில் வந்தவனோ
　　தமக்கென நினைந்தனரே

தாக்கிடச் சென்றாலும்
　　தளர்ந்து பின் வாங்கான்
நீக்கிடத் தடைகளினை
　　நிற்பவனும் இவனே முன்
சாக்குச் சுமைகளென
　　சாப்பாடு சுமந்து பசி
போக்கும் இவனுடைய
　　போக்கே தனிப் போக்கே

வடக்கினிலே இருந்து வரும்
　　வகையான ஆயுதங்கள்
வெடிப்பொருள்கள் அவைகளுக்கு
　　வேண்டிய உபகரணம்
எடுத்தங்கே வருவதற்கும்
　　எடுத்து வத்தவற்றை
கடத்திடவும் மட்டு நகர்
　　காட்டுவழி காட்டிடுவான்

காடுகளைப் நன்கறிவான்
　　காட்டு வழி தானறிவான்
ஊடு சென்று வேவு செய்து
　　உண்மைகளைப் கண்டு வந்து
பாடு இன்றிப் பணிசெய்து
　　பகுப்பாய்வு பல செய்து
சாடும் வகைத் திட்டங்கள்
　　சரியாகச் சொல்லிடுவான்

திருமலைக் காடென்றால்
தெரியும் எதிரிகட்கும்
பெருந்தொகை யானபுலிப்
போராளர் உள்ள வனம்
திரும்பிடும் வழி எங்கும்
திறம்பெறக் காவலிட்டு
வரும்புலி எனவெண்ணி
வழிபார்த்துக் காத்திருப்பர்

கால் வைக்கும் இடமெல்லாம்
கண்ணிவெடிகள் புதைத்து
பாழ்பட்ட சிப்பாய்கள்
பார்த்திருப்பர் தாக்குதற்கு
சூழ்ந்திருக்கும் அவர் தலையை
சுற்றி விட்டு ஏமாற்றி
வீழ்த்திடவே அவர் சூழ்ச்சி
வினை செய்தார் பல வேளை

கடும் உழைப்பால் தனையிட்டு
கவலையது கொள்ளாது
படுந்துன்பம் யாவினையும்
பணிவோடு தாங்குபவன்
கொடும் துன்பம் பெற்றிடவே
கேடொன்று வந்ததுவாம்
திடும் என்று வெடித்த வெடித்
தீவினையால் வந்த துயர்

ஒடுங்காத உழைப்பாளன்
உயர்வான போராளன்
கெடுங்காலம் அதுவென்று
கேட்பார்கள் இரங்கிடவும்
நடுவான இரவொன்னில்
நடத்திட்ட விபரீதம்
சுடும் அந்த துயர் நிகழ்வை
சொல்லிடவே விழைகின்றேன்

❋ ❋ ❋

முதலைக் குணத்தவர் மூர்க்கராம் இராணுவம்
மூத்த தமிழ்க்குடி மண்ணதுவாம்
முதலிக் குளத்திலே முகாம்மிட்டிருந்தது
முள்ளாய் உறுத்திட புலிகளுக்கு

கண்ணியா வில்கம் விகாரைக் கிடையிலே
களமமைத் திருந்த இராணுவத்தை
எண்ணிடா வேளையில் அடித்து நொருக்கிட
எண்ணினார் சிவந்தமண் போராளிகள்

பண்ணிமுடித்த பின் பற்பல திட்டங்கள்
படையை நகர்த்தினர் கச்சிதமாய்
கண்ணியா சிவந்தமண் முகாமில் இருந்தே
கடுகி விரைந்தனர் காட்டினூடே

போரிடல் என்றால் பொரியலுண்பது போல்
போராளர் யாவருக்கும் பெரும்மகிழ்வாம்
யாருமே பின்வாங்கார் யான் செய்வன் முன்னென
யாதிலும் ஆயத்தமாகச் சென்றார்

சண்டையிடச் சென்றோர் சரியான நேரத்தில்
சென்றாங் கொளித்து நிலையெடுத்தார்
சண்டை நடத்திடும் சாமத்தில் என்பதால்
சாப்பாடு கொண்டுடன் செல்லவில்லை

பின்னொழுங் கமைப்புப் பணியிலே உணவுப்
பொறுப்பினை பற்றிக்கே ஏற்றிருந்தான்
அன்னவன் இரவில் அவர்களுக் குணவு
ஆங்கெடுத்து வரல் திட்டமதாம்

சம்மதித்த படி சாமத்தில் முன்னரே
சிவந்தமண் முகாமைத் சென்றடைந்து
கும்மிருட்டதிலே கொண்டு வந்துணவு
கொடுத்தனன் தோழர்கள் புசித்திடவே

எவ்விருட்டாயினும் எவ்விடர் வருகினும்
இட்டபணி செய்யும் பற்றிக் அன்றும்
அவ்விருட்டு வழி ஆபத்து ஆயினும்
அடிகள் பதித்தனன் வேகமுடன்

இந்திய இராணுவம் ஈழத்தில் காலூன்றி
இன்னல் விளைத்திட்ட வேளையிலும்
தந்திரமாய்ச் சென்று தான் வேவு பார்த்து
தாக்கிடத் திட்டங்கள் கூறியவன்

வெடிப் பொருளாயுதம் வேண்டிய பொருள்கள்
வெட்டிப் புதைத்து ஒழிப்பதிலும்
துடிப்புடன் துவளாத் துணிவுடன் எப்போதும்
தொண்டுகள் இயற்றி நிற்குமவன்

இந்தக் தருணத்தில் எடுத்த நற்கருமத்தில்
இடியொன்று ஏற்றிடச் சித்தமாச்சு
வந்த வழியினால் பற்றிக் திரும்பிட
வைத்தனன் கால்மிதி வெடியின் மீது

எத்துணைபத்திர மாயடி வைத்தனன்
என்றாலும்இருட்டிலே குறிதவறி
வைத்தனன் வெடியின்மேல் வலது காலை
வந்தது வினையும் அந்தக் கணம்

காடும் அதிர்ந்தது காலும் சிதைத்தது
கருதிய திட்டமும் சிதைந்ததுவே
ஓடும்படிபடைக் கடித்திட வத்தவர்
உத்திகள் யாவும் பிழைத்தனவே

குறிப்பிட்ட நேரம்கை கூடிடும் முன்னரே
குண்டுவெடிச் சத்தம் கேட்டதனால்
குறிவைத்து வந்திட்ட கும்பல் உசார்நிலை
கொண்டதில் இவர் திட்டம் நின்றதுவே

தாக்கிடும் திட்டத்தை கைவிட்டு நண்பனை
தப்பிட வைத்தலை முன்னெடுத்தார்
தூக்கியே சென்றனர் சிவந்த மண் நோக்கியே
தோழனைக் காத்திட வேகமுடன்

நடுநிசி தாண்டிய நேரம் அதனிலே
நடந்து அடைகிறார் சிவந்த மண்ணை
கடுமை நிலையிலே கண்களை மூடியே
காலினைக் இழந்த களைப்புடனே

பற்றிக் கிடந்தனன் பயந்தனர் தோழர்கள்
பாதையில் ஒடிய இரத்தமதால்
வற்றிக் கிடந்தது வலிமை இழந்துடல்
வாடிக் கிடந்தது மோசமாக

சிவந்தமண் அடைந்த போதினில் பற்றிக்
செந்நீர் முழுவதும் வெளியேற
சிவந்த அவன் மேனி பச்சை நிறத்திலே
சாக்களை கட்டியே நின்றதுவாம்

உயிரைக் காத்திட உரிய சிகிச்சைகள்
உதவிகள் செய்திட வழியுமின்றி
வையிர நெஞ்சு வரிப்புலி வீரர்கள்
வாடிக் கலங்கினர் என்றாலும்

உற்ற நண்பனை உயிருடன் மீட்டிட
உடனடி மாற்று வழியதுவாய்
பற்றிக்கை பாங்கர் றோயல் என்கின்ற
பாசைறைக் கெடுத்து ஓடுகின்றார்கள்

பத்தோடு ஐந்துவீரர்கள் சேர்ந்து
பாய்ந்து காவி ஓடுகின்றார்
சத்துடை மருத்தை ஊசிக் குழாயினால்
செலுத்திய படியே ஓடுகின்றார்

அஞ்சல் ஓட்டம் தொடர்வது போலவே
அவர்கள் ஓட்டம் தொடர்கிறது
இரஞ்சித் என்கிற தோழன் தலைமையில்
இரவில் ஓட்டம் விரைகிறது

அஞ்சிக் கலங்காப் பற்றிக் அக்கணம்
அஞ்சிக் கெஞ்சிக் கேட்கிறான்
இரஞ்சித் அண்ணை காப்பாற்றுங் கோஎன்னை
என்று இரந்து வேண்டுகிறான்

கொஞ்சம் கொஞ்சமாய் பற்றிக் உணர்வுகள்
குறைந்து கொண்டே போகின்றது
நெஞ்சுத் துடிப்பு நின்றிடும் நிலையில்
நினைவு தப்பிப் போகின்றது

எட்டிடு முன்னரே றோயல் முகாமினை
எதுவும் நடக்கத் கூடுமென்று
திட்டமாய் எண்ணியே றோயல் முகாமுக்கு
தொடர்பு கொண்டனர் போராளிகள்

"நாங்கள் வரும்வரைத் காத்திருக்காதீர்
நம்மை நேக்கியே ஓடி வாரும்
நீங்கள் வரும்போதும் சத்து நீர்ப்புட்டியை
நிச்சயம் உம்முடன் கொண்டு வாரும்"

உள்ளது எம்மிடம் ஆக ஒரு புட்டி
அதனையும் இப்போது ஏற்றுகிறோம்
உள்ளது தீர்ந்திடில் உவ்விடம் சேரும் முன்
உயிரற்ற தாய் உடல் மாறிவிடும்

சொல்லக் கேட்டதும் சுறுசுறுப்பாயினர்
சுமந்து வருவோரை எதிர் கொள்ள
வில்லதில் நின்று வெளிக்கிடும் அம்பென
விரைகிறார் வேண்டிய பொருள்களுடன்

"நல்லது மருந்துடன் நாமே வருகிறோம்
நாங்கள் புறப்பட்டோம் இப்பொழுது
நல்லதே நடக்கும் நம்பிக்கையோடிரும்
நடு வழியில்வந்து சந்திக்கிறோம்"

என்று உரைத்தவர் ஏகினர் விரைந்து
இறந்திடும் தோழனின் உயிரை மீட்க
சென்று இடையினில் சேர்ந்தனர் அவசரச்
சிகிச்சை அளித்தனர் பாதையிலே

போன உயிரைப் பிடித்து இழுத்து
பொழுது விடிந்திடும் முன்னாலே
ஆன சிகிச்சை அளித்ததனாலே
அன்பன் உயிரைக் மீட்டெடுத்தார்

மருத்துவ பிரிவினர் றோயல் முகாமில்
மிகப்பரிவுடனே சிகிச்சைசெய்து
வருத்தம் வலியை குறைத்துப்பற்றிகை
வழியனுப்பி னராம் வடக்கினுக்கே

திருமலையிருந்து திரியாய் வரைக்கும்
திரும்பவும் தோள்களில் காவுகின்றார்
பெருமலை வீசும் கடலதின் கரையிற்
பிரியவன் றன்னை இறக்கி வைத்தார்

பற்றிக்கை தாங்கிய படகதுசென்றது
பரவையினூடே நீர்கிழித்து
எற்றித் தெறித்திடும் எறியலை மீது
ஏகியதே கலம் வேகமாக

வடக்கை அடைந்து பற்றிக் தனது
வாழ்கையின் முறையை மாற்றுகிறான்
நடக்கும் விடுதலைப் பேரில் தானெதை
நல்குவேன் என்று எண்ணுகின்றான்

அன்னையும் தந்தையும் சிவகுமார் என்று
அவனுக்கிட்ட முதற் பெயரைத்
பின்னை பற்றிக் என்றவன் மாற்றி
பிறந்த தன் நாட்டையும் பிரிந்து வந்து

வந்தவன் வடக்கே பற்றிக் கென்று
வழங்கிய அந்தப் பெயரினையும்
தந்தனன் மாற்றி மதன் எனவழைக்க
தற்போதும் நிலைத்தது அப்பெயரே

❋ ❋ ❋

ஊனமுற்ற கால்களும்
உறுதிகொண்ட மனக்களும்
ஆனமதன் வரதனும்
அன்றிணைந்தார் ஓரிடம்
கூனலற்ற நெஞ்சினர்
கொள்கையதில் குன்றுகள்
ஈனமுற்ற எதிரியை
எரிக்க வொன்று சேர்ந்தனர்

இருவருது கால் ரணம்
இரண்டும் ஆறிப்போன பின்
வரதனுக்கும் மதனுக்கும்
வழங்கினார்கள் போலிக்கால்
வருவதென்ன இடரேனும்
வளைந்திடா புலிமகர்
வரமதென்றே ஏற்றனர்
வருத்தமென்று எண்ணிலர்

பகைப் படையைக் சாய்த்திடும்
பயிற்சி பெற்ற இருவரும்
புகைப்படப் பிரிவினில்
புதிய பயிற்சி பெற்றனர்
நகைக்க வைக்கும் இயல்பினன்
நமது மதன் வரதனை
தகைக்குரிய நண்பனாய்
தன்னுள் ஏற்றுக் கொண்டனன்

ஒற்றைக் காலே உள்ளவன்
என்பதாலே மதன் தனை
மற்றையோருக்கு இளக்கமாய்
மனதில் கூட எண்ணிடான்
சற்றைக்கேனும் ஓய்வின்றி
சரச மாடித் திரிகுவான்
எற்றி எற்றி துள்ளியே
எவரெனினும் சீண்டுவான்

பற்று அற்ற துறவிபோல்
பதுமையான வரதனை
பற்றிக் கொண்டான் மனதினைத்
பாசம் வைத்தான் வரதனும்
முற்றி வளர்ந்த நட்பதால்
முழுமையாகத் தங்களைப்
பற்றிப் பேசி அறிந்தனர்
பகிர்ந்து கொண்டார் யாவையும்

சொந்த வாழ்வு சுற்றத்தை
சொல்லி அறிந்த வேளையாம்
அந்த நாளிற் றான் அது
அவர்கள் நெஞ்சில் உதித்தது
கந்த கத்தை சுமக்கவும்
கரும்புலியாய் மாறவும்
வெந்தணலில் வெடிக்கவும்
வெற்றிப் பாதை திறக்கவும்

தந்தை போலும் ஆனவன்,
தமையனாயும் ஆனவன்
சிந்தை யெல்லாம் விடுதலை
சிந்தனையாய் வாழ்பவன்
விந்தையான பிறவியாய்
வியந்து உலகு போற்றிடும்
எந்தலைவர்க் கிருவரும்
எழுதினார்கள் ஒருமடல்

"எங்கள் அன்பு அண்ணனே!
எம் இருவர் ஆசைகேள்
எங்கள் உடல் ஆவிலைய
எதிரியைக் கருக்கிட
செங்களத்தில் கரும்புலி
செயலியற்ற விழைகிறோம்
தங்களது ஆசியை
தந்தருளும்" எமக்கென

பொங்கியெழும் புலிகளை
பொறுவென் றடக்க வியலுமா
தங்கள் உடல் ஆவியை
தானம் செய்ய வருமிவர்
கங்குல் போக்க எழுகின்ற
காலை எழும் சூரியர்
வெங்களத்தில் கரும்புலி
வீரம் காட்ட விழைகையில்

அங்கவர்க்கு தடையிட
ஆருக்கியலக் கூடுமோ
தங்கத் தலைவன் தம்பியர்
தாகம் உணர்ந்து அவர்களைப்
சிங்களத்துஎதிரியை
சிதைத்தழிக்கும்கரும்புலி
அங்கமென அனுமதி
அளிக்க இவர் துள்ளினார்

நிழற்படம் எடுப்பதை
நிறுத்தி வெளியேறினார்
அழற் படகால் மோதிடு
ஆழிக் கரும்புலிகளாய்
சுழற்றி விடும் அலையிலே
சுழிகள் உள்ள கடலிலே
சுழன்று படகோட்டினார்
சுடுகலத்தால் சாடினார்

❊ ❊ ❊

மதனிருக்கும் இடத்தினில் மகிழ்விருந்திடும்
நிதமுமஒரே பாட்டும் கூத்தும் நிறைந்திருந்திடும்
போலிக் காலை அகற்றிப் புறத்தே போட்டு விடுவான்
வாலில்லா வானரம் போல் மரத்தில் ஏறுவான்
மாங்கனிகள் காய் பறித்து மரத்தில் அடியிலே
ஆங்கு நிற்கும் அன்பருக்கும் உண்ண வீசுவான்
தொங்கி தொங்கி ஒற்றைத் காலால் தென்னை ஏறுவான்
தெங்கிளநீர் பறித்துக் கொடுத்து தானும் பருகுவான்
கடலினியிலே இரவு காவல் படகில் செல்லுவான்
உடல் களைத்து பகலிற்றானும் உறங்கப் போய்விடான்
உடனலைத்த தோழர் பகலில் உறங்கும் வேளையில்
இடமளியான் அவருறங்க இன்னல் செய்குவான்
அட இவனால் அவரடைந்த இடர்கள் தாங்குவார்
விடமறியான் விளை யாட்டினை விளங்குவர் தோழர்
அன்புத் தொல்லை அத்துமீறிப் போகும் வேளையில்
நண்பருக்குள் நமைச்சல் புகைச்சல் எழுவதுமுண்டு
அன்றொரு நாள் வரதனேடு செய்த சேட்டையால்
அன்றையநாள் முழுவதும் வரதன் பேசவேஇல்லை
என்றுமிவர் நட்பினுக்குள் எந்தநாளுமே
ஒன்றுகூடப்பேசிடாது இருந்ததோ இல்லை
நின்று கொண்டே நெடிய மூச்சில் நெகிழ்தனன்மதன்
சென்று பேசத் தூண்டும் நெஞ்சம் மறுக்கும் மறுகணம்
நன்று அல்ல என்று பிறகும் நல்லமனம் சொல்லும்
குன்றிடாத அன்பு நெஞ்சில் கொப்பளித்தது
கன்று ஒன்று கறவைதன்னை நாடல் போலுமே
வென்றது இறுதியிலே வெட்கம் துறந்தது

வாளியோடு கிணற்றை நோக்கி வரதன் செல்கிறான்
தோழன் போகும் கோலமதை மதனும் நோக்கினான்
கீழ் விழியால் தானும் வரதன் மதனை பார்க்கிலன்
ஏழை போலும் இரங்கி மதன் இதயத்தேங்கினான்
கிணற்றடியில் சென்று வரதன் உடைகள் மாற்றிட

மனக்குமுறலோடு மதன் விரைந்து ஓடினான்
வடமெடுத்து வாளியோடு கிணற்றில் இட்டவன்
மடமடெனன்று நீரிழுத்து வரதன் தலையிலே
ஊற்றிவிட்டு கிணற்றில் மீண்டும் தண்ணீர் கோலினான்
ஆற்றியதே மதமனின் செய்கை வரதன் நெஞ்சினை
நாள் முழுவதம் உறைந்திருந்த நெஞ்சு நெகிழ்ந்தது
ஆழ் மனதுள் அடைந்திருந்த அன்பு கிளர்ந்தது
காரிருளாய் நின்ற கோப மேகம் கலைந்தது
ஈரிதயத்திருந்தும் அன்பு சுரந்து கலந்தது
உளமுடைந்து நின்ற மதன் உள்ளம் துள்ளிட
கலகலப்பு மீண்டும் அவனை கௌவிக் கொண்டது
அன்புடையார் தம்முள் ஊடல் நிலைப்பதில்லையே
அன்பை ஊடல் இன்னம் இறுகச் செய்யும் தன்மையே
கண்பனிக்கும் துளியில் கூட காதல் துலங்கிடும்
சொன்ன குறள் வாக்கு என்றும் பொய்ப்பதில்லையே
உறுத்தலோடு உண்மை அன்பன் உழலும் வேளையில்
வெறுத் தொதுக்கில் நட்பு வெறும் வேடமாகிடும்
பொய்மையில்லா நட்பிலுக்குச்சான்று ஆகினார்
மெய் சிதைத்த வேள்வித் தீயில் வேகும் வரையிலே
சீண்டுதலில் தீண்டுதலில் பெயரெடுத்தவன்
வேணடுமெனறே வேடிககையால நோகடிபபவன
கடமையொன்றை கையெடுத்த கணத்தின் மறுகணம்
நடைமுறைகள் யாவும் மாறி நடந்து கொள்ளுவான்
உண்ணுகையில் உறங்குகையில் கடமை உணர்வே
எண்ணுவது எல்லாம் அவன் ஏற்ற பொறுப்பே
மண்ணதற்காய் தன்னுடலை மாய்க்கும் வரையிலே
மண்ணின் மகன் மதன் சுபாவம் இன்ன வகையதே

விரதம் பூண்டு மௌனம் காக்கும் ஞானி போன்றவன்
வரதன் வீணே வாய் திறவான் வாதம் செய்திடான்
எதையும் நண்பர் தேவையற்றுப் பேசும் போதினிலே
"கதையுங்கோவன் இயக்கத்துக்குத் தேவையானதை

என்று கூறி நண்பர் தம்மை நெறிப்படுத்துவான்
என்றுமுள்ள இவன் சுபாவம் அறிவர் அனைவரும்
புகைந்த நெஞ்சில் எக்கணமும் புகையும் எண்ணங்கள்
சிதைந்து போன தன் குடும்பச் சேதி அறிந்திடான்
மடல்கள் மூன்று நான்கெழுதி மனைக் கனுப்பியும்
விடைகள் ஏதுவும் கிட்டிடாது விரக்தியுற்றனன்
கடலிலொரு நாளில் வரதன் காவல் செய்கையில்
மடல் வராத காரணத்தின் விடை கிடைத்தது
ஊரைச் சேர்ந்த ஒரு சிலரை வரதன் கண்டனன்
நீரைக் கண்ட மானைப் போல ஓடிச் சென்றவன்
பெண்டுகள் சேனையதிலே பெற்றவர் தம்மை
"கண்டதுண்டோ" என வினவப் பதில் கிடைத்தது
"கண்டதுண்டு முன்னர். பின்னர் காடையர் வந்து
கண்டதுண்டமாக வெட்டிக் கயமை செய்த பின்
கண்டதில்லை அவர்களது கதையுமறிந்திலோம்
கொண்டுயிரைத் தப்பியோடி குலைந்து போயினோம்
அண்டை அயல் நிலவரங்கள் அறிந்திலோம்" என்றார்
கொண்டிருந்த நம்பிக்கையும் இழந்து போயினன்
பெற்றவர்க்கும் உற்றவர்க்கும் நிகழ்ந்தது என்ன?
மற்றவர் போல் இவரும் மாண்டு அழிந்து போனரோ?
இற்றை வரை எதுபதிலும் கிட்டிடாமையால்
சற்றிருந்த நம்பிக்கையும் அற்றுப்போயினான்
கண்டவர்கள் சொன்னது போல் கதையது அல்ல
குண்டர்படை குதற வந்த வேளையதனிலே
தப்பியோடிக் கிராஞ்சிலே குடியமர்ந்தனர்
அப்படியாய் அவர்கள் ஓடித்தப்பி வாழ்வதை
எப்படித்தான் இவனறிவான் ! தியாக வேள்வியில்
கப்பலிடி செய்து கடலில் கரையும் வரையிலே
தனக்கு என எவருமில்லை தரணியில் என்ற
மனக் கவலையோடுதானே மாய்ந்தனன் வரதன்.

❊ ❊ ❊

ஊரினில் நடத்தை கேட்டு
உள்ளம் உருகின நிலவன்
பேரிடி விழுந்தது போலும்
பெருந்துயர் அடைந்தனன் வரதன்

ஊரவன் கூறிய செய்தி
உண்மையதல்ல உணராள்
வேரோடு சாய்ந்ததாய் குடும்பம்
வெகுண்டான் அழுதான் தன்னுள்

அன்னைக் கனுப்பிய மடல்கள்
அவற்றிக்கான பதில்கள்
இன்னும் கிட்டாததற்கு
இதுதான் காரணமென்று

தன்னுள் முடிவை எடுத்து
தாங்காத் துயரில் தவித்து
தன்னுறவோர்கள் நினைவால்
தனிமையில் இருந்து வெடித்தான்

யாரினி எனக்கு உள்ளார்
யானினி அனாதை அன்றோ
பாரினில் தனித்தவன் என்று
பரிதவித் திட்டான் நிலவன்

வன்னியில் மாதுலர் இருவர்
வல்லியச் சேனையில் உள்ளார்
அன்னவர் யாரென்றியான்
அவர்பேர் பிரிவும் தெரியான்

இத்தனை காலமும் பிறகு
எப்படி அவர் முகமறிவான்
எத்தனை முயற்சிகள் செய்தும்
எண்ணிய கூடிட வில்லை

நாள்கள் கடந்தன ஆனால்
நிலவன் நினைத்தது மறந்தான்
ஆழ் கடற் பயிற்சியில் முற்றும்
அமிழ்ந்தான் மறந்தான் அனைத்தும்

நிலவனின் நிலையிதுவாக
நித்திலமிவனை ஈன்றாள்
குலமகன் சேதிகள் கேட்டு
கொண்டான் தம்பியர் தொடர்ப்பு

மாதுலர் தேடுதல் செய்து
மருகன் இருப்பிடம் அறிந்தார்
தீதெதும் இன்றியே வரதன்
திகழ்வதைக் தெரிவித் தாரே

நிலவனின் இருப்பிடம் அறிந்து
நேரில் கண்டிடவில்லை
இளவலின் செய்திகள் மட்டும்
எழுதினார் வரதனின் தாய்க்கு

நெருக்கிய உறவுகள் இருந்தும்
நேரடித் தொடர்புகளில்லை
சுருங்கிய தொலைவினில் இருந்தும்
சொந்தம் அறியான் வரதன்

சின்னச் சிறுவனாய் வரதன்
சிறுநடை பயின்ற போழ்தில்
அன்னவர் பிரிந்தனரதனால்
அவர்களின் முகமும் அறியான்

காலினை இழந்தபின் வரதன்
கடலினைத் தாண்டியே வந்து
காலம் அதற்கும் பின்னர்
காணதிருந்தனள் அன்னை

உறவுகளான புலிகள்
உறுப்பினர்அனுப்பிய அஞ்சல்
தரவுகள் பெற்றுத் கொண்டாள்
தனயனைக் கண்டிட விழைந்தாள்

கடற்புலி அணியில் வரதன்
கடமையில் உள்ளான் என்று
மடலினைப் மாமன் அனுப்ப
மாதாமகிழ்ந்து விரைந்தாள்

கிழக்கின் கிராஞ்சியில் இருந்து
கிருபை விரைந்தாள் வடக்கே
இழந்தும் ஒருகால் உயிரோ
டிருப்பவன் றன்னைக் காண

அல்லிப் பளையை அடைந்தாள்
அடுத்து ஏரியைக் தாண்டில்
வல்லிய உடையுடன்மைந்தன்
வரதனைக் காணும் ஆவல்

எப்படி யிருப்பான் பிள்ளை
என்னைக் கண்டதும் வியப்பான்
அப்படியே யணைத்தவனை
ஆயிரம் முத்தங்கள் பொழிவேன்

என் கையாலே பிசைந்து
இதமாய் பதமாய் செய்த
தின் பண்டங்களை கொடுப்பேன்
தின்பான் அதையான் ரசிப்பேன்

ஊரின் புதினங்கள் சொல்வேன்
ஊரவர் கதைகள் சொல்வேன்
யாருளர் இறந்தார் என்று
யாவையும் விளக்கிச் சொல்வேன்


மைந்தனை வாரியே அணைத்து
மடினியில் கிடத்தி மகிழ்ந்து
சிந்தை இனித்திடும் தீண்டும்
சுகத்தினைப் மனத்தால் பெற்றாள்

எப்படி இருப்பான் இப்போ?
என்னிலும் வளர்ந்திருப்பானோ
அப்பனை போலோ இந்த
அன்னையப் போலோ இருப்பான்?

எத்தனை கனவுகள் சுமந்து
ஏகினள் கிருபை அன்னை
குத்திடும் நெஞ்சில் ஈட்டி
குதறிடும் என்றவ ளறியாள்

நடத்தவை விளம்பிடும் முன்னர்
நிலவன் நிலைமை என்ன?
நடந்த அத்திருப்பம் என்ன?
நவின்றுபின் தொடர்வோம் கதையை

❋ ❋ ❋



## லெப். கேணல் புலேந்திரன் / சாள்ஸ்

அழிப்புலிகள் நடுவே அவனோர்
அறிவுக் சுடராய் விளங்கியவன்
ஊழிப் புயலாய் பகைவர் முன்னே
உலவிக் காவல் இயற்றியவன்

நாளும் பொழுதும் கடலே வாழ்வாய்
நாட்டினுக்கென்றே உழைத்தவன்
வாழும் வாழ்வு பிறர்க்காய் என்று
வாழ்ந்து காட்டிப் பிரிந்தவன்

சகலரும் அறிந்த சமுத்திர வேங்கை
சாள்சை அறியார் அன்றில்லை
பகைவரும் பயந்து நடுங்கிடும் வகையில்
பரவையில் போர்கள் புரிந்தனால்

நுண்ணிய அறிவும் நுடக்கா மனமும்
நூதமான பேர் வழியான்
கண்ணியம் தவறான் கடமை மறவான்
கடற் சமரதிலும் வல்லவனே

அண்ணன் தலைவன் அகத்தை அறிந்தவன்
அடுத்த தளபதி சூசை மனம்
எண்ணும் செயலை இயற்றிய முடிப்பவன்
எதிலும் ஞானம் மிக்கவனாம்

படகில் செல்லும் பயணிகள் தம்மை
பாதகப் படைகள் கொலை செய்ய
கடலிற் பாய்ந்து காவல் செய்து
கடற்படை கலங்க அடி கொடுப்போன்

எந்தமிழ் மக்கள் எதிரியின் கையால்
இறப்பதை இனியும் அனுமதியோம்
செந்தமிழ் மக்கள் குருதியில் கிளாலி

செங்கடலாவதை இனிச் சகியோம்
வந்திடும் பகையை வழிமறித்தடித்திடும்
வழக்கினை இனிமேல் மாற்றிடுவோம்
தந்திரமாக தளத்தினிற் கிழுத்து
தலையடி இனிமேல் கொடுத்திடுவோம்

என்று சாள்ஸ் தனது எண்ணம் அதனை
இயம்பினன் தனது மூத்தவர்க்கு
நன்றெனக் கண்டு நவின்றது போல
நடத்திடத் தாக்குதல் அனுமதித்தார்

தாக்குதல் அணியின் தலைமை அதனை
தானே ஏற்றுச் செயற்பட்டான்
ஊக்குதல் கொடுத்து உடன் வருவோருக்கு
உரிய கட்டளை பிறப்பித்தான்

பதினொன் றாறு தொண்ணூற்று மூன்றில்
படகினில் ஏறிப் புறப்பட்டான்
விதியது அழைத்த நாளதுவாமோ
வீரன் களத்தில் குதித்திட்டான்

சூடை ஜீவா படகுகள் தம்மை
சூழ்ந்திடக் குருவிப் படகுகளும்
காடையர் கூட்டம் கடற்கொலை வெறியரை
களத்தே காணப் புறப்பட்டான்

சாவா வாழவா எதுவென்றாலும்
சாதிப்பேனெனப் புறப்பட்டான்
ஜீவாப்படகில் தளபதியாக
ஜெயமினி என்றே புறப்பட்டான்

கனரக ஆயுதம் பூட்டிய படகில்
காற்றாய் கடலில் விரைத்திட்டான்
மனரதம் வெற்றியை நோக்கிப் பறக்க
மக்களை காக்க புறப்பட்டான்

எதிரிகள் படகுகள் எதிரினில் வரவும்
இட்டனன் கட்டளை தோழருக்கு
உதிரும் சன்னங்கள் உறுமும் ஒலிகளில்
ஒரு பெரும் கடற்போர் நிகழ்ந்ததுவே

ஐம்பது கலிபர் ஆயுத்தாலே
அடிக்கடி கொடுத்தான் சாள்ஸ் கடலில்
தெம்பது இழந்து தெவ்வர் கலங்கினர்
திசை மறந்தவராய் பரிதவித்தார்

தீப்பிழம்பாக துப்பிய ஆயுதம்
திடுமென இயங்கிட மறுத்திடவும்
காப்பிடம் அற்ற கடலில் நடுவே
கணப் பொழுதினிலே திகைத்திட்டான்

ஆயுதம் செய்த சதியதானாலே
அதனைத் திருத்திட முயலுகையில்
தீயெனப் பாய்ந்தது எதரியின் குண்டு
திருமகன் நெஞ்சை தாக்கியது

அஞ்சா வீரன் ஆழிப் புலிமகன்
அந்தோ வீழ்ந்தான் படகினிலே
வஞ்சனை கனகர ஆயுதம் செய்ய
வள்ளத்துள்ளே வீழ்ந்திறந்தான்

தளபதியோடு தளமதில் நின்ற
தாக்குதல் செய்த கடற் புலியார்
இளமகன் மகானும் இவனுடன் ஒன்றாய்
இன்னுயிரீய்ந்தான் களத்தினிலே

உளமதுஉடைந்தார் உடனிருந்தோர்கள்
உடனடியாக பின்வாங்கி
வளமது இழந்து வாடிய நிலையில்


வந்தனர் கிளாலிக் கரை நோக்கி
பகைப் படை அழிக்க படகினில் விரைந்த
பயமறியாதான் சாள்ஸ் இழப்பு
திகைப்பினைஅளிக்க பதிலடி கொடுக்க
திரைகடற் புலிகள் முடிவெடுத்தார்

கரும்புலித் தாக்குதல் செய்வோம் அந்த
கடற்படைப் பகைவரைத் கொன்றொழிப்போம்
அரும்பெரும் தளபதி சாள்சின் ஆன்மா
அடைந்திடும் சாந்தி அதனாலே

இனியும் பொறுத்திடல் இழுக்கே எமக்கு
இடிப்போம் பதிலடி கொடுத்திடுவோம்
குனியும் நிலையில் புலிகள் இல்லை
குவலயம் அறிய இதை முடிப்போம்

என்றவர் குமுறலை ஏற்றான் தலைவன்
இயற்றிடும் எனவே ஆணையிட்டான்
வென்றிடல் ஒன்றே இலக்கெனக் கொண்டவர்
வெகுண்டெழுந்திட்டார் வினை முடிக்க

❋ ❋ ❋



# மதனும் வரதனும் புறப்படுதல்

ஆணை கிடைத்ததும் ஆழிப்புலிகள்
ஆர்ப்பரித் தெழுந்தார் படகேற
வீணாய் பொழுதினி கழித்திடலேனோ
விரைவோம் என்றவர் பகை சாட

சாள்சைக் கொன்றவன் சரித்திரம் முடிப்போம்
சமுத்திரத்துள்ளே மூழ்கடிப்போம்
நாழிகைப் பொழுது நாமினிப் பொறுக்கோம்
நான் நான் என்றே பலர் எழுந்தார்

புலேந்திரனான சாள்சின் இழப்பு
புயலாய் அவரை ஆக்கியது
பலந்தனை இழந்தது கடற் புலி என்று
பகைவர் நினைப்பதும் தாக்கியது

வலியக் கொழுவிட வந்தவர் தங்கள்
வலிமையை இழந்தார் எனப்பகைவர்
புலியை நினைத்திடல் புண்ணாய் உறுத்திட
பொறுப்தோ இனியும் எனக் கிளர்ந்தார்

மக்களைக் காத்த மாபெரும் வீரன்
மரணம் அடைந்தான் எனக் கேட்டு
கொக்கரிக்கின்ற கொடியவர் இனியும்
கொட்டம் அடிப்பர் கடல்மீது

படகினில் செல்லும் பயணிகள் தம்மை
பயமது வின்றிப் கொலை செய்ய
இடமது அளிக்கும் இனியும் பொறுத்தால்
இழிவிது எனவே அவர் நினைத்தார்

குண்டெனவெடிக்கும் குருவிப் படகுகள்
கிளாலிப் பகைவர் கதை முடிக்கும்
தொண்டினை இயற்ற தயாரித்தார்கள்
தொண்டரும் இருவர் தெரிவானார்

தொண்டினை இயற்றத் தெரிவது ஆனவர்
தோழர் வரதனும் மதனுமேதான்
சுண்டிய ஞாணின் சுருதியைப் போலும்
சுறுதியாய் இருவரும் புறப்பட்டார்

ஒன்றாய் வாழ்ந்து ஒன்றே நினைத்து
ஒன்றாய் வீரச் சாவடைய
ஒன்றாய் கரும்புலி அணியில் இணைந்தவர்
ஒன்றாய் இணைந்தார் இதிற்கூட

வரதனும் மதனும் புறப்பட்டார்கள்
வழிமறித்தடித்துப் பகையழிக்க
இனரதனைக் தேடும் கரும்புலியாக
இரவினில் திரிந்தார் படகுகளில்

ஒரு இரவல்ல பல இரவுகளாய்
ஒவ்வொரு நாளும் விரைவார்கள்
நரபலி கொள்ள வரும் பகைவனையே
நாடித் தேடிக் கடலலைந்தார்

வரவினைத் தேடிக் கடலடைந்தார்கள்
வரவில்லை பகைவன் என்பதனால்
வரதனும் மதனும் கரை வருவார்கள்
வாடிய முகத்தில் ஏக்கமுடன்

சாவதிற்கூட எத்தனை தாகம்
சத்திய வேள்வியில் தமை ஈய்ந்து
போவதிற்கூட எத்தனை வேகம்
புவனம் இதுபோர் கண்டதுண்டோ?


நாளது வாரம் மாதமொன்றாகி
நடந்தன மேலும் இரு திங்கள்
பாழது ஆச்சே பலஇர வென்று
படபடத்தார்கள் இருவருமே

இடியன் படகால் இடிப்பது எப்போ?
எதிரியின் கதையை முடிப்பதுஎப்போ?
பொடியதுவாகப் புல்லரைநொருக்கி
பொங்கும் அலையுள் புதைப்பது தெப்போ?

என்பதே இருவரின் ஏக்கமதாச்சு
என்றது கூடும் எனவெண்ணி
வன்பகையோரின் வரவினைக் காத்து
வள்ளத்தோடு அலைந்திட்டார்

வந்தது அவர்கள் தேடிய நாளும்
வெற்றித் திருநாள் அவர்களுக்கு
தந்தனர் செய்தியை தரணியோர் வியக்க
தற்கொடை யாகினர் தமைத் தந்து

❊ ❊ ❊



## 1993 ஓகஸ்ட 25ம் நாளில்............

புலேந்திரன் படகில் புன்னைகையோடு
புறப்பட்டானாம் மதன்கரு வேங்கை
குமரப்பாவில் குதுகலத்துடனே
குறுநகைமின்ன வரதனசென்றான்
நடுவிரவானது நகர்ந்த அவ்வேளை
நாளது அடுத்தது தொடங்கிய காலை
படுகொலை புரிந்திட பாதகர் வந்தார்
பயணிகள் படகுகள் நோக்கியே விரைந்தார்
தொடுத்தன போலும் விற்களிற் கணைகளை
தோழர்கள் இருவரும் துடித்தனர் பாய்ந்திட
இருவரின் இதயத் துடிப்புகள் யாவையும்
அருகில் இருந்தவர் அனைவரும் உணர்ந்தனர்
மதன்றன் கழுத்தின் குப்பியை கழற்றி
மருவியே நின்ற கண்ணாளிடத்தே
"இதனைப் பிடி" யெனச் சொன்னவன் பின்னர்
அதனைக் கொடுத்ததின் பொருளென்ன
எப்படியும் இன்றிடிப் பேன்அவர்களையும்
இன்று மீண்டும் திரும்பவே மாட்டேன்
குப்பியைக் கொடுத்தவன் குறுநகையோடே
குறியினை நோக்கிய படியே நின்றான்

நாகதேவன் துறையினில் இருந்து
நரபலி கொள்ள நாக்கினை நீட்டி
தாகமோடு வந்தனர் கடற்படை
தம்மை இரண்டு அணிகளாய் பிரித்து
புலிகளைக் தடுத்துப் போரிடஓரணி
பலிகொள மக்களை விரைந்து மறு அணி
இருமுனைத் தாக்குதல் தொடங்கிய புலியணி
இருந்ததை அறியா திராட்சதர் வரவும்
கருமருந்தோட காத்தவன் நின்ற
கரும்புலி மதனுக்கு கட்டளை பிறந்தது

தாக்கிடு என்றணித் தளபதி யாணையால்
ஊக்கம் அடைந்தனன் மதன் உடனிருந்தவர்
ஏக்கமுடனே இவன் முகம் நோக்கவும்
சீக்கிரம் விரைந்தான் சிரித்திடு முகனாய்
நீரினை கிழித்துக் சென்றது புலேந்திரன்
நீரினைப் பிழையீர் என்றனர் கரும்புலி
கங்குலைக் கிழித்துக் கரும்புலி படகது
தங்களை நோக்கி வருவது கண்டதும்
*வோட்டர் ஜெட்டின் வேகத்தை கூட்டி
ஓட்டம் எடுத்திட முனைந்தனர் அதனை
ஓட்டியே வந்தவர் களநிலை உணர்ந்து
கூட்டியே விரைவை குறிப்போடேகி
இடித்தது கரும்புலி ஒடித்தது படகினை
முடித்தது கடற்படை கொலைஞரின் கதையினை
ஒடித்தது படகினை இரு துண்டாக
வெடித்தது புலேந்திரன் குடித்தது உயிரினை
மதனவன் இலக்கிடி மகத்துவமானது
எதனையும் எவரையும் எஞ்சிட விடவில்லை
கதையை முடித்ததால் கடற்படை உடலங்கள்
சிதலங்கள் ஆகியே மிதந்தன அலையிடை
அடித்துக் கூறியபடியே தன்கடன்
முடித்து மதனுடல் கலந்தான் கடலொடு
மூழ்கிடும் வோட்டர் ஜெட் முழுதும் மூழ்குமுன்
ஆழ்கடல் அதனுள் அமிழ்திடும் முன்னரே
கடற்புலி வீரர் கலத்தினுள் பாய்ந்து
கடற்படகிருந்து ஆயுதம் யாவையும்
கடகடவெனவே கையகப் படுத்தினர்
காத்திருத்தார்கள் அடுத்த படகினைப்
மீளேன் என்று முன் மிடுக்கொடு சொன்ன
தாளாத் தற்கொடை தனை மதன் செய்தான்
வாழேன் என்று வார்த்தைகள் சொன்னான்
வாழ்வான் என்றும் வாழ்வோர் மனங்களில்



* 115 இலக்கம் கொண்ட வோட்டர் ஜெட் படகு

பகைவன் படகுகள் வந்ததை இரண்டு
வகையுற மதனவன் வைத்த பேரிடியில்
புகையுண்டு கடலில் பாதிகளாகிப்
புதையுண்டு ஒன்று போகவும் அடுத்ததை
கடற்புலி வீரரின் கலங்கள் சூழந்து
படைக்கல முனைகள் படபடத் துமிழ்ந்தன
நடுவினில் நின்றது நாதியற்றதுவாய்
நாசமே செய்திட வந்த அக் கடற்கலம்
நாகதேவன் துறையினைக் கூவி
நாங்கள் மீண்டிட வழியினி இலையெனத்
சேதியை சொல்லி உதவியைக் கோரி
செய்திடும் சீக்கிரம் என்று இறைஞ்சவும்
துணையதை வேண்டித் தவித்து நின்றழும்
தோழரைக் காக்க கடற்படைப் படகினை
வருவதன் முன்னரே வஞ்சகர் படகினை
வளைத்து நின்றவர் வரதனை அழைத்தார்

❋ ❋ ❋

மதனின் இடியால் மாற்றலர் கூட
மனமது கலங்கித் தவித்து நின்றார்
மதனின் இழப்பால் கூடவே வந்த
மற்றவர் கூடக் கலங்கி நின்றார்

மதனுக்கன்றோ கிடைத்தது வாய்ப்பு
மலையாய் உயர்ந்தான் சாதனையாலே
மதனைப் போலும் எனக்கெது வாய்ப்பு?
மனதிற் குமைந்தான் நிலவன் நின்று

ஒன்றாயத் இணைந்து ஒன்றாய் இயங்கி
ஒன்றாய் தானே புறப்பட்டோம் நாம்
ஒன்றாய் இலக்கை இடித்திடும் வாய்ப்பு
இன்றிப் போச்சே எனவே நொந்தான்

குன்றா வீரக் குழந்தை நிலவன்
குமரப்பாவில் காத்து நின்றான்
இன்றே நானும் இடித்திடு வேனென
இலக்கினை வரதன் பார்த்து நின்றான்

❊ ❊ ❊

குமரப்பாவின் இலக்கினை நோக்கியே
அமராத் துடிப்புடன் அமைதியற்றிருந்த
நிலவன் செவிகளில் விழுந்தது அழைப்பு
நிமிர்ந்தான் நிலவன் நிறைந்திட நெஞ்சு
பகைவனைச் சுற்றி வியூகம் அமைத்து
படகுகள் காண்க அவை எமதாகும்
அவைகளைப் தவிர்த்து நடுவே நிற்கும்
அரக்கனின் படகை நொருக்கிடு எனவும்
அறுபது நாளாய் எதிர்பார்த் தலைந்த
அந்தக் கணத்திணை அடைந்தேன் என்றும்
சாவதில் இனிமை காண்பேன் இந்தப்
பூவதில் பிறந்த புண்ணியம் பெற்றேன்
நொடிப் பொழுதானபின் நொறுக்கிடப் போமவன்
வேகப் படகோடு விரைந்தான் இலக்கிணை
அனைத்தையும் மறத்தான் ஆயினும் வரதன்
அண்ணன் நினைவையே மனதிற் கொண்டான்
செலுத்திய படகது சென்றது விரைந்து
வலுத்திறனோடு வழுக்கியே நீரினில்
வந்திடும் கரும்புலி படகினைக் கடற்படை
வள்ளத்திருந்தவர் கண்டனர் அந்தோ
யாரதைப் தடுப்பார்? யாரினிப் பிழைப்பார்?
நீரிடை விரைந்து குமரப்பாவது
நெருப்பினை உமிழ்ந்தது நிகழ்த்திய இடியால்
பேரிடி எழுந்தது பிளந்தது பகைக் கலம்
பாரிய இடியால் பல்துகளானது
காவியமானான் கரும்புலி நிலவன்
காலம் இணைத்த காதலன் மதனும்

கண்டே நிலவனைக் களிப்படைந்திருப்பான்
இருபத்தைந்து நள்ளிரவன்று
இன்று நம் கடன் இயற்றுவம் என்றார்
இருபத்தைந்தாம் நாளது நகர்ந்து
இருபத்தாறு தொடங்கிய காலை
இருவரும் தமது இலட்சியம் முடித்தார்
அணைந்தனஇருவரின் உயிரொளி எனினும்
இணைந்தனர் ஒன்றாய் வீரச்சாவினில்
ஒன்றாய் இணைந்து ஒன்றாய் வாழ்ந்து
ஒன்றாய் உயரிய கருமம் முடித்து
ஒன்றாய் வென்றார் உயிரையும் கொடுத்து
குன்றா வீரக் குழந்தைகள் இருவரும்
தென்றமிழ் ஈழத் திருமகள் ஈன்ற
தெய்வப் பிறவிகள் தேயா நிலவுகள்
பொன்கள் இவர்க்கு பெறுமதி உளவோ
மண்தான் இவரை மறத்திடுமாமோ
உறவுகள் விட்டு ஊரையும் விட்டு
உவப்புடன் வாழும் உணர்வுகள்விட்டு
பிறத்திடும் சந்ததி பெருமையுள் வாழ
இறந்தவர் இவருக்கு இணை எவராமோ
தளபதி சாள்சை கொன்றவர் தம்மை
களமதில் வெல்ல கங்கணம் கட்டி
சூளினை உரைத்தவர் சொல்லிய படியே
ஆழியில் மோதி அடைந்தனர் வெற்றி
ஒற்றைக் கால்களை இழந்தவர் எனினும்
மற்றை எதிலும் சளைத்தவர் அல்ல
இற்றை நாளில் நினைத்திடும் காலும்
இதயப் பூக்கள் சொரிந்திடல் வேண்டும்

❋ ❋ ❋

# பெற்றவள் கண்ட காட்சி

அற்றை நாளில் அல்லிப்பளை
    கரையிருந்துமே
மற்றதான துறை கிளாலிக்
    கரையை நோக்கியே
பெற்றவயிறு ஒன்று படகில்
    மிதந்து வருகுது
வற்றிடாத அன்பை வாரி
    வழங்க வருகுது
ஒற்றைக் காலை இழக்கு முன்னர்
    மகனைக் கண்டவள்
உற்ற தோழர் உயிரைக் காக்க
    கொண்டு சென்றபின்
மற்றதென்ன நடத்து தென்று
    மாதா அறிகிலாள்
சற்றுச் சில நாள்கள் முன்னே
    சங்கதி அறிந்தாள்
தம்பி ஒருவன் வடக்கிலிருந்து
    தகவல் தந்ததும்
தும்பியன்ன பறந்திருப்பாள்
    சிறகு இருந்திடில்
நம்பிக்கையை நெஞ்சினிலே
    நிறைத்த நிலையிலே
தெம்புடனே தெய்வ அன்னை
    தேடி வருகின்றாள்
தம்பி இப்போ வளர்ந்திருப்பான்
    தன்னிலும் மேலாய்
தான் வளர்ந்த பிள்ளை தன்னை
    மறந்திருப்பானோ?
நெம்பி நெம்பி ஒற்றைக் காலில்
    நடந்து வருவதை
நெஞ்சினிலே வளர்த்தவனை
    நேரில் காணுவேன்


என்று அன்னை எத்தனையோ
கனவுகளோடு
எழும் அலைகள் ஊடே வள்ளம்
மீது செல்கையில்
கன்று தனைக் காணச் செல்லும்
கறவையானவள்
வென்று களம் ஆடுகின்ற
வேள்வி காணுவாள்
நடுக்கடலில் அன்னையவள்
செல்லும் போது தான்
திடுக்கிடவே வைக்கும் அந்தப்
போர் நிகழ்ந்தது
சடசடனெச் சுடுகலன்கள்
முழங்கும் சப்தமும்
சுடுதணலாய் குண்டுபாயும்
காட்சியும் கண்டாள்
கடற்சமரை முதன்முதலில்
காணுகின்றவள்
உடல் சிலிர்த்து நின்று மன
உதறல் கொள்கின்றாள்
நடுக்கடலில் தீப்பிழம்பு
தோற்றம் கண்டதும்
துடுக்கிழந்து கடற்படைகள்
தாழக் கண்டனள்
கரும்புலி மோதுதென்று
யாரோ கூறினார்
அரும்புகளே தமைக் கருக்க
அகத்தில் வாடினார்
கருணை அம்மா காட்சிகண்டு
கருணை கொள்கிறாள்
வரதன் தனது மகனே ஆங்கு
வெடிப்பதறிகிலாள்
யாரோ எவளோ பெற்றபிள்ளை
யாகமாவதாய்

பாரா அந்தப் பிள்ளைக்காகப்
பரிவு கொள்கிறாள்
வீரச் செல்வர் விதையதாகும்
வேள்வி கண்டவள்
தீராத் துயரால் தீய்ந்தாள் நெஞ்சில்
தியாகச் செல்வர்க்காய்
தன்னைக் காண வந்த தாயின்
படகைக் காத்துத்தான்
தான் வெடித்தான் என்ற சேதி
தனயனும் அறியான்
அன்னை வரும் படகைத் காத்தே
அன்பு மைந்தனும்
அக்கினியாய் பொசுங்கியதை
அவளும் அறிந்திலள்
கரையடைந்த வரதன் அன்னை
அன்று இரவு தான்
கடலினிலே கண்ட காட்சி
அதனைப் பற்றியே
கருணை அம்மா தனது கன்றே
வெடித்த தறிந்திடாள்
கரை கடந்த வியப்புடனே
கதைகள் கூறினாள்
கதைகதையாய் அவள் சொலவும்
கேட்டு இருந்தவர்
இதை அவர்க்கு எவருரைப்ப
தென்று அஞ்சினர்
அன்றைய நாள் ஈழநாதம்
இதழும் வந்தது
சென்ற இரவின் கடற் சமரின்
செய்தி வந்தது
ஊன் உயிரை உதிரியாக்கி
பகையழித்தவர்

உருவம் தாங்கி அன்றைய நாள்
சேதி தந்தது
ஈன்ற தனது இளைய கன்றே
முந்தை இரவிலே
தோன்றிய அத் தீப்பிழம்பில்
தீய்ந்த தறிந்தனள்
தன் இதயம் தான் வெடித்தாள்
தாகப் பதறினான்
"என்னே விதி" என்று எண்ணித்
தான் கதறினான்
என்மகனைப் காண வந்தும்
முடியவில்லையே
அன்னை அவனைக் எரிதழலாய்
கண்டதென் பேறோ?
என்ன செய்வேன் என்ன செய்வேன்
என்று ஏங்கினாள்
எனினும் வீரத்தாய் அதனால்
அதையும் தாங்கினாள்
என்ன தவம் இயற்றினாளோ
இவனை ஈன்றிடப்
என்ற குறட் சொல்லினுக்கு
உரியவளானாள்
கரும்புலியின் தாய் மனதும்
கடினப் பாறையோ
புலியிருந்து போனதொரு
புதிய குகையிதோ
என்று மற்றார் வியந்திடவும்
இரும்பென நின்றாள்
நன்றுசெய்வான் நிலவன் என்று
நம்பவும் செய்தான்
புதிய புறம் கூறி நிற்கும்
புனிதக் · தாயிவள்

புலவர் நாவும் இவள் புகழை
புகழ மறுக்குமோ?
அகன்றிடுமோ இவள் பெருமை
தமிழர் நெஞ்சினால்
பகன்றிடுமே பசுந்தமிழின்
பனுவல் இவள் புகழ்
ஆழிக்கரும்புலிகளான
மதன் வரதனும்
அழிவராமோ ஊழிக்காலம்
வரையில் உலகிலே
உச்சரிக்க இவர் பெயரை
உறுதி தோன்றுமே
இச்செகத்தில் ஈழப் பெருமை
இவரால் வாழுமே
துச்சமென உயிர் மதித்துப்
துண்களாகினர்
தூய வீரர் கரும்புலிகள்
நாமம் வாழ்கவே.

❊ ❊ ❊



## மேஜர் புகழரசன் – புவீந்திரன்
## கப்டன் மணியரசன்.
## 29.11.1993 பருத்தித்துறைக் கடலில்
## சுப்பர் டோறா மீதான மூழ்கடிப்புத் தாக்குதல்.

*பாதைகள் தடைசெய்து பகைவர் செய்த*
*பாதகச் செயல்களால் கிளாலி ஏரி*
*பாதையென்றானது பயணம் செய்ய*
*பலிகளும் கடந்தன பரவைமீது*

*வேதனை கொள்கிறார் மக்களென்று*
*வெற்றியின் நாயகன் முடிவெடுத்து*
*சாதனைக் கடற்புலி வீரர் தம்மை*
*சமுத்திரக் காவலுக்காணையிட்டான்*

*வேட்டைகள் ஆடிய வெறியர் தம்மை*
*வேட்டையே ஆடினர் கடலின் மைந்தர்*
*சாட்டையாய் வரதனும் மதனும் பாய்ந்து*
*சரித்திரம் படைத்ததை முன்னர் சொன்னோம்.*

*ஏரியின் பக்கமே புலிகள் என்று*
*எண்ணிய எதிரியின் கவனமிப்போ*
*பாரிய கொடுமைகள் செய்வதற்கு*
*பருத்தியூர் கடலதில் திரும்பிற்றம்மா*

*மீன்பிடி வள்ளங்கள் மீது எல்லாம்*
*மிலேச்சர்கள் கொடுமைகள் செய்யலானார்*
*ஊனடித்துயிர் குடித்திடுவோராக*
*உலுத்தர்கள் வருத்தினார் உழைப்போர் தம்மை*

அலை மடிமீதிலே ஆடிச்சென்று
அன்னையள் ஆழியாள் கருணையாலே
வலைமடி நிறையவே மச்சம் அள்ளி
வந்திடும் வேளையில் வருவர் தீயர்

கொலையதும் செய்குவர் கொடிய பேயர்
கொள்ளையும் அடித்தனர் உழைப்பையெல்லாம்
விலையில்லா உயிர்களை குடித்த பின்னர்
விளம்புவர் புலிகளைக் கொன்றதாக

நள்ளிராத் தாண்டிய வேளை தன்னில்
நாயகி பள்ளியில் துயிலை நீக்கி
கொள்ளியிட்டடுப்பினில் நெருப்பையேற்றி
கொதித்திட வைத்து நீர் தேனீராக்கி

மெத்தென அடிகளை வைத்துச் சென்று
மெல்லிய குறட்டையோடுறங்குவோனாம்
அத்தானை அணுகுவாள் ஆங்கு அன்னான்
அழகுடன் துயின்றிடும் காட்சி காண்பாள்

புல்லினால் நெய்தபாய் மீது அங்கப்
புடைப்புக்கள் திரட்சிகள் தோன்றத் தூங்கும்
கல்லினால் செதுக்கிய சிற்பம் போன்றும்
காதலன் கண்துயில் காட்சி காண்பாள்

பித்தென மாறுமாம் அவளின் நெஞ்சு
பிதற்றிடத் துடிக்குமாம் உதடு ரெண்டு
முத்தமொன்றீய்ந்திட மூக்கு முந்தும்
முழுதுமே நெஞ்சினுள் அடங்கிக் கொள்ளும்

கள்ளியாய் காதலை மறைத்துக் கொண்டு
காதலன் மேனியை மெல்லத் தீண்ட
"பள்ளிவிட்டெழுக நீ" என்று பாவை
பகர்ந்திடும் பாங்கினை என்னவென்பேன்

"வெள்ளிகள் மறைந்திடப் போகுதத்தான்
விடிந்திடும் முன்னரே மீள வேண்டும்
சுள்ளெனச் சுடுகுது தேனீர் உண்பாய்
சுறுக்குடன் கடலிடை விரைக" வென்பாள்

மல்லனாய் படுக்கையை விட்டெழுந்து
மதுவென மனைவியை கண்ணால் மாந்தி
மெல்லிய குறுநகை இதழில் மின்ன
மிடுக்குடன் நடந்து தன் கடன் முடிப்பான்

பல்லினை விளக்குவான் பாகாய் ஆற்றி
பாவையர் நீட்டிய தேனீர் உண்டு
அல்லியின் முன்னரே அவனுக்காக
அலர்ந்தவள் துணையிடம் விடையும் கொள்வாள்.

பரவையின் பக்கமாய் பாதம் ஏகும்
பாவையள் பக்கமாய் நெஞ்சு தாவும்
இரவிபோல் இருட்டிலும் இனியாள் தோற்றம்
இதயத்து வாசலில் ஏறி நிற்கும்.

வலையொடு கம்பொடு கரையே சென்று
வள்ளமே ஏறிட மனைவி காண்பாள்
அலையொடு அலையென தாவித்தாவி
அவன் செல்ல அலையிவள் அகத்தில் மோதும்.

பரவையின் துளியெல்லாம் இவளைப் போன்ற
பாவையர் சிந்திய விழி நீராமோ?
வரவையே பார்த்தவர் வழித்த நீர்தான்
வாரிதி உப்பு நீர் ஆகிற்றாமோ?

மச்சமாய் அள்ளிடச் செல்லும் சொந்த
மச்சானை எண்ணிட மனது ஏங்கும்.
அச்சமே தோன்றிட அம்மா கடலே
அத்தானைக் காத்திடு என விரப்பாள்

இமைகளுள் விழிகள்நீர் நனைந்து ஏங்கும்
இரணியர் கடற்படைச் செயல்கள் எண்ணி
சுமையினால் இதயமே சுருங்கி வீங்கும்
சுடுபுனல் இறுதியில் விழிகள் சிந்தும்

போனவன் திரும்பிடும் கணத்துக்காக
புலர்ந்திடும் பொழுதினில் புலம்பும் பூவை
ஈனரால் இவருக்கு ஏதுமென்றால்
என்விதி எதுவெனத் தொண்டை கம்மும்

எண்ணிய போலவும் நடத்தல் கூடும்
இரக்கமில்லாதவர் கண்ணிறப்பட்டு
திண்ணிய மீனவர் உயிர்கள் கொன்று
தின்னுவர் திமிங்கிலக் கடற்படையர்

வறுமையின் பிடியினில் நின்று நீங்க
வலையுடன் சென்றவர் எதுவுமின்றி
வெறுமையாய் வருதலும் உண்டாம் அந்த
வெறியரின் பறிமுதற் சிறுமையாலே

பசியதின் கொடுமையை நீக்க வேண்டி
படித்திடும் பிள்ளையை இடை நிறுத்தி
கசிந்திடும் விழியுடன் கடலில் போக்கி
கரையினில் விம்மிடும் உறவும் உண்டாம்

அடித்திடும் அலையினில் சென்ற பிள்ளை
அரக்கரின் கைகளில் சிக்கிப் போவான்
வெடித்திடும் குண்டுகட் கிரையாய் வீழ்ந்து
வெற்றுடலாகவே கரையில் சேர்வான்

கருத்தரித்திருந்தவள் கடலிற் போந்த
கணவனை இழந்ததால் தாலி நீப்பாள்
பெருத்துடல் ஊதியே கரையே சேர
பிள்ளையின் பலனென சிசுவை நோவார்.

பேச்சுக்கள் முடிந்தன இன்னும் சின்னாள்
பின்னரே திருமண நாளை வைப்பார்
மூச்சது போய்விடும் அதற்கு முன்னால்
முடியுமா பொறுத்திட அந்தப் பெண்ணால்.

வதுவையின் முன்னரே வாழ்விழப்பாள்
வரனவன் மாண்டதால் விதவையாவாள்
புதுமணப் பெண்ணென ஆகுமுன்னே
பூவையள் பூமியில் கைம்பெண்ணாமோ?

கனவுகள் யாவுமே கரைந்து போகும்
கற்பனைச் சுகமதே எச்சமாகும்
உணவுடன் உறக்கமும் மறந்து போகும்
ஊரவர் பழிப்புக்கு இலக்கும் ஆகும்

அண்ணனைத் தம்பியை இழந்தோ மென்றும்
அப்பனைப் பிள்ளையை இழந்தோ மென்றும்
கண்ணெனும் கணவனை இழந்தோ மென்றும்
கதறிடும் குரலொலி கரையில் கேட்கும்

விளக்கினை அணைத்துமென்? விழிகள் தூங்கா
விதியினை எண்ணியே வழியும் கண்ணீர்
வழக்கமே இதுவென வாகிப் போச்சாம்
வலைத்தொழில் செய்துயிர் வாழுவோருக்கு

மண்ணதை மாற்றலர் சூழ்ந்ததாலே
மரணமே வந்தவர் வாசல் தட்ட
எண்ணவொன்னாத பேர் இடர்களாலே
ஏழைகள் ஆயினர் கரையின் மக்கள்

தொல்லைகள் ஆயிரம் தொடர்ந்து நீள
துன்பமே தாங்கிடாதேழை மக்கள்
இல்லையா ஆறுதல் என்று தேடி
இளையவன் சூசையை நாடிச் சென்றார்

கடற்புலித் தானையின் தலைவனாகி
கேணலாய் அண்ணனால் உயர்வு பெற்றோன்
இடர்க்கெல்லாம் இடர்தரும் இளவல் சூசை
இவர்களின் துயரெலாம் அறியக் கேட்டான்

முனைஎனும் கிராமமும் மற்றும் சுப்பர்
மடமெனும் கிராமமும் வாழுகின்ற
அனைத்தையும் அறிந்தவர் இருவர் மூலம்
அறிந்தனன் ஆங்குள நிலைமையாவும்

அண்ணனை அணுகினான் அறிந்தயாவும்
அட்சரம் பிசகிடா வகையில் செப்பி
மண்ணொடு மக்களைக் காக்கவுள்ள
மாபெரும் கடமையை விளக்கி நின்றான்

பருத்தித்துறையினுள் வாழு மாந்தர்
படுந்துயர் யாவையும் கேட்டறிந்து
வருந்திடும் துயர்களை வழித் தெறிய
வகுத்தனர் வழிகளை ஆய்வு செய்து

மீனவர் தமைக்கொல்லும் மிலேச்சர் தம்மை
மேலுலகனுப்பிட அவர்கள் கொல்லும்
மீனவர் உருவிலே சென்றங்கவரை
மிஞ்சிடாதழித்திட உறுதி பூண்டார்

கடற்படை வருகின்ற கப்பல் மீது
கரும்புலி இடியினால் மூழ்கடிக்க
உடற்குண்டே உரியதோர் கருவியென்று
உறுதியாய் இறுதியில் முடிவு கொண்டார்

கரும்புலி அணியினில் பெயரைத் தந்து
கடமையைப் புரிந்திட காத்து நிற்கும்
பெருங்கொடையாளரில் எவர்க்கு இந்த
பேற்றினை கொடுப்பதென்றாய்வு செய்தார்

அருமந்த பணியிதை ஆற்றுவதற்கு
அழைப்பினைப் பெற்றவர் இருவராவார்
இரும்பெனும் இதயத்தன் புகழரசன்
இளம்புலி கரும்புலி மணியரசன்

இன்னுமோர் இளவலும் தெரிவு ஆனான்
இரட்டையர் கடலிலே போகும்போது
தன்னவர் தமைக்கடல் அனுப்பிவிட்டு
தரையிலே காவலாய் ஒருவன் நிற்பான்.

தம்பெயர் தெரிவெனச் சேதி கேட்டு
ததிகணத்தோம் எனத் தாளமிட்டார்
நம் பகைக் கலத்தினை அழிக்கும் வாய்ப்பு
நம்மதே எனக்குதித் தார்ப் பரித்தார்.

வாபகைக் கப்பலே வந்து நில்லு
வங்கத்து ஆழியுள் சமாதி செய்வோம்
சாவது சர்க்கரைப் பாகெமக்கு
சமுத்திரம் முழங்காலின் அளவெமக்கு

புன்னகை புரிந்தனன் புகழரசன்
பூரித்து நின்றனன் மணியரசன்
மின்னென இடியதால் உதிரப்போவோர்
மிடுக்குடன் தோழரைப் பார்த்து நின்றார்.

❋ ❋ ❋



# கடற்கரும்புலி கப்டன் மணியரசன்



ஆர்ப்பரித்து கடல் எழுந்து கரையே மோதும்
அலையோடு நண்டூரி வந்தொதுங்கும்
ஊர்ப்புறமாம் மணற்காட்டில் ஒன்றிணைந்து
உறவோடு வாழ்ந்திட்ட ஒரு குடும்பம்

காதலுறு இல்லறத்தின் பெருமை சேர
கணவனொடு மனைவியென கைகள் சேர்த்த
வேதநாயகம் றெஜினா இருவர் சேர்ந்து
வெற்றிமிகு இல்லறத்தின் வேர்களானார்

கட்டுமரம் கலமோட்டி தொழில்கள் செய்தார்
கரைவலையில் மீன்பிடித்து பொருள்கள் சேர்த்தார்
கட்டியவள் ஈன்றெடுத்த கண்ணாம் மக்கள்
கலங்காது வாழுதற்குப் பாடுபட்டார்

ஈர்நான்கு பிள்ளைகளை இல்லவாழ்வில்
ஈன்றெடுத்தார் இருவரும்தம் வாரிசாக
பேர்பெற்ற கருவேங்கை மணியரசன்
பிள்ளையெனப் பிறந்திட்டான் ஏழாம் ஆளாய்

முதல் மகனும் எல்லோர்க்குமிளைய பெண்ணும்
முதிராத வளம் குன்றிப் பிறந்தோராவார்
புதல்வரிலே படுசுட்டிப் பையனாக
பிறைபோலும் பிள்ளையிவன் வளர்ந்திட்டானே

வளம் குன்றிப் பிறந்த மகர் இருவரோடும்
வல்லவர்கள் ஆனவராம் அறுவரோடும்
உளம்குன்றா மகிழ்வோடும் பெருமையோடும்
உறவினர்கள் புடைசூழ இவர்கள் வாழ்ந்தார்

அறுவருக்குப் பின்னவனாய்ப் பிறந்ததாலும்
ஆண்களிலே கடைக்குட்டி ஆனதாலும்
சிறுவருக்கே உரித்தான குறும்பினோடும்
சில கணமும் ஓய்வாக இருக்கமாட்டான்

நான்குபேர் மூத்தவர்கள் அக்காமார்கள்
நால்வருக்கும் நடப்படிப்பான் அடம்பிடிப்பான்
தீன்சண்டை அவரோடு தினம் பிடிப்பான்
தான் நினைத்த படியேதான் எதுவும் செய்வான்

பிட்டுத்தான் தினம் வேண்டும் இல்லையென்றால்
பிணக்குத்தான் வீட்டினிலே மூத்தாரோடு
திட்டுத்தான் அக்காமார் வாங்குவார்கள்
தீராது இச்சண்டை எந்த நாளும்

அம்மாவில் அளப்பரிய அன்பு உள்ளான்
அவளுக்கு ஏதுமெனில் சகித்துக் கொள்ளான்
சும்மாதான் சுடுகுதுமேல் என்று சொன்னால்
சோதரிகள் படும்பாடு பெரியதுன்பம்

"அக்காமார் அம்மாவில் கவனமில்லை
அவருக்கு ஓய்வில்லை இவரிருந்தும்
தக்கபடி கவனிக்கவில்லை" யென்று
தானேதோ பெரியவன் போல ஏசிநிற்பான்

"எப்போதும் விளையாட்டே எண்ணமென்றால்
எப்படி நீபடிப்பாய் என்றாள்" அன்னை
அப்போதும் அவனெதிர்த்தே பேசி நிற்பான்
"அதுவெல்லாம் நானறிவேன்" என்று சொல்வான்

"இப்போது சொல்லக்கேள் அம்மா நீயும்
இந்த இந்த பாடத்தில் இன்னபுள்ளி
தப்பாமல் எடுப்பேன் யான்" எனச் சவாலாய்
தாய்க்குரைப்பான் அது போன்றே புள்ளி கொள்வான்

வள்ளத்தில் இயந்திரத்தில் கோளாறென்றால்
வல்லவன்போல் தானும்ஏதோ செய்துபார்ப்பான்
உள்ளதெலாம் ஆராய்வான் கழற்றிமீள
உள்ளபடி பொருத்திடுவான் இயந்திரத்தை

பாடசாலை செல்வதிலும் கடலின் மீது
படகேறிச் செல்வதிலே ஆசைகொள்வான்
ஆடாமல் அசையாமல் குறும்பு, செய்வான்
அப்பாவி போலமைதி பேணிநிற்பான்

"சின்னவன் நீ கடலிலே என்ன செய்வாய்
சென்றுபடி பின் பார்ப்போம்" என்றபோதும்
அன்னவர்கள் சொன்ன மொழி காதில் ஏற்கான்
அவன் விருப்பப் படியேதான் செய்து நிற்பான்

கடற்றொழிலுக் கழைத்தேக மாட்டாரென்று
கறுவியனன் தன்மனதில் முடிவெடுத்து
உடல் உதறும் அதிகாலை நாளதொன்றில்
ஓடுகின்றான் அனைவருக்கும் முன்னதாக

கட்டுமரம் மீதினிலே இயந்திரத்தை
கழற்றி வைக்கும் தேவைக்காய் எந்தநாளும்
பெட்டியொன்று வைத்திருப்பார் அதனுள் ஏறி
பேசாது படுத்திருந்தான் அமைதியாக

அதிகாலைப் பொழுதினிலே அப்பன் வந்து
ஆங்கந்தப் பெட்டியினைப் பார்த்தபோது
புதிதாக உருவொன்று கிடக்கக் கண்டு
புரியாது அதிசயித்தான் அவனைப் பார்த்து

"இதிலென்ன செய்கின்றாய் எழுடா தம்பி
எழுந்து போ வீட்டினுக்கு" என்றார் அப்பா
பதிலாக அவன் சொன்னான், பயந்தானில்லை
"படகினிலே நானின்று வரத்தான் போகின்றேன்."

ஏற்கனவே தொழிலுக்கு நேரமாச்சு
இவனோடு வாதாடில் இன்னும் பிந்தும்
கூற்றிதனை வீட்டினிலே கூறச்சொல்லி
கூட்டியுடன் சென்றாராம் கலத்திலேற்றி

அடிக்கடி கடலுக்கு போவான் கனியூட்
ஆனாலும் பள்ளிக்குச் செலவும் செய்வான்
துடிப்பான இவன்போக்கு தனித்ததாகும்
துணிவோடும் துடுக்கோடும் வளர்ந்தே வந்தான்

ஈட்டிவந்து பொருளதனை கடலிருந்து
இன்புற்று வாழ்ந்தாலும் இவன் குடும்பம்
நாட்டினிலே பற்றற்று வாழ்ந்ததில்லை
நம்மினத்தின் விடுதலையை மறந்ததில்லை

குடும்பமே விடுதலையில் காதலுற்றால்
குருத்து இவன் குருதியிலும் அதுவூறாதோ
இடும்பைகளை கடலிலே இவன்றன் ஊரார்
ஏற்றிடும் கால் இளநெஞ்சில் தீமூளாதோ

அழுகுரல்கள் அடிக்கடி தன் ஊரில் கேட்க
ஆத்திரம் கொப்பளித்து அலைபோல் துள்ளும்
பழுதுஇலான் பசுந்தளிரான் கனியூட் நெஞ்சில்
பசுமரத்து ஆணிகளாய் பதிந்து நிற்கும்

நடந்துவரும் விடுதலைப் போரதனைப் பற்றி
நாளாக நாளாக அறிந்து கொண்டான்
தொடர்ந்திடவே புலியணியில் முடிவு கொண்டான்
தோழர்களாம் சிலருடனே முகாமைச் சேர்ந்தான்.

அப்பொழுது அவன் வயது பதின்மூன்றேதான்
அக்கினியில் குஞ்சில்லை மூப்புமில்லை
சுப்பையன் பாரதிமுன் சொன்ன வார்த்தை
சும்மாவா கற்பனையா யதார்த்தம் அன்றோ

உடுப்பிட்டி முகாமினிலே இவர்தம் பேரை
உறுப்பினர்களாகவே பதிவு செய்தார்
எடுப்பார்கைப் பிள்ளைகளாய் சென்றிடாது
எண்ணியவர் திண்ணியராய் இணைந்து கொண்டார்

முன்னர் சென்று தம்பெயரைப் பதிவு செய்து
முடிவினிலே தளம்பாது இல்லம் வந்தார்
பின்னர் யூன் இரண்டாம் நாள் தொண்ணூற்றொன்றில்
பிரிந்தனராம் உறவுகளை நாட்டுக்காக

தாய்தந்தை சோதரார்கள் தவிர்த்துப் போனார்
தமைப்பிரிந்துபோன தெண்ணி துடித்துப் போனார்
சேய் இவனை தந்தைவேத நாயகம் தேடி
சென்றடைந்த முகாமதனை அறிந்துகொண்டார்

கோரியடி முகாமில்த்தான் நிற்பதாக்
குறிப்பிட்டுச் சிலர் சொல்ல சென்று கண்டார்
கோரினராம் தம்மகனை "வீட்டை வாடா
குறையுனக்கு எதுவைத்தோம் கூறுராசா"

நீயிப்போ சிறுபிள்ளை கடினவாழ்வில்
நிலைத்து நிற்க முடிந்திடுமா உன்னால் சொல்லு
தாயிப்போ வீட்டினிலே தவிக்கின்றாளே
தாங்காது அவள் நெஞ்சு தம்பிவாடா"

வயதினிலே சிறியவன்தான் ஆனபோதும்
வலியவனாம் கொள்கையிலே ஆனதாலே
நயமுடனே தன்தந்தை சொன்ன பின்னும்
"நான் வீட்டை வரமாட்டன்" என்று சொன்னான்

பெற்றபிதா சொல்லியவச் சொற்கள் யாவும்
புறக்குடத்தே வார்த்தநீர் போலுமாச்சு
மற்றைநாள் அன்னையளும் தேடிவந்தாள்
மைந்தனைத்தம் வீடுவர இரந்துகேட்டார்

அன்னையவள் சொன்னதையும் கேட்டானில்லை
அழுத அவள் விழிகண்டும் ஏற்றானில்லை
பின்னையார் என்னதான் செய்வதென்று
பெற்றவள்தன் மனை சென்றாள் தோல்வியோடு

அணியினிலே இணைந்து புலி ஆனபின்னே
அன்னை பிதா இட்டபெயர் தன்னைமாற்றி
மணியரசன் எனும்பெயரை தானேதாங்கி
மண்ணதிலே நிலைப்பதற்காய் சூட்டிக்கொண்டான்

மாதங்கள் ஆறின்பின் புறாப் பொறுக்கி
முகாமதனில் மகனுள்ளான் எனவறிந்து
ஆதங்கத் தோடுஅவன் பெற்றார் மற்றும்
அன்புடைய சோதரங்கள் காணச்சென்றார்.

பெற்றவர்கள் சோதரங்கள் தம்மைக் கண்டு
பெருமகிழ்வு உந்தவந்து அணைத்துக்கொண்டான்
கற்றறிந்த களப்பயிற்சி யாவும் கூறி
கடற்புலிகள் பெருமைகளை பேசிக் கொண்டான்

அன்னவரை வரவேற்று உபசரித்தும்
அன்பொழுக உரையாடிச் சிரித்தபோதும்
பின்னவர்கள் வீட்டுக்கு அழைத்த போதோ
"பேசாதீர் அதை" யென்று நிராகரித்தான்

கடலணியன் மணியரசன் கடின நெஞ்சன்
        கடமையிலும் கரிசனமே மிக்கவேங்கை
விடலைதான் என்றாலும் பிறர்வியக்கும்
        விடுதலை வீரனாய் வளர்ந்து வந்தான்

தொலைத்தொடர் பாளானாய் தேர்ச்சிபெற்றான்
        தொடர்பினால் தோழர்கள் பலரைச் சேர்த்தான்
அலைந்திடும் மனத்தினன் ஆகவன்றி
        அதிசயப் பிறவியாய் உயர்ச்சி பெற்றான்.

இளம்புலி ஆயினும் இவன்றன் போக்கில்
        இருந்திடும் திறமைகள் பலதும் கண்டும்
தளபதி சூசைதன் னுடனே வைத்து
        தனது மெய்க் காவலாய் நியமம் செய்தார்

சாவதால் புகழுடம்பான வேங்கை
        சார்ஜகான் வீட்டிலே அஞ்சலிக்கு
காவலாய் சூசையோ டிவனும் சென்றான்
        கண்டனர் மைந்தனை தந்தை ஆங்கு

தந்தையார் மைந்தனைக் கண்டபோது
        தாவியே சென்றனர் ஆவலோடு
எந்தவோர் சலனமும் காட்டிடாது
        எங்கையோ நோக்கினான் மணியரசன்

பேசிடத் தந்தையார் முயன்ற போதும்
        பேச்சது இன்றியே மௌனம் காத்தான்
நேசித்து நெஞ்சிலே வளர்த்த பிள்ளை
        நின்றிடும் நிலையினால் வியந்து போனார்

ஆசையை நெஞ்சிலே அடக்கிக் கொண்டு
        அகத்திலே ஏந்திய தாக்கத்தோடு
சூசையை அணுகினார் சோகத்தோடு
        சொல்லுவார் இவனது போக்குபற்றி

தளபதி அவனை ஆங் கழைத்துக் கேட்டார்
“தந்தையொடேனடா பேசவில்லை”
தளம்பிடா மொழியனாய் பதிலைச் சொன்னான்
தாங்களே அனுமதி தருதல் வேண்டும்

தந்தையே ஆயினும் இங்கு என்றன்
தளபதி கூறியே செய்கு வேன்யான்
சிந்தையில் தெளிவுடன் வந்த சொல்லால்
சிரிப்புடன் தளபதி கதைக்கச் சொன்னார்

❋ ❋ ❋

மணியரசன் மனது வேண்டியது
மகத்துவ மானவை செய்திடவே
பணியது செய்திட வேட்கையுற்று
பன்முறை கோரிக்கை செய்து வந்தான்

கங்கை அமரனைக் காணுகையில்
“கடலுக்கு வருகிறேன்” என்று நிற்பான்
“உங்களோ டென்னையும் அழைத்து ஏகும்
உண்மையில் எனக்கது விருப்ப”மென்பான்

பிருந்தனைக் கண்டாலும் பின்னே செல்வான்
பிடிவாத மாய் “நானும் வருவேன்” என்பான்
வருந்துவான் அவர்தன்னை விட்டுச் செல்லில்
வாதாடுவான் “கூட்டிச் செல்க” வென்று

திறன்மிகு தொலைத்தொடர் பாளன் இவன்
தொண்டிதன் மகத்துவம் தெரிந்திருந்தும்
விறன்மிகு கடற்கள மாடுதற்கே
விழைந்தவ னாய்அதை வேண்டிநின்றான்.

தளபதி சூசையும் சொல்லிப் பார்த்தார்
தளர்ந்திட இல்லைஅவன் தனது போக்கில்
களப்பணியாற்றிட வேட்டவனை
கடல்மீது காவலுக்கனுப்பி வைத்தார்

கலத்தினில் ஏறியே கடலில் சென்று
காவற்பணி செய்யும் போது மக்கள்
நலத்தினில் நாட்டமே கொண்டவனாய்
நாளாந்தம் சிந்தித்துச் செயற்படுவான்

கரும்புலி வீரர்கள் கடலினிலே
காட்டிடும் சாதனை கண்டும் கேட்டும்
திரும்பியதாம் அவன் தியாக நெஞ்சும்
திருவினை அதனைத்தான் செய்வதற்கு

திட்டங்கள் தீட்டியே தனதுளத்தே
தீவிரமாகவே செயற்படுங்கால்
கெட்டதோர் சம்பவம் நிகழ்ந்ததென
கேள்வியுற்றான் அவன் வீட்டினிலே

❊ ❊ ❊

கூடப்பிறந்தவள் ஒரு தமக்கை
குழந்தை கிடைத்துள்ள வேளையிலே
வாடக் கருகினாள் என்ற சேதி
வந்தது அவனது செவிகளுக்கு

ஓடி உடனங்கு செல்லவில்லை
உயிருடன் இருக்கிறாள் என்பதனால்
மூடி மறைத்துத் தன்வேதனையை
முற்றும் துறந்தவன் போலிருந்தான்

தீய்ந்து கருகிய அக்காள் ஒரு
திங்களின் பின்னரே இறந்தமையால்
ஓய்ந்து இருந்தவன் ஓடிச்சென்று
உடன் பிறந்தா ளுடல் கண்டழுதான்

ஐந்து தினங்களால் மீண்டும் சென்றான்
அனைத்தையும் மறந்தவன் போலச் சென்றான்
நொந்து அழுதனன் நெஞ்சினுள்ளே
நோவின் புறக்குறி யாதுமில்லை

அன்னிய தேசத்தில் பணிபுரியும்
அண்ணன் ஒருமுறை நாடுவந்தான்
தன்னரு தம்பியை வலிந்தழைத்து
தனது வதுவைக்காய் கூட்டிவந்தான்

எழுத்துக்கு மட்டுமே நின்றுவிட்டு
ஏகினன் அன்றைக்கே முகாமதற்கு
இழுத்து நிறுத்தியும் நிற்கவில்லை
இயக்க விசுவாசம் அந்தளவாம்

பற்றில்லான் போலவே நடந்து கொண்டான்
பாசத்தால் நெஞ்சிலே எரிந்து கொண்டான்
வற்றில்லா ஊற்றுள்ள அன்பு நெஞ்சு
வடிவினை எவருமே கண்டறியார்

கரும்புலியாகிட முடிவெடுத்தான
கடமைக்கு வேண்டிய பயிற்சிபெற்றான்
தரும் கொடை நாளுக்கு முன்னதாக
தன்மன வேட்கையை காட்டுகின்றான்

கங்கை அமரனின் முன்னதாக
கருகி இறந்தவள் பிள்ளையினை
தங்கையை தமயனை தந்தையொடு
தாயையும் கூடவே அழைத்துச் சென்று

போலியில்லாத மெய் நெஞ்சினனாய்
போர்க்குணன் ஆனவன் மணியரசன்
கேலிகள் பகடிகள் ஏதுமின்றி
கீழ்ப் படிவாகவே கூறுகின்றான்

"நோயாளன் ஆகினார் எந்தன் அப்பா
நொந்து உழைத்தவர் தளர்ந்து விட்டார்
சேயான நானிப்போ புலிஅணியில்
செய்யக் கூடியது யாதுமில்லை

எட்டுப்பிள்ளைபெற்றார் என்றபோதும்
எந்தப் பிள்ளையாலும் உதவியில்லை
விட்டுப் பிரிந்தவர் வேற்று நாட்டில்
வீட்டில் இருப்பதோ ஊனமுற்றோர்

பார்வையும் அவருக்கு குறைந்து போச்சு
பார்த்துக் கவனிக்க யாருமில்லை
ஆர்வம் எனக்குண்டு எனினும் அண்ணா
ஆகுவதேதுண்டு என்னாலின்று

நாட்டுக்காய் போராட நானும் வந்தேன்
நன்மைக்கோ தீமைக்கோ நானுமில்லை
கேட்டுக் கொள்ளும் கங்கை அமரன் அண்ணா
காட்டும்நும் கருணையை இவர்கள் மீது

பின்வரும் காலத்தில் பிள்ளை போன்று
பார்க்க வேண்டும் என்னைப் பெற்றவரை
என்வரும் காலத்தின் விதியறியேன்
எனக்காக இதனை நீர் செய்யவேண்டும்."

கரும்புலியாய்ப் போகும் காரணத்தால்
கடமையை மறந்தானா மணிஅரசன்
பெருங் கொடையாளர் நெஞ்சத்திலும்
பெற்றவர் உறவுகள் பாசமுண்டாம்

கங்கை அமரனும் கண்கசிந்தான்
கட்டாயம் செய்வதாய் வாக்குரைத்தான்
வங்கக் கடலோடு கரையவுள்ள
வரிப்புலி கரும்புலிக் குறுதி சொன்னான்

பதினைந்து வயதிலே மணியரசன்
பலியாகத் தன்னையே ஈயப்போம்முன்
அதிக பொறுப்புடன் நடந்து கொண்ட
அன்புடை நெஞ்சத்தை இங்கு கண்டோம்

பம்பல் அடித்திட ஒரு பிறவி
பாகுபாடு இன்றி கிண்டல் செய்வான்
அம்பிட்ட பேர்வழி ஆர்எனினும்
அறுவைதான் அவனுக்கோ கொண்டாட்டம் தான்

வருபவர் வாகனத்தேறி வந்தால்
வந்தவர் உட்சென்று மீளுமுன்னே
திருப்பி நிறுத்துவான் வாகனத்தை
திகைப்பாராம் வந்தவர் இதனைக் கண்டு

வண்டியை ஓட்டியோன் யாரோ? என்றால்
வாய்கள் எதுவுமே திறந்திடாது
கண்டும் காணதவன் போல இவன்
கடவாய்க்குள் குறுநகை செய்திடுவான்

உந்துருளி மீதேறி வந்தபேர்கள்
உள்ளே சென்று வெளி மீளுமுன்னே
குந்திடுவான் ஏறி இருக்கையிலே
குறைந்தது எட்டொண்டு அடித்து நிற்பான்

வந்தவர் வெளிவந்து பார்க்கையிலே
வாகனத்தில் உள்ள மாற்றம் கண்டு
எந்தப் பயலடா எடுத்ததென்றால்
எதுவுமே தெரியாதோன் போல நிற்பான்

ஆரடா என்றவர் அதட்டிக்கேட்டால்
அப்பாவி போல்தலை ஆட்டிடுவான்
ஆரென்று தெரியாது என்ற பாவம்
ஆட்டிடும் தோற்றத்தில் தோற்றி நிற்கும்

ஏறிய நெற்றியைக் கொண்டவனாம்
இவனது நெற்றியோ அகல நெற்றி
கூறியதை நண்பர் கேலி செய்வார்
குத்தியும் காட்டுவார் பகடிக்காக

நாட்டு விடுதலைப் போர் நிகழ்த்த
நம்மவர் பொம்பர்கள் வாங்கும் நாளில்
ஓட்டிடப் பாதையொன்றுள்ள திங்கு
உன்னுடைய நெற்றிதான் ஓடுபாதை

கேட்டுச் சிரிப்பானாம் மணியரசன்
கேலியும் பதிலுக்குச் செய்திடுவான்
கூட்டாளி மாருடன் சேர்ந்து கொண்டு
கும்மாளம் போடுவான் எந்தநாளும்


கரும்புலியாகத்தன் பெயர் பதிந்தும்
கவலையோ சற்றேனும் கொண்டானில்லை
இரும்பையும் பஞ்சையும் இதயத்திலே
ஒன்றாகக் கொண்டவன் மணியரசன்

வயதிலே இளையவன் மணியரசன்
வலிமையில் பெரியவன் மணியரசன்
துயரையும் மகிழ்வையும் ஒன்றாய்க் கொள்ளும்
தூய கரும்புலி மணியரசன்

மணற்காடு தந்தவன் மணியரசன்
மனதால் உயர்ந்தவன் மணியரசன்
குணக்குன்றாய் எழுந்தவன் மணியரசன்
குண்டில் வெடித்தவன் மணியரசன்

❋ ❋ ❋

# கடற் கரும்புலி
# மேஜர் புகழரசன் - புவிந்திரன்



கரும்புலி மணியரசன் - வீரக்
கதையினில் பாதியை இங்கு சொன்னோம்
பெருங்கொடைக் கரும்புலியான - தியாகி
புகழரசன் கதை காண்போம் இனி

❋❋❋

அரியாலை என்னும் ஊராம் - யாழில்
அழகியதாம் கலை பெருகியதாம்
மரியாதைக் குரியவராம் - சுப்பிர
மணியம் அவ்வூருக்கு உரியவராம்

நாதஸ்வரக் கலைஞர் - இவர்
நல்லவராம் தொழில் வல்லவராம்
கீதஸ்வரமெல்லாம் - ஊதும்
குழல்வழி பாய்ந்திடும் நாதவெள்ளம்

கோத்திரக் கலையுடனே - இன்னும்
குறிப்புகள் சாதகம் பார்ப்பவராம்
சாத்திரம் கற்றவராம் - குலச்
சாமியிலே பக்தி மிக்கவராம்

சந்திரா எனும் பெயராள் - இவர்
சதியென வந்தங்கு வாய்தவளாம்
சுந்தர மேனியளாம் - இவர்கள்
சேர்ந்து நடத்தினர் - இல்லறமாம்

திருமண சங்கமத்தில் - இவர்
திருவென வந்தவர் மூன்று மக்கள்
ஒரு பெண்ணும் இரு ஆண்களும் - பெண்
ஒருவளே இவர்களில் மூத்தவளாம்.

ஆண்களில் மூத்தவனாய் - வந்த
அதிசயப் பிறவி நாதகீதன்
மாண்புகள் கொண்டவனாய் - பிறர்
மதிப்பினிக் கிலக்காக வாழ்ந்தவனாம்

நாதஸ்வரக் கலையை - தந்தை
நம்பியே வாழ்ந்ததன் காரணத்தால்
நாதகீதன் என்றே - நல்ல
நாமத்தைச் சூட்டினார் தன் மகர்க்கு

தங்கள் கலைதொடர - வந்தான்
தனயன் என்றே தந்தை மனம்மகிழ்ந்தார்
சிங்கப்பூர் மலேசியாவும் - தந்தை
சென்றனர் கலைப்பணி ஆங்கும் செய்தார்

நல்ல இசைக்கலைஞர் - வழி
நாதகீதன் வந்தும் அக்கலையில்
வல்லவனாய்த் திகழ - ஏனோ
வாஞ்சையில்லாமலே வாழ்ந்து வந்தான்

மற்றவர் போலுமல்லர் - சுப்பிர
மணியனார் ஆங்கிலம் கற்றவராம்
பெற்றதன் நல்லமக்கள் - அறிவு
பெருகிட அடிக்கடி கதைகள் சொல்வார்

ஒடுக்கப்படும் மக்கள் - உறும்
ஒப்பற்ற இன்னல்கள் துயரங்களை
படுக்கின்ற வேளையிலும் - இன்னும்
பகலிலும் ஓய்விலும் பகர்ந்திடுவார்.

கியூபாவில் நடந்தவைகள் - மக்கள்
கீழ்ப்படியாமலே நிமிர்ந்தவைகள்
வியூகங்கள் போட்டமைகள் - அவர்
வென்று விடுதலை பெற்றமைகள்

வியட்னாமில் வெறியாட்டம் - இரத்த
வியர்வையில் விடுதலை வென்றமைகள்
அயல் நாட்டின் விடுதலைப்போர் - வெள்ளை
ஆங்கிலேயன் செய்த விபரீதங்கள்.

போராட்ட வரலாறுகள் - ஆள்வோர்
போராடும் மக்களுக் கிழைத்தவைகள்
வேராட்டம் காணமால் - வென்ற
விடுதலை விரும்பிகள் சாதனைகள்

நீரோட்டத் தோடிணைந்து - வாழில்
நிம்மதி என்றவர் வாழ்ந்திடாமல்
ஊராட்டம் காணவைத்த - புரட்சி
உள்ளங்கள் சுமந்திட்ட வேதனைகள்

ஆங்கிலர் ஆதிக்கத்தில் - தென்
ஆபிரிக்க மக்கள் போராட்டங்கள்
ஆங்கு கறுப்பினத்தார் - பட்ட
அவலங்கள் வெண்டோலர் புன்செயல்கள்

பேரின வாதிகளால் - மக்கள்
பேராறாய் சிந்திய குருதியினை
கூறினர் தினம் தினமும் - கீதன்
கூர்மை அடைந்திடச் செய்ததிவை

தன்னை அறியாமல் - தந்தை
தனயனின் நெஞ்சில் விதைத்து வந்த
தன்மான வித்தறியார் - அது
தளிர்விடும் என்பதும் தானறியார்

குலக்கலை நாதஸ்வரம் - அது
குறித்தவன் ஆர்வமோ காட்டவில்லை
புலனதோ திசைமாறி - எங்கோ
போனபின் மறுபடி மீண்டிடுமோ

குழல் ஊதிவாழ்வதிலும் - சுடு
குழல் தாங்கல் நல்லதே எனவிழைந்தான்
உழல்கின்றோம் அழலுக்குள்ளே - இந்த
ஊதுங்குழல் இப்போ தேவைதானா?

விழலுக்கு நீர் விடவோ - நாளை
வீணாய்க் கழிப்பதில் இலாபமென்ன
நிழலுக்கு மரம் வளர்த்தால் - பின்னால்
நின்றாறத் துணையாகும் நம்மவர்க்கே

என்றந்தச் சிந்தனைகள் - அவன்
இதயத்தில் விழுந்ததை யார்அறிவார்
கன்றாய் இருக்கையிலே - அந்த
கரும்புலி விடுதலை ஆர்வம் கொண்டான்

கொழும்புத்துறை அமைந்த - கல்வி
கூடமாம் துரையப்பா விற்பயின்றான்
எழுத்தொடு எண்ணும் கற்றான் - வகுப்பு
எட்டுக்குப் பின்னர் ஸ்ரான்லியிலும்

ஒன்பதாம் வகுப்பு வரை - கீதன்
ஊக்கமொடு கல்வி கற்றுவந்தான்
எண்பத்து ஒன்பதிலே - தீய
இந்தியப் படைகளின் தீமை கண்டான்

தஞ்சம் என்று நம்பி - அன்று
தமிழ் மக்கள் தங்கினார் கோவிலொன்றில்
வஞ்சப் படைவெறியர் - வந்து
வளைத்தனர் நாளொன்றில் திடுமெனவே

பிரப்பங்குளம் அமைந்த - மிகப்
பிரபல்ய நாச்சிமார் கோவிலிலே
இரப்பானின் முடிச்சவிழ்க்கும் - அந்த
இழிகுணப் படைவந்து சுடுகலனால்

இரக்கம்இல் லாதவனாய் - சூழ்ந்து
எறிந்தனன் வேட்டுக்கள் மக்கள் மீது
அரக்கரின் வெறிச்சொயலால் - அந்தோ
ஆணொடு பெண்மாண்டாார் பதின்மரின்மேல்

கீதனின் அக்காளது - தொடை
கிழிந்தது துப்பாக்கி வேட்டதனால்
பாதகர் செய்கையினால் - அந்த
பக்தித்தலம் பிணக்காடாயாச்சு

அக்காள் பிரமிளாதான் - பட்ட
அவலத்தை கண்டனன் நாதகீதன்
துக்கமும் துணிவும் பெற்றான் - இனி
தூங்கிடல் பயனில்லை யென்று கண்டான்

காலத்தைக் காத்திருந்தான் - தன்
கையினில் ஆயுதம் தூக்குதற்கே
ஆலத்தை அமுதாயுண்ணும் - புலி
அணியினில் தன்னையும் இணைத்திடவே

பள்ளிச் சிறுவனன்றோ - தன்
பருவச் சிறாருடன் விளையாடுவான்
துள்ளுவான் கூத்தாடுவான் - பிறர்
துன்பமுற ஏதும் பேசுகிலான்

கிட்டிப்புள்ளும் அடிப்பான் - இன்னும்
கிளித்தட்டும் துடுப்பாட்டம் ஆடிடுவான்
கெட்டித் தனமுடையான் - படிப்பில்
கீழல்லன் யாவர்க்கும் மேலவன்தான்

நீண்டநாள் சிங்கப்பூரில் - தந்தை
நின்று உழைத்திட்ட காலத்தில் தான்
வேண்டாத வினையதொன்று - இவன்
வீட்டில் நிகழ்ந்தது வேதனைதான்

தன்னைப் புறம் ஈன்ற - பெற்ற
தாயை இழந்தது அப்பொழுதே
சின்னவன் ஆனபோதும் - அன்னை
செத்தனள் எனமனம் தேறிக்கொண்டான்

தன்னுடன் அக்கை தம்பி - இனித்
தனித்துவிட்டோம் என்று துயரடைந்தான்
என்னதான் இருந்திடினும் - பெற்ற
அன்னைக்கு இணையாக ஏதுமுண்டோ

தந்தையார் மீண்டும் வந்தார் - தன்
தங்கப் புதல்வரை ஏற்றுக்கொண்டார்
தந்தையும் தாயுமானார் - யாவும்
தாங்கிக் கொண்டே கடன் தான்தொடர்ந்தார்.

தந்தையார் உடன் பிறப்பாம் - சொந்த
தம்பியும் துணைவியும் கைகொடுத்தார்
சிந்தைத்துயர் தணிந்தே - மூன்று
சிறுவரும் வாழ்ந்தனர் சேர்ந்து ஒன்றாய்

நாதகீதன் மைந்தன் - பல
நன்மைத் தனங்களைக் கொண்டவனாய்
பேதங்கள் வேற்றுமைகள் - யாதும்
பேணுவதில் நாட்டம் அற்றவனாய்

பற்றற்ற துறவிபோலும் - மனப்
பக்குவம் பெற்றனன் சிறுவயதில்
முற்றும் துறந்தவன் போல - அவன்
முயற்சிகள் யாவுமே அமைந்திருக்கும்.

பள்ளியில் தோழர் யாரும் - "கீதன்
பசிக்குது சாப்பிடவில்லை" என்றால்
உள்ளதைக் கொடுத்திடுவான் - பிறர்
உண்டு பசியாற மகிழ்ந்திடுவான்

பையினில் காசு இல்லா - நாளில்
"பசிக்குது" என்றனன் பள்ளித் தோழன்
கையினிற் சங்கிலியைக் - கழற்றி
கட்டாயப் படுத்தியே கொடுத்துவிட்டான்

"காலுக்குச் சப்பாத்தில்லை - வாங்க
காசில்லை" என்றான் இன்னொருவன்
கால்களில் அணிந்திருந்த - தன்
காலின் அணிகளைத் தானம் செய்தான்

வள்ளுவன் சொன்னது போல் - நட்பு
வாழ்வை இலட்சியமாகக் கொண்டான்
கிள்ளித் தெளிப்பதிலும் - தான்
அள்ளிக் கொடுப்பதில் நிறைவடைந்தான்

தற்கொடைக்கான வித்து - அவன்
தாய் வயிற்றிருக்கையில் வீழ்ந்ததுவோ!
பிறர்கொடை செய்வதற்காய் - தன்
பிஞ்சு வயதிலே கற்றனனோ

பிள்ளை இவன் வளர்ந்தான் - வகுப்
பொன்பது படிக்கையில் முடிவெடுத்தான்
வெள்ளப் பெருக்கணையை - மீறி
வெளியேறும் நாளதும் கிட்டியது

உள்ளுக்குள் பலஉறுத்தல் - நாட்டுக்
குழைத்திட வேண்டுமே எனும் நெருடல்
தள்ளுண்டு தாழ்நிலையில் - தமிழன்
தவித்திடல் தவிர்த்திடல் வேண்டுமென்றே

அப்பனின் திட்டம் வேறு - மகன்
ஆசார சீலனாய் வாழவேண்டும்
தப்பாமல் கற்கவேண்டும் - பின்
தமக்கையை தம்பியை காக்க வேண்டும்

ஒப்புமா அவன் மனது - மிக
உயர்ந்தோர் இலக்கினை நாடும்போது
துப்பாக்கி ஏந்துதற்கு - கரம்
துடிக்கையில் குடும்பத்தை நினைந்திடுமோ

அப்பாவுக் கடுத்தவளாய் - பெற்ற
அன்னையின் இடத்திலே அக்காளுள்ளாள்
தப்பாமல் அன்பு செய்வாள் - புஷ்பன்
தம்பிக்கும் அவள்தாயாய் விளங்கிடுவாள்

எப்போதோ நெஞ்சினிலே - அரும்பி
எழும்பிய எண்ணத்தை நிறைவு செய்ய
இப்போதே தருணம் என்று - எண்ணி
இணைந்திட விரைந்தனன் இயக்கத்தினிலே

விளையாடப் போவதாக - கூறி
விடைபெற்று வீட்டினால் வெளியேறினான்
இளையவன் நெஞ்சமதில் - தமிழ்
ஈழத்தைச் சுமந்தவனாகச் சென்றான்

எங்கென்று தேடும்முன்னர் - கீதன்
எல்லோர்க்கும் கண்ணில்மண் தூவிவிட்டான்
எங்கேயும் காணவில்லை - தந்தை
ஏறியிறங்காத வீடுமில்லை.

தந்தையின் தம்பியாரும் - அண்ணன்
தனயனைத் தேடியே அலையலுற்றார்
சிந்தைதான் நொந்த தந்தோ - அவன்
சேர்ந்த இடம் தன்னைக் கண்டறியார்.

சலிப்படைந்திட்ட வேளை - யாரோ
சாற்றினர் சென்றிட மணியன்தோட்டம்
புலிப்படைப் பயிற்சிக்களம் - யாரும்
புகுதற்கு இலகுவில் ஆகிடுமோ

சிற்றப்பன் கூலியாள் போல் - உள்ளே
சென்று பெறாமைந்தன் றன்னைக்கண்டார்
பெற்றப்பன் சோதரர்கள் - படும்
பிரிவுத் துயரினைச் சொல்லிப் பார்த்தார்

"வீட்டை வாதம்பி" என்றார் - புலி
வீரமகன் அதற்கொப்புவனோ
"வீட்டையான் வருவதற்கோ - புலி
வீரரணிக்கின்று வந்தேனென்றான்"

கேட்பதில் நன்மையில்லை - நாத
கீதன்வரப் போவதில்லை
வாட்டமாய் வந்து சேர்ந்தார் - அவன்
வழங்கிய பதிலினை கூறிச்சோர்ந்தார்

மனைவியின் துயரினோடு - தன்
மைந்தன் துயரையும் ஏற்றுக்கொண்டார்
தனைவிட்டே ஒவ்வொன்றாக - போக
தாங்கிக் கொண்டார் நெஞ்சில் ஏங்கிக் கொண்டார்

விடுதலைப் போரினுக்காய் - மகன்
விருப்புடன் சென்றதை வெறுக்கவில்லை
கெடுதலொன்றில்லாமலே - பிள்ளை
கெதியினில் திரும்புவான் எனநினைத்தார்

புலிக்குகை புகுந்த பின்னே - இந்த
புலிமகன் புவிந்திரன் ஆகிவிட்டான்
பலிக்காகத் தன்னை ஈயும் - உயர்
பவித்திர நெஞ்சத்தை ஆக்கிக் கொண்டான்

ஆகாயம் கடல்வெளிப் போர் - அன்று
ஆனையிறவினில் நடந்த போது
ஆ காயம் காலிற்பட்டு - வேங்கை
இடது கால் ஊனமாய் ஆகியதாம்

தேயாத வீரத்தினன் - காக்கும்
தெய்வத்தின் ஆசியால் தப்பிவிட்டான்
ஓயாது போரிடுவேன் - என்று
உள்ளத்தில் உறுதி பூண்டுகொண்டான்

இழுத்திழுத்தே நடப்பான் - அந்த
இன்னலைப் பெரிதாக எண்ணவில்லை
அழுத்தமாய் நெஞ்சினிலே - தன்
அடுத்தபோர் எதுவென்றே எண்ணிக்கொண்டான்.

விடுப்பினில் வீடுவந்தான் - தன்
வீட்டிலே மைந்தனைக் கண்ட தந்தை
எடுப்பான நடையுடையான் - காலை
இழுத்து நடந்திடும் பாங்கு கண்டார்

பெற்றவன் நெஞ்சிதனைக் - கண்டு
பிள்ளைப் பாசத்தினால் உருகியது
வற்றியே சூம்பிய கால் - செய்யும்
விடுதலைப் போருக்கு உதவிடுமா?

நற்பிள்ளை யானவனாம் - மைந்தன்
நாதகீதனையே நாடிச்சென்று
"சொற்படி கேளு அப்பன் - இந்தச்
சுகமில்லாக் காலுடன் போர்த்தொழிலா?"

"விற்பன்னன் ஆகிய நீ - எங்கள்
வீட்டோடு வந்தினிச் சேர்ந்திடடா"
கற்பனை செய்தார் தந்தை - மைந்தன்
கட்டாயம் தன்சொல்லைக் கேட்பானென்று

தந்தையை நிமிர்ந்து பார்த்தான் - முகத்தில்
தாயினும் விஞ்சிய அன்பைக் கண்டான்
பிந்தவும் கூறுகின்றான் - தன்னை
பெற்றவன் கேட்டதை மீறுகின்றான்

"இயக்கத்தில் சேர்ந்ததுயான் - இனி
இயலாது எனச் சொல்லி வருவதற்கோ
மயக்கத்தில் உள்ளவன் போல் - ஏதும்
மாறாட்டச் செயலது செய்யமாட்டேன்"

"தயக்கத்திற் கொன்றுமில்லை - கொள்கை
தப்பிஇல் மீண்டிடும் எண்ணமில்லை
இயக்கத்தால் விலத்துதலில் போரில்
இறப்பதே எந்தனுக் கின்பமப்பா"

மறைத்தவன் பேசவில்லை - தன்
மனதில் இருப்பதைக் கூறிவிட்டான்
குறைத்தவன் எண்ணவில்லை - தந்தை
கூறிய சொற்களால் அவரின் அன்பை"

வீட்டுக்கு வந்தபோது - முன்னர்
விளையாட்டுத் தோழராய் திரிந்தவரை
கூட்டிக் கொண்டு திரிவான் - பழங்
குறும்புகள் பேசியே குதூகலிப்பான்

நாட்டுக்காய் போர்புரியும் - வீர
நாயகர் புலிகளை புகழ்ந்துரைப்பான்
கேட்டுக் கொண்டிருந்த தோழர் - சற்றுக்
கேலியாய் அவனிடம் கூறிடுவார்.

"நீயிப்போ நொண்டிதானே - மச்சான்
நின்னாலே இயக்கத்திற் கென்ன பயன்?
வாஇப்போ வீட்டினுக்கு - உடல்
வல்லவர் போராட்டம் செய்யட்டுமே"

நண்பர்கள் சொன்ன சொல்லைக் - கேட்டு
நாணிக்குனிந்தவன் சோரவில்லை
புண்பட்டும் நிற்கவில்லை - வீரப்
புலிமகன் புவிந்திரன் புகலுகின்றான்"

"கால்தானே நொண்டி மச்சான் - என்
கருத்தின்னும் நொண்டியாய் போகவில்லை
ஏலாதோ இருந்து நீ பார் - பிறர்
எண்ணாத சாதனை செய்யக் காண்பாய்

உறுப்புத்தான் ஊனம் மச்சான் - என்
உள்ளமே ஊனமாய் போகவில்லை
பொறுப்புள்ள போராளிதான் - நான்
போகின்ற காலத்தே சும்மா சாகேன்

சாதனை நாட்டிச் சாவேன் - என்னை
சார்ந்தவன் வியந்திடக் காட்டிடச் சாவேன்
போதனைப் புலி நானல்லேன் - நாங்கள்
போற்றிடும் இலட்சியம் வெல்லச்செல்வேன்"

ஆனையிறவுப் போரில் - அவன்
அங்கவீனமுற்ற காரணத்தால்
சேனையின் செயலகத்தில் - நின்று
சேவைகள் செய்திட அனுமதித்தார்

கல்வியோ காணாதென்று - மனம்
கலங்கவோ தயங்கவோ செய்யவில்லை
நல்வினை எதுவெனினும் - மிக்க
நாட்டமுடன் செய்யும் இயல்புடையான்

தட்டச்சுப் பொறியினிலே - விரலால்
தட்டுவன் ஒவ்வொரு எழுத்துக்களாய்
பட்டுப்பட்டென்று தட்டி - விரைவில்
படுவேகமாகவே பழகிவிட்டான்

பகலிரவாய் உழைப்பான் - உடற்
பஞ்சி யென்றுசொல்லிப் பதுங்கி நிற்கான்
அகலாதான் கடமை நின்று - தன்னால்
ஆனவரை நின்று பணிபுரிவான்

நள்ளிர வாகினாலும் - தன்
நாளாந்தப் பணிகளை முடித்தே செல்வான்
தெள்ளிய ஞானமுள்ளான் - பிறன்
தேவை கருதியே செயற்படுவான்

எல்லாம் முடிந்ததென்று - நடு
இரவுக்குப் பின்னாலே நினைக்கையிலும்
"நல்லஎன் பிள்ளையல்லே - மறுத்து
நவிலாது உடனிதைச் செய்துதாடா"

என்றங்கு யாரும்வந்தால் - மிக
இயல்புடன் அதனையும் ஏற்றுச்செய்வான்
குன்றாத ஒளிமுகத்தான் - நல்ல
குணத்தவனாய் நெஞ்சில் இடம்பிடித்தான்

இத்தகை சிறப்புடையான் - தன்
இதயத்தில் இருந்ததோர் பெருவிருப்பு
பித்தானான் அவ்விருப்பில் - அந்தப்
பிரியத்தை வெளியிடத் தயங்கமாட்டான்

கரும்புலியாக வேண்டும் - அதிலும்
கடற்கரும்புலியாகப் போகவேண்டும்
நெருப்பாக மாறவேண்டும் - நமக்கு
நேர்ந்த கதியினை மாற்றவேண்டும்.

விருப்பினைத் தெரிவித்தவன் - கடல்
வேங்கைகள் அணியிலே தனை இணைத்து
திருப்பணி ஒன்றியற்ற - முழுத்
திறனையும் காட்டியே பயிற்சி பெற்றான்

சித்திரக் கலையில் வல்லான் - அறைச்
சுவரெங்கும் ஓவியம் தீட்டிவைப்பான்
இத்தரைக் கிறங்குகப்பல் - தனை
இடிக்கிறேன் என்றாங்கு வரைந்துவைப்பான்

கட்டளை தனக்கிடுவான் - "அதோ
காணுது டோறா பாரடா" என்பான்
"முட்டடா" எனப்பணிப்பான் - "படகை
முடுக்கியே விரையடா" என்று சொல்வான்

"கரும்புலிப் பைத்தியம் தான்" - எனக்
காண்பவர் இதையெல்லாம் கேலிசெய்வார்
"நொருக்குவேன் பாரும்" என்று - தன்னை
நையாண்டி செய்வோருக்குப் பதிலுரைப்பான்

புவிந்திரன் எனும் பெயரை - பின்னர்
புகழரசன் என்று மாற்றிக் கொண்டான்
புவிஎங்கும் புகழுரைக்கும் - அந்த
புதுப்பெயர் அவனுக்குப் பொருத்தமென்றோ

தனக்கென்று வாழாதவன் - தன்
தோழருக் குதவிடத் தயங்காதவன்
எனக்கென்ன என்று எண்ணி - தன்
இயலாமை காட்டியே ஒதுங்கிக் கொள்ளான்

தோழர்கள் குளிக்கையிலே - தம்
துணிகளைத் துவைத்திடல் வழக்கமாகும்
அழைப்பது அப்போ வந்தால் - அவர்
அப்படியே விட்டுச் செல்வதுண்டு

சென்றவன் திரும்பி வந்து - தான்
செய்யத் தொடர்ந்ததை செய்யப்பார்ப்பான்
நன்றவை கழுவப்பட்டு - ஈரம்
நீக்கிடக் காய்வதைக் கண்டுநிற்பான்

ஆங்கிதைக்கு செய்தவன் யார்? - புகழ்
அரசனே என்பதை எவரறியார்!
தீங்குளத் தெண்ணிடாதான் - தமிழ்
தாய் மண்ணில் தீங்கெனில் தாங்கமாட்டான்

வேற்றுமை பார்க்க மாட்டான் - எவர்
வெறுப்பையும் இலகுவில் சேர்க்கமாட்டான்
சாற்றுவான் உண்மை மட்டும் - இந்தச்
சரித்திர நாயகன் வாய்மையுள்ளான்

அப்பாவித் தனமுடையான் - ஏதும்
அடுத்தவர் சொன்னதும் நம்பிடுவான்
அப்படிச்சில செயலால் - முகம்
அசடுவழியவே சிரித்திடுவான்

வம்புக்கு நண்பர்சிலர் - சில
வழுக்கான சொற்களை வலிந்து சொல்லி
தம்பிபோய் இதன்பொருளை - கேளு
தருவார் சொல்லி என அனுப்பிவைப்பார்

நம்பிப்போய் இவனும் கேட்பான் - கேட்க
நல்லதே அல்லாத சொல்லென்பதால்
தும்பு பறந்திடவே - ஏசித்
துரத்துவார் கேட்டவர் "போடா" என்று

இவனையோ வெட்கம் தின்னும் - எனினும்
இளித்தபடி வந்து மௌனம் காப்பான்
அவன்நிலை அறிந்த தோழர் - மேலும்
அட்டகாசம் போட்டு சிரித்திடுவார்.

தனக்கில்லா வேலையென்றோ - அன்றேல்
தரத்தினில் உயர்ந்தது தாழ்ந்ததென்றோ
கணக்கது பார்க்கமாட்டான் - எவர்
கடமை யென்றாலுமே செய்திடுவான்

வருவோரை உபசரிக்க - முகாம்
வரவேற்புக் கூடத்தில் முறையிருக்கும்
வருவேளை வெளியார் அங்கு - அன்று
வரவேற்கும் முறையினர் இல்லையென்றால்

குறித்தவர் தமை அழைக்கான் - அன்றேல்
கூட்டிவரச் சொல்லி ஆளனுப்பான்
சிறிதேனும் தயக்கமின்றி - முகச்
சிரிப்போடு அவர்களை உபசரிப்பான்

வந்தவர் யார் எனவும் - அங்கு
வந்தது எவரினைத்தேடி யென்றும்
வந்தவர் மனம்நோகாது - இன்
வார்த்தைகளால் அவர் ஆறச்செய்வான்

பருகவும் கொடுத்திடுவான் - அதை
பக்குவமாகவும் செய்திடுவான்
தருகின்ற தகவல்பெற்று - எல்லாம்
தக்கபடி செய்து பெயரெடுப்பான்

தளராத முயற்சியுள்ளான் - உடல்
தள்ளாடி நடந்தாலும் பயிற்சி செய்வான்
உலராத வேட்கையுள்ளான் - அது
உயிர்கொடை வேள்விக்கு தேவையென்பான்

இயலாத காலுடையான் - "இவனால்
இலக்கினை இடித்திடமுடியா"தென்றும்
"முயலாதே வீணாய்" என்றும் - நண்பர்
முடிவாகக் கூறினும் ஏற்கமாட்டான்

பழித்தவர் வியப்படைய - இவனால்
பலிக்காது என்றவர் திகைப்படைய
சலிக்காமல் பயிற்சி செய்து - தன்னை
சார்ந்தவர் ஏற்றிடச் செய்து நிற்பான்

இலக்குகள் பிழைத்திடாமல் - இந்த
இளையவன் சுடுகுண்டு துளைத்திடுமாம்
கலக்குவான் போட்டிகளில் - தன்னை
கழிவென்று நினைத்தவர் களிப்படைய

மலைக்கிவன் நிகராகினான் - காண்போர்
மலைத்திடும் விதத்திலே மறமாடினான்
நிலைப்பிலா வாழ்க்கையிலே - அவன்
நித்தியம் வாழ்ந்திடும் உயிராகினான்

பருத்தித்துறைக் கடலில் - வரும்
பகைவனை இடித்திடும் பணியதற்கு
குருத்திவன் தெரிவாகினான் - இடி
கொடுத்திடும் நாளதைக் காத்துநின்றான்

மணியரசன்றன்னோடு - தானும்
மரணஅடி ஈயப்படகேறுவான்
பணியிதைப் புகழரசன் - மிகப்
பக்குவமாகவே நடத்திவைப்பான்

❋❋❋

# தயார்படுத்தலும் தகர்ப்பும்

முனை சுப்பர் மடம் எனும் கிராமத்தவர்
முறைப்பாடு கேட்டதால் மனமுடைந்து
மனை மக்கள் படுகின்ற மாளாத்துயர்
மாற்றிட வேண்டிய முடிவெடுத்தார்

அலன்முகாம் சென்றனன் தளபதியும்
ஆங்குள்ள தோழரை அழைத்துப்பேசி
பலன்தரும் வகையில் பகுப்பாய்வுகள்
பழிவாங்கச் செய்தனர் கடற்படையை

திட்டங்கள் தீட்டினர் தீவிரமாய்
திறன்மிக்க வல்லுநர் கைகொடுத்தார்
கொட்டம் அடிப்பவர் குலை நடுங்க
கொடுப்பது அடியென்றே கொள்கையானார்

ஆங்கறக் கொட்டியான் வழிச்சல்என்னும்
அலைகடற் றொழில் செய்யும் மீனவரின்
பாங்கிலே சென்றந்தப் பகை வென்றிடல்
பயன்தரும் என்றவர் கண்டுகொண்டார்

"சீநோர்" படகொன்றை தேர்ந்தெடுத்து
செப்பமுற அதை வடிவமைத்து
தீநேர் படகென்று தெரியாவண்ணம்
திருத்தங்கள் செய்திட திட்டமிட்டார்

கோப்பாய் முகாமிற்கு கொண்டுசென்று
கொழுத்திடும் சக்கையை உள்பொதித்து
பார்ப்போர் உணர்ந்திடா வகையினிலே
பக்குவமாகவே படகமைத்தார்.

காலனைக் கண்டாலும் கலங்காதவர்
கடற்கரும்புலிகளாம் மூவர் தம்மை
நீலக் கடல்மீது ஈகப்போரை
நிகழ்த்திட வென்றவர் தெரிவு செய்தார்

மயற்காடு மண்ணீய்ந்த மாவீரனாம்
மணியர சன்னோடு அரியாலையின்
குணக்குன்றாய் தோன்றிய புகழரசன்
குறிக்கோளை முடித்திடத் தேர்வு ஆனார்

இன்னுமோர் கரும்புலி இவர்களோடு
இப்பணி இயற்றிடத் தெரிவு ஆனார்
பொன்னுயிர் தூவியே கடனியற்ற
பொலிகண்டி போகுமுன் பயிற்சி பெற்றார்

கடின பயிற்சிகள் கற்றுணர்ந்தார்
கடற்கலம் சிதைந்திடும் அறிவு பெற்றார்
வெடிகுண்டு வண்டியால் விரைந்திடிக்க
வேகப் பயிற்சிகள் யாவும் கற்றார்

ஆசீர் முகாமிலே பயிற்சி பெற்று
அழகுறக் கற்றனர் நுணுக்கமுடன்
தூசிபடும் பகைப் படகு என்று
துணிந்து முடித்தனர் பயிற்சிகளை

பொலிகண்டி கரைநோக்கிப் போகுமுன்னர்
பூகம்ப வெடியாகித் தீயுமுன்னர்
புலிமூவர் போகின்றார் தலைவரிடம்
புண்ணிய நாளதாம் அவர்களுக்கே

தேசத் தலைவனைக் கண்டனராம்
தேகம் சிலிர்த்திட நின்றனராம்
பாசத் தலைவனைக் கண்டதனால்
பகை வெல்லும் வேகத்தை கொண்டனராம்

வேங்கைத் தலைவனும் விழிநிறைந்த
வியப்போடு வீரரை வரவேற்றனன்
ஆங்கவர் தம்மோடு அமர்ந்து உண்டு
ஆசி வழங்கினன் அரவணைத்து

புகழரசன் தன்னை அண்ணன் பார்த்தான்
புன்னகை முகத்தனை அருகழைத்து
அகழ்வாய்வு செய்பவன் போல நோக்கி
ஆதரவாகவே வினா தொடுத்தான்

"எந்தக் காலில் வெடிச்ச தப்பன்?"
என்றவன் இடக்காலை பார்த்திடவும்
சொந்தத் தகப்பனே சோகத்துடன்
சுகம் கேட்பதாகவே மெய்மறந்தான்

ஆசிகொடுத்தாலும் அண்ணன் மனம்
அலைகடல் போலுமே அதிர்கின்றது
வீசிஎழும் அலை வெடிப்பது போல
விம்மிட விழிக்கடை பனிக்கின்றது

தரையிலே தளத்திலே போரிடுவோன்
தாக்குண்டால் உயிர்போன உடல் காணலாம்
திரையிலே தீய்ந்தவன் திரும்ப மாட்டான்
திரும்பவும் அவன் முகம் காண்பதென்றோ?

கந்தகப் பொதியோடு கடலேகுவோர்
கடலோடு கலப்பதே கடைசியாகும்
அந்தப் போர்ச்சேதியே வந்து சேரும்
அவர்விடை பெறுநாளே இறுதிநாளாம்

இனம்வாழ தமைசகம் செய்குவோரை
இறுதியில் காணும் நாள் சோகமாகும்
மனம் வாழ்த்தும் என்றாலும் மகிழ்ந்திடாது
மணி, புகழ் அரசர்கள் முடிவுமீதே

அண்ணாவோடமர்ந்தொன்றாய் விருந்து உண்ட
அதுபோதும் அவர்களுக்கு ஆவிசய
மண்மீட்கச் செல்லுமந்த மாவீரர்கள்
மனதுநிறைவுடன் பிரிந்து சென்றார்

இடியோசை யொன்றேதான் இனிமேல் கேட்கும்
இளவல்கள் இவர்களோ மீளமாட்டார்
வெடியோசை தருகின்ற வெற்றிச் சேதி
வேங்கையர் தருநாளை காத்துநின்றான்.

❋ ❋ ❋

பொலிகண்டி கரைநோக்க
போகிறது புதுவண்டி
புதிதாகத் தொழில் செய்வோர் போலும்
புலிவண்டி அதுவென்றோ
பொடியன்கள் எவரென்றோ
புரிந் திலர் அங்குள்ள மக்கள்

இடப் பெயர்வு காரணத்தால்
எவரெவரோ புது ஆட்கள்
இக்கரைக்கு வருவது உண்டு
இடம் கொடுப்பார் அங்குள்ளோர்
எவரான போதுமவர்
என்றுமே முகம் சுழிப்பதில்லை

கடற்றொழிலர் சொல்வழக்கை
கற்றறிந்த மூவருமே
கதைத்தனராம் ஒருவரோடொருவர்
கடற்கரையில் வாழ்மக்கள்
கதைப்பினிலே அவையொலிக்க
காண்பவர்கள் சந்தேகம் கொள்ளார்

"வலையை ஒட்டமுடி
பாதை சாடுவாய்
வெள்ளாப்பு" என்று அவர் பேச
அலையின் மீதேகும்
ஆடவரே அவரென்று
அனைவருமே நம்பினராம் நன்கு

பேச்சினிலும் செய்கையிலும்
பரம்பரை மீனவர் போல்
பாசாங்கு இவர் செய்த போதும்
ஆச்சரியம் என்னவெனில்
அவர்கள்புலி வீரரென
அடையாளம் சிலர் கண்டு கொண்டார்

கரும்புலிகள் இவர்களென
கடுகளவும் எண்ணவில்லை
கடற்புலிகள் உணவுக்காய் அன்றேல்
வரும் படிக்காய் இம்மூவர்
வளைக்கின்றார் வலையொன்று
வந்தவரை அவர் எண்ணிக் கொண்டார்

கரும்புலிகள் இவரென்றோ
கருமமது எதுவென்றோ
கண்டறியாதிருப்பதற்காய் மற்றோர்
பெருந்தலைவன் வளர்ப்பினிலே
பெயர் பெற்ற கடற்றலைவன்
பிறர் கண்ணில் மண்தூவத் தன்னை

பெற்றவளை நாடுகின்றான்
பிறிதேதும் பேசாது
பெருந் தொண்டை கையேற்கச் செய்தான்
மற்றவரைப் போலிவளும்
மருமத்தை அறியாளாய்
மகன் கேட்டபடி சேவை செய்தாள்

கடலேறித் தொழில் செய்யும்
காளையர்கள் மூவருக்கும்
காய்ச்சிஉண வளிப்பதவள் கடமை
விடலைகள்தான் யாரெவரோ
விடையேதும் தேடாளாய்
விருப்போடு சமைத்துண்டி தந்தாள்.

கடல்செல்லும் காளையர்கள்
கரைமீள தாமதிக்கில்
கவலையுடன் காத்திருப்பாள் அன்னை
"அட என்ன பெடியள் இவர்
அச்சமில்லாதிருக்கின்றார்
அரக்கர் குணம் அறியாதார் போலும்"

அலையேறும் போதினிலே
அனுதினமும் அந்நாளே
அறுதிநாள் எனச் சொல்லிக் கொள்வார்
வலையோடு வள்ளமொடு
வருவானா பகைவனென
வழிபார்த்து வழிபார்த்துச் செல்வார்

ஒவ்வொரு நாளினிலும்
"இன்றுவகை யாக மச்சான்
எங்களிடம் மாட்டிடுவான்" என்பர்
அவ்வரிய நம்பிக்கை
அவர்களுக்கு எட்டாமல்
அலைந்தலைந்து கரையதற்கே மீள்வர்

இரைதேடிச் சென்றவர்கள்
இலக்கெதுவும் கிட்டாமல்
இருளான முகத்தினொடு மீள்வர்
கரைநாடி வருமவர்கள்
கவலையோ டிருந்திடுவர்
காலையினை எதிர்பார்த்து மீண்டும்

அதிகாலை தினம் எழுந்து
ஆவியெழும் தேனீரை
அன்னை அவள் தருகின்ற வேளை
முதியவளின் முகத்தொளிரும்
முறுவல் கணம் மறைய
மொழிந்திடுவள் புத்திமதி மாது

"மோனை கவனமடா
மோடன்கள் வருவான்கள்
முட்டாது கரையுடனே மீளும்
பூனைபோல் வருவான்கள்
போய் வாங்கோ கவனமாய்"
புன்னகைப்பாள் வழியனுப்பும்வேளை

அன்னை அவள் மொழியும்
அன்பான நல்லுரையை
அம்முவர் கேட்டதற்குப் பின்னும்
"என்னம்மா செய்வது
எப்போதோ ஒரு நாளில்
எப்படியோ போகத்தான் போறம்

பின்னும் இங்கிருந்து
பேய்களுக்குத் தினம் அஞ்சி
பிழைப்பதுவும் மானிடப் பிழைப்போ
அன்னவகை வாழ்வினிலும்
அழிந்திடுதல் மேலெ"ன்று
அன்னைக்கு அவர் மொழிவர் பதிலாய்

பெற்றவளின் அன்புதனைப்
பிசைந்தூட்டும் அன்னையவள்
பிரியாத விடை கொடுத்து நிற்பாள்
ஒற்றையாள் கரையிறக்க
ஓங்கு கடல்மீதினிலே
ஓடத்தில் மற்றிருவர் போவர்

அலைகின்றார் கடலினிலே
அடுத்தடுத்து பல நாள்கள்
அவர் தேடும் இலக்கெட்டவில்லை
விலையில்லா வெற்றி பெற
விழைந்த நாள் வந்ததுவாம்
விடை பெற்றார் மணி, புகழ்அரசர்

வரதன் மதன் கிளாலி
வாவியிலே இடித்தழித்த
வாகையினைக் கொண்டாடச் சென்றார்
சரிதம் படைத்த அவர்
சாதனையை போல் தாமும்
சாதிப்போம் எனத் துணிவுகொண்டார்.

வரதன் மதன் கிளாலி
வாவியிலே இடித்தழித்த
வோட்டர்ஜெட் தாக்குதலை விஞ்சி
தரவே செய்திடுவோம்
தற்கொடைத் தாக்குதலால்
தகர்ப்போம் எனவுறுதி பூண்டார்.

"உயிராயுதம் தந்து
உரம் பெறவே போராட்டம்
உயர்பணியை நாமியற்றப் போறோம்
போராயுதம் பெறுவோம்
பொல்லாரை அழித்திடவே"
பொழிகின்றான் மணியரசன் நிமிர்ந்து

ஒன்பது தர இரண்டாய்
ஓடிற்று நாளுருண்டு
ஒவ்வொரு விடியலிலும் செல்வோம்
என்பதுவே இலட்சியமாய்
ஏகும் கரும்புலிகள்
எட்டினார் முட்டும் நாளதனை

ஆழ்கடலும் ஆர்ப்பரித்து
அன்னவரை வரவேற்க
ஆகுதியாய் ஆகுதற்குப் போனார்
பாழ்படுவார் கடற்படைகள்
படகதனை மூழ்கடிக்க
பாய்ந்தேகி னார்படகில் தோழர்

ஆசீர் படைமுகாமின்
அணியர் தயார் நிலையில்
இன்பருட்டிக் கரையினிலே நிற்க
நீசர் வரும் படகை
நண்பர் செலும் படகை
நன்கே சொலும் றேடர் புள்ளி

அற்றைத் தினம் அவர்தம்
ஆசை தீர்ந்த தினம்
அரசர் இருவருமே சென்றார்
மற்றைநாள் களைப் போல
மணியும் புகழும் அன்று
மனது சோர இடம் இல்லை

அதிகாலை மணி ஐந்து
ஆலயத்து மணி ஒலிக்கும்
ஆர்ப்பரிக்கும் புள்ளினங்கள் பாடி
கதிரோனின் வரவதற்கு
கட்டியம் கூறுகின்ற
காலைப்பொழு தான அவ்வேளை

ஆழ்கடலே சென்றவர்கள்
அகப்பட்ட மச்சமுடன்
அவ்வளவே என்ற நிறைவோடு
வாழ்பதியை நோக்கியவர்
வரத் தொடங்கும் வேளையது
வந்தனவாம் ஓரிரண்டு வள்ளம்

திடும் என்றோர் பரபரப்பு
தெய்வத்தை அழைத்தபடி
திரைகடலோர் கரை ஓடிவந்தார்
கெடுமதியார் குடிகேடர்
கடலரக்கர் வருகின்ற
காட்சியினை அவர்கண்டு கொண்டார்

திருமலைக் கடலிருந்து
திமிரோடு பருத்தித்துறை
திசைசெல்லும் கப்பலது கண்டார்
பெரும் அலை கள்பிளந்து
பெருமலை அசைவது போல்
பெருமிதத்தோடு அது போயிற்று

பருத்தித்துறை யுள்ள
படகிறங்கு துறை நோக்கி
பாவியர்கள் கப்பல் செல்லக் கண்டார்
கருத்தில் இவர் கொண்டார்
கட்டாயம் சுடுவான் என
கரைமீண்டு தப்பிடவே வந்தார்

பரபரப்பு மக்களிடை
படபடப்பு மேனிகளில்
பதைத்தபடி கரைநோக்கி வந்தார்
தரதரவென்றே இழுத்து
தரையினிலே கலம் ஏற்றி
தம்உறவு களைத் தேற்றச் சென்றார்.

எல்லோரும் ஓடிவர
ஒரு படகு மட்டும்தான்
எல்லையதில் அசையாது நின்று
கொல்லவரும் கப்பலினை
குறிப்போடு பார்க்கின்றார்
குதூகலமே அன்னவர் தம் நெஞ்சில்

பொழுது புலர்ந்தாச்சு
பொய்மை அகன்றது போல்
போயிற்று கவிந்திருந்த இருளும்
அழுபடி கடல் நோக்கும்
அரிவையர்கள் மனம் மகிழ
அவருறவோர் வருகின்றார் கரையே

காங்கேசன் துறையினிலே
கரைஇறங்கு தளமதுவும்
களைகட்டத் தொடங்கிவிட்ட வேளை
ஆங்கு தொழில் செய்பவர்கள்
ஆரவாரம் தொடங்கியது
ஆனாலும் இவர் வரவோ இல்லை

வலையோடு கடல் சென்ற
வள்ளமெலாம் வந்த பின்னும்
வரவில்லை இவர்களது படகு
தலை வெள்ளித் தாயவளோ
தவிப்புடனே நிற்கின்றாள்
தம்பியர்கள் வரவில்லை என்று

"இந்தப் பொடியன்கள்
என் சொல்லுக் கேளாண்கள்
எப்போதும் இப்படித்தான் இவன்கள்
அந்தப் படகு வரும்
அடையாளம் தெரிகிறதா
அடதம்பி பாரும்" எனக்கேட்டார்

"வருவான்கள் தானே நீ
வயதான காலத்தில்
வலிந்து ஏன் கலங்குகின்றாய் அம்மா
ஒரு நாளா இரு நாளா
இப்படித்தான் தாமதிப்பார்
இருபோய் நீ ஒரு இடத்தில் சும்மா"

என்றவர்கள் சொன்னாலும்
ஏற்க மறுத்து மனம்
எழுகடலிற் புள்ளியினைத் தேடும்
நன்றவர்கள் கரைசேர
நாடி வேண்டி நிற்கும்
நாவாய்கள் வரப்போகப் பார்க்கும்.

வல்லரக்கர் வரு டோறா
வள்ளத்தைக் காண்கிறது
வாவென்று அழைக்கிறது அவரை
செல்ல முடிவெடுக்கின்றார்
செல்வர்கள் இருவருமே
செல்லுமுன் தொடர்பெடுத்துச் சொன்னார்

"அண்ணை எங்களைத்தான்
அழைக்கின்றான் அங்குவர
ஆகையினால் தொடர்பெடுக்க மாட்டோம்
எண்ணம் நிறைவேற்றி
எங்கள் பணிமுடியும்"
என்று விடை தருகின்றார் இறுதி

தந்து விடை "புலிகள்
தாகமது தமிழீழத்
தாயகமே" என்ற மொழி சொன்னார்
அந்த மொழி சொன்னதுமே
அவர்களது தொடர்பெல்லாம்
அத்தோடு அஸ்தமிச்சுப் போச்சு

பொலிகண்டிக் கரையிருந்து
பொதுமக்கள் காண்கின்றார்
போகின்ற இவர்கள்பட கதனை
பலிகொண்டு கொக்கரிக்க
பார்த்திருக்கும் பாதகரின்
படகதையும் கண்டு மனம் பதைத்தார்

எது நடக்குமோ வென்று
ஏக்கமுடன் அவர் நோக்க
ஏகியது கரும்புலிகள் படகு
எது நடக்க வேண்டுமென்று
எண்ணினரோ கரும்புலிகள்
அது நடக்கப் போகுதென அறிவார்

இன்பருட்டிக் கரையினிலே
இருக்கின்ற படையணிகள்
இயங்கு நிலை எடுத்துநிற் கின்றார்
அன்பர் தரும் அடி தொடர்ந்து
அவரடிகள் கொடுப்பதற்கு
ஆவலுடன் ஆயத்தமாய் நின்றார்

❊ ❊ ❊

கப்பல் பாரடா ஏலேலோ ஏலோ
கரும்புலிகள் ஏலேலோ ஏலோ
சுப்பர் டோறா ஏலேலோ ஏலோ
சுக்கு நூறடா ஏலேலோ ஏலோ
அப்பன் ஆண்ட ஏலேலோ ஏலோ
ஆழ்க்கடலில் ஏலேலோ ஏலோ
நிற்பதாரடா ஏலேலோ ஏலோ
நீறாய்ப்போஅடா ஏலேலோ ஏலோ
சுப்பர்டோறா ஏலேலோ ஏலோ
சிதையப் போகுது ஏலேலோ ஏலோ
சக்கை வண்டியில் ஏலேலோ ஏலோ
சாவருகுது ஏலேலோ ஏலோ
புக்கையாகிடும் ஏலேலோ ஏலோ
புல்லர் வண்டி ஏலேலோ ஏலோ
திக்கதிர்ந்திட ஏலேலோ ஏலோ
தீகிளம்பிடும் ஏலேலோ ஏலோ

மக்கள் கொலைஞர் ஏலேலோ ஏலோ
மாண்டு போகுவர் ஏலேலோ ஏலோ
திமிர் பிடிச்சவன் ஏலேலோ ஏலோ
தீயப் போறான் ஏலேலோ ஏலோ
அமர்பிடிச்சவன் ஏலேலோ ஏலோ
அழியப்போறான் ஏலேலோ ஏலோ
தாலி அறுத்தவன் ஏலேலோ ஏலோ
தாழப் போறான் ஏலேலோ ஏலோ
கூலிப் படையன் ஏலேலோ ஏலோ
குதறப் படுவான் ஏலேலோ ஏலோ
நடப்படிச்சவன் ஏலேலோ ஏலோ
நாறப் போறான் ஏலேலோ ஏலோ
கடற் கலத்துடன் ஏலேலோ ஏலோ
கரையப் போறான் ஏலேலோ ஏலோ
புகழரசன் ஏலேலோ ஏலோ
புயலாய்ப் போறான் ஏலேலோ ஏலோ
மணியரசன் ஏலேலோ ஏலோ
மாய்க்கப் போறான் ஏலேலோ ஏலோ
இடி அரசர் ஏலேலோ ஏலோ
இடிக்கப் போறார் ஏலேலோ ஏலோ
அடியில் படையர் ஏலேலோ ஏலோ
அழியப் போறார் ஏலேலோ ஏலோ
வெடியரசர் ஏலேலோ ஏலோ
வெடிக்கப்போறார் ஏலேலோ ஏலோ
வெடிக்கப் போறார் ஏலேலோ ஏலோ
வெடிக்கப் போறார் ஏலேலோ ஏலோ
வெடிக்கப் போறார் ஏலேலோ ஏலோ

டும்...............

❋ ❋ ❋

கடல் அதிர்ந்தது கரை அதிர்ந்தது
கடல் நடுவிலே தீ எழுந்தது
உடல் சிதைந்தது உருக்குலைந்தது
உலுத்தர் ஓட்டிய கலம் எரிந்தது

நீலக் கடலிலே நீர் பிளந்தது
நின்ற எதிரியின் சுவடழிந்தது
காலதேவர்கள் கதறிச் சரிந்தனர்
கருகி மாய்ந்திடக் கதை முடிந்தது

புகழரசனும் மணி அரசனும்
பொங்கும் கடலின் புதல்வர்வராயினர்
திகழு தாரகை வரியிணைந்தனர்
தியாக வேள்வியில் தீபமாகினர்


இன்பருட்டியில் இருந்த படையணி
இளையோர் பணியினை தொடரலாயினர்
மின் விரைவினில் விரைந்து வந்தனர்
மிகுந்து நின்றவர் கதை முடித்தனர்


அள்ளியேகினர் ஆயுதங்களை
அண்ணன் எண்ணிய பணிமுடித்தனர்
வெள்ளிபூத்தது விடியல் கண்டதாய்
விழாவெடுத்தனர் கரையின் மக்களே


புனிதனாகினான் புகழரசனும்
பூவியந்திடும் செய்கை யாற்றியே
மனித தெய்வமாய் மணி அரசனும்
மக்கள் நெஞ்சிலே இடம் பிடித்தனன்
கடற்கரும்புலி கடலில் புலிகளின்

கொடியை நாட்டிய வெற்றிப் போரிதாம்
உடற்கொடையதும் உயிர்க் கொடையதும்
உலகை ஆட்டிய உரிய வேள்வியாம்
யாகம் செய்தவர் தியாகப் புலிகளை
யாழும் தொழுவதும் யார்க்கும் கடமையாம்
பாகம் ஒன்றினை நிறைவு செய்கிறோம்
பன்னிரெண்டு பேர் காதை கூறியே ..........


**- பாகம் ஒன்று நிறைவு -**




கப்டன் மில்லர்


மேஜர் டாம்போ


கப்டன் ஜெயந்தன்


மேஜர் காந்தரூபன்


கப்டன் கொலின்ஸ்


கப்டன் மணியரசன்


கப்டன் மதன் (பத்றிக்)


லெப். கேணல். போர்க்


மேஜர் புகழரசன்


கப்டன் சிதம்பரம்


கப்டன் விநோத்


மேஜர் வரதன் (நிலவன்)

அறிவு அமுது பதிப்பகம் யாழ்சாலை கிளிநொச்சி